R.C

வாழக் கல்வியின்

அரசாங்க மகளிர் ஆசிரியர் கலாசாலை

கோப்பாய்

# கலை மலர்

கோப்பாய்,
அரசினர் மகளிர் ஆசிரியர் கலாசாலை,
வெளியீடு.

மலர் 9 1968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ்ப் பயிற்சி மாலைகள்

இனிய தமிழில் செந்தமிழில்

ஆக்கப்பட்டவை.

மாணவரது மொழிவளமும்

இலக்கிய நயமுஞ் சிறக்க உதவுபவை

கல்விமுறைப் புலமையாளரினதும்

மொழி வல்லாரினதும் பாராட்டுக்குகந்தவை.

பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபையின்

அங்கீகாரம் பெற்றவை.

நூலாசிரியை :

செல்வி. க. சௌ. சந்தனநங்கை அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*for* QUALITY PHOTOGRAPHS



GNANAMS

JAFFNA. PHONE: 7067

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ. கே. எஸ். அன் சன்ஸ்

வட இலங்கையின் மிகப் பெரிய

நகை, வைர வியாபாரிகள்

## நகை மாளிகை

யாழ்ப்பாணம்.

போன் : 519 ஆரம்பம் : 1914



*VISIT*

# THE JAFFNA CO-OPERATIVE STORES LTD.

*For all your requirements of*

QUALITY GOODS
AT FAIR PRICES

*'OUR MOTTO IS SERVICE ABOVE SELF'*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமலர்

வாழக் கல்வின்

அரசாங்க மகளிர் ஆசிரியர் கலாசாலை

கோப்பாய்

மலர் 9

1968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இதழாசிரியர் குழு ... | 1 |
| 2. | விரிவுரையாளர் குழு ... | 2 |
| 3. | இதழாசிரியர் உரை ... | 3 |
| 4. | சக்தி வணக்கம் ... | 4 |
| 5. | கழக வாழ்த்துப்பா ... | 5 |
| 6. | தக்க எங்கலை மலரே வருகவித் தரணிமீதே ... | 6 |
| 7. | Foreword ... | 7 |
| 8. | அணிந்துரை : | |
| | (i) திரு. டி. ஜி. சுகததாச ... | 8 |
| | (iii) திரு. சி. தணிகாசலம் ... | (a)9 |
| | (ii) திரு. க. இராமச்சந்திரன் | 9 |
| 10. | அதிபர் ஆசியுரை ... | 10 |
| 11. | இரங்கற்பா ... | 11 |
| 12. | தயா மூல தன்ம நெறி... ... | 12 |
| 13. | The Faith of A Christian ... | 14 |
| 14. | கோணேஸ்வரமும் கோணேசர் கல்வெட்டும் ... | 15 |
| 15. | குன்றின்மேல் எழுந்த குரல்ஒலி | 22 |
| 16. | காந்திய நூற்றுண்டு விழாவும் கல்விக் கழகங்களும் | 24 |
| 17. | மெய்விவாகமும் குடும்பமும் ... | 29 |
| 18. | யௌவனப் பருவம் ... | 31 |
| 1°. | கிருஷ்ணையின் ஆணை ... | 34 |
| 20. | வாழ்விக்கும் தெய்வம் ... | 36 |
| 21. | சிலம்பு காட்டும் கற்புநெறி ... | 40 |
| 22. | காவிய இன்பத்தில் காதலும் கற்பும் ... | 43 |
| 23. | பாரதியும் கவிதைகளும் ... | 46 |
| 24. | பெண்மையியல்பு ... | 49 |
| 25. | இன்சொல் விளைநிலனுய் ... | 52 |
| 26. | காருடன் வருவார் ... | 54 |
| 27. | கண்ணர் ! கண்ணர் !! கண்ணர் !!! ... | 56 |
| 28. | கோவை மகளிரின் தென்னிந்தியச் சுற்றுலா | 59 |
| 29. | மல்லிகை மலர் ... | 65 |
| 30. | முல்லைத்திணையின் முருகு ... | 67 |
| 31. | பள்ளிப் பருவத்திலே ... | 69 |
| 32. | கவிதை கற்பித்தல் ... | 75 |
| 33. | என் அழகன் ... | 77 |
| 34. | கணிதம் கசப்பக் காரணம் என்ன ? ... | 78 |
| 35. | எண்ணும் சிருரும் ... | 80 |
| 36. | இலங்கையின் உலர்ப்பிரதேசம் | 82 |
| 37. | நிலமும் வளமும் ... | 86 |
| 38. | தேசியவீரன் பண்டார வன்னியன் | 88 |
| 39. | மனித உரிமைக்காகப் போராடிய மகான் மார்டின் லூதர் கிங் | 90 |
| 40. | மன்னூர்ப் பகுதியில் கூட்டுறவு அபிவிருத்தி | 92 |
| 41. | எதிர்வரும் சமுதாயம் ... | 95 |
| 42. | வாழக்கையில் உணவியல் ... | 97 |
| 43. | தையலரும் அலங்காரத் தையலும் ... | 100 |
| 44. | மனித வாழ்க்கையில் மனையியற் கலை ... | 102 |
| 45. | பண்டைத் தமிழன் இசைக் கருவிகள் ... | 104 |
| 46. | இசைக்கலை ... | 105 |
| 47. | முத்துக்கள் முப்பத்தொன்பது | 108 |
| 4 . | ஓவியக்கலை ... | 110 |
| 49. | விஞ்ஞான போதனையின் நோக்கங்கள் | 112 |
| 50. | கிறீஸ்தவ தின விழா ... | 115 |
| 51. | கவியரங்கு ! | |
| | (i) எது கல்வி ? ... | 118 |
| | (ii) எது வீரம் ? ... | 123 |
| | (iii) எது மானம் ? ... | 128 |
| | (iv) எது செல்வம் ? ... | 132 |
| 52. | விழாக்காண வம்மின் ... | 139 |
| 53. | இங்கு இவ்வருடத்திலே ... | 143 |
| 54. | எங்கழக ஆளுமன்றம் ... | 146 |
| 55. | தமிழ் மன்றம் ... | 147 |
| 56. | நுண்கலை மன்றம் ... | 148 |
| 57. | சமூக இயல் மன்றம் ... | 149 |
| 58. | இந்து மகளிர் மன்றம் ... | 150 |
| 59. | கிறீஸ்தவ மகளிர் மன்றம் ... | 151 |
| 60. | விளையாட்டு மன்றம் ... | 152 |
| 61. | அருணு இல்லம் ... | 153 |
| 65. | இராதா இல்லம் ... | 154 |
| 66. | சுவர்ணு இல்லம் ... | 155 |
| 67. | 1968-ம் ஆண்டு பயிற்சிபெற்று ஆசிரியைகளாக வெளியேறும் மாணவிகள் ... | 156 |
| 68. | இரத்த தானம் ... | 158 |
| 69. | மணமக்கள் வாழ்த்து ... | 159 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் குழு

காப்பாளர் : திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி
ஆலோசகர் : செல்வி. க. சௌ. சந்தனநங்கை
,, திருமதி. சு. செல்வத்துரை
இதழாசிரியர் : செல்வி. மேரி. றெஜினு யோனுஸ்

## செயற்குழு

செல்வி. சி. புனிதவதி
செல்வி. பொ. புனிதவதி
செல்வி. செ. செல்லப்பாக்கியம்
திருமதி. கமலாம்பிகை. மாமடுவ
செல்வி. நே. மல்லிகாதேவி
செல்வி. சி. பத்மாவதி
செல்வி. சி. பரமேஸ்வரி
செல்வி. த. மகேஸ்வரி
செல்வி. ப. விமலேஸ்வரி
செல்வி. செ. கமலேஸ்வரி
திருமதி. கோமதி. அம்பிகைபாகன்
திருமதி. அன்னபூரணு. இராசதுரை
செல்வி. வி. அம்பாலிகை
செல்வி. செ. மகிழ்மணி
திருமதி. பரமேஸ்வரி. முருகேசு
திருமதி. தங்கமணி. சிவபாலன்
திருமதி. சரோஜினி. இராசசுந்தரம்
திருமதி. செல்வரஞ்சிதம். இராசரட்ணம்

எங்கள் கலாசாலைக்குத் தங்கள் சஞ்சிகைகளை
அனுப்பிவைத்த கல்லூரிகளுக்கு
எமது உளங்கனிந்த நன்றிகள் பல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிவுரையாளர் குழு

அதிபர் : திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி, M. A., M. Sc.

விரிவுரையாளர் : திருமதி. ஜே. டா. பெரேரா, 1st Class Eng. Trd.

திருமதி. சு. செல்வத்துரை, B. A. Dip. in Edn.

திருமதி. ஜீ. கூல், B. Sc. 1st. Class Hons. (Lond).

திருமதி. மி. தாஸ், B. A.

செல்வி. க. சௌ. சந்தன நங்கை, 1st. Class T. Trd.

திருமதி. பொ. பத்மநாதன், சங்கீத பூஷணம்

திருமதி. லூ. லூ. ஜேக்கப், Art. Teach. Cert.

திருமதி. டெ தருமராசா, P. T. I.

செல்வி. சி. செல்லையாபிள்ளை, B.Sc. Home Seience.

பகுதிநேர விரிவுரையாளர் :

திரு. பாலசுப்பிரமணியம், (Health Educator).

சங்கைக்குரிய சகோதரி. ஜெறடீன்.

உதவி விடுதி மேற்பார்வையாளர் :

திருமதி. நா. வேலாயுதம்.

எழுது வினைஞர் :

செல்வி. இ. கணேசபிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் உரை

ஆண்டொரு மலரா யவனியில் வந்து
ஆனந்தச் சுடரா யன்பர்க் கரத்திருந்து
இன்புடன் அன்பர் நெஞ்சி லுறைந்து
இதழுடன் வாழ்த்த வேண்டுவம் நின்று.

பூவையர் பூங்காவில் ஆண்டுதோறும் கலைமகளன்ன புதுப் பொலிவுடன் கலைமணம் வீசி அலரும் மலரே எங்கலைமலர்.

இம்மலர் ஆண்டுக் கொருமுறைதான் மலர்கின்ற தெனினும், கலையழகின் எழிலுருவாய், கருத்துமணிக் குவியலாய், தெவிட்டாத தேனமுதாய், தித்திக்கும் தெள்ளமுதாய், பேரறிவுப் பேழையாய், பார்ப்போர், கேட்போர், திறனுய்வோர், என்போரின் தகமைக்கேற்ப, புதுமணப் பொலிவுடன் திகழ்கின்றமை கண்டு பெருமிதம் அடைகின்றேம்.

கருத்துயர் கட்டுரைகள், கவினுறு கவிதைகள், பழைய புதிய மாணவரின் ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கிய அரிய உரைகள், சிறுகதைகள், இன்பம் நல்கும் சிறப்பியல்புகள் ஆகியவற்றைத் தன்னகத்தே தாங்கிக் கலைமணம் கமழும் கமலமெனப் பொலிந்து விளங்குகின்றது எம்மலர்.

இம்மலரின் காப்பாளராயிருந்து நல்வழிகாட்டி ஆக்கமும் ஊக்கமும் அளித்த எங்கள் அறிவுசால் அதிபர்அவர்களுக்கும், வேண்டும் போதெல்லாம் எமக்கு ஆலோசனைகள் உவந்தளிக்கும் விரிவுரையாளர்க்கும், எம் மலருக்கு மணங்கூட்டி உதவிய அறிஞர்களுக்கும், பழைய புதிய மாணவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய பெரியார்களுக்கும், புகைப்படத் துறையினர்க்கும், மனஞ்சலியாது மலர்முகத்துடன் ஒத்துழைத்த மலர் வெளியீட்டுச் செயற் குழுவினர்க்கும், அழகாக அச்சேற்றி உதவிய அர்ச். சூசைமாமுனிவர் அழுத்தகத்தாருக்கும் என் உளம் கனிந்த நன்றி உரித்தாகுக.

வணக்கம்.

செல்வி. மேரி. றெஜீனு யோனுஸ்.
(இதழாசிரியர்)

அ. ம. ஆ. க.
கோப்பாய்.
15-10-68.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி வணக்கம்

தொடுக்கும் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகு நறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்

தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடு
மிளமென்பிடியே யெறிதரங்க

முடுக்கும் புவனங் கடந்துநின்ற
வொருவன் திருவுள்ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு
முயிரோவியமே மதுகரம் வாய்

மடுக்குங் குழற்காடேந்து மிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத்துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழக வாழ்த்துப்பா

இராகம் : மோகனம். தாளம் : ஆதி.

**பல்லவி**

யாழ்நகர் மீதமர் கோப்பாய் மகளிர்
ஆசிரிய கலாசாலை வாழ்க.

**அநுபல்லவி**

அறிவொளி பெருக்கியே வாழ்க.
ஆசிரியர் மாணவர் வாழ்க.

**சரணங்கள்**

1. அறிவியற் கலையுடன் அழகியற் கலைகள்
அறிந்திடும் பான்மையை அறிவோம்
அருந்தமிழ் அகநூல் அறிவுறு கணிதம்
ஆவன நிறைந்திடப் பயில்வோம். (யாழ்)

2. ஒழுக்கமும் நேர்மையும் உடலுறு பலமும்
உண்மையில் ஓங்கிடப் பயில்வோம்
ஓரிரண் டாண்டாய் ஓர்ந்திடும் கலைகள்
உலகினில் ஓங்கிடப் பயில்வோம். (யாழ்)

3. தண்டமிழ் ஓங்கவே தொண்டுகள் புரிந்து
தரணியிற் காப்போம் எம்மானம்
எண்டிசை புகழக் கலாசாலை வாழ்க
இயன்ற நற்பணிகளைப் புரிவோம். (யாழ்)

4. அரசினர் ஆசிரியர் ஆற்று நல்லுதவி
அகிலத்தில் என்றென்றும் மறவோம்
அதிபரும் ஏனைய ஆசிரியர் குழாமும்
ஆண்டவனருள் என்றும் வாழ்க. (யாழ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்க எங்கலை மலரே
# வருக வித்தரணி மீதே

கலைத்தேவி எமக்கருள வந்தாளென்னுங்
கலாசாலை அதிபருடன் தனிச்செல்விதானும்
நிலையான புகழ்மணக்கும் நிகரற்றரும் மலரின்
நீங்காத காப்பாளராகி நிற்க
மலைபோன்ற கொள்கைமிக்க அவர்தம் முன்னால்
மங்கையர்கள் தொடுத்துநல்கும் மகிமைபெறு மலரே
விலைமதித்து உனைநிறுக்கும் வாய்வலரும் திகைக்க
வித்தைதந்து விரைந்தோடி வருகவித்தரணிமீதே.

வலைவீசி இழுத்ததுபோற் கற்றோர் நெஞ்சை
வாஞ்சையினால் உனைத்தழுவ வைத்தலாலே
உலைவின்றி அவர்மடியில் தவழ்ந்து நின்று
உறுபொருளும் பெரும்பயனும் உதவிநிற்க
சிலையமைக்கும் சிற்பிக்கும் சித்தரிக்க வொண்ணுச்
சீர்மைதந்து சொற்பாவலரும் வாழ்த்திநிற்க.
தலையாய பணியென்று நாமும் ஏத்தத்
தக்க எங்கலைமலரே வருகவித்தரணிமீதே.

செல்வி. வே. சாருகாசினி.
பழையமாணவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOREWORD

*D. G. Sugathadasa,*

*Director Of Education*

*Teacher Education & Junior University Colleges.*

I am very glad that I have been given an opportunity of giving a message to the students of the Kopay Teachers' College through their College Annual. Practically one fifth of the estimated expenditure of government is on education, but however efficient the administration, however good the buildings, however generous the equipment and facilities supplied with this money, the value to the children will ultimately depend on the quality of the teachers. Hence the type of activity carried out in the Teacher's College determines how effective will be this vast expenditure.

I am quite confident that with the instruction, advice and guidance given as well as the example set by the Principal and staff of your institution, you will have acquired the knowledge, skills and attitudes necessary for the proper discharge of your very important duty. You must not imagine that you know everything about teaching when you finish up as a trained teacher. You have only been initiated into your profession. You would have to keep abreast of the latest techniques in your area of work by constant discussion with your colleagues, by reading, by attending refresher courses and in various other ways available to you. It is only thus that you could perform your duties as a teacher efficiently and bring lustre and glory to your Alma Mater, an institution which has a long tradition of excellent work in the preparation of teachers.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை


## டி. ஜி. சுகததாச,

ஆசிரிய கலாசாலைகளினதும்
கனிஷ்ட பல்கலைக் கழகங்களினதும்
கல்வி அதிகாரி.


இந்த ஆண்டு மலருக்கூடாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவிகளுக்கு இச்செய்தியைத் தெரிவிப்பதற்கு எனக்கு ஒரு தருணம் கொடுக்கப்பட்டமைக்கு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

அரசாங்கத்தின் உத்தேச செலவின் ஐந்திலொருபங்கு கல்விக்காகச் செலவழிக்கப்படுகிறது. இப்பணத்தைக் கொண்டு தாராளமாகப் பல வசதிகளைப் பாடசாலைகளில் அளிப்பினும், பாடசாலை நிர்வாகம் எவ்வளவோ திறமையாக இருப்பினும், மாணவர்கள் உண்மையாகவே பயனடைய வேண்டுமாயின் அஃது ஆசிரியர்களின் தரத்தைப் பொறுத்ததாகும். எனவே, ஆசிரிய கலாசாலைகளில் இடம் பெறும் முயற்சிகளின் வகையே பெருந்தொகையான இச் செலவின் பயனைத் தீர்மானிக்க வேண்டும்.

உங்களின் அதிபர், பேராசிரியர்கள் உங்களுக்கு அளித்துள்ள வழிகாட்டு, புத்திமதி ஆதியனவற்றுக்கூடாகவும் அவர்கள் காட்டிய முன்மாதிரிக்கூடாகவும், உங்கள் கடமையைச் சிறப்பாகச் செய்வதற்கு அவசியமான நல்ல அறிவையும், திறமைகளையும், சிறப்பாற்றல்களையும் நீங்கள் அடைந்திருப்பீர்களென நான் உறுதியாக நம்புகிறேன்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களாக நீங்கள் வெளியேறும் போது கற்பித்தலைப்பற்றிய சகல விடயங்களையும் அறிந்து கொண்டோம் என்று எண்ணலாகாது. ஆசிரியத் தொழிலின் ஆரம்பப் படியிலேயே இருக்கிறீர்கள். நீங்கள் நன்கு வாசிப்பதனாலும், ஆசிரியர் பிறருடன் கலந்து உரையாடுவதினாலும், விடுமுறைக் கழகங்களிற் பங்கு கொள்வதனாலும், கற்பித்தல் பற்றிய புதிய முறைகளையும் கருத்துக்களையும் நன்கு அறிந்துகொள்ளல் வேண்டும்.

நீங்கள் இவ்விதம் நடந்துகொண்டாற்றான் ஆசிரியர்கள் என்ற முறையில் திறமையாகக் கடமையாற்றி, நீண்ட காலமாக ஆசிரியர்களை உருவாக்குவதில் புகழுடன் கடமையாற்றி வரும் உங்கள் கலாசாலைக்கு ஒளியையும், புகழையும் அளிக்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்,
கல்வித் திணைக்களம்,
20-11-68.

### வடமாநிலக் கல்வி அதிபதி

## திரு. சி. தணிகாசலம் அவர்களின்

# ஆசிச் செய்தி

இந்நாட்டின் எதிர்கால மக்களாக விளங்கப்போகும் சிறுரின் வளர்ச்சி, நல்வாழ்வு, மொழிவளர்ச்சி, பண்பாடுகள் ஆதியவை அன்னாரின் இளம்பராயக் கல்வியிலேயே தங்கியிருக்கின்றன. இதற்கேற்ற கல்வியைச் சிறுவர்க்கு அளிக்கும் பொறுப்பு ஆசிரியரிடம் இருப்பதனாலேயே ஆசிரியர் சமூகத்தின் உயிர்நாடிகள் எனக் கருதப்படுகின்றனர்.

நல்லாசிரியராயுள்ளோர் இவ்வீழத்தின் சகல பாகங்களிலும் செல்லவேண்டும். ஆங்காங்கு தம் அறிவுச் சுடரை விளக்குமுகத்தால் இந்நாட்டினைச் சிறப்படையச் செய்தல் வேண்டும். பெண்களாகிய நீங்கள் இச்சீரிய நோக்குடன் உங்கள் பணியை ஆரம்பிக்க வேண்டுமெனக் கூற விரும்புகிறேன்.

நீங்கள் வெளியிடும் மலர் இத்தகைய குறிக்கோள்களை மனதிலே பதியச் செய்வதற்கு உதவுமென நம்புகிறேன்.

திரு. சி. தணிகாசலம்,
வட மாநிலக் கல்வியதிபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. க. இராமச்சந்திரன் அவர்கள் அருளிய அணிந்துரை

நாம் வாழும் இம்மண்ணுலகமானது உய்ய வேண்டுமெனின், அது அமைதி நிலையடையவேண்டுமெனின் பெண் குலம் அறிவால், ஆற்றலால், ஒழுக்கத்தால் உயரவேண் டும். இவை வெறும் புத்தகப் படிப்பால் கைகூடுவனவல்ல. கற்றவை எல்லாம் இரத்தத்திலூன்றி வாழ்வில் பிரதி பலிக்க வேண்டும்.

இந்தச் சிறிய தொண்டில் கோப்பாய் அரசினர் மக ளிர் கல்லூரி அரிய சிறப்படைந்துள்ளது. இன்று எதிர் பாராத முறையில் நடைபெற்ற சரஸ்வதி பூசையில் யாம் பெற்ற அனுபவம் அதற்குச் சாட்சியாயமைந்துள்ளது.

இந்தக் கல்லூரி அதிபர், ஆசிரியைகள், பிள்ளைகளின் சமயவளர்ச்சியில் எடுத்துக்கொள்ளும் ஆர்வமும், முயற்சி யும் பாராட்டற்குரியது. அவர்கள் ஆன்மீகப்பணி மேலும் மேலும் சிறப்புற்றோங்குமாறு எல்லாம் வல்ல பராசக்தியை வழுத்துகின்றோம்.

க. இராமச்சந்திரன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் ஆசியுரை

மனிதனை மனிதனாக வாழவைப்பது ஆசிரியப் பணி. ஆசிரியர்கள் மாசுமறுவற்றவர்களாக சமுதாயத்தைத் தூய்மைப் படுத்துபவர்களாக விளங்கவேண்டும். இத்தன்மைத்தான ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருப்பதுடன், அவர்களுடைய ஆற்றல்கள், ஆர்வங்களுக்கேற்பத் தரம்பிரித்துக் கல்வி கற்பிப்பார்களேயானால் அவர்களுக்கு நிகர் அவர்களேதான்.

வருடந்தோறும் எங்கலாசாலையில் பயிற்சிபெறும் ஆசிரிய மாணவிகள், எவ்விடயத்தையும் எண்ணி ஆராய்ந்து, சீர்தூக்கிப்பார்த்துத் திறம்படச் செய்ய வேண்டுமென்பது என் அவா. மாணவிகளின் அயரா உழைப்பினால் மலரும் இக்கலைமலர் மேலும் மேலும் புதுப்புது முறையில் பொலிவுடன் திகழ மனமார வாழ்த்துகின்றேன்.

ஆசிரிய மாணவிகள் ஒவ்வொருவரும் நாட்டின் நலனை தம்நலனாகவும், எம்சமுதாயத் தேவையே தந்தேவையாகவும் கொண்டு நாடெங்கும் கல்விப் பணியாற்றிச் சிறப்புடன் வாழ்வார்களாக.


அரசினர் மகளிர்
ஆசிரியர் கலாசாலை,
கோப்பாய்.
17-1-068.

இ. ஆனந்தக்குமாரசாமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்



திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி அவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனடி சேர்ந்த

எங்கழக ஆசிரிய மாணவி

**திருமதி. வீ. சிவக்கொழுந்து**



தோற்றம் :
17—10—1930

மறைவு :
20—6—1968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கழக ஆசிரிய மாணவி

# திருமதி. வீ. சிவக்கொழுந்து

## இறைவனடியெய்தியமை குறித்துப்

# பாடப்பெற்றது

பொன்கொடு நகரெனும் பொற்புறு தீவகம்
தங்கும் பெருங்குடித் தாளாண் வேளாண்
தங்குலம் செய்த தவத்தாற் பிறந்து
சிவக்கொழுந் தென்று தேவரும் போற்ற
பொற்பு மிகுந்த புகழ் மிகு நல்லோய்!
கற்பன கற்றுக் கற்றுங் கொழுகி
ஆசிரியத் தொழிலை ஆர்வத்துடனே
கொண்டு மேலும் குவலயம் போற்றச்
செய்தல் வேண்டிச் சீர்சால் பயிற்சிக்
கழகம் தன்னிற் கற்கப் புகுந்து
நான்கு பத்து நங்கையுள் ஒருவராய்
உடனுறை வார்கள் ஒருங்குடன் போற்ற
உணவுக் குழுவின் ஒப்பில் தலைவியாய்
உறுதுயர் களைந்து உலகம் உவப்ப
நாடக அரங்கில் நகைச் சுவைப் பாத்திரம்
நயமுடன் தாங்கிப் பயனுடன் வாழ்ந்த
பாக்கிய வதியே! பண்பார் செல்வி !!
அன்பும் அருளும் பண்பும் மறந்து
நின்செயல் கொடிதே நினைப்பின் அம்ம!
புனிற்றிளம் கன்றாய் புதல்வர் வாடி
தேம்பித் தேம்பித் துடிப்பப் பெரிதும்
பிரிந்தனை யன்றே பேயோடாயினும்
பிரிதல் அரிதென உலகம் பேசும்
மணந்த காதல் மணாளன் தனையும்
மறந்தனை யன்றே அன்றியும் நின்னொடு
பயின்ற மாணவர் ஆசிரியர் குழூஉ
வருந்தச் சென்றனை வான் நெறியூடு
அதனால்; கொடிது! கொடிது!!
நின் மனமம்ம! நினைப்பின் கொடிதே!!

சி. புனிதவதி,
விடுகைவருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயா மூல தன்ம நெறி

க. சிற்றம்பலம், பளை.

இத்தொடர் தேவாரத் திருமுறையில் திருத்தாண்டகம் என்ற பகுதியில் இரண்டு இடங்களில் வருகின்றது. (6-ம் திருமுறை 20-ம் பதிகம் 6-ம் பாட்டு, 40-ம் பதிகம் 6) தயா என்னும் வடசொல் இரக்கம், கருணை, அன்பு என்று பொருள்படும். தன்மம்-தருமம் குலதருமம், அரசதருமம் என்றாற்போல்வது.

திருநாவுக்கரசு நாயனார் இளமையிலே குடும்பச் சூழலினால் நிலையாமையை உணர்ந்து துறவை விரும்பியவர். அதனால் பல அறப்பணிகளில் ஈடுபட்டவர். பல சாஸ்திரங்களையும் நன்கு கற்றுணர்ந்தவர். நிலையாமை, துறவு என்பவற்றில் கொண்ட ஈடுபாட்டினால் சைவத்தை விட்டுச் சமணம் சார்ந்தவர். அகிம்சையைத் தலைசிறந்த ஒழுக்கமாகக் கொண்ட அச்சமயத்தில், பெருநிலையெய்தித் தருமசேனர் என்னும் பெயர்பெற்று அச்சமயத் தலைவராய் விளங்கியவர். பின் சூலைநோய் காரணமாகச் சைவத்தை அடைந்தவர். இத்தகைய திருநாவுக்கரசர் சைவத்தை அடைந்து, சூலைநோயை நீக்கித் திருவருள் கைவந்து வாழுங் காலத்திலேயே, மேலேகண்ட தொடரை அருளிச் செய்தனர். இது ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது.

சைவசமயிகளில் ஆராய்ச்சியில் ஈடுபட்ட பலர், அகிம்சைக் கொள்கை சமணத்திற்கே உரியதென்றும், கொல்லாமையைச் சைவம் சமணத்திலிருந்தே பெற்றுக் கொண்டதென்றும் கூறுவர். அப்படியான சமணச் சார்பில் வாழ்ந்து விளங்கிய அவர் சைவத்தில் வந்து மேற்கண்ட தொடரை அருளிச் செய்வாரானால், அதற்கு ஒரு தனிச் சிறப்புண்டென்றே கருதவேண்டும். அச் சிறப்புத்தான் யாதோ?

சமணத்தின் சகோதர சமயம் புத்தம். புத்தசமயத்தில் வாழ்ந்துகொண்டே சைவ நெறியில் மிகுந்த பற்றுக்கொண்டு சிவலிங்கங்கண்டு வழிபட்ட பெரியார் சாக்கிய நாயனார். இச்சிவனடியார் சைவத்தை மேற்கொண்ட காரணத்தைச் சேக்கிழார் பெருமான்,

செய்வினையும் செய்வானு
மதன்பயனுஞ் சேர்ப்பானு
மெய்வகையா னன்காகும்
விதித்தபொரு ளெனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
யல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள்சிவனென்
றருளாலே யுணர்ந்தறிந்தார்.

என்று கூறுவதைக் கருத்திற் கொண்டு சிந்தித்தால் அதன் பொருளை நன்கு விளங்கிக் கொள்ள முடியும்.

உயிர்கள் உண்டு, அவை செய்யும் வினைகள் உண்டு, அவ்வினைகளுக்குப் பயன் உண்டு. துன்பங்களை அனுபவிக்க உயிர்கள் விரும்பா. ஆதலாலும் உயிர்கள் சிற்றறிவுடையனவாதலாலும், இன்ப துன்பங்கள் அறிவில்லாதன ஆதலாலும் உயிர்களுக்கு அவ்வவற்றின் வினைப்பயன்களை அறிந்து சேர்க்க முதல்வன் ஒருவன் உண்டு என்னும் உண்மைகள் சைவத்திற்கே உரியன. உயிர்கள் தாம் செய்த வினைகளுக்கேற்ப முதல்வனால் ஊட்டப்படும் இன்ப துன்பங்களை அனுபவிக்கும் போது துன்ப அனுபவம் நேரிடின் அவை வருத்தமுறும். அதைக்கண்ட மற்றோர் உயிர் இரங்கி ஆவதென்ன? இரங்கி அதற்கு உதவிசெய்து துன்பத்தினின்று விடுவித்தல் முடியக்கூடிய காரியமா? தருமசேனர் சூலையால் வருந்தியபோது அதைக்கண்டிரங்கிய சமணர்களால் யாதும் செய்ய முடியவில்லையே! இரங்கி ஏதாவது செய்ய முற்படுதல் இறைவனது செயலுக்கு மாறுதலையாகுமல்லவா? நியதி என்னும் தத்துவத்தின் பொருள்தான் யாதோ? உயிர்களின் சிற்றறிவும் சிறுதொழிலும் காரணமாக இரங்கப்பட்ட உயிருக்கும் இன்பத்திற்குப் பதிலாகத் துன்பம் பெருகலாமல்லவா? இவ்விடத்தில் கயிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையைப் பெயர்த்த இராவணனுக்கு உதவி புரிய முற்பட்ட முனிவரே அக்காரணத் தால் கயிலையை விட்டுப் பூமியில் பிறந்த மருணிக்கியார் என்ற வரலாற்றைச் சிந்தித் தல் நன்று.

உயர் நீதிமன்றத்தினுல் கொலைத்தண் டனை பெற்று அமையாமல் மேன்முறையீட் டின் மூலம் மூன்று நீதியரசர்கள் கொண்ட மன்றத்திலுைம் தனதுதண்டனையை உறுதி யாக்கப் பெற்ற ஒருவனது தண்டனையை நிறைவேற்றும்போது சிவகாருண்ணிய மேலீட்டினுல் தடுக்க முற்படுதல் எத்தகை யது; அதன்பலன் யாதாகும் என்பதைச் சிறிது ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும். மேற் கூறிய கொலைத்தண்டனை பெற்றவனுக்கு ஏனே இரங்குவாரைக் காணேம். ஒரு பெருஞ் சிந்தனையாளர் நமக்கு இரங்கத் தெரியுமா? முதல்வன் கருத்தை அறியாமல் இரங்கலாமா? என்று கூறியதைக் கருத்தில் கொள்ளுதல் தக்கது.

இவ்வாறு முதல்வன் கருத்தை அறி யாமல் இராவணனுக்கு இரங்கி தாம் அனு பவித்தவற்றை நினைந்தே திருநாவுக்கரசர் பெருமான் சைவம் சார்ந்ததனுல் ''தயா மூலதன்மவழி'' தமக்கு அருளப்பட்டதை உள்ளுற உணர்ந்தே இவ்வாறு அருளிச் செய்வாராயினுர் என நாம் ஒருவாறு கருத லாம்.

சினந்திருத்துஞ் சிறுப்பெரியார் குண்டர் தங்கள்
செறுமதியார் தீவினைக்கே விழுந்தேன் தேடிப்
புனந்திருத்தும் பொல்லாத பிண்டி பேணும்
பொறியிலியேன் தனைப்பொருளா ஆண்டு கொண்டு
தனந்திருந்து மவர்திறத்தை யொழியப் பாற்றித்
தயாமூலதன்மவழி யெனக்கு நல்கி
மனந்திருத்தும் மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே நானரற்றி நைகின்றேனே.

(அரசுகள் 6 : 40 : 6

அன்பு தழைக்கும் இடத்திற்றுன் அறம் தழைக் கும், அறம் தழைக்கும் இடத்திற்றுன் ஆண்டவனும் இருப்பான். இதை அறியாது இருட்டறைகளிலே இறைவனைத் தேடியலைபவர்கள் முட்டாள்கள்.

தாகூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Faith of A Christian

( Rev. Fr. H. LeCoutour, O. M. I. )

WHY do you believe in your religion. Supposing we put that question to as many christians as possible, we would hear a very great variety of answers.

I believe, because I have been baptized, admitted into the Church. I must do like my parents, obey my Church leaders. That is the right thing to do. That is conformism, traditionalism, it will soon be destroyed by difficulties within the family or the society. This is not a deep seated personal conviction as it ought to be.

I believe because I feel the need of God. He created me, he protects me, favours me, appeases my fears, destroys my enemies. This is indeed a very selfish attitude. No doubt one must trust in God, but his designs for us may not coincide with our own desires. Therefore, when one is disappointed, he loses courage and faith.

Others will simply answer, I do not exactly know why I believe. Elsewhere in the world this attitude explains why there are so many atheists who may officially belong to a Church but have no absolute relationship with God, and no worry about the possibility of God's existence.

Admitting that to rely upon God, to belong to a Church is good in itself it is only a very partial justification in a question which is of such importance for man. Let us now try to examine what is faith for the enlightened adult Christian.

The Christian knows that God is the Creator, Organizer and Preserver of the Universe. He knows too that his religion will give him an answer to the problems of the human race sickness, wars, evil etc. But Faith is much more than a philosophical system, an explanation of the intelligence.

Faith is a person to person encounter ( meeting ) with God. An appeal from God who created man in order to have somebody he could love and elevate towards Him in a relationship of Father and Son. To believe in God, to make an act of faith is to answer that appeal from God to be ready after believing in Him, to trust in Him, love Him, and serve Him by obedience to His will.

How could that relationship between God the infinite, and man the very limited be established. There was only one way. God had to come down to man to reveal himslf to elucidate what he was, what he wanted, and to formulate his appeal.

All the great religions have their written revelation. The Christians have the Bible. It covers that long period of history between the origin of the world and the coming of Christ. In that long period God prepared a nation for the coming of the Redeemer. It was a slow, careful, gradual transformation of scattered people into a nation, which was accomplished by God through great leaders, patriarchs, prophets, judges, kings, and finally when the time was ripe came the Redeemer, Jesus Christ — The Word because in Him the word of God personified ( And the Word was made flesh ) St. John ch. 1. The immediate witnesses of Christ the Apostles and Evangelists noted down what Jesus had done and said. This is the New Testament of the Bible.

Therefore, the Christian more than he believes in a religion believes in a person, that is Jesus. Christians means followers of Christ. Christ is the meeting point of the love of God for man His creature, and the love of man for God his Creator. The world has become the family of the Children of God, guided towards Him by their elder brother Jesus.

After his death, resurrection, and Ascension Jesus Christ has deputised his mission to his Church. He named His successor St. Peter. The Church has been divinely instituted, but it is also a human organized society. It has to be faithful following in the footsteps of its Founder. To belong to the Catholic Church is an honour, but at the same time a serious duty for its members. Its growth and its preservation are in their hands.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கோணேஸ்வரமும் கோணேசர் கல்வெட்டும்"

**சைவப்புலவர் பண்டிதர், இ. வடிவேல்.**

ஈழ நாட்டில் பாடல்பெற்ற தலைசிறந்த ஸ்தலங்கள் மூன்று: அவை திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கதிர்காமம் என்பன. ஈழநாட்டில் சரித்திர வரலாறுகள் நிறைந்த பழைய நகரங்கள் வேறும் பல இருக்கின்றன. அவைகளுட் சிலவற்றிற்குப் பௌத்த, இந்துமதக் கலாச்சார வரலாறுகள் இருப்பதுபோல திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கதிர்காமம் என்னும் பழைய நகரங்கட்கு இதிகாச வரலாறுகளும் சமயக் கலாச்சார வரலாறுகளும் இணைந்து காணப்படுகின்றன; இவற்றுள் திருக்கோணேஸ்வரத்தை ஈண்டு ஆராய்விற்கு எடுத்துக் கொள்வோம்;

திருகோணமலையின் ஆதி வரலாற்றினை அறிவதற்கு ஆதாரமாய் இருப்பவை சரித்திரச் சான்றுகளே. சரித்திரச் சான்றுகளின் மூலம் ஒரு நகரத்தின் வரலாறுகளை அறிவதற்கு ஆதாரமாய் இருப்பவை வரலாற்று நூல்களே. வரலாற்று நூல்களை ஆக்கும் பணியில் பண்டைத் தமிழர் கருத்துச் செலுத்தினர்கள் என்று துணிந்து கூற முடியவில்லை. சங்க காலத்திலும் அதற்கு முன்னரும் வாழ்ந்த மன்னர்களுக்கோ, புலவர்கட்கோ அல்லது அவர்கள் வாழ்ந்த நகரங்களுக்கோ வரலாற்று நூல்களை அவ்வப்போது ஆக்கி வைத்திலர். மேல்நாட்டவர்கள் வரலாற்று நூல்களை ஆக்கி வருவதைப் பின்பற்றிப் பிற்காலத் தமிழ் மக்கள் மிக மிக முயன்று வரலாற்று நூல்களை எழுதி வந்திருக்கிறார்கள்; ஆனால் பண்டைத் தமிழ் மக்கள் தாமியற்றிய மாபெரும் பணிகளை வருங்கால மக்கள் அறியவேண்டுமென்ற காரணத்தினலோ, அப்பணிகளுக்கு ஊனமேற்படுங் காலத்தில் அவற்றைத் தொடர்ந்து செப்பனிடுவதற்காகவோ, நெறிமுறை பிறழாமல் குறிப்பிட்ட ஒவ்வொரு பணிகளும் நிகழ்ந்து வரவேண்டும், என்ற விருப்பினலோ உறுதியானதும் சுருங்கியதுமான சில வரலாற்றுச் சாசனங்களைப் பொறித்து வைத்துள்ளார்கள். அத்தகைய சாசனங்கள் கல்வெட்டுகளிலும் செப்புப் பட்டயங்களிலும், செப்பேடுகளிலும் சிற்சில இடங்களிலும் மரப்பலகைகளிலும் காணப்படுகின்றன. இவற்றையும் பண்டைக்கால இதிகாசங்கள், இலக்கியங்கள், புராணங்களிலுள்ள சம்பவங்களையும் பகுத்தறிவிற்கு ஏற்றவாறு ஒப்பநோக்கி இயன்ற வரை கால வரையறைகளையும் கணித்து ஆதி வரலாறுகளையும் அனுமானிப்பதே சாலப் பொருத்தமானது;

திருக்கோணேஸ்வரத்திற்குச் சிறப்பாய் அமைந்த கேணேசர் கல்வெட்டைப் பற்றி ஈண்டு விரித்துக் கூறப்புகும் போது அத்தலத்தினுடைய வரலாறுகளையும் சிறிது அறிந்திருப்பது நலமெனக் கருதுகிறேன்;

திருகோணமலைச் க்ஷேத்திரத்தைப் பற்றிய செய்திகள் தெட்சணகைலாய மான்மியம், தெட்சண கைலாய புராணம், திருக்கரசைப் புராணம், மச்ச புராணம், திருக்கோணசல வைபவம் முதலிய நூல்களில் பரக்கக் காணப்படுகின்றன. ஏழாவது நூற்றண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் திருஞானசம்பந்த சுவாமிகள் பாடியருளிய திருக்கோணசல திருப்பதிகத்தில் கோணமாமலையமர்ந்த கோவிலையும், அத்திருப்பதியினையும் பாடியருளினர்கள்; "கோயிலும் சுனையும் கடலுடன்சூழ்ந்த கோணமாமலை", "குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும் கோணமாமலை", "விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை வேங்கை வண்செருந்திசெண்பகத்தின் குருந்தொடுமுல்லை கொடிவிடும் பொழில் சூழ் கோணமாமலை" என்று திருக்கோணேஸ்வரத்தின் புகழைப் போற்றியுள்ளார்கள்; இராமேஸ்வரத்தில் இருந்துகொண்டு திருஞானசம்பந்தர் இத்திருப்பதிகங்களைப் பாடினர்; ஆதலால் திருக்கோணேஸ்வரத்தின் பெரும்புகழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதநாடு எங்கும் பரவி இருந்தது என்பது புலனுகின்றது.

பதின்மூன்ரும் நூற்ருண்டின் நடுப்பகுதியில் இருந்தவனுன புவனேக வீரபாண்டியன், பாண்டிய மன்னருக்குக் கீர்த்தியைத் தருவதாகிய கயல் இலச்சினையைக் கோணமாமலையில் பொறித்தான் என்றும், திருக்கோணேஸ் வரத்திற்கு உரிய நிலங்களை இறையிலி நிலமாக்கினுன் என்ற வரலாறும் குடுமியாமலைச் சாசனத்திற் கூறப்பட்டு இருக்கிறது. குடுமியாமலைச் சாசனம் தமிழ் நாட்டுக்கு உரியது. பண்டைக்கால மன்னர்கள் தமது வீரத்தினுலும், செல்வாக்கினுலும், பிறநாடுகளைக் கட்டி ஆண்டு வந்திருக்கிருர்கள். பிறநாடுகளைத் தம் ஆட்சிக்கு உட்படுத்தி ஆளும் காலத்தில் அந்நாட்டில் உள்ள ஸ்தலங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது வழக்கம். அதனுல் அத்தலங்களிற் புதியஆலயங்களை அமைக்கவோ, முன்னருள்ள ஆலயங்களிற் திருப்பணி செய்யவோ, ஆலயங்களுக்கு மானியம் வழங்கவோ தவறுவதில்லை. அநுரதபுரியைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆட்சி புரிந்த கஜபாகு மன்னன் திருக்கோணேஸ்வரத்திற்கு மானியம் வழங்கினுன். கோணேசர் கல்வெட்டில் இச்செய்தி காணப்படுகிறது. பௌத்த மன்னனே மானியம் வழங்கினுன் என்ருல் தமிழ்நாட்டு மன்னன் புவனேகவீர பாண்டியன் திருக்கோணேஸ்வரத்திற்கு உரிய நிலங்களை இறையிலி நிலமாக்கியதில் ஆச்சரியத்திற்கு இடம் ஏது.

தென்னிந்திய கோயிற் சாசனங்களுள் ஒன்று குடுமியாமலைச் சாசனம். அதனை ஆராயுமிடத்து திருக்கோணமலையில் பாண்டிய மன்னர்களின் இருகல் இலச்சினையை சடையவர்மன் சுந்தர பாண்டியன் கி. பி. 13-ம் நூற்ருண்டில் பொறித்தான் என்று அறியக் கிடக்கிறது. எனவே சடையவர்மன் சுந்தரபாண்டியனும், புவனேக வீர பாண்டியனும் ஒருவராய் இருத்தல் வேண்டும். அன்றேல் சடையவர்மன் சுந்தர பாண்டியனுடைய ஆணைப்படி ஈழத்தை வெற்றிகொண்ட புவனேகவீர பாண்டியன் இரு கயல் இலச்சினையைத் திருகோணமலையில் தனது வெற்றிச் சின்னமாய்ப் பொறித்திருத்தல் வேண்டும். திருக்கோணேஸ்வரத் திருக்கோயிலை இடித்து அழித்து தரைமட்டமாக்கி அக்கிரமச் செயல்புரிந்த போர்த்துக்கேய சேனுதிபதி கான்ஸ்டன் டைன்டிஸா போர்த்துக்கேய மன்னனுடைய ஆணை பெற்ற தலைவன் என்பதை இச் சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

திருக்கோணேஸ்வரத்திற்குரிய சிலாசனக் கல்வெட்டு ஒன்று போர்த்துக்கேயரின் அழி செயலுக்குப் பலியாகியுள்ளது. எனினும் நீண்டதோர் சரித்திர வரலாற்றிற்கு விளக்கமாய் இருந்த அக் கல்வெட்டின் ஒரு பாகம் தமிழ் மக்களினதும் சைவ மதத்தினதும் தொன்மையைப் புலப்படுத்துவதற்காகப் போலும் இன்றும் இருந்துவருகிறது. பிறடெறிக் கோட்டை வாசலில் இடதுபக்கத் தூணில் அப்பாகம் இருப்பதைக் காண்கிருேம். அப்பாகத்தினுள் உள்ள எழுத்துக்களை அப்படியே இங்கு தருகிறேன்.

ன னே குள
காட முட்டு
ருப பனியை
னனே பறஙகி
ககவே மனன
னபோ னணு
னை யய றற
தேவை த
ரை
கள.

இதனை ஆராய்ச்சி செய்து திருக்கோணேஸ்வரம் என்னும் நூலை எழுதிய புலவர் வை. சோமஸ்கந்தர் அவர்களும், திரு. அ. ஸ்ரீஸ்கந்தராஜா, பி. ஏ. அவர்களும் பின்வருமாறு கருத்துக் கொண்டுள்ளனர்.

(மு)ன்னே குளக்
(கோ)காட(ன்) மூட்டு(ந்)
(தி)ருப்பணி யை(ப்)
(பி)ன்னே பறங்கி(பி)
(ரி)க்கவே மன்ன(வ)
(பி)ன் பொண்ணு(த)
(த)னை யிறற்ற(பழி)
(த)தேவைத்(து)
(சுண்ணு) (ரேபின்)
(னரசர்)கள்

பாடலின் முழு உருவத்தை இங்கே தருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முன்னே குளக் கோட்டன்மூட்டும் திருப்பணி
பின்னே பறங்கி பிரிக்கவே — மன்னவ பின் [யைப்
பொண்ணாததனை யியற்ற வழித்தே வைத்து
எண்ணார் வருவே ந்தர்கள்.*

இக் கல்வெட்டுப் பாடலினைச் செவி வழிச் செய்தியாய் வைத்துப் பாதுகாத்து வரும் திருகோணமலைப் பழங்குடி மக்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்.

*''முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியை
பின்னே பறங்கி பிரிக்கவே — மன்னாகேள்
பூனைக்கண் செங்கண் புகைக்கண்ணன் போனபின்
மானே வடுகாய் விடும்.''*

கால வெள்ளத்தைக் கடந்து வந்த இக் கற்சாசனத்தின் பிற்பகுதியிலேதான் ஒருவருக் கொருவர் மாறுபாடு ஏற்படுகின்றது: அவ்விடயத்தில் எனக்குத் தோன்றும் கருத்தையும் இங்கே தருகின்றேன்:

*''முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிரிக்கவே — மன்னவ பின்
பொண்ணாததனை யியற்ற வழிவழித் தேயத்து
எண்ணார் வருவே ந்தர்கள்.''*

முற்காலத்தில் குளக்கோட்டன் என்னும் மன்னன் திருப்பணிசெய்த திருக்கோயிலை, பிற்காலத்தில் பறங்கியர் இடித்து அழிப்பார்கள். அதன்பின்னே இக்கோயிலைக் கட்டுவதற்குப் பரம்பரையாகவரும் பிற்கால நிகழ்ச்சிகளை முன்னரே அறிந்து கூறும் தீர்க்கதரிசியாகிய சுபதிருஷ்ட முனிவரால் பாடப்பெற்ற இப்பாடல் அரசன் ஆணைப்படி கல்வெட்டில் பொறிக்கப்பட்டு இருக்கலாம் என்று கருத இடம் உண்டாகிறது:

கி. பி. 1624-ம் ஆண்டில் அதாவது இற்றைக்கு 342 ஆண்டுகட்கு முன்னே கோணேசர் ஆலயத்தைப் போர்த்துக்கேய சேனாதிபதி கான்ஸ்டன் டைன்டிஸா இடித்துத் தரைமட்டமாக்கி அதன் கற்களைக் கொண்டு பிறடறிக் கோட்டையைக் கட்டினான். அப்போது இத்தேசாதிபதி போர்த்துக்கல் மன்னனுக்கு அனுப்பிய ஒரு கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்ததாக லிஸ்பன் தேசியப் புத்தகசாலையில் ஒரு குறிப்புக் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கிறது: (ரோயஸ் ஏஸியாட்டிக் சங்கப் பிரசுரம் 30-வது மலர் 80-ம் இதழ் 449-ம் பக்கத்தில் இதைக் காண்க.)

''இக்கோயில் இடித்து அழிக்கப்படுகையில் ஒரு கல்லில் சில விஷயங்கள் எழுதி வைக்கப்பட்டு இருந்தன: சில அறிவாளிகளைக் கொண்டு அந்த விஷயம் சரியாக மொழிபெயர்க்கப்பட்டு மாட்சிமை தங்கிய போர்த்துக்கல் மன்னருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்தக் கல்வெட்டில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டு இருந்தது.''

''வீதிய — மால் — மண்டா கடவுளுக்கு இந்தக் கோவில் மாணிக்க ராஜாவினால் கட்டப்பட்டது. சரித்திரக் கணக்கின்படி இந்தக்கோயில் கி. மு. 1300-ம் ஆண்டில் கட்டப்பட்டு இருக்கவேண்டும். பிராங்ஸ் என்ற ஒரு சாதியினர் இக்கோயிலை அழிப்பார்கள். பிறகு இதைக் கட்ட இலங்கையில் எந்தமன்னருமே இருக்க மாட்டார்கள் என்பது அக்குறிப்பு. மாணிக்க ராஜா என்பது மனுராஜா என்பதற்குச் செய்த தவறான மொழிபெயர்ப்பாக இருக்கவேண்டும் என்று பிரபல போர்த்துக்கேய சரித்திராசிரியர் வண. பிதா. குவிரோஸ் என்பவர் கருதுகிறார். வீதிய - மால் - மண்டா என்பன வீதியும், மேல்மாடியும் மண்டபமும் என்று இருக்கவேண்டும் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

கோணேசர் கல்வெட்டு என்று கருதப்படும் சிலாசனத்தில் காணப்படும் செய்திகளை உன்னிக்கவனிக்கும்போது கோணேசர் கோவிலைக் கட்டுவித்தவன் மனுராஜா என்பதாக கான்ஸ்டன் டைன்டிஸா என்ற போர்த்துக்கேய தளபதியின் குறிப்பிலிருந்து அறிகிறோம். கல்வெட்டுப் பாட்டில் '' குளக்கோட்டன் மூட்டும் திருப்பணி'' என்று, ஆலயத்தை அமைத்தவர் குளக்கோட்டு மன்னன் எனவும் அறிகிறோம்: ஆனால் இச்சாசனமும் லிஸ்பனுக்கு எழுதி அனுப்பப்பட்ட சிலாசனக் குறிப்பும் ஆலயம் பறங்கியர் வசமாகி அழியும் என்ற ஒற்றுமைச் செய்தியைத் தருகின்றன:

13-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவன் புவனேக வீரபாண்டியன்: அவன் திருகோணமலையைத் தன் ஆட்சிக்கு உட்படுத்தி ஆலயத்திற்கு மானியம் வழங்கியவன். அவன் எழுதிய இருகயல் இலச்சினைகளும் இச்சிலாசனத்துடன் சேர்ந்து காணப்படுகின்றது. அதில் உள்ள பாடல், ''முன்னே குளக்கோட்டன் மூட்டும் திருப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணி" என்று பேசுகின்றது. இதிலிருந்து புதியதோர் ஊகத்திற்கு இடம் உண்டாகின்றது. முன்னே என்ற சொல்லின் அர்த்தத்தைப் புவனேக வீரபாண்டியனுக்கு முன்னே எனக்கொண்டு திருக்கோணேஸ்வரத் திருப்பணியை குளக்கோட்டு மன்னன் செய்தான் என்பதை, புவனேக வீரபாண்டியன் அறிந்திருந்தான் என்றும், அப்பணிக்கு ஊனம் வந்துறுவது பறங்கியரால் என்பதை முக்காலமும் உணரவல்ல தீர்க்க தரிசியால் அறிந்து அம்மன்னனுடைய ஆணைப்படி இச்சிலாசனமும் அதனுடன் இணைந்த இருகயல் இலச்சினையையும் பொறிக்கப்பட்டிருக்கலாம் என்பதைச் சிந்தனையாளர்கள் கவனத்திற்குத் தர விரும்புகிறேன்.

இக் கல்வெட்டில் காணப்படும் எழுத்தமைப்பினை ஆராய்ந்த சென்னை அரசாங்க கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு. எச். கிருஷ்ண சாஸ்திரி அவர்கள் இந்த எழுத்தமைப்பு கி. பி. 16-ம் நூற்றுண்டைச் சேர்ந்தது எனக் கருதுகிறுர்; இரண்டு மூன்று நூற்ருண்டுகட்கிடையில் ஒரு சமுதாயத்தினரின் எழுத்தமைப்புமுறை மாறியமைவதற்கு அவசியம் ஏற்பட்டிராது. எனவே கி. பி. 13-ம் நூற்ருண்டில் வாழ்ந்த புவனேக வீரபாண்டியன் காலத்திலும் இந்த எழுத்தமைப்புமுறை இருந்ததெனக் கொள்வதில் இழுக்கில்லை.

இதுவரை கி. பி 13-ம் நூற்ருண்டுவரையும் உள்ள திருகோணமலை வரலாற்றின் சிறு பகுதியை அறிந்தோம். கி. பி. 15-ம் நூற்ருண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் அருணகிரிநாத சுவாமிகள் திருகோணமலைத் தலத்திற்குத் திருப்புகழ் பாடியுள்ளார்: விலைக்கு மேனியில் என்று தொடங்கும் திருப்புகழில்,

" நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கோணமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில் இளிப்பாடு பூதியில் — வருவோனே"

என்று பாடியிருப்பதைக் காண்க. இத்தலத்தின் பெயரை அவர் திருகோணமலை என்று கூறுகின்றுர். திருகோணமலை என்பது ஓசைநயம் கருதி திருக்கோணமலை எனப் பாடப்பட்டிருக்கிறது. அருட்செல்வமும் பொருட்செல்வமும் குறைவுபடாத ஸ்தலம் என்பது அதன்பொருள். யாழ்ப்பாணத்தில் இருந்து அரசு புரிந்துவந்த ஆரிய சக்கரவர்த்திகளும் இக்கோயிலை ஆதரித்து வந்திருக்கிறுர்கள்.

கி. பி. 17-ம் நூற்ருண்டு தொடக்கம் இலங்கையை அரசுபுரியத் தொடங்கிய போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் (இவர்களையே பூனைக்கண், செங்கண், புகைக்கண்ணன் என்று சிலாசனம் குறிப்பிடுவதாய் பலர் கருதுகின்றனர்) காலங்களிலும் அதன்பின்னரும் இத்தலத்தின் இதிகாச வரலாறுகள் தெளிவாய்க் கிடைக்கின்றன.

இதுவரை கோணேசர் கல்வெட்டு எனக் கூறப்பட்டு வரும் சிலாசனச் செய்தியைப் பற்றிக் கூறினேம். மரப்பலகையில் பொறிக்கப்பட்ட சாசனம் ஒன்று (சுதுகதவின் ஒரு பாகமாய் இருக்கலாம்) திருகோணமலைக் கச்சேரியில் இருந்தது. அதில் உள்ள ஒரு பகுதியை இங்கே தருகின்றேன். " சகவருடம் 1145 (சம்புபுஷ்பம்)-ம் ஆண்டு சூரியன் மேடஇராசியில் நிற்க, அந்த நட்சத்திரம் கூடிய நாளில் இலக்கினம் உதயமாகும் போது கோடகங்கன் என்னும் மன்னவன் இலங்கைக்கு கோகர்ணவில் (மறைந்த பகுதி) ஏதோ செய்வதற்கு வந்தான்." (திருக்கோணேஸ்வரம் என்ற நூலில் இருந்து பெறப்பட்டது.)

1946-ம் ஆண்டு கலாநிதி எஸ். பரணவித்தான அவர்கள் இக்கல்வெட்டினை ஆராய்ந்து பின்வருமாறு கூறியுள்ளார்: கி. பி. 1123 ஏப்ரல்மாதம் 14-ம் திகதி வெள்ளிக்கிழமை மேடஇலக்கினம் அதிகாலையில் பொருந்தியிருந்தது. இக்கல்வெட்டில் கூறப்படும் கோடகங்கன் என்னும் அரசனை இந்திய, இலங்கை வரலாறுகளால் அறிய முடியவில்லை. இவன் கலிங்கநாட்டில் கிழக்குக் கங்க வமிசத்தில் தோன்றியவனுய் இருக்க வேண்டும். கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள கோகர்ணு இன்றுள்ள திருகோணமலையாய் இருக்கலாம். கி. பி. 12-ம் நூற்ருண்டில் கோடகங்கன் என்னும் மன்னன் இலங்கையை ஆண்டான், என்று இலங்கைச் சரித்திரத்தில் கலாநிதி மெண்டிஸ் அவர்கள் கூறியுள்ளார்கள். இவர் கூறும் கோடகங்கனும் கல்வெட்டில் கூறப்படும் கோடகங்கனும் ஒருவனு என்பது ஐயத்திற்கு இடமானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணேசர் கல்வெட்டு என்று கூறப்படும் முக்கியமான பகுதியாகிய ஏட்டுப் பிரதிகள் பற்றி இனி ஆராய்வோம். திருகோணமலேயில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் பழங்குடித் தமிழ்மக்களில் முதியவர்கள் சிலர் பெரிய வளமைப் பத்ததி என்ற ஒரு செப்பேடு இருந்ததாகக் கூறுகிருர்கள்; அதில் கோணேசர் ஆலயத்தின் நிர்வாக நெறிமுறைகள் எழுதப்பட்டிருந்ததென்றும் சொல்கிருர்கள்; ஆனல் இன்று வாழ்கிறவர்கள் எவரும் அதனைப் பார்த்திருப்பார்கள் என்று சொல்லமுடியாது. ஆலயத்திற்குரிய முக்கியமான வரவு செலவுகள் இச்செப்பேட்டில் இருக்கலாமெனவும் ஊகிக்கிருர்கள். கோணேசர் கல்வெட்டு என்று கருதப்படும் ஏட்டுச் சுவடிகள் இன்று கிடைக்கக்கூடியதாய் இருக்கின்றன; கோணேசர் ஆலயத்திற்குத் தொழும்பர்களாயும், உரிமையாளர்களாயும் உள்ளவர்கள் கொட்டியாபுரப்பற்று, கட்டுக்குளப்பற்று, தம்பலகாமப்பற்றுக்களில் வாழ்ந்து வந்தார்கள்; அதனல் ஆலயத்தின் கல்வெட்டுப் பிரதிகள் அவ்வப் பற்றுக்களில் வாழ்ந்தவர்களிடம் இருந்துவருகின்றன. திருகோணமலேயைத் தாயகமாய்க் கொண்டவரும், தமிழ்ப் பேரறிஞரும், புலவருமாகிய ஸ்ரீமான். வே. அகிலேசபிள்ளே அவர்கள் 19-ம் நூற்றுண்டின் பிற்பகுதியிலே மிகவும் அரும்பாடுபட்டு பழைய கல்வெட்டுச் சுவடிகளேயும் புராணங்களேயும் தேடி எடுத்து ஆராய்ந்தார்கள். அவருடைய ஆராய்ச்சியின் பயனுகக் கிடைத்ததே "திருக்கோணுசல வைபவம்" என்னும் நூல். அந்நூலில் கோணேசர் கல்வெட்டு ஒரு பகுதி காணப்படுகிறது; அக் கல்வெட்டில் கூறப்படுகின்ற சம்பவங்களே விட வேறு புது அம்சங்களே ஏட்டுச் சுவடிகளிலே காணலாம் என நான் எதிர் பார்க்கவில்லே. இக்கருத்துக்கு மாறுபடுகின்றவர்கள் யாரேனும் இருப்பாராகில் அவர்கள் பழையஏட்டுச்சுவடியுடன் வெளிப்படுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். வல்வெட்டித்துறை இயற்றமிழ் போதக ஆசிரியர் திரு. க. வைத்திலிங்கம் அவர்களும், சுவாமி விபுலானந்த அடிகளுடைய ஆசிரியர் திரு. வைத்திலிங்க தேசிகர் அவர்களும் கோணேசர் கல்வெட்டைத் தனித் தனியே அச்சிட்டுள்ளார்கள். டாக்டர். ஐசக் தம்பையா அவர்கள் கோணேசர் கல்வெட்டை ஆதாரமாய்க் கொண்டு "இந்த டெய்ஸ் ஒவ் சாம்பசிவா" (In the days of Sambasiva) எனும் ஆங்கில நூல் ஒன்றை எழுதியுள்ளார்.

இனிக் கல்வெட்டுக் கூறும் சம்பவத்திற்கு வருவோம். குளக்கோட்டு மன்னன் சொல்லிய சொற்படியே கவிராஜவரோதயன் கல்வெட்டுப் பாடியதாகக் காணப்படுகிறது. கவிராஜவரோதயன் எக்காலத்தில் வாழ்ந்திருந்தான் என்பது புலனுகவில்லே; அவர் பாடிய பாடல் ஒன்றைத் தருகிறேன்;

"திருமருவு மனுநீதி கண்ட சோழன்
　　செகமகிழ மரவில் வரு ராமதேவன்
தருமருவு திரிகயிலேப் பெருமை கேட்டு
　　தானுமவன் வந்ததுவு மவன்சேய் பின்பு
மருமருவு மாலயங்கள் கோபுரங்கள்
　　மணிமதில்சூழ் மண்டபங்கள் மலி நீர் வாவி
கருமருவு முகினீர் சேர் திருக்குளஞ் செய்
　　காதையதுங் கல்வெட்டாய்க் கழறுவாமே."

மனுநீதி கண்ட சோழனும், அவன் மரபில் வந்த வரராமதேவனும், குளக்கோடனும் திருகோணமலேயில் திருப்பணி செய்ததாக இப்பாடல் மூலம் அறியக்கிடக்கிறது. போர்த்துக்கேய தளபதி கொன்ஸ்டன்டைன்டிஸா எழுதிய குறிப்பில் மனுராஜா இவ்வாலயத்தைக் கட்டியிருக்கலாம் என்பதும் அது கி. மு. 1300 ஆண்டுகளுக்கு முன்னே கட்டப்பட்டு இருக்கலாம் என்பதும் சிந்திக்கற்பாலது.

சேரர் வரலாற்றுக் கால வரிசைக்கணக்கின்படி கி. மு. 2700-ம் ஆண்டைச்சேர்ந்தவன் மனுநீதி கண்ட சோழன். அவன் பரம்பரையில் வந்த பிரியவிருத்தன், வரராமதேவன், வீதிவிடங்கன் ஆகியவர்களுக்குப்பின் கி. மு. 2600 முதல் கி. மு. 2560 வரை குளக்கோட்டன் அரசிருந்ததாகத் தெரியவருகிறது. போர்த்துக்கேய தளபதியின் காலக்குறிப்பு எழுத்து முறையான வரலாற்றின் வழிவராமல் கர்ணபரம்பரைச் செய்தியாகக் கிடைத்திருக்கலாம். அதனல் அக்காலக் குறிப்பும் பிழையுறுதற்கு இடம் உண்டாகிறது. சேரர் வரலாற்றின் காலவரிசைக் கணக்கின்படி கவனிப்போமாயின் குளக்கோட்டன் திருப்பணி செய்த கோணேசர் ஆலயம் இற்றைக்குச் சுமார் 4500 வருடங்கட்கு முற்பட்டதாயிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இதனை, ''திருந்து கலிபிறந்து ஐந்நூற்றெருபதுடன் இரண்டாண்டு சென்றபின்னர் ஆலயமும் பாபநாசச் சுனையும் பகுத்தான் மேலோன்'' என்ற கல்வெட்டுப் பாடலாலும் அறியலாம். மனுச்சோழன் கட்டிய அவ்வாலயத்திற்கு வரராமதேவனும் பின்னர் குளக்கோட்டனும் திருப்பணி செய்ததாக கல்வெட்டின் மூலம் கருத இடம் உண்டாகிறது. அப்படியானுல் இவ்வாலயம் மேலும் பல்லாண்டுகட்கு முன்னே கட்டப்பட்டு இருக்கவேண்டும்.

திருஞான சம்பந்தர் பாடியருளிய திருப்பதிகத்தில் ''எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்'' என்ற புராணச் செய்தி கிடைக்கிறது. திருகோண மலையை எடுத்தவன் இராவணேஸ்வரன் என்பது அச்செய்தி. இராவணன் இலங்கையை ஆண்ட மன்னன். அவன் தெட்சண மூர்த்தி மீது பாடிய சமஸ்கிருத சுலோகமும் அதன் மொழிபெயர்ப்பும் இன்றும் இருக்கிறது. இராவணன் வெட்டு, கன்னியாய் என்பன அவனுடைய வரலாற்றேடு தொடர்புபட்ட ஞாபகார்த்தங்கள். இம் மன்னன் இராமன் காலத்தவன். இராமாயண காலம் கி. மு. 6000 ஆண்டுகட்கு முன்னர் எனப் புராணகாரர் கூறுவர். புராணவரலாறுகள் முற்றும் பிழையெனக் கொண்டால் கிரேக்க வரலாறுகட்கு விளக்கமாயிருக்கும் இலியட், ஒடிசி என்ற மகா காவியங்களையும் ஏற்கமுடியாதன்றே. எனவே, இராமாயண காலத்திலிருந்தே சிறப்புற்று விளங்கிய சிவஸ்தலமாகிய கோணேஸ்வரத்தில் திருப்பணி செய்த குளக்கோட்டு மன்னன் அவ்வாலயத்தின் நித்திய நியமங்கள் ஒழுங்கு முறை குன்றுது நடைபெறுவதற்கான வாய்ப்புக்களை உண்டாக்கி அதற்குக் கல்வெட்டும் எழுதுவித்தான்.

திருக்கோணேஸ்வர ஆலயத்தில் தொழும்பு செய்வதற்காக குளக்கோட்டு மன்னன் பாண்டிய நாட்டுக்குச் சென்று மருங்கூரிலிருந்து முப்பது குடிமக்களைக் கொண்டு வந்தான். இவர்கள் தானத்தார் என்று அழைக்கப்பட்டனர். இவர்களுக்கு இறைவன் முன்னர் ஆரத்தி எடுத்தல், நடனம் ஆடல், அரசர்கட்கு பட்டீதல் முதலிய கடமைகள் விதிக்கப்பட்டன. காரைக்காலில் இருந்துகொண்டு வரப்பட்ட 21 குடிமக்களும் வரிப்பத்தார் எனப் படுவர். இவர்களுக்குப் பட்டாடை கொய்து கட்டுதல், புஷ்பம் பத்திரம் எடுத்தல், விளக்கேற்றல், தளிசை முதலியவை விளக்குதல், மெழுகுதல், தீர்த்தம் எடுத்தல், நெல்லுக்குற்றல், ஓமத்திற்குரிய பொருட்களெடுத்தல், சுண்ணம் இடித்தல், கொடியேற்றல், இறக்குதல், கட்டுதல், சுமத்தல், சந்தணம் அரைத்துக் கொடுத்தல் முதலிய கடமைகள் விதிக்கப்பட்டன. மதுரைமாநகரில் இருந்த சந்திர குலத்தவன் ஆன தனியுண்ணுப் பூபாலனை குளக்கோட்டு மன்னன் அழைத்துவந்து தாவத்தார் வரிப்பத்தார் ஆகிய குடிமக்களை நீதி நெறி கடவாது நடுநின்று பரிபாலனம் செய்யும்படி நியமித்தான். சிவலிங்கை பூசை வழிபாடு செய்பவர்களாகிய பாசுபதர்கள் கோயிலுக்குப்பூசகர்களாக நியமிக்கப்பட்டனர். கோயிற் தொழும்பு செய்வோரும் வரிகொடுப்போரும் வாழும் எல்லை கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. வடக்கே கரம்பகம். தெற்கே சங்கமக்கண், மேற்கே முனீஸ்வரம், கிழக்கே வங்காளக்கடல், கோயில் வருவாயில் பத்தில் இரண்டு பங்கு அர்ச்சகருக்கும் மிகுதி இருப்பாகவும் இருக்கும். தனியுண்ணுப் பூபால வன்னிமையும் அவன் சந்ததியாரும் கோயில் நிர்வாகத்தை அரசபரிபாலனம் போல் நடத்தி வந்தனர். கோயிற் தொழும்பு செய்வோருக்கு நிலம் வழங்கப்பட்டது. நாள் வருவாயும் செலவும் அடங்கிய கணக்குகள் கருவூலக்கணக்கு எனப்படும்.

பெரிய வழமைப் பத்ததியில் ஆலயத்திற்கு அரசர்களும் மக்களும் வழங்கிய திரவியங்களும் அவை வைக்கப்பட்டிருக்கும் இடங்களும் மானியங்களும் பதியப்பட்டிருக்கும். கோயில் வருவாய்க்காக 2700 அவணம் அரிசி கறியமுது முதலிய பிரசாதனங்களுக்காக கருவூலக் கணக்கர் கோயிலுக்குக் கொடுத்துவருவார். கோயில் வாசலுக்குத் தென்கிழக்குத் திசையில் ஏழு எண்ணெய்க் கிணறுகள் (தொட்டிகள்) இருந்தன. அவற்றில் ஆமணக்கு, இருப்பை, புன்னை முதலிய வித்துக்களில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கப்பட்ட நெய் மீகாமனல் கொண்டு வரப்பட்டு சேகரிக்கப் பெற்றிருந்தன. கட்டுக்குளப்பற்று, தம்பலகாமம், நிலாவெளியில் உள்ளோர் (இந்துவெளி) கோயிலுக்கு நெல்லுக் கொடுத்து வந்தார்கள். காப் பணிவதும் விழா நடத்துவதும் அவர்கள் கடமையாகும். கொட்டியாபுரப் பற்றிலுள்ளோர் பால் தயிர் நெய் வெற்றிலை பாக்கு அரைத்த சந்தனம் முதலியவற்றை ஆலயத்திற்கு வழங்கிவந்தார்கள். ஆலயத்திற்கு மல்லிகைப் பூவைக் கொடுத்து வந்த கிராமம் மல்லிகைத்தீவு என்றும் தாமரைத் திரிகளைக் கொடுத்துவந்த கிராமம் திரியாய் என்றும் இன்று வழங்கப்படுகின்றது. ஆலயப் பூசைகள் எல்லாம் மகுடாகம விதிப்படி நடைபெற்று வந்தன என்பது புராணக்குறிப்பு. கல்வெட்டில் காணப்படும் வேறும் பல விடயங்களை விபரிக்கிற் பெருகும் என்று அஞ்சி விடுக்கின்றேன். இது காறும் கோணேசர் கல்வெட்டினைச் சிறிது ஆராய்ந்தோம்.

> கடவுளின் நீதி மெதுவாகத்தான் நகரும். ஆனல் ஒரு பொழுதும் வழியில் தங்குவதில்லை. தவறு செய்தவனைச் சேர்ந்து தண்டிக்கவே செய்யும். அப்படியே நல்லது செய்பவனுக்கும் நன்மையே செய்கிறது.
>
> — ராபர் டபிரேளனிங்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குன்றின் மேல் எழுந்த குரல் ஒலி

அருட்டிரு. நீ. மரியசேவியர்

வறுமை—அது பெரும் வெறுமை. அதன் சிறுமையைக் கண்டு சீற்றங்கொண்ட சீர்திருத்த வாதிகள் ஒருவர் இருவர் அல்லர். "இனி ஒரு விதி செய்வோம், தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்," என்று முரசொலி முழங்கினுர் பாவலன் பாரதி. ஆனுல் மன வறுமை — மன எளிமை அதுதான் இறைவனின் நிறைவான அருள் அரசை அடைவதற்கு மிகவும் வேண்டிய மனநிலை. "மன எளிமை உடையோர் பேறுபெற்றோர்; ஆண்டவன் அரசு அவர்களுடையது." மலை மீது எழுந்த இந்த மணிமொழிகளை மக்கள் உள்ளத்திலும் உலகிலும் மறுமலர்ச்சியை உருவாக்க உதித்த உத்தமன் கிறீஸ்து உரைத்தார். புதுமையான புனிதமான வாழ்விற்கு உள்ளத்தின் "எளிமை", "வறுமை" அடிப்படையான அம்சமாக அமைய வேண்டுமென ஆணித்தரமாக மொழிந்தார்.

## பொருளும் அருளும்:

ஏது இந்த எளிமை? யார் இந்த வறியவர்கள்?...... அடிவயிற்றுடனும் அடுப்புடனும் அன்ருடப்போர் செய்துவாழும் அபலைகளா? தலை சாய்ப்பதற்குத் தக்க இடமின்றி, மானம் மறைப்பதற்கு மதிப்பான உடையின்றி ஊசலாடித்திரியும் உறுதுணையற்றோர் கூட்டமா? அல்லது வாழ்வாங்கு வாழ அளவாகமட்டும் வைத்து — மிகுதியைத் தர்மத்தில் செலவழிக்கும் தயாள சிந்தை உடையவர்களா? அன்றேல் தமக்கென எதுவும் வேண்டாமென்று, பொருள் அற்ற, பற்றற்ற நெறியில் ஒழுகும் முற்றும் துறந்த முனிவர்களா? வேறுபட்ட எந்த இந்நிலையுடனும் எளிமையை—மன வறுமையை—ஒப்பிடக்கூடாது. ஏழ்மை—பொருளற்றநிலை—தன்னிலேதானே உயர்ந்ததுமல்ல—உத்தமமானதும் அல்ல—உலகில் வாழ உகந்ததுமல்ல. வறுமையைக் கிறீஸ்து போற்றவுமில்லை; பேறுபெற்றது என்று சொல்லவுமில்லை. மாருக அதைத் துடைக்க முயன்ருர். ஏழ்மையை வெறுத்தார். ஏழையை அன்புசெய்தார். எனவே பொருளற்ற எந்நிலையுடனும் பொருளுடன் தொடர்புபடுத்தி அருள்நிலையான மனவறுமையை இணைக்கக்கூடாது.

## பற்றும் பணிவும்:

இறை ஏடுகளில் "எளியவன்" என்பவன் வருத்தப்படுபவன், வல்லவர்களால் பரிகசிக்கப்படும் நல்லவன், வறுமையைத் துணை கொண்டவன், உறும் நிந்தை அவமானத்தை உடமையாகக் கண்டவன், துயரக்கடலில் உழல்பவன், தெய்வபக்தி யற்ரோரின் பண்பற்ற பழிக்காற்றிலே சுழல்பவன். தன்னிலே அளவுக்கு மிஞ்சிய திடம் வைக்காது அவனின்றி அணுவும் அசையாது என்ற ஆணித்தரமான நம்பிக்கை கொண்டவன். இருந்தும் தான் சிக்கியுள்ள அவல நிலையிலிருந்து தன்னை இறைவன் காத்தருள்வார் என்ற உறுதி படைத்தவன். அவன் ஒரு "நல்லவன்", "பக்தன்", "நீதிமான்" கடவுளின் கட்டளைகளைக் கண்ணியத்துடன் கடைப்பிடிப்பவன். அவர் திருச்சித்தமே நிறைவேற வேண்டும் எனத் தினம் உழைப்பவன். ஆகவே, எளியவன் பொருள் உற்றவனே அற்றவனே அல்ல நீதிக்காகத் தவித்து — இறைவன் திருச்சித்தம் அரசு புரிய வேண்டுமென உள்ளத்தில் நினைத்து அதற்காக உறுதியுடன் உழைப்பவன். அவன் தொடர்பு பொருளுடன் அல்ல அருள் அளிக்கும் ஆண்டவனுடன். அவன் பற்று பற்றிலோ பற்றற்ற நிலையிலோ அல்ல — ஆனுல் முற்றும் நிறைந்த முழுமுதற் கடவுளின் கருத்துடன் திருச்சித்தத்துடன் "மற்றோர் பற்றிங்கறியேன்" எனத் திருவாசகம் கூறுவதுபோல், இறைவனும் அவரது திருச்சித்தமும்தான் தன்வாழ்வின் ஆதியும் அந்தமுமாக வாழ்பவன். "பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள் மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்...... செல்வமெனும் அல்லலிற் பிழைத்தும் புல்வரம்பாய பலதுறை பிழைத்தும் — ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி மாயா சக்திகள் வேறு வேறு தம் மாயைகள் தொடர்கினும் ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்... பசுமரத்தாணி அறைந்தாற்போலக் கசிவது பெருகிக் கடல் என மறுகி நிற்கின்ற பக்தரின் உறுதியான உயர்ஞானம் நிறைந்த நிலைதான் மன எளிமையான பக்குவம். இறைவன் திருச்சித்தத்துக்குப் பணிந்தும் — அவரையே கதியெனக் கொண்டும் வாழும் நிலைதான் உள்ளத்தில் எளிமை தவழும் நிலை.

### வேறும் மாறும் :

இந்த நிலையை எய்துவதற்கு இயல்பாகவே மனிதனிடமுள்ள சில முறையற்ற பற்றுதல்களை மேற்கொள்ள வேண்டும். "நான்" என்ற கர்வம் பொன் பொருள் சதமென்று வாழும் அதர்மம் — இக இன்பமே இலட்சியம் என்ற இழுக்கு நிலை — இவைகள்தான் கட்டுப்படுத்தப்பட வேண்டிய உணர்ச்சிகள். எனவே இத்தூய நிலையை அடைய வேண்டின் சுயநலனை — புகழை ஏன் அமைதியை முதலாகத் தியாகம் செய்ய வேண்டி நேரிடும். "தன் வாழ்வைக் காக்க விரும்புபவன் அதை இழப்பான், அதை இழப்பவன் பெறுவான். சுகத்திற்கும் சுய புகழிற்கும் இன்பத்திற்கும், இகத்தின் பொருட்களுக்கும் பணத்திற்கும் பட்டத்திற்கும் அடிமைப்படாது வாழவேண்டும். "பூமியில் எவர்க்கும் இனி அடிமைசெய்யோம் — பரிபூரணனுக்கே அடிமைசெய்து வாழ்வோம்" என்ற பாரதியார் பாட்டின் ஆழ்ந்த அர்த்தம் இந்நிலையில் தொனிக்கிறது. இதற்கு உலகை வெறுத்தோ மறுத்தோ வாழவேண்டும் என்று அர்த்தம் அல்ல. பாருலகையும் அதன் படைக்கப்பட்ட பொருட்களையும் கடவுளின் திருச்சித்தம் என்ற கண்ணாடியில் நோக்கி அதற்கு இசையப் பயன்படுத்த வேண்டும். வறுமையையும், செல்வத்தையும், இன்பத்தையும், துன்பத்தையும், புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் பற்றையும் பற்றற்ற நிலையையும் முதலாக இறைவனின் திருச்சித்தத்திற்கு அமைய ஏற்கவே வேண்டும். அதனால் உள்ளத்தில் அமைதி நிலவும். உலகில் அருள் தவழும்! குன்றின்மேல் எழுந்த குருபரன் இயேசுவின் குரல் ஒலியின் பயனை அடைந்ததாக முடியும்.

---

கோழைத்தனத்துக்கும் அசட்டுத் துணிச்சலுக்கும் இடையில் இருப்பது வீரம். பணிவுக்கும் கர்வத்துக்கும் இடையில் இருப்பது அடக்கம். துக்கத்துக்கும் சளசளப்புக்கும் இடையில் இருப்பது சத்தியம். இவ்வாறான இடைக்குணங்களெல்லாம் அறிவுக்குப் பொருத்தமானவை; இன்பந்தருபவை.

— அரிஸ்டாடில்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்திய நூற்றாண்டு விழாவும் கல்விக் கழகங்களும்

செல்வி. சௌந்தரம் சத்தனநங்கை கந்தப்பு.

**1869ஆம்** ஆண்டு ஐப்பசித் திங்கள் 2ஆம் நாள் உலகிற்கு ஒரு திருநாள். அன்று பாரதமாதாவின் திருமுகத்தில் என்றுமில்லாத புன்னகை ஒன்று தவழ்ந்தது. காரணம், பல்லாண்டுகளாக அந்நியர் ஆட்சியில் சொல்லொணுத் துயரங்கட்கும், மானக்கேட்டுக்கும் ஆளாகி அவதியுற்றுக்கிடக்கும் தன்னை விடுவிக்க ஒப்பற்ற புதல்வன் பிறந்துவிட்டான் என்ற உளப் பூரிப்பேயென்க. ஆம், பாரத அன்னை நினைத்தபடி அவளது மானத்தைக் காத்து, உலக நாடுகளும் அவளை வணங்கும் வண்ணம் மணியாசனத்திருத்திஞர் மாந்தருக்குள் ஒரு தெய்வமாகக் கொண்டாடப்படும் மகாத்மா காந்தியவர்கள். இப்புனிதன் பிறந்ததனுல் பாரதநாடு மட்டுமன்றி அனைத்துலகமுமே புளகாங்கிதமெய்தியது.

காலத்திற்குக்காலம் அரசியல், சமூகம், சமயம், இலக்கியம் என்பன சீர்குலைதற்காய காரணங்கள் நேரும்போது, கடவுட்டன்மை வாய்ந்த மகான்கள் தோன்றுகின்றனர். அன்னூர் தாம் வாழ்ந்த கடமை முடிந்தவுடன் எங்கோ மாயமாய் மறைந்து விடுகின்றனர். இத்தகைய மகான்கள் வரிசையில் வைத்தெண்ணப்படத்தக்கவரே நங் காந்தியடிகளாவர்.

இவர் பழம்பெரும் பாரத நாட்டில் தோன்றிய புத்தர்பிரான், சங்கரர், சைதன்யர், இராமக்கிருட்டிண பரமகம்சர், விவேகானந்த அடிகள், இரமணபகவான் எனும் மகான்களின் மரபில் தோன்றி மனுக்குலத்தாரின் துயர் துடைத்து, அன்னூர்க்குச் சாந்தியை உண்டாக்குந் தெய்வமாக விளங்குகின்றார்.

''என் வாழ்க்கை முழுச் சமுதாயத்திற்கும் உரியது; இறப்பு என்னை அணுகுவதற்குமுன், யான் முற்றும் பிறர்க்குப் பயன்பட்டாதல் வேண்டும்'' என்றார் பொதுநலப் புரவலனுகிய 'ஜோர்ஜ் பெர்ஞட் ஷோ' அவர்கள். இவருக்குப் பல்லாண்டுகட்குமுன் தமிழகத்தில் தோன்றிய வள்ளுவனூரும் இக்கருத்தையே அமைத்து,

> '' அன்பிலா ரெல்லாந் தமக்குரியர்
> அன்புடையார்
> என்பு முரியர் பிறர்க்கு'' என்றார்.

இவ்வுயர்ந்த குறிக்கோள்களை மனத்திற்கொண்டு பிறர்க்கென வாழும் வாழ்க்கையை மேற்கொண்ட பெருந்தகையாளர், மகான்கள் கூற்றுவனுக்கும் அஞ்சமாட்டார். இதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் சாந்தமூர்த்தியாம் காந்தியடிகள். அவர் தாம் உலகிற்கு ஆற்றவேண்டியனவற்றைச் செய்துமுடிக்க நூற்றிருபத்தைந்து ஆண்டுகள் வாழ விரும்பினர். ஆனுல், இதுவரை உலகங் கண்டும் கேட்டுமிராத அரும் பெருஞ் செயல்களைச் செய்து உலகத்தார் உள்ளங்களிலெல்லாங் கோயில் கொண்டு கொண்டாடும் தெய்வமாகிவிட்டார். உலகாயதச் சூழலில் சிக்குண்டு சாந்தியின்றித் தவிக்கும் இன்றைய உலகம், காந்தீயத்தை விரும்புவது இயற்கையே. காந்தீயக் கருத்துக்கள் வளர்க்கப்பட்ட இடத்தில், நாமிதைக் காண்பதரிதாயினும் அவர்தம் கருத்துக்கள் கடல்கடந்துபோய்ப் பெரிய இயக்கமாகிவருகின்றமை கண்கூடு. இந்நிலையில் இம்மகானின் நூற்றாண்டு விழாவை உலகெங்கணும் நாடு, இன, மொழி, சமயம் எனும் வேறுபாடுநோக்காது கொண்டாடுவதில் உலகநாடுகள் முந்தி நிற்பது சாலவும் பொருத்தமானதாகும். அன்றி, பாரதத்திலும் ஈழவளநாட்டிலும் கல்விக் கழகங்கள், நிறுவனங்கள், பல்வேறு இயக்கங்கள் என்பன இந்நூற்றாண்டுவிழா நினைவாகப் பல ஆக்கவேலைகளைச் செய்யவும், வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவும் விழைவது மகிழ்ச்சிக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகான்கள், பெரியோர் என்பவர்களைப் போற்றுவதும், அன்னார் வாழ்க்கை வரலாற்றின் மேன்மைகளை உணர்ந்து வாழ்தலும், அவர்தம் சிந்தையில் வளர்ந்து உலகுக்கருளிய அமுத மொழிகளைச் சிந்தித்து அவற்றிற் சிலவற்றையாவது செயற்படுத்துவதும், அவர் வழிநிற்பதும் மக்களினத்திற்கு உறுதிபயப்பனவாகும். காந்தி மகானைக் கொண்டாடும் உயர் நோக்கம் இதுவே. விழா எடுத்துப் பணத்தைச் செலவழிப்பதைவிட, அவர் பெயரால் மணிமண்டபம் இயற்றுவதைவிட மிக மேலானது அவர் விட்டுச்சென்ற மணியான மொழிகளின்படி நடப்பது. அவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையைப் பின்பற்றி வாழ முயல்வது.

நங் கண்காண வாழ்ந்த இம்மகானின் நூற்றாண்டு விழா நினைவு வரும்போதெல்லாம் என் கண்முன்னே நிற்பவர் கல்விக் கழக மாணவர்களேயாவர். கல்வியின் நோக்கந்தெரியாது கற்கிறோம் எனக்கூறிப் பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கும் இவர்களைக் காந்திமகான் பால் திருப்பி அவரிடம் கற்பனவெல்லாம் கற்கச்செய்யலாமே என்ற ஆசை மேலீட்டால் எழுந்ததே இக்கட்டுரையாகும். காந்தியடிகள் கல்வியின் நோக்கத்தை நன்கு அறிவுறுத்தியவர்.

முத்திக்குத் தகுதிபெறச் செய்வது கல்வியாகும்; மற்றையவையெல்லாம் அறியாமையே. ஆகையால், எது மனத்தைத் தூய்மைசெய்யவில்லையோ, மனத்தையும் புலன்களையும் அடக்கப் பயிற்சியளிக்கவில்லையோ, அச்சமின்மையையும், சுயதேவையையும் நிறை செய்யவில்லையோ, வாழ்வுக்குரிய உபாயத்தைக் காட்டவில்லையோ, சுதந்திரமாக வாழ்வதற்குத் தேவையான துணிபும் ஆற்றலும் உண்டாக்கவில்லையோ அந்தக் கல்வியில் எத்துணை அறிவுக் கருவூலங்கள் நிறைந்து கிடந்தாலும் பதத் திறமையும், மொழிப்பயிற்சியும் பொதிந்திருந்தாலும் அது நல்ல கல்வியாகாது; அது அரைகுறைக் கல்வியே என்பது அவர் தங் கருத்து. ஆனல், இந்நாட் கல்விக் கழகங்கள் இந்நோக்கத்தைக் கொண்டுள்ளனவா? மாணவரது மனப்போக்கு நாளுக்குநாள் மாறுவதையும், அது அவர்களைப் பயங்கரப் படுகுழிக்கு இட்டுச்செல்லும் நிலையையுங்கண்டு மனந் துணுக்குறு திருக்க இயலுமா? கீழ்ப்படிவு, கட்டுப்பாடு, மனவுறுதி, உண்மையின் உயர்வு, அன்புவழி என்பனவெல்லாம் எழுத்தாலாகிய பெருஞ் சொற்கூட்டம் என்றே கருதுகின்றனர். இந்நிலையில் உள்ள மாணவர் வாழ்வில் ஒரு திருப்பத்தை உண்டு பண்ணி அன்னாரை ஓர் உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்வைப்பற்றிச் சிந்திக்கவேனும் இந்நூற்றாண்டுவிழா உதவவேண்டும்.

நம் சமயக்குரவர்கள், புராண இதிகாச நூல்களில்வரும் பெரியோர்கள், உத்தம சீலர்கள் என்போரது வாழ்க்கை சிறார் உள்ளங்களைப் பண்படுத்த வல்லன என்பதை யாம் மறுக்கவில்லை. ஆயின், அப் பெரியாரிடையே அமைந்த சால்புகள் யாவும் ஒருங்கே அமைந்த ஒருவர் அண்மையில் வாழ்ந்தார். அவரே காந்திமகான் என்று கூறிவிட்டால் அவரைப் பற்றுவது மிக எளிதாகும். வாழ்வாங்கு வாழ்ந்தார். மகானாக விளங்கினார். இதற்காய தன்மைகள் இளமையிலேயே காணப்பட்டன என்பனபற்றிய விடயங்களைச் சிறுவர்கள் ஆர்வமுடன் கேட்பர். தான்செய்த பிழைக்கு வருந்திய மனப்பான்மை, பிழையை ஒப்புக்கொண்டு திருந்திய வாழ்வுவாழ்ந்தமை, அகிம்சையின் பாடத்தை அன்புத் தந்தையிடம் கற்றமை, அருமைத் தாயாருடைய விரதத்தால் மனவுறுதிபெற்றமை, தாயின் சொல்லைக் காப்பாற்றிச் சத்திய சீலராய் வாழ்ந்தமை என்பன போன்ற மகாத்மனின் இளமைக்கால நிகழ்ச்சிகளைக் கதையாகவும் பாட்டாகவும் மாணவருக்குக் கற்பிக்குங்கால் அன்னார் சுவைப்பர்; வேண்டியதைப் பற்றுவர். இளமையிலேயே தென்னாபிரிக்காவில் அவரது வாழ்வு புடம்போடப்பட்டமையும், இவ்வாறு புடம்போடப்பட்ட வாழ்வு பின்னர் உலகமே வியக்கும்படியான தியாக வாழ்வாக மாறியதென்பதையும், பல்வேறு கட்டங்களில் அவருக்கு நேரிட்ட இன்னல்கள், சோதனைகள் என்பனவற்றை மேற்கொள்ள அவருக்கிருந்த ஆத்மசக்தியையும் உணரும்போது மாணவர் தம்மையறியாமலே அவர் வசமாவர். அன்றி, காந்திமகான் இறைவனிடத்தில் கொண்ட நம்பிக்கை, பகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனுக்கும் அருளிய பண்பு, பகைநடுவிலும் அன்புருவான பரமனைக் காணும் பண்பு, மனம் வாக்குக் காயமொத்துச் சமூலமாகவே பிறர்க்காகத் தன்வாழ்வைத் தியாகம்செய்த தீரம், தீண்டாமை, மடைமை, வறுமை, பெண்ணடிமை என்பவற்றைப் போக்கி மனிதர் யாரும் சரிநிகர் சமானமாகவாழவேண்டும் என்பதிலுள்ள துடிப்பு, பிறர்செய்த தவறுக்காகத் தானே வருந்தி வாழும் பண்பு, தன் குடும்பத்தவரையும் நாட்டுப் பணிக்காகத் தியாகத் தீயில் குளிக்கச்செய்த துணிபு, தமது அருமை மனைவிபாற்கொண்ட மதிப்பு, மனச்சாட்சியின்படி சரியெனக் கண்டதில் அவர் கொண்ட உறுதி, அவரது சிறை அனுபவங்களில் கண்ட உண்மைகள், எளிமை வாழ்வின் தூய்மை என்பனவற்றை விளக்கிக் காட்டிய விதம், சுயதேவையைப் பூர்த்தி செய்ய அவர்கண்ட வழிகள் என்பன அவர் வாழ்வின் பல்வேறு கட்டங்களில் சுடர்விட்டுப் பிரகாசித்ததன்மையை எடுத்துக் கூறும்போது மாணவருள்ளம் உருகுமன்றோ! தாம் முன்பறிந்த பக்தனை பிரகலாதனன், என்பையும் புருவொன்றுக்காக அளித்த உத்தமர் ததீசி, அன்பைச் சொரிந்த புத்தர் பெருமான், உலகுக்காக உயிர்நீத்த கிறிஸ்துநாதர், "நாமார்க்கும் குடியல்லேம் நமனை அஞ்சேம்" என முழங்கிய நாவுக்கரசர் போன்ற மகான்களும் அன்னார் மனத்திரையில் வருவர். அவர்களோடு காந்திமகானையும் சேர்த்து உறவாட நல்ல வாய்ப்பன்றோ!

இவையெல்லாவற்றையும்விட மாணவரை வசீகரப்படுத்த வல்லது அவர் தொடுத்த போராகும். இது உலக வரலாற்றில் அவருக்கு முன் இடம்பெறாததொன்று. மனிதன் தோன்றிய காலந்தொடக்கம் உலகிலே தோன்றிய போர்களோ கணக்கில. இவற்றுள் வரலாற்றுப் புகழ்பெற்ற போர் யாது? என்றவினா வரலாற்றுமாநாடொன்றில் எழுமானால் நெப்போலியன் தொடுத்த போரைத்தான் குறிப்பிடலாமென்பர் பிரான்சுநாட்டு வரலாற்றறிஞர். இல்லை. இது தவறு! நெப்போலியனின் திமிரை அடக்கிய நெல்சன் பிரபுவின் வீரப் போர்தான் சிறந்ததென்பர் ஆங்கிலேயர். அப்படியா! இல்லை! இல்லை! யப்பானைச் சின்னாபின்னப்படுத்திச் சிதைத்த அணுக்குண்டு யுத்தமே மேலானதென்பர் அமெரிக்க வரலாற்று நிபுணர். ஆனால் காந்திமகான் அந்நியரை இந்தியாவினின்றும் வெளியேற்றத் தொடுத்த அகிம்சைப் போரையே உலக வரலாற்று ஏட்டில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கவேண்டும் என உலகநாடுகள் ஒப்புக்கொள்ளும். அவர் தொடுத்த போர் அத்துணைப் புதுமை வாய்ந்தது. புனிதமுடையது அன்புவழி நின்று சத்தியம், அகிம்சை எனும் அத்திரங்களைக்கொண்டு எவர்க்கும் எள்ளளவும் துன்பம் விளையா வகையில் நடைபெற்ற அறப்போரை மாணவர் அறியின் அகிம்சையின் சக்தியை நினைந்து வியப்பில் ஆழ்வரன்றோ! இராமபிரானையும் காந்தியடிகளையும் நோக்க நல்ல வாய்ப்பு. 'உண்மையான வீரம் எது' என்பதற்கு வியாக்கியானமோ விளக்கமோ வேண்டியதில்லை.

அடுத்து நம் மனத்து எழக்கூடிய வினா இவற்றையெல்லாம் எப்போது மாணவர்க்கு உணர்த்தலாம் என்பதேயாம். எதிர்காலத்தில் நல்ல சமுதாயத்தை உருவாக்குவதில் பற்றுள்ள ஆசிரியர் தனது வாழ்வினாலேயே இவற்றைத் தெளியவைக்கலாமன்றோ. அன்றி மாணவர் மனத்தை ஒழுங்கு செய்யும் பாடங்களான இலக்கியம், சமயம், சூழல், வரலாறு என்னும் பாடங்களில் காலந்தோறும் கற்பிக்கக்கூடியனவற்றைக் கற்பிக்கலாம். ஓய்வு நாட்களிலும் தொடர்ந்து நடாத்தலாம். இவ்வாறு விடயங்களை அறிந்து உணர்ந்து தெளிதல் நடைபெறுதலோடு காந்திமகான் கருத்திற் கொண்ட சில பணிகளிலும் அவர்களை ஊக்கலாம். இதனைப்பற்றியும் சிறிது குறிப்பிடுவாம். எதிர்காலம் இன்றைய மாணவரிடமே உளது. ஆதலால் தேசிய புணருத்தாரணத்தில் மாணவரின் பங்கு முக்கியமானதென நாம் உணரவேண்டும். இது சுதந்திரம் பெற்ற எல்லா நாட்டிற்கும் பொருத்தமானது. அன்னாரிடம் அறிவு, ஆற்றல், உற்சாகம், நாட்டிற்குப் பணி செய்யவேண்டும் என்ற ஆசை இருக்கின்றதென்பது நமக்குத் தெரிந்தது. சிறந்த தலைவர்கள் அவர்களை வழிகாட்ட வேண்டுமென்பதை நாம் உணரவேண்டும். இதற்கு உயர்ந்த பண்பு, நல்ல அனுபவம், சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாற்றுந் திறமை, சிந்தித்துச் செய லாற்றும் மதிநுட்பம் ஆகியவை கொண்ட தலைவர்கள், ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும். அவ்வாறாயின் மாணவர் தம் கல்விக் கழக வாழ்விலேயே நாட்டிற்குகந்த பணிகளை மேற்கொள்ளலாம் என்பதை உணர்ந்து உருப்படியான நடவடிக்கைகளில் தங்கள் சக்தியை உபயோகிப்பர். இந்த வேலைகள் கல்விக்குச் சிறிதும் தடங்கலின்றி ஓய்வு நேரத்தில் செய்யக்கூடியனவாகும். சிறந்த குடிமகனாக வாழ விரும்புபவர்களுக்கு இப் பயிற்சி மிகவும் உபயோகமானதென்க.

அன்றி, நம் மாணவர் செய்யும் சேவை வெறும் பொழுதுபோக்கிற்காகவோ மனமகிழ்ச்சிக்காகவோ என்றிருத்தல் நன்றன்று. இதற்கு நாம் செய்யவேண்டியதென்ன? மாணவர் தாம் வதியும் கிராமங்கள் எத்தகைய தென்பதையும், அங்கு தாம் செய்யக்கூடியன யாவை என்பதையும் அறிதல் வேண்டும். அன்றி, வேலையில் ஈடுபடும் மாணவர் நிலை அவர்கள் செய்யப் போகும் வேலைகள் எத்திறத்தன என்பதிலும் நாம் கருத்துச் செலுத்தலவசியம். மாணவர் சிறந்த ஒழுக்கக் கட்டுப்பாடும், ஒற்றுமை உணர்வும் உடையராதலோடு தம் உடல் நலத்தில் அக்கறை உடையராயும், எளிய வாழ்க்கை, உயரிய சிந்தை, அன்புள்ளம், நாட்டுப்பற்று, தேசீயப்பற்று, மொழிப்பற்று, சமரச மனப்பான்மை கொண்டவர்களாகவும் இருத்தலவசியம். தாம்தாம் மேற்கொள்ள இருக்கும் வேலைகளைப் பற்றிய அறிவும் பயிற்சியும் இன்றியமையாதது. தாம் பணியாற்றப்போகும் கிராமங்களைப்பற்றியறிவது அவசியமன்றோ! அங்ஙனம் அறியும்போது சில விபரங்களைத் திரட்டுவது தாம் மேற்கொள்ள இருக்கும் வேலைக்கு, தொழில் போக்குவரவுச் சாதனங்கள், அங்குள்ள சனத்தொகை, சமயம், கல்வி, சுகாதாரம், உணவு, வருவாய், சமூக கலாச்சார நடவடிக்கைகள் என்பன போன்ற விபரங்களையறிய உதவியாகும். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், பல்கலைக் கழகங்களிலுள்ள மாணவரும், கல்விக்கழகங்களிலுள்ள மேல்வகுப்பு மாணவரும் செய்யக்கூடிய பணிகள் பின் வருவனவாக இருக்கலாமென்பது என் கருத்து.

1. நமது கிராமங்களில் பலர் படிப்பு வாசனையற்றும், ஆரம்ப காலக் கல்வியுடையவராயும் காணப்படுகின்றனர். அன்னாருக்கு முதியோர் கல்வி வகுப்புக்கள் பெரும் பயனளிக்கும்.

2. சுகாதார வாழ்வு இன்னதென அறியாது அறியாமையிலாழ்ந்துள்ள நோய்க்கிடமான குடும்பங்கள் பல உள்ளன. அவர்கட்கு வீடு, சுற்றுடல், உடை, ஊண், குடிநீர் முதலியன சுத்தமாயும், சுகாதாரத்திற்குரியதாயும் இருக்கவேண்டும்என்பதைத் தெருட்டி வாழ வைப்பதோடு, குழந்தைகளை உடல் நலத்தோடு வாழவைப்பதும் அவசியமாகும்.

3. முதலுதவிப் பயிற்சி:

இப்பயிற்சி எல்லோருக்கும் தெரிய வேண்டுவதொன்று. காந்திமகான் கூட இப்பயிற்சியில் சிறந்த பயிற்சி பெற்றார். முதலுதவிப் பயிற்சியின்மையாலும், கவலையீனத்தாலும், புத்திக் குறைவாலும், காலதாமதத்தாலும் எத்தனையோ உயிர்கள் பிரிந்து விடுகின்றன. கிராமப் புறத்திலுள்ளோருக்கு இப்பயிற்சி யளிப்பது பல்லாற்றாலும் நன்மையேயாகும்.

4. சிரமதானம்:

எதற்கும் மாணவர் ஆட்சியாளரை எதிர்நோக்காது தங்கள் கைகளையும் கால்களையும் துணைக்கொண்டு தமது ஆற்றலால் செய்யக்கூடிய பலபணிகள் கிராமத்திலுள்ளன. ஒழுங்கைகள் திருத்தல், வடிகால்களைச் சுத்தம் செய்தல், வயல்களில் களைபிடுங்கல், பொது இடங்களைத் துப்புரவு செய்தல் என்பனவற்றில் ஈடுபடலாம்.

5. சாதியொழிப்பு:

மிக இழிவானதும் மனிதத்தன்மையற்றதுமான இந்நிலையை மாற்ற மாணவர் முக்கிய பங்கெடுத்துக் கொள்ளலாம். மாணவர்கள் தங்களிடமுள்ள தீண்டாமை உணர்ச்சியை ஒழித்து தங்கள் வழிக்குப் பெற்றோரைத் திருத்தக் கல்விக் கூடங்கள் தான் இவ்விடயத்தில் முக்கிய பங்கெடுத்து இச்சிறுமையைத் தீர்க்க முயலவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **சமூக ஒற்றுமை :**

நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் இது மிக முக்கியமானது. பல்வேறு இன, மத, மொழி பேசுவோர் உள்ள இடங்களில் சமயப் பொறுமை, சகிப்புத்தன்மை காட்டுதல், பண்டிகைகள் விழாக்களைப் பொதுவாகக் கொண்டாடி ஒற்றுமையை வளர்த்தல், கூட்டு வழிபாடுகளை நடத்தல், தேசிய கீதத்தைப் பாடுதல் என்பன சிறந்தனவாகும்.

7. **சீதனக் கொடுமை :**

இது சமூகக் குறைபாடுகளில் மிகக் கொடுமை வாய்ந்து விளங்குவது. ஆன்றோர் போற்றிவந்த பெண்மையை அவமதிக்கும் செயல் இது. இதனுல் வாழ்க்கையின் புனிதமே கெட்டுவிடுகிறது எனலாம். இந்த வணிகக் கொடுமையை அடியோடு களைந்தாக வேண்டும். இன்னும் மாணவர் ஈடுபட்டுப் பயன்தரக்கூடிய பணிகளும், நிர்மாண, நிவாரண வேலைகளும் பல உண்டெனினும் விரிவஞ்சி விடுத்தும்.

8. **நிவாரண வேலைகள் :**

காலத்திற்குக்காலம் இயற்கை ஏதுக்களால் உண்டாகக்கூடிய விளைவுகளான வெள்ளம், புயல் என்பவற்றுல் பாதிக்கப் படுவோருக்கு உண்டி, உறையுள் உடை முதலியனவற்றில் முக்கிய பங்கு கொண்டு அனுதாபத்துடனும் பணியாற்றுவதில் மாணவர் பங்கு கொள்ளலாம். இவ்விடயங்களிலும் பல்வேறு சமயங்களிலும் இங்குள்ள காந்தீய நிறுவனம், கஸ்தூரிபாய் ஞாபக நிலையம் போன்றவற்ருேடும் தொடர்பு கொண்டுழைக்கலாம். இவ்வாறு மாணவரை ஈடுபடுத்தி அவர்களால் செய்யப்படும் பணியானது அவர்கட்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும், தன்னம்பிக்கையையும், ஆராய்ச்சி மனப்பான்மையையும், கடமை யுணர்ச்சியையும், கடமையின் மேன்மையையும், உளச் சுத்தியையும் உண்டாக்கி உயர்ந்த வாழ்வு வாழப் பண்ணுமன்ருே. இழிந்த மன உணர்வுகளைக் கிளரச் செய்கின்ற சினிமாக்களையும், நூல்களையும் படித்து மனத்தைப் பாழாக்கும் நமது எதிர்காலச் செல்வங்களை நல்வழிப் படுத்துவதற்கு இக்காந்தி நூற்றுண்டு உதவுமாக. மக்கள் கோழைத் தனத்தையகற்றி, அறிவையூட்டி, அன்பைப் பெருக்கி அனைத்துலகிற்கும் அகிம்சையின் பெருமையைப் புலப்படுத்தித் தெய்வமாய் விளங்கும் காந்திமகான் என்றும் வழிகாட்டியாய் நின்று உதவுவாராக.

---

குளிர்ந்த சத்திரனைக்கண்டு பொங்கும் கடல் சூரியனைக் கண்டு பொங்காது; அதுபோல இனிய சொல்லைக்கேட்டு உலகம் மகிழுமே யன்றிக் கடுஞ்சொல்லைக் கேட்டல்ல. ஆதலால் நீ எப்பொழுதும் இனிய மொழியே பேசு. அதனுல் உலகத்தையே வசப்படுத்தலாம்.

— நாலடியார்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்விவாகமும் குடும்பமும்

கடவுள் உண்டாக்கிய முதல் இரு மனிதப் பிறவிகள் ஆணும் பெண்ணும் தான். படைப்பிலேயே சமுதாயமாக குடும்பமாக உருவாக்கினர். அதுவே உலக இயல்புமாகிறது. கடவுள் பரிசுத்த ஒன்றிப்பில் அவர்களை இணைத்தார். அவ்வுறவைத் தம்பதிகள் எடுத்து விளக்குகிறார்கள். அதுவே மெய்விவாகம் என்னும் தேவதிரவியஅனுமானமாக உயர்த்தப்பட்டுகிறிஸ்தவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது.

மெய்விவாக பந்தனமானது கட்டவிழாமை என்னும் சிறந்த பண்புடையது. கிறிஸ்தவ விவாகமானது பரிசுத்ததனம் நிறைந்துள்ளது. அத்துடன் அது பரித்தியாகங்களையும் வேண்டி நிற்கிறது என்று அர்ச். சின்னப்பர் கூறுகிறார். கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் ஏற்பட்டுள்ள உறவைப் போன்றதே கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஏற்படும் பந்தனம். எனவே கிறிஸ்து தனது உயிரைக் கிறிஸ்தவருக்காகக் கையளித்தது போல மணவாளர் ஒருவர், ஒருவருக்காகத் தமது உயிரை அர்ப்பணிக்க ஆயத்தமாய் இருக்கவேண்டும். தம்பதிகளுக்கிடையில் இருக்கவேண்டிய அன்பானது அன்றில் சொந்த விருப்பு வெறுப்புக்களைப் பொறுத்ததல்ல. ஒருவருக் கொருவர் காண்பிக்கும் பரஸ்பர சங்கை மரியாதையில் தங்கியுள்ளது. இவ்வன்பை வளர்ப்பதற்கு வேண்டியது தற்பரித்தியாகமும் சுயநல மறுப்புமாகும்.

சுயநலப் பற்றும் சுயவுரிமைப்போரும் இல்வாழ்வில் இடறலாய் முடியும். காத்திரமான பொறுப்புக்கள் நிறைந்த பரிசுத்த அழைத்தலாக மெய்விவாகம் அமைகிறது. ஒருமைக்கும் கட்டவிழாமைக்கும் இருப்பிடமாகத் திகழ்கின்றது. கணவன் தன் மனைவியல்லாத வேறு பெண்களுடன் தொடர்பு கொள்வதை அல்லது விவாகரத்துச் செய்வதை திருச்சபை ஒருபோதும் அனுமதிப்பதில்லை. இவ்விலக்குவிதி தனிக் குடும்பத்தினதும் மனித சமுதாயத்தினதும் நலனை யொட்டியே ஏற்படுத்தப் பட்டதென்பது தெளிவாகும்.

ஒருபெண் இல்லத்தரசியாகவும் கணவனின் வாழ்க்கைத் துணைவியாகவும் செயலாற்றும் போது மாத்திரம் அவளது தாய்மையும் பெண்மையும் பூரணவளர்ச்சியடைகின்றன. எனவே விவாக பந்தனம் மரணம் வரைக்கும் நிலைத்திருத்தல் அவசியம். விவாக பந்தனம் நிலைத்திருப்பதினாலே தம்பதிகளின் உறவும், பெற்றோர் பிள்ளைகளுக்கிடையேயுள்ள உறவும் சாத்வீகமாகிறது. சில சந்தர்ப்பங்களில் தம்பதிகளுக்கு வாழ்க்கை சித்திரவதை நிறைந்ததாகவும் பொய்மை செறிந்தும் இருந்தால் தக்க ஆதாரங்களுடன் பிரிந்துவாழத் திருச்சபை அனுமதிக்கிறது. ஆனால் மறுவிவாகம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது.

விவாகத்துக்குப் புறம்பாக ஏற்படும் எவ்வித உறவும் இயற்கையினதும் சன்மார்க்கத்தினதும் விதிகளுக்கு முரணானது. விவாகத்திற்கு முன்பும் கற்புடையோராய் வாழத் தம்பதிகள் கடமைப்பட்டுள்ளனர். இனவிருத்தியை நோக்கமாகக் கொள்ளாது சரீர சுகத்தை மாத்திரம் நோக்கி உறவு கொள்ளுதல் விலக்கப்பட்டிருக்கிறது. பொருளாதார நோக்கம் இனவிருத்தியைத் தடை செய்யக் காரணமாகவும் இருக்கக் கூடும். இனவிருத்தித் தடுப்பு சன்மார்க்கப் பிரச்சினையாக உள்ளது. பெற்றோர் உயிர்கள்மீது மதிப்போடு கூடிய அன்புடையவராய் இருப்பின் கருத்தடை செய்ய முன்வரார் என்பது வெள்ளிடைமலை. தம்பதிகள் ஒருவர் ஒருவருடைய மெய்ப்பாடுகள் விருப்பங்கள் மட்டில் கரிசனையுடையோராய் இருத்தல் வேண்டும். இல்லற அந்தஸ்தில் கையாளப்பட வேண்டிய கற்பு நெறியைப் பற்றித் தெளிவான விளக்கமுடையோராய் இருத்தல் வேண்டும், ஒரு குழந்தையை உருவாக்கி வளர்த்தல் காத்திரமிக்க கடமையாகும். குழந்தைகளைச் சரிவர வளர்க்க முடியாதவர்கள் அவர்களைப் பெறுமலிருப்பது உத்தமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயினது ஆரோக்கியம் கருதிப் பிள்ளைப்பேற்றை மட்டுப்படுத்தல் வேண்டும். இனவிருத்தி நோக்கத்தைவிட மனச்சான்றும், பொறுப்புணர்ச்சியும் மேலானதாகக் கருதப்படவேண்டும். ஒருவர் ஒருவரைச் சமய சன்மார்க்க உத்தம தனத்திற்கு வழி நடாத்திச் செல்வதே தம்பதிகளின் பிரதான கடமையாகும். இனவிருத்தி, பிள்ளைகளை வளர்த்தல் விவாகநோக்கத்தின் ஒரு பகுதியேயன்றி முழுநோக்கமல்ல. ஒருவர் மற்றவரின் வாழ்க்கையை நிறைப்படுத்தலே மெய்விவாகத்தின் உன்னத நோக்கமாகும்.

கணவன் பனைவியர் தாம் எடுத்துக் கொண்ட வாக்குறுதியை ஒருவர் மட்டில் ஒருவர் நிறைவேற்றக் கடமை பூண்டுள்ளனர். மனைவி கணவனிடம் மெய்யன்பு காட்டி அவனது முறையான விருப்பங்களைத் தற்பரித்தியாகத்துடனே நிறைவேற்றலவசியம். திருச்சபை கிறிஸ்து நாதருக்கு அமைந்து நடப்பதுபோல் மனைவி தன் கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடத்தலவசியம். கீழ்ப்படிதல் நியாயமானதாயும், வரம்புக்கு உட்பட்டதாயும் அமைதல் வேண்டும். கீழ்ப்படிவினுல் மனைவி தன்மானத்தையோ சுயாதீனத்தையோ இழந்துவிட வேண்டிய அவசியம் இல்லை. மேலும் கணவன் மனைவியை உரிமைகள் குறைந்தவராக மதித்தல் கூடாது.

இப்படிப்பட்ட கண்ணியம் மிக்க கடமைகள் நிறைந்த வாழ்க்கைக்கு முன் மணமாகும் தம்பதிகள் செய்யவேண்டிய கடமைகள் பலவுள. தம்பதிகளைத் தெரிந்து கொள்ளும் விடயத்தில் கவனமுள்ளதும் மனச்சாட்சிக்கு அடுத்ததுமான ஆயத்தங்கள் செய்யப்படவேண்டும். இளம் பிராயத்தில் தன்னடக்கமும் தற்கட்டுப்பாடும் பழகிக் கொள்ளுதல் அவசியம்.

சமய சன்மார்க்க முறையில் ஸ்திரமடைந்த ஒருவன் சிறந்த கணவனுயும், தந்தையாயும் விளங்குவான். இத்தகையவன் தன்பிள்ளைகளைத் தேவ நேசத்திலும் உதாரகுணம் வாய்ந்த தேசப் பற்றுதலிலும் பிறர் சிநேகத்திலும் பயிற்ற வல்லவனுவான். சதிபதிகளைத் தெரிந்தெடுக்கும் போது அவர்களின் ஆரோக்கியம், வயது, கல்வி, சமுதாயத்தில் கொண்டிருக்கும் இடம் முதலியவற்றைஆராய்தல் அவசியம். சதிபதிகளின் குறைகளை விவாகத்தின் முன்னதாக அறிதல் நன்று. நிச்சயார்த்தம் தனிப்பட்டமுறையில் செய்யக் கூடியதாயினும், பெரியவர்களின் ஆலோசனையையும் வழிநடாத்துதலையும் நாடுவது நலம்.

குடும்பமானது சமுதாயத்தை உருப்படுத்தும் மையமாய் அமைகிறது. தற்கால உலகியல் போக்கிற்கு ஏற்ப மெய்விவாகத்திற்குப் பதிலாக சுயேச்சையாக மேன்மைப் படுத்தப் படுகிறது. பொதுவுடைமை நாடுகளின் சமுதாயத்தின் பொது நன்மைக்காக அரசாங்கம் குடும்பச் செல்வாக்கைப் பயிரிடுகின்றது. சிற்சில பொருளாதார காரணங்களினுல் குழந்தைகளைப் பராமரித்தல் சாத்தியமான தன்று. மறுபக்கத்தில் நாகரிகத் தாய்மார் பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பைத் தாதிமாரிடம் முற்றிலும் கையளித்து விடுகின்றனர்.

பெற்ருேரின் கண்காணிப்பில்லாத குடும்பம் உண்மையில் உருவாக மாட்டாது. இவ்வித சூழலில் வளரும் சிருர்கள் சமுதாய அரசாங்க கடமைகளைக் கண்ணியமாய் நிறைவேற்ற அருகதை யற்றவராகின்றனர். குடும்பத்தின் உன்னத நோக்கத்தை அலட்சியம் செய்வதால் சமூக ஊழல்கள் ஏற்படுகின்றன. குடும்பத்தின் மீதும், மக்கள் கல்வியின் மீதும் சமயம் தன் செல்வாக்கைச் செலுத்துவது அவசியமாகிறது. இதன் விளைவாகப் பொறுப்புணர்ச்சி, சிறந்த கல்வி, தேவ ஐக்கியம், கீழ்ப்படிதல், தன்மட்டிலும் சமுதாயத்தின் மட்டிலும் தனது கடமைகளை உணர்தல் போன்ற நன்மைகள் பிறக்கும்.

கிறிஸ்தவ குடும்பம் வருங்காலத்து மனிதனை சமூக உணர்வு வாய்ந்தவனுக இருக்கப் பயிற்றுகின்றது. எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் மெய்விவாகத்தைச் சிறந்த முறையில் நிறைவேற்றி வருங்காலச் சமுதாயத்தைச் சீர்ப்படுத்த முயல்வோமாக.

திருமதி. அ. இராசதுரை,
(விடுகைவருடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யௌவனப் பருவம்

திரு. பி. சவரிமுத்து, (M. A. Lond.)

ஒரு குழந்தையின் வளர்ச்சிப் படிகளை பிறப்புக்கு முன் பிறப்புக்குப்பின் என்று இரு பெரும் பிரிவுகளாக வகுத்துக் கூற முடியும். குழந்தைகளைப் பற்றி ஆழமாக ஆராய்ச்சி செய்த உளநூலறிஞர்கள் கலாநிதி சுசன் ஐசக்ஸ், கெசெல் போன்றவர்கள் அவர்களின் பிறப்புக்குப்பின் உள்ள வளர்ச்சிப் பருவங்களை ஏழாக வகுத்துக்கூறுகின்றனர். அவையாவன :

i. சிசுப்பருவம் — ஒருவயதுமட்டும் தொட்டில் பருவம்.

ii. குழந்தைப்பருவம் — வயது 1-2 மட்டும் பாடசாலை முற்பருவம்.

iii. பாலப்பருவம் — வயது 2-5 மட்டும் பாலர் பாடசாலைப் பருவம்;

iv. பிள்ளைப்பருவம் — வயது 5-11 மட்டும் பிரதம பாடசாலைப் பருவம்;

v. யௌவனப் பருவம் — வயது 11-21 மட்டும் கனிஷ்ட, சிரேஷ்ட, உயர்தரப் பாடசாலைப் பருவம்.

vi. வாலிபப்பருவம் — வயது 21-30 மட்டும் சர்வகலாசாலை, ஆசிரியகலாசாலை, தொழில்நுட்பக் கல்லூரி;

vii. வளர்ந்தோர் பருவம் — வயது 30க்கு மேற்பட்ட பருவம்.

மேலே கூறப்பட்ட பருவங்களைப்பற்றி ஆழமான ஆராய்ச்சிகள் மேற்கு நாடுகளிலும் கீழைத்தேசங்களிலும் நடத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றின் முடிபுகள் யாவும் ஒரே தன்மையானவை யென்று கூறமுடியாது. என்றாலும் ஐந்தாவது பருவமாகிய யௌவனநிலையே மிகவும் சிக்கலான ஒரு நிலையாக இருக்கின்றது என்று பல ஆராய்ச்சியாளர்கள் அபிப்பிராயம் வெளிப்படுத்தி இருக்கின்றனர். மேலும் இப்பருவத்தை மூன்று உபபிரிவுகளாகப் பிரித்து,

i. பூப்புநிலைக்கு முற்பருவம்.

ii. பூப்பு நிலைப்பருவம்;

iii. பூப்பு நிலைக்குப் பிற்பருவம்;

என்று விளக்கப் பார்க்கின்றனர். இவ்வுப பிரிவுகள் பெரும்பாலும் முறையே வயது 11—14, வயது 14—18, வயது 18—21, என்பனவே.

பூப்புநிலை எந்தவயதில் நிச்சயமாக ஏற்படுகிறது என்று திடமாக ஆராய்ச்சியாளர் கூறமுடியாத நிலையில் இருக்கின்றனர்; ஆனால் நிச்சயமாகவே இந்நிலை ஒரு குழந்தையின் வாழ்க்கைப் பருவங்களில் மிகவும் பிரதானமானது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். இப்பருவத்தைப்பற்றிச் சமூகவியல் ஆராய்ச்சியாளர்களும் விலங்கியல் ஆராய்ச்சியாளரும் ஐக்கியதேச ஸ்தாபனத்தைச்சேர்ந்த உளநூலாராய்ச்சியாளரும் பல நாடுகளிலுள்ள பல இனப்பிள்ளைகளை நன்கு அவதானித்து ஆழமாக ஆராய்ந்திருக்கின்றனர்.

இவர்களுடைய பலவிதப்பட்ட ஆராய்ச்சிகள் யாவும் வெளியீடுகள், அறிக்கைகள், துண்டுப்பிரசுரங்கள், நூல்களாக காலத்துக்குக்காலம் வெளிவந்திருக்கின்றன. இவைகள் பெரும்பாலும் மேற்குத் தேசங்களில் வாழும் பிள்ளைகளைப்பற்றியே விளக்குகின்றன. இலங்கைவாழ் யௌவனப் பருவத்தினரைப்பற்றி ஆழமாகவும் போதிய அளவுக்கு விசாலமாகவும் ஆராய்ச்சிகள் நடத்தப்படவில்லை யென்றே கூறவேண்டும். (இத்துறையில் ஆசிரிய கலாசாலை மாணவர்—மாணவிகள் ஈடுபடின் அது அரும்பயனை எமக்களிக்கும்.) இவ்வாறு வெளிவந்த அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு நாம் பொதுவாகக் கூறக்கூடியது என்னவானால் இப்பருவமே சிறார்க்கு மிகவும் சிக்கலான பருவம். பிள்ளைகளின் தனிப்பட்ட வாழ்க்கையை நோக்குமிடத்து உடல்வளர்ச்சி, உளவளர்ச்சி, சாதி சமய அபிமானம் போன்ற உணர்ச்சிகள் மற்றப் பருவங்களிலும் பார்க்க இப்பருவத்திலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிதீவிரமாக முதிர்ச்சியடைகின்றன. இப் பருவத்தில் சமூகக்கடமைகளும் பிள்ளைக ளுக்கு அதிகரிக்கின்றன. இவர்கள் பெரும் பாலும் பால் சம்பந்தமான உணர்ச்சிக ளால் உந்தப்பட்டு பலவித கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். இப்பருவத்தினர் இரு தலைக் கொள்ளி எறும்பைப்போல் மிகவும் அல்லலுறுகின்றனர். சிலவேளைகளில் (பின்னே அவர்கள் பார்த்தால்) தாங்கள் சிறு பிள்ளைகளென்றும் சிலவேளைகளில் (முன்னே அவர்கள் பார்த்தால்) தாங்கள் வாலிபரென்றும் தங்களைப்பற்றி நினைக் கின்றனர். வளர்ந்தவர்களும் பெற்றோரும் பெரியோரும் ஒரு சமயத்தில் அவர்கள் பொறுப்புணர்ச்சி யற்றவர்களென்றும் வேறொரு சமயத்தில் பொறுப்புணர்ச்சி வாய்ந்தவர்களென்றும் எண்ணுகின்றனர். மேலும் பெரியோர்கள் ஒருநேரம் அவர்க ளைப் புறக்கணித்து வாழ்வதும், ஒருநேரம் அவர்களில் நம்பிக்கையுள்ளவர்களாகத்தம் மைக்காட்டிக்கொள்வதும் விரும்பத்தகாத தொன்றே. இப்பருவத்தினர் இத்தகைய வெளிக்காரணங்களாலும், தனிப்பட்ட முறையில் தங்களில் பலதுறைகளில் ஏற் படும் தனித்தனி வளர்ச்சி விருத்தி கார ணங்களாலும் பற்பல மனோநிலைகளில் வாழ வேண்டியவர்களா யிருக்கின்றனர். எனவே இப்பருவத்தினரை உருவாக்கும் சூழ்நிலை கள் அவர்களை அன்பு அனுதாபத்தோடு நடத்தவேண்டும்.

அவர்களின் மனோநிலைக்குத் தக்கபடி யும், உளவளர்ச்சிக்குத் தக்கபடியும் அவர் கள் நடத்தப்படவேண்டும்; எனவே யௌ வனப் பருவத்தினர் வாழும் சூழ்நிலைகளை வீடு, பாடசாலை, சமூகம் என்று மூன்று பெரும்பிரிவுகளாகப் பிரித்து அவை ஒவ் வொன்றினதும் முக்கிய கடமைகளை ஆராய் தல் மிகவும் பயனுடைத்து.

வீடு: இப்பருவத்தினர் வாழும் வீட் டில் அவர்களுக்கு அன்பும் ஆதரவும் மலிந்து பொலிந்து விளங்கவேண்டும். சுதந்திரம் சுயாதீனம் அங்கு நிலவவேண்டும். அவர்க ளின் பொறுப்புணர்ச்சி கருமங்கள் அவர் களுக்கு விடப்படவேண்டும். உதாரண மாக வீட்டுச் சுத்தம், தோட்ட அமைப்பு, சாப்பாட்டு ஒழுங்குகளைத் தயார் செய்தல் போன்ற சிலவற்றை அவர்களின் பொறுப் பில் விடவேண்டும்; இப் பருவத்தினரில் ஐந்து விதமான தனிப்பட்ட தேவைகள் காணப்படுகின்றன என்று உளநூலா ராய்ச்சியாளர் எடுத்துக்கூறும் உண்மை யைப் பெற்றோரும் பெரியோரும் நன்கு உணர்ந்து அவை விருத்தியடையச் சந்தர்ப் பம் அளிக்கவேண்டும். இத்தேவைகளை (1) பாதுகாப்பு, (2) பரிசோதனை, (3) உரி மைகள், (4) பொறுப்புணர்ச்சி, (5) பொது விருத்தி என்று குறிப்பிடலாம். பொது விருத்தி என்பதை அறிவுவிருத்தி, சமூக விருத்தி, பொருளாதார விருத்தி, சுதந்திர விருத்தி, ஆத்மீக விருத்தி என்று பாகு படுத்தியும் கூறலாம். இச்சிறிய கட்டுரை யில் இவை ஒவ்வொன்றையும் விரிவாக விளக்கப் புகின் இக்கட்டுரை நீடிக்கும்.

கலாநிதி 'மார்க்கிறேட் மீட்' என்ற உல கப் பிரசித்திபெற்ற சமூகவியல் ஆராய்ச்சி யாளர் பின்வருமாறு இவர்களைப்பற்றி எழுதியிருக்கிறார். இப்பருவத்தினரின் விருத்தியானது பலவகைப்பட்டது. அது சௌக்கியம் தைரியம்போன்ற உடல்நலன் சம்பந்தமானவையும் உளத்திறமைகளை வலுவாக்கும் நோக்க முடையனவாயும் இருக்கின்றன. மக்களையும் பொருள்களை யும் கூடுதலாக அறிய அவாவுடையவர்க ளாயிருக்கின்றனர். ஒழுக்கத்தில் ஓர் உன் னத நிலையை அடைந்து வாழ்க்கையில் பங்கெடுத்து இன்பமாக வாழவிரும்புகின் றனர்.

எனவே, இப்படிப்பட்ட இலக்கைக் கடைப்பிடித்து வாழ வீட்டிலுள்ள பெற் றோரும் பிறரும் அவர்களுக்குத் தகுந்த உதவி செய்யவேண்டும். அன்பும் அநுதா பமும் நிறைந்தவர்களாகத் தங்களைப் பெற் றோரும் பிறரும் அவர்களுக்குக் காட்ட வேண்டும். அவர்களை எந்நேரத்திலும் எதிர்ப்பது அற்பபயனையே விளைவிக்கும். அவர்களுக்கு எந்நேரமும் நல்ல புத்திமதி கூறித் துணைபுரிவது உயர்ந்த பெறுபேறு களை—பலனை வருவிக்கும் என்பதை எவரும் மறத்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலை:** இப்பருவத்தினரைப் பொறுத்தமட்டில் ஒரு பாடசாலை மூவித முக்கிய நோக்கங்களை யுடையதாயிருக்கின்றது. i. மாணவரின் அறிவு விசாலிக்க உதவி செய்தல். ii. அவர்களின் இலட்சியங்கள் வளர உதவி செய்தல். iii. பிற்கால வாழ்க்கைக்கு (தொழிலுக்கு) அவர்களைத் தயார் செய்தல். முற்காலத்தில் மாணவர்கள் கற்பதில் அக்கறையற்றவர்களா யிருக்கின்றனர் என்று பல ஆசிரியர்கள் தவருக எண்ணி வாழ்ந்துவந்தனர். அதற்கிணங்கத் தங்கள் கற்பித்தல் என்ற கட்டிடத்தைத் தண்டனை என்ற அத்திவாரத்தில் கட்டியெழுப்ப முயற்சித்தனர். ஆனல் அறிவு பல துறைகளிலும் விருத்தியடைந்து வரும் இக்காலத்தில் ''கல்வியே கருந்தனம்'' என்பதை மாணவர் நன்குணர்கின்றனர். தங்களுக்குப் போதிய அறிவில்லாவிட்டால் தம் வாழ்க்கையில் பலவித கஷ்டங்களை அனுபவிக்க வேண்டுமென்று உணரும் தற்காலத்தில், ஆசிரியர்கள் மாணவர்களின் கல்விப்பாதையில் சிறந்த வழிகாட்டிகளாகவே இருக்கவேண்டும் என்பதை அவர்கள் மறத்தலாகாது.

இலட்சியங்கள் இல்லாத மக்கள் விசேஷமாக அரசியல் வாதிகளாலும் ஏனைய சுயநல வாதிகளாலும் ஏமாற்றப்பட்டு, அறநெறிதவறி வாழும் மக்களாகஇல்லை, மாக்களாகவே வாழவேண்டிவரும். எனவே இப்பருவத்தினர் தாம் கற்கும் இலக்கியம் சரித்திரம் சமயம் போன்ற பாடங்கள் மூலமும் சிறந்த இலட்சிய புருடர்களாகத் திகழ ஆசிரியர் உதவிசெய்ய வேண்டும். மேலும், தாம் கற்ற கல்விமூலம் தமது நாளாந்த ஊதியத்தைப் பெற்றுத் தன்மானத்துடன் வாழக் கல்வி உதவிபுரியவேண்டும். எனவே இப்பருவ மாணவர் - மாணவிகளின் விசேஷ ஆற்றல்களுக்கியைந்த ஒரு கல்வியை அவர்களுக்கு அளித்து அவர்கள் தங்கள் எதிர்கால வாழ்க்கையை இன்பகரமாக நடத்தப் பாடசாலை பலவாறு பணிபுரிய வேண்டும்.

**சமூகம்:** இப்பருவத்தை அடைந்த எல்லோரும் தங்களைச் சுற்றியிருக்கும் சமூகத்திலேயே பெரும்பாலும் வாழவேண்டியவர்களாயிருக்கின்றனர். இவர்களுக்கும் இவர்களைச் சுற்றிவாழும் வளர்ந்த மக்களுக்குமிடையில் ''ஒரு சந்ததி இடைக்காலம்'' (generation gap) இருக்கிறது. இதன் காரணமாக வளர்ந்தவர்களுக்கு இப்பருவத்தினருடைய ஆர்வம், அபிலாஷைகளை விளங்க முடியாதிருக்கிறது. இவர்களுடைய விருப்பு வெறுப்புக்களையும், தாக்கங்கள் தேவைகளையும் அவர்கள் சரிவர விளங்க முடியாமலிருக்கிறது. தற்காலத்தில் இவர்கள் செய்யும் செயல்கள் குறும்புத்தனங்கள் துடியாட்டங்களை அவர்கள்கண்டு வியப்புறுவர். ''தற்கால உலகமோ எல்லாம் பாழாய்ப் போகிறது. எங்கள் காலத்திலோ ...'' என்றுகூற எத்தனிப்பர். இதன்நிமித்தம் வளர்ந்தவர்கள் இவர்களை மிகவும் கஷ்டத்துக்குள்ளாக்கப் பார்க்கின்றனர். இவர்களைத் திருத்தும் நோக்கத்துடன் தண்டனைகளைக் கூட உபயோகிக்கப் பார்த்துச் சில சமயங்களில் படுதோல்வியும் அடைகின்றனர், இப்பருவத்தினருக்குப் பெரியோர் போதிய அனுதாபம் காட்டவேண்டும். ''காலத்துக்கு ஏற்ற கோலம்.'' மாற்றங்கள் பிள்ளைகளில் ஏற்படுவது சகஜமே என்ற உளநூலுண்மையைப் பெரியோர் நன்குணர வேண்டும். இவர்களுக்கு ஏற்படும் உடல் சம்பந்தமான விருத்திகள், ஒழுக்கம் சம்பந்தமான நாட்டங்கள், வாழ்க்கை சம்பந்தமான மாற்றங்கள் யாவற்றையும் ஏனையோர் நன்குணர்ந்து நல்மனத்தோடு அவர்களுக்கு வழிகாட்ட முன்வரவேண்டும். இவர்கள் இன்பமாக வாழ்ந்துவர பெற்றோரும் ஆசிரியரும் பெரியோரும் சமயத்தலைவர்களும் நாட்டுத் தலைவர்களும் ஆவன செய்ய முன்வரவேண்டும். ஏனெனில் தற்கால யௌவனப் பருவத்தினராகிய செங்கற்களைக்கொண்டே எமது நாட்டுத் திலகங்களாகிய எதிர்காலத் தலைவர்கள் உருவாக்கப் படுகின்றனர்.

---



K 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணையின் ஆணை

(ஒரு நல்ல நாடகம்)

கலையரசு க. சொர்ணலிங்கம்

நாடகம் நடாத்துவோர்கள் நாடகத்தின் நோக்கங்களை அறிந்து அவற்றுக்கு ஏற்றவாறு தயாரித்து நடாத்தி வருவார்களானால் சிலகாலமாகக் குறைந்துவரும் நமது நாடகங்களின் தரம் மறுபடியும் வளர்ந்து உயர்வடையும் என்பதில் சந்தேகமில்லை. நாடகத்தின் மூலமாகவே பெரும்பாலும் நமது பாஷை, சங்கீதம், நடனம் போன்ற கலைகள் மாத்திரமன்றி நமது கலாச்சாரம், பண்பாடு ஆகியனவும் உயர்ந்து வளர்ந்து வந்தன வென்றும் சொல்லலாம். இந்த நோக்கத்துடன் தான் ''கிருஷ்ணையின் ஆணை'' என்னும் பெயருடன் மகாபாரதத்திலிருந்து ஒரு விசேடமான கட்டத்தைத் தேர்ந்தெடுத்து அதை நாடகமாகத் தயாரித்துக் கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலையில் பயிலும் மாணவிகள் நடித்துக் காட்டினார்கள் போலும்.


இந்த நாடகம் மேற்படி கலாசாலையில் 21-7-68 ல் நடைபெற்ற வருடாந்த விழாவில் கடைசி நிகழ்ச்சியாக ஏராளமான இரசிகர் முன்னிலையில் நடிக்கப்பட்டது. சமூக சீர்திருத்த நாடகம், சமூக முன்னேற்ற நாடகம் என்று கூறிக்கொண்டு தங்கள் மனம் போனபோக்கிலே நாடகங்களை இயற்றி நடிப்பதையும் அவைகளில் தகாத பண்பற்ற வார்த்தைகளையும் செயல்களையும் உபயோகித்துப் பொது ஜனங்களின் கீழ் உணர்ச்சிகளைக் கிண்டல் செய்வதையும் பலவிடங்களிலும் பார்த்துச் சலிக்கும் இக்காலத்தில் ''கிருஷ்ணையின் ஆணை'' பார்க்கும்போது மனதிற்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்தது. இந்நாடகத்தின் ஆசிரியர் நாடக அறிவும் அனுபவமுமுள்ளவராய்க் காட்சிகளை நன்கு அமைத்துக் கதையை இயற்றி இருக்கிறார். வசனங்கள் அழகான தமிழில் எழுதப்பட்டிருப்பது மாத்திரமன்றிச் சிறந்த கருத்துக்களும், உணர்ச்சிகளும் நிறைந்தனவாய் இருந்தன. தயாரிப்பாளர் தோற்றத்திலேயே பாத்திரங்களின் குணங்களைப்புரிந்து கொள்ளச் செய்வதற்கேற்பத் தேக அமைப்பு உடையவர்களைத் தெரிந்தெடுத்திருக்கின்றாரென்பது தெளிவாயிருந்தது. ஒவ்வொரு பாத்திரமும் தோன்றும்போது அவரவர் அணிந்திருந்த ஒப்பனை உடைகளாலும் அவர்கள் நடந்துவந்த பாவனையாலும் இது துரியோதனன், இது தர்மர், இது வீமன் என்று எவரும் சொல்லாமலே சபையோர்கள் மனதில் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. வீமன் அரசசபையிலிருந்து எழுந்து வெளியே நடந்துசென்ற போது அவன் உள்ளத்திலிருந்த கொந்தளிப்பு இம்மட்டென்பதை நன்றாகத் துலங்கச் செய்தான். ஒவ்வொருவரும் நன்றாகப் பேசி நடித்தார்கள் என்பதே சபையிலிருந்த இரசிகர்களின் ஏகமனதான தீர்ப்பு; வசனம் நன்றாக எழுதப்பட்டிருந்தால் மாத்திரம்போதாது. அதை அட்சரசுத்தியுடனும் உணர்ச்சியுடனும் பேசினால்தான் நடிப்பும் நன்றாக அமையும். அதை அன்று சரிவரச் செய்தார்கள். யார் நன்று யார் குறைவு என்று சொல்லமுடியாது. ஆயினும், அவர்களுள் சிலர் பலநாள் மேடை ஏறி நடித்து அனுபவம் பெற்றவர்களைப் போல் நடித்தார்கள். பெண்கள்தான் ஆண்பாத்திரங்களாகத் தோன்றி நடித்தார்கள். என்றாலும், உணர்ச்சிமிகுந்த உரையாடல், முகபாவம், நிலை, நடை, பாவனைகளாலும் இவர்கள் பெண்கள்தான் என்ற எண்ணம் இரசிகர்கள் மனதில் உதிக்காதிருக்கச் செய்தார்கள்.

இரண்டு காட்சிகள் என்மனதில் என்றுமிருக்கும். ஒன்று மோர்விற்கும் இடைச்சியரின் காட்சி. மிகவும் குணசித்திரமான நடிப்பு. அவர்களுடைய உடை, நடை, பேச்சு யாவும் அசல் இந்திய நாட்டுப்புற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் விழா நாடகக் காட்சிகள்



தன் வருங்காலக் கணவனை எண்ணிய நிலையில்
தன் தோழியருடன் கிருஷ்ணை.




அந்தணர்களுடன் ஆண்மையும், அழகும் மிக்க அரசிளங் காளைகள்
கிருஷ்ணையை வரிக்கும் ஆவலுடன்
சுயம்வர மண்டபத்தில் குழுமியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிமண்டபத்தின் அழகிலே மயங்கிநிற்கும் மன்னர்கள்.



மன்றிலழைத்து மாசளித்த துரியோதனன் ஆதியோரைப்
பழிவாங்குவதாக ஆணையிடுகின்றாள் கிருஷ்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தார்வேந்தர் கண்களில் மண்ணைத் தூவி, பாஞ்சாலன் பாவைக்கு
மாலையிடுகிறான் பார்ப்பனாக வந்த அர்ச்சுனன்.



புவிமன்னன் புதல்வியைப் புரோகிதன் ஒருவன் வரிக்க
என்ன நியாயமிருக்கு என வாதிடும் புரோகிதர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோர்க்காரிகளைப் போலவே இருந்தன. மற்றது துரெளபதியை (கிருஷ்ணையை) துர்ச்சாதனன் குடுமியில்பிடித்து இழுத்து வந்து சபைமுன்பாக நிறுத்துவதும் துயில் உரியும் வேளையில் துரெளபதி தன் கண வர்மாரைப் பார்த்துக் கதறுவதும், அவர் கள் மெளனமாயிருக்கவும் '' பெண்ணென் ருல் பேயும் இரங்குமே, கயவன் என்னை இம்சிசைப்படுத்துகிருனே எனக்கு உதவ இங்கொருவரும் இல்லையா'' என்று சொல்லிக்கொண்டு சபைப்பக்கம் திரும்பி அலறியபோது யார்தான் கண்ணீர்விடா திருப்பார்கள். துரெளபதி (கிருஷ்ணை) யாக வந்த நங்கை மிக அற்புதமாக நடித்தாள். இந்நாடகத்தில் பல நடனங்களும் இடம்பெற்று, நாடகத்தை இன்னுமொரு படி உயரச்செய்தன. உடைகள் ஒப்பனை கள் யாவும் திட்டமிட்டு உயர்ந்தமுறை யில் தயாரிக்கப்பட்டவை போலிருந்தன.

இத்தகைய ஒரு நாடகம் பெண்ணிஞலேயே எழுதித்தயாரிக்கப்பட்டு எல்லாப் பாத்திரங்களும் பெண்களாலேயே நடிக்கப் பட்டு வெற்றியடைந்திருப்பது போற்றத் தக்கது. செல்வி. சந்தன நங்கை கந்தப்பு தான் சகல கடமைகளையும் ஏற்று, கதை வசனம் ஆகியவற்றை எழுதி தானே இயக்கு நராகவும் பணியாற்றி இந்நாடகத்தை வெற்றிகரமாக நடித்துக் காட்டினுர்க ளென்றறிகிறேன். அன்ஞரது நாடக அனு பவத்தையும் விடாமுயற்சியையும் பாராட் டாதிருக்க முடியாது.

ஆயினும், இந்நாடகத்தைப் பார்த்த பின் ஒரு குறை என்மனதை விட்டகலா திருக்கின்றது. இத்தகைய ஒரு சிறந்த நாடகத்தைக் கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் மாத்திரம் நடித்து விட்டு அத்துடன் நிறுத்தி விடுகிருர்கள் என்பதே.

> பராயணம் செய்வதால் அற்புதமான நன்மைகள் உண்டாகும்; அலையும் நெஞ்சை அமைதியுடைய தாக்கும். சபதங்களை நிறைவேற்றுவதற்கான உறுதி யைப் பராயணம் செய்வது அளிக்கும்.
>
> — காந்திஜீ.

# வாழ்விக்கும் தெய்வம்

பருத்தித்துறையின் மத்தியில் அமைந்திருந்த 'உமா அனாதை விடுதி' அன்று கோலாகலமாகக் காட்சியளித்தது. எவரின் வரவுக்கோ காத்திருப்பதுபோன்ற பரபரப்புக் காணப்பட்டது. ஆம் அரசினர் சேவையிலிருந்து தானாகவே விடுதலை பெறும் ஆசிரியை சாந்தி, உமா அனாதை விடுதியில் இலவசமாகவே கடமையேற்க வருகிறாள். தனித்தல்ல தன் சேமலாபப் பணம் அனைத்தையுமே அர்ப்பணித்து, தன் மாதாந்த உபகார வேதனத்தையுமே அனாதைகளுக்காகச் செலவிடும் சேவை மனப்பான்மையோடு வருகிறாள்.

இதோ! ஓர் அழகிய மோட்டார்வாகனம் விடுதி வாசலண்டை வந்து நிற்கிறது. அதிலிருந்து ஆசிரியை சாந்தி கலைமகளென காண்போர் கருதுமாறு வெண்ணிற உடை அணிந்து, புன்னகை தவழ இறங்கி வருகிறாள். அவளுடன் பிரமுகர்கள் பலரும் வருகின்றனர். ஒலிபெருக்கியில் சிறுவர் இன்னிசை வரவேற்கிறது. அனைவரும் அழகாக அமைக்கப்பட்ட பந்தரில் அமர்கின்றனர்.

வந்தவரில் பலர் சாந்தியின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டுகின்றனர். ''தன்னலத்தில் சிறிதும் நாட்டமில்லா நங்கையே! தாம் வாட்டமின்றி அளித்த ரூபா இருபத்தையாயிரத்தால் உருவாகியதே இவ்விடுதி. நன்கொடையோடு நின்றுவிடாது, தங்கள் சேவையையும் இந்த அனாதைச் சேய்களுக்காக அர்ப்பணிக்க வந்துள்ள தங்கள் பெருந்தன்மையை எடுத்துரைக்க எவராலுமே முடியாது. பெயருக்கேற்ப சாந்த சொரூபியாய், சாந்தியற்றிருக்கும் சிறுவர்களுக்குச் சாந்தியளிக்கவந்திருக்கும் அம்மையே! என்றென்றும் தங்கள் உள்ளத்தில் சாந்தி நிலவுவதாக. அனாதைக் குழந்தைகளுக்கு வாழ்வளிக்க வந்த தெய்வமே... என்றென்றும் நீவிர் நீடுவாழப் பரமனைப் பணிகின்றோம்.'' என இறுதியில் உரையாற்றிய பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் தம் பாராட்டுரையை முடித்தார். அத்துடன் கூட்டமும் முடிவுபெற, எல்லோரும் விடைபெற்றனர். அனாதைவிடுதி புதிய அதிபர் விடுதியைப் பார்வையிட்டு, குழந்தைகளுடன் அளவளாவியபின் தன் அறையை அடைந்தார்.

படுக்கையில் படுத்த சாந்தியின் உள்ளமோ உறக்கம்கொள்ள மறுத்தது. கடைசியாகக் கேட்ட உரையாற்றல் உள்ளத்து நிம்மதியையே பறித்துக்கொண்டு போய்விட்டது. ''பெயருக்கேற்ற சாந்த சொரூபி.. யார்? நானா? என் உண்மை நிலையை அறிந்தால் இப்படிச் சொல்வார்களா? வாழ்வழிக்கும் தெய்வம்.. வாழவைக்கும் தெய்வம் நான். நீயா வாழ்வளிக்கப்போகும் தெய்வம்.. நீயா சாந்தியளிக்கப்போகும் சாந்தி.. இருக்காது.. ஒருபோதும் இருக்காது. அவள் மனச்சாட்சி பேரொலியாக அறைகூவியது. பதறித் துடிதுடித்தாள் சாந்தி. அவள் சிந்தனைக் கூட்டுக்குள் சிக்கியிருந்த பறவை இறந்தகாலத்தை நோக்கிப் பறந்தது.

இற்றைக்கு 32 வருடங்களின் முன் சாந்தி பருவத்தின் வாசற்படியில் நின்றாள். 18 வயது நிறைந்த எழில்மங்கை பார்ப்போரைப் பிறிதொருமுறை பார்க்கத்தூண்டும் கவர்ச்சிப் பாவை எனத் திகழ்ந்தாள். ஆங்கிலத்தில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரம் பெற்றாள். யாழ்நகர் கச்சேரியில் கடமையாற்றிய சாந்தியின் தந்தை காலிநகருக்கு மாற்றப்பட்டார். பெற்றோருடன் செல்லவேண்டியிருந்ததால் சாந்தியின் படிப்புக்கு முற்றுப்புள்ளி இடப்பட்டது. சாந்தி காலிநகரில் குடியிருந்த வீட்டின் பக்கத்தில் பெரிய பணக்காரர் ஒருவர் இருந்தார். அவரின் ஏக வாரிசுதான் சுந்தர். அவனுக்கும் சாந்திக்கு மிடையே பருவக் கோளாறான காதல்; முளைவிட்டு வளர்ந்து, செடியானது. இதனைக் கண்ணுற்றதினாலோ என்னமோ காலன் சாந்தியின் தந்தைக்குச் சீட்டுக்கிழித்து விட்டான். பற்றுக்கோடின்றித் தவித்த அன்னை புனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதி தன் ஏகமகளுடன் கண்டியிலுள்ள அண்ணன் வீடேகத் தயாராளுள். செய்தியறிந்து ஓடோடிவந்த சுந்தர் சாந்தியைத் தனிமையில் சந்தித்து, சாந்தியை என்றும் மறப்பதில்லை எனவும், அவளன்றிப் பிறிதொருத்தியை மணப்பதில்லை என்றும் சத்தியம் செய்தான். நெஞ்சில் நிறைவுடனும் நினைவிற்கு ஒளிப்படத்துடனும் கண்ணில் நீருடனும் விடைபெற்ருள் சாந்தி.

அவர்கள் கண்டியை அடைந்து சில மாதங்கள் சென்றன. வாரமொரு கடிதம் இருவரிடமும் செல்லத் தவறுவதில்லை. அதற்கிடையில் சுந்தர் வாழ்விலும் புயல் வீச ஆரம்பித்தது. எதிர்பாராத விதமாக அவன் தந்தையின் பணம் இருந்த வங்கி மூடப்பட்டது. பணமெல்லாம் ஒரேநாளில் பறிபோனதை யறிந்த தந்தை அதிர்ச்சியினுல் இறக்கவே, அவரைப் பின்பற்றி மனைவியும் போய்விட்டாள். துன்பக்கடலின் ஆழத்துக்கே அடித்துச் செல்லப்பட்ட சுந்தர், நைஜீரியா செல்லும் உறவினர் ஒருவருடன் சென்றுவிட்டான். சுந்தரின் கடிதம் திடீரென நிறுத்தப்பட்டதைக் கண்ட சாந்தி திகைத்தாள்... அழுதாள்... புலம்பினுள் அவன் படத்தை வைத்து; அதற்குத்தான் பேசும் சக்தியில்லையே! நீண்ட இடைவெளியின்பின் சுந்தர் சாந்தியை எண்ணி மடல் வரைந்தான். அதில் தனக்கு எதிர்பாராத விதமாக நேர்ந்துவிட்ட இன்னல்களை இயம்பி தான் வரும் வரை சாந்தியைக் காத்திருக்க வேண்டி இருந்தது. அவளும் அவன் வருகைக்காகக் காலமெல்லாம் காத்திருக்கத் தயாராளுள். அவள்நிலை அப்படி. இந்நிலையில் தாய் தன் மகளின் வருங்கால வாழ்க்கைக்காக உடன் பிறந்தவனை நம்பியிருந்தாள்.

சாந்தியின் மாமா நடேசன் ஒரு பாடசாலை ஆசிரியர். புதிதாக அவர் பாடசாலைக்கு வந்திருந்தார் உமாகாந்தன் என்ற ஆசிரியர். பெயருக்கேற்ற அழகும், அறிவும் ஒருங்கே அமையப்பெற்றவன். சீர்திருத்தவாதி. சீதனமின்றி ஓர் ஏழைக்கு வாழ்வளிக்க விளழந்தான் காந்தன். அவன் அடிக்கடி தன் சகஆசிரியர் நடேசன் வீட்டிற்குப் போய் அவர்கள் குடும்பத்துடன் ஒருவனுகவே கலந்துவிட்டான். அவன் சாந்தியின் விபரம் முழுவதையுமே அறிந்தாளுதலின் அவளை மனமுவந்து மணக்க முன்வந்தான். புனிதவதியின் ஆனந்தத்திற்கோ அளவில்லை. ஆனுல் சாந்தியின் உள்ளமோ எரிமலையெனக் குமுறியது. எது விதமாகவும் உமாகாந்தனைச் சந்தித்துத் தன் உள்ளக்கிடக்கையை வெளியிடத் துடிதுடித்தாள்; முடியவில்லை; ஈற்றில் உமாகாந்தனின் உரிமையாக்கப்பட்டாள். அன்னை சாந்தியடைந்தாள். சாந்தியின் உள்ளமோ சாந்தியின்றித் தவித்தது.

அன்று இரவு உமாகாந்தன் கற்பனைத் தேரில் மிதந்தவனுக படுக்கையறையை அடைந்தான். அங்கே கண்டகாட்சி அவனை நிலைகுலைய வைத்தது. தனக்கே உரிமை என்று எண்ணிவந்த தன்மனைவி வாலிபன் ஒருவனின் புகைப்படத்தைக் கண்ணீரால் நனைத்தபடி துயில்கின்ருள். தூண்டிற் புழுவெனத் துடிதுடித்தான் காந்தன். பசும் பால் என ஆவலுடன் பருகப்போனவன் ஆலகால விஷம் எனக்கண்டால் எந்நிலையடைவான்? ஆகாயத்தில் பறக்கும் பறவையை அடித்து வீழ்த்த முயற்சிக்கலாம்; காட்டிற் சுயேச்சையாகத் திரியும் புள்ளி மானைப் பிடிக்க வலைவிரிக்கலாம்; இவர்கள் செய்கை விரும்பத் தக்கதல்ல என்ருலும், வெறுக்கத்தக்கதும் அல்ல; ஆனுல் ஒருவன் ஆசையுடன் பிடித்துக் கூட்டில் வளர்க்கும் வண்ணக்கிளியையோ வீட்டில் போற்றி வளர்க்கும் புள்ளிமானையோ மற்றவர் வலோற்காரமாகத்திருடி உரிமையாக்க முனைவது அறநெறிக்கு முற்றிலுமே முரணனது. இதனை நன்கு அறிந்தவன் உமாகாந்தன். பண்பாட்டிலும் சீரிய கொள்கைகளிலும் மேம்பட்ட அவன் அறிவு உள்ளத்தால் ஒருவனுக்கு அடிமையாகி விட்ட சாந்தியின் உடலை மட்டும் தீண்டுவது முறையற்ற செய்கைஎன அறைகூவியது. எனவே அந்த நிமிடமே உலகின்முன் சாந்தி தன் மனைவியாளுலும், அவளைத் தன் உடன்பிறந்தவளாகவே கொள்வேன் எனச் சபதம் பூண்டான். இன்னும் அவள் மனம் கவர்ந்தவனை மணம் செய்விப்பதையும் தன் இலட்சியமாகக் கொண்டான்.

காலச்சக்கரம் சுழன்றுகொண்டே இருந்தது. காந்தனின் உள்ளஉறுதி நிலையாகவே இருந்தது. ஆனுல் சாந்தியோ எட்டி எட்டிப் போகும் காந்தனுக்காகச் சிறிதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் கசிந்தாளில்லை. பதிலாக ஆணவம் கொண்டாள்: உள்ளக்கிடக்கையை அறியாது உரிமையாக்கிய உனக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும் என்று பொருமினுள். ஏதோ தன் கடமைக்குச் சமைப்பாள். சாப்பிடுவாள், அவனுக்கும் எடுத்து வைப்பாள். அவன் சாப்பிடுவதோ விடுவதோ அவன் விருப்பம். யாராவது வந்தால் மட்டும் கலகலப்பாகக் காணப்படுவாள்.

ஆண்டு இரண்டு உருண்டது. ஒருநாள் பாடசாலை சென்ற காந்தன் திரும்பி வரவில்லை. மோட்டார் விபத்தில் இறந்தான் என்ற செய்திதான் வந்தது. இது அனைவருக்கும் பேரதிர்ச்சியானது. கலங்கித் தவித்தனர் புனிதவதியும், காந்தனின் பெற்ருேரும். மகளின் கைம்மை நிலை கண்டு சித்தம் கலங்கினுள் அன்னை. என்னதான் அவனுடன் இணைந்து வாழாவிடினும் சாந்தியின் உள்ளமும் உருகத்தான் செய்தது; தன் கன்னிமையைப் பறிக்காத காந்தனுக்காகக் கண்ணீர் வடிக்கவே செய்தாள்.

மாதங்கள் சில சென்றன. சாந்தியின் உள்ளமும் காந்தனுக்காக அனுதாபம் காட்டுவதைவிட்டு சுந்தருக்காக ஏங்கத் தொடங்கியது. நீண்ட காலங்களின் பின் சுந்தரிடமிருந்து வந்த கடிதம் குதூகலமடையச் செய்தது எனினும், தான் உலகின் முன் விதவை என்ற எண்ணம் அவளை வாட்டியது. அவள் எல்லாவற்றையும் விபரமாகச் சுந்தருக்கு எழுதினுள். அவனே எதையும் பொருட்படுத்தாது அவளை விவாகம்செய்யச் சம்மதம் தெரிவித்தான். சாந்தியின் உள்ளமோ உவகையால் பொங்கியது. புனிதவதியும் சிறிது மனம் தேறினுள்.

காந்தனின் உடமைகள் யாவும் ஒரு பெட்டியில் பூட்டி வைக்கப்பட்டிருந்தன; அதைத் தொடவே துணியவில்லை சாந்தி. அன்ருெருநாள் அவனின் இன்சூரன்ஸ் விடயமாக வந்த கடிதம் ஒன்று அதன் உறுதிப் பத்திரத்தைத் தேடவைத்தது. பெட்டியைத் திறந்து பத்திரத்தை எடுத்த சாந்தி, தன் காலடியில் ஒன்றன்பின் ஒன்ருக விழுந்த டயறிகளை எடுத்து அதனுள்போட எத்தனித்தாள்: என்ருலும் அதில் என்னதான் இருக்கிறதோ எனப்பார்க்க விரும்பினுள். திருமண வருட டயறியைப் புரட்டினுள்.

மே 10.

இன்று என் வாழ்நாளில் பொன்னுள். என் நெடுநாளைய இலட்சியமான சீதனம் வாங்காது திருமணம் செய்யும் ஆவல் பூர்த்தியடைந்த நன்னுள். மகிழ்ச்சி கரைபுரண்டோட, ஆயிரமாயிரம் கனவுகளுடன் படுக்கை அறையை அடைந்த எனக்கு மாபெரும் அதிர்ச்சி காத்து இருந்தது. என் சொந்தமென நம்பிவந்த என் சாந்தியின் உள்ளம் ஏற்கனவே ஒருவனுக்கு அடிமையாகி விட்டதை அவள் கண்ணீரால் நனைந்த அவன்படம் எடுத்துக்காட்டியது. உயர்ந்த ஓர் இலட்சியத்தை நிறைவேற்றி விட்டதாக மகிழ்ந்த நான், அதிலும் உயர்ந்த, ஏன் என் நிலையிலுள்ள ஆணுலேயே செயற்கரிய செயலைச் செய்யத்துணிந்தேன். ஆம். இன்றுமுதல் சாந்தி என்தங்கை. அவள் மனமுவந்த மணாளனை மணக்க ஒருபோதும் நான் இடைஞ்சலாக இருக்க மாட்டேன்; இது உறுதி.

சாந்தியின் உள்ளம் துணுக்குற்றது; என் உள்ள நிலையை அவர் அறிந்துவிட்டாரா? பரவாயில்லை, அவர்தான் இப்போது இல்லையே என்று எண்ணிக்கொண்டாள். பின் பலமாதங்கள் வெறுமையாகக் கிடந்தன;

டிசம்பர் 21.

என்னதான் உள்ளம் உறுதியாக இருப்பினும், ஓரோர்சமயம் மனித உணர்ச்சியைக் காட்டத்தான் செய்கிறது. சிலவிசை என்னையே என்னுல் கட்டுப்படுத்தவே முடியவில்லையே. எனவே இன்று முதல் தூக்க மாத்திரைகளைப் போடத்துணிந்தேன்;

மார்ச் 12.

தூக்கமாத்திரை போட்டாலும், உள்ளம் விழித்துக்கொண்டுதானே இருக்கிறது. என் இலட்சியத்தைச் சிதையவிடலாமோ? இறைவா எனக்கேன் இந்தச் சோதனை?

சாந்தியின் உள்ளத்தில் அச்சம் மேலோங்கியது. அவரின் அகாலமரணத்துக்குத் தானேதான் காரணமோ என்ற பயம் அவளை ஆட்கொண்டது. பரபரப்புடன் ஏட்டைப் புரட்டினுள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் 8.

இன்று என்னுடன் மணம்புரிந்த சக ஆசிரியர் கமலநாதனுக்கு மகவு ஒன்று பிறந்ததற்காகத் தேநீர்விருந்து நடந்ததே. எனது விருந்து எப்போது என்று நண்பர்கள் கிண்டல் செய்கிருர்கள். பேசாமல் சாந்தியை விவாகரத்துச் செய்துவிடலாமா என்று இருக்கிறது. சீ என்ன குற்றத்தைச் சாட்டுவது? சீ .. சீ... நான் ஒருபோதும் அவள்மேல் எதுவித குற்றத்தையும் சாட்ட மாட்டேன். அவள் என் சகோதரி. தன் கையே கண்ணைக் குற்றினுல் அதை வெட்டி எறிவாருண்டோ?

கல்மலையான சாந்தியின் உள்ளம் கரையத் தொடங்கியது. காந்தனின் கள்ளமில்லா அன்பை நிராகரித்த பாவியாகி விட்டேன் என்று கண்ணீர் விட்டாள். ஏட்டைப் புரட்டின அவள்கைகள். அவன் மரணமடைவதற்கு முதல்நாள், படபடக்கும் உள்ளத்துடன் திறந்தாள்.

மே 15.

இன்று கவலையைப்போக்கும் என்று எண்ணிச் சிறிது மதுபானம் அருந்தினேன். ஆனுல் என் உள்ளத்தின் உணர்ச்சிகளை அது தட்டி எழுப்பிவிட்டது. வீட்டிற்கு வந்தேன். நான், என்னையுமறியாமல் அவள் படுக்கையறையை அடைந்தேன். இன்று எதுவிதமும் அவளை அடைவதே என்று முடிவு செய்தேன். ஆனுல் அவள் தலையணைக்குப் பக்கமிருந்தபடம் என்நிலையை உணர்த்தியது. சாந்தி உன்னை என் உடன் பிறப்பாக உள்ளத்தால் வரித்தாலும், என் மிருகஉணர்வு சிலவிசை நிதானமிழக்கச் செய்துவிடுமோ என்ற அச்சம் மேலோங்குகிறது. இனி நான் உயிருடன் இருப்பதில் பலனில்லை. உன் கன்னிமைக்கு ஆபத்து. என்றும் நீ என் சகோதரி. உன் கன்னிமையின் காலனுக இராது, நாளை நான் காலனிடம் சரணடைவது திண்ணம். நாளை பாடசாலை போகும் எனது உயிரற்ற சடலம் மாலை வீடுவரும். என்ருே ஒருநாள் உன்காதலன் கரம்பற்றி மகிழ்வோடு வாழ ஆசிகூறும் சகோதரன் காந்தன். பி. கு. நல்வாழ்வுக்கு ரூபா இருபத்தையாயிரம் இன்சூரன்ஸ் மூலம் அளிக்கிறேன்.

படித்த அவள் பதறி மயக்கமாகச் சாய்ந்தாள். பலவாறு பிதற்றினுள். நான் கொலைக்காரி .. பாவி . காந்தன் நீங்கள் உத்தமர். எனப் பலவாறு பேசினுள். மயக்கம் தெளிந்தபின் உத்தமமான, என்னை வாழவைத்த தெய்வத்தைச் சாகடித்தேனே என்று கண்ணீர் வடித்தாள். அத்தருணம் நைஜீரியாவில் நின்றும் தந்தி ஒன்று வந்தது: இன்னும் இரண்டு வாரத்தில் வந்து திருமணம் செய்யப்போவதாக அறிவித்து இருந்தான் சுந்தர். ஓவென்று கதறினுள் சாந்தி. அம்மா நான் மணஞ்செய்ய மாட்டேன். அவர் ஆண்மகனுய் இருந்தும் தன் உணர்ச்சிகளை அடக்கி உத்தமனுய்—வானுறையும் தெய்வமானுரே... நான் கேவலம் நளாயினி, கண்ணகி வழிவந்தவளாக இருந்தும் கணவன் இறந்தபின் காதலனைக் கரம் பற்றத் துணிந்தேனே என்று தன்னையே சபித்தாள். முடிவில் மணஞ்செய்ய மறுத்துச் சுந்தருக்குத் தந்தி அனுப்பப்பட்டது. வெண்ணுடையை வெறுத்த அவள் அதை விருப்புடன் உடுத்தாள். காலமெல்லாம் பிறருக்காக வாழ உறுதிபூண்டாள்.

பலரின் சிபாரிசால் அவளுக்கு ஆசிரியை பதவி கிடைத்தது. காந்தனின் இன்ஸ்சூரன்ஸ் பணம் வங்கியில் இருந்தது. நல்லதொரு சேவைக்காக அதைப் பயன்படுத்த எண்ணினுள். அதற்கேற்ப அவள் ஆசிரிய பதவி வகித்த பருத்தித்துறையில் ஓர் அனுதை விடுதி அமைக்க எண்ணினுர்கள். இதுவிடயம் சாந்திக்குத் தெரியவந்தது. இதைவிடச் சிறந்த பணி இருக்காது என எண்ணிய அவள் ரூபா இருபத்தையாயிரத்தையும் மனமுவந்து அளித்து விட்டாள். அதனுல் உருவாகியதே அனுதை விடுதி. அதற்குக் கணவனின் முதற்பெயரான 'உமா'வைச் சூட்டினுள். இன்று அவ்விடுதிக்கே தன்னை மனமுவந்து அளித்துவிட்டாள். இனி அவள் அவ்விடுதியின் காப்பாளர். ஓர் உமாகாந்தனின் வாழ்வைப் பறித்துவிட்ட அவள்பன்னூற்றுக்கணக்கான அனுதைக்காந்தன்களை வாழவைக்கப் போகின்ருள். ஒருவனுக்கு அன்பைக் கொடுக்க முடியாத அவள் எத்தனையோ குழந்தைகளுக்கு, அன்பற்றசிருருக்கு அன்பை அளிக்கப் போகின்ருள். இந்த நிறைவே அவளை வாழவைக்கும் தெய்வமாக்கியது.

திருமதி. அ. மேரி திரேசா,
(பழைய மாணவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலம்பு காட்டும் கற்பு நெறி

க. ர. ஆதிலக்ஷ்மி அம்மையார் 'திருவடி' பழனி.

"பெண்ணிற் பெருந்தக்க
யாவுள கற்பு என்னும்
திண்மை உண்டாகப் பெறின்"
என்றார் வள்ளுவர்.

"இன்துணை மகளிர்க்கு
இன்றியமையாக் கற்பு"
என்றார் இளங்கோ.

இவ்வாறாகப் பண்டைத் தமிழ் நூல்களிலும், இடைக்கால நூல்களிலும் பாமர மக்கள் வாழ்க்கையிலும் கற்பு உயிர்நிலையாகவே போற்றப்படுகின்றது: மனைவி தன் கணவனைத் தவிர வேறு ஒருவனை மனத்தாலும் விரும்பாமை கற்பு ஆகும். பெண்ணிற்கு இலக்கணம் வகுக்க வந்த வள்ளுவர்,

"தற்காத்து தற்கொண்டாற்
பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"
என்றார்.

சொற்காத்தலாவது, கணவனது புகழுக்கு இழுக்குவராமல் காப்பது. அப்போது கணவனைத் திருத்தும் நிலையும் ஏற்படலாம். கணவன் கருத்துப்படி நடவாதது அந்நிலையில் குற்றமாகாது. இது கருதியே மனைவியை இடித்துரைக்கும் அமைச்சரோடு ஒன்றுபடுத்தி, உணர்த்தினர் மேலோர். பெரிய புராணத்தில் "நெடுமாறர்" சமணசமயப் பற்றுக்கொள்ளவும், அவர் மனைவி மங்கையர்க்கரசியார் கணவர் கருத்திற்கு மாறாகச் சைவசமயப் பற்றுக் கொண்டு கணவனைத் திருத்தியது இங்கு நோக்கற்பாலது.

கற்பின் இலக்கணம் காலநிலையாலும் சிறிது வேறுபாடடைந்தது. சங்க காலத்தில் கணவனும், மனைவியும் ஒருயிரும் ஈருடலுமாகக் கருதப்பட்டனர். கல்வியை இருவர்க்கும் சிறந்ததாகவே கருதினர். கணவன் தவறுசெய்யின் மனைவி எதிர்த்துத் திருத்தினாள். இதனை வையாவிக் கோப்பெரும் பேகன் மனைவி கண்ணகியின் வரலாற்றால் அறியலாம்.

இன்ப வாழ்க்கையில் இன்றியமையாததாய்ப் போற்றப்பட்ட ஊடல், கணவன் தவற்றைத் திருத்தும் உரிமையையே காட்டுகிறது. இடைக்காலத்தில் இந்நிலை சற்று மாற்றமடைந்தது.

வேத ஒழுக்கம் மதிப்படைந்தது. பெண்களுக்கு அறிவில்லை. கல்வி வேண்டாம் என்று கருதப்பட்டது. பரிமேலழகரும் திருக்குறளுக்கு உரை எழுதியதில்,

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை
அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற"
என்ற குறளுக்கு

அறிவறிந்த என்றதால் மக்கள் என்னும் பெயர், "பெண் ஒழித்து நின்றது" என்றதால் நன்கு அறியலாம்.

மேலும் மனைவி கணவனின் உயிரில் ஒருபகுதி என்பதுபோய் பிற்றை நாளில் ஒருவன் அனுபவிக்கும் பொருள் என்று கருதப்பட்டது. அதனால் ஆடவன் துறக்க வேண்டிய பொருள்களில் மனைவியும் ஒன்றாயிற்று. கற்பின் இலக்கணம் கணவன் கருத்துக்கு மாறாமல் அவன் உரைத்தபடி நடப்பது என்று மாறிற்று. வேத ஒழுக்கமும் சங்ககாலத்திலேயே பரவத் தொடங்கிவிட்டது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி, கோவலன், மாதவி ஆகியோர் கொண்ட கற்பு நிலையை நோக்குவோம். கோவலன் கண்ணகியைத் துறந்து மாதவியுடனுறைந்து அவளோடு கடற்கரை சென்று அவள் விருப்பப்படி யாழ் வாசிக்கும்போது முதற் பாட்டில் சோழன் செங்கோலோச்சிச் சென்று கங்கையைப் புணர்கின்றான். அப்போது அவன் மனைவி காவிரி அவனிடம் புலவி கொள்ளவில்லை. அதுவே பெருங் கற்பு என்று கூறுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோலோச்சி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி!
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாதொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பு
என்றறிந்தேன் வாழி காவேரி!"

இப்பாவில் சோழனைக் கோவலனாகவும் காவிரியைக் கண்ணகியாகவும் கங்கையை மாதவியாகவும் கொண்டு நோக்கின் பின் நிகழ்ந்த வரலாற்றில் பொதிந்திருக்கும் நயத்தையும் அறியலாம்,

மாதவியை வெறுத்து வந்த கோவலனைக் கண்ணகி அன்புடன் வரவேற்கிறாள். அதையே கற்பென்று கருதிய கோவலன் அவளைப் புகழ்கிறான். கண்ணகியால் கோவலன் புகழடைந்ததுபோலக் காவிரியால் சோழவளநாடும் புகழடைந்தது. மங்கை மாதர் என்ற சொற்களும் கண்ணகியையே நினைவூட்டுகின்றது. கோவலன் பாட்டில் மாதவி அவன் வேறொரு மங்கையைக் கருதிப் பாடியதாய் நினைக்கின்றாள். இளங்கோவடிகள் கோவலனுக்கு அந்த எண்ணங் கிடையாது, மாதவி மாறாக நினைத்தது ஊழ்வினையால் என்கிறார். காப்பியத் தலைவர்களின் குறை நிறைகளுக்கு ஊழைக் காரணமாக்குவது பொருத்தமாகவில்லை; அவன் வேறு மகளிரை விரும்பிப் பாடினாலும் குற்றமில்லை என்ற கொள்கையை அவன் பெற்றிருந்ததனாலே அவன் அவ்விதம் பாடினான் என்று கருதி மாதவி அக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை; குலப்பெண் அல்லாத காரணத்தால் நேரில் எதிர்த்தே திருத்த முயல்கிறாள். ஆனால், கோவலன் அவள் நினைத்ததற்கு மாறாகத் தன் செயலை மறந்து அவள் பாடியதைக் குற்றமாகக் கொண்டு தூற்றி வெறுத்துத் துறக்கின்றான். மாதவி திருத்த வேண்டியதுதான். ஆனால், கோவலனை அவள் திருத்தியமுறை தவறாகியது, இம்முறையிற்றான் கண்ணகி சிறப்படைந்தாள். கற்பு தவத்தினுஞ் சிறந்தது. இன்னாசெய்தார்க்கும் இனியவே செய்யும் பண்பு கற்பிற்கு வேண்டும். மாதவி செயலில் அது இல்லை. அதனாற்றான் அவள் துறவுபூண்டு தவக்கோலங் கொண்டாள்.

இனி, கண்ணகி எதைக் கற்பெனக் கருதிக் கோவலனை எம்முறையில் திருத்தினாள் எனக் காண்போம். மாதவியை வெறுத்த கோவலன் கண்ணகியிடம் வருகிறான். கண்ணகியின் வாடிய மேனியைக் கண்டு,

" பொய் வினையாட்டியுடன் கூடிப்
பொருள் யாவுந் தொலைத்தேன்
அது பெரும் நாணைத் தருகின்றது"

எனக் கூறுகின்றான்.

அது கேட்ட கண்ணகி பதிலாக,

" நலங்கேழ் முறுவல் நகைமுகங்காட்டி
சிலம்பு கொள்ளும்"

என இயம்புகிறாள்.

இப்பதில் இருநிலையில் சிறப்பாயமைந்துள்ளது. ஆழ்ந்து நோக்கற்குரியது கோவலன் மனம் இங்குதான் ஓரளவு திருந்துகின்றது,

அடுத்து, மதுரைப் புறஞ்சேரியில் கண்ணகி மாதவி நல்கிய வீட்டிலே தங்கிச் சமைத்த உணவைக் கோவலனுக்குப்படைக்கின்றாள். அவளுக்கும், தன் தாய்தந்தையருக்கும் தான் செய்த தீங்கினைக் கூறிக் கோவலன் வருந்துகின்றான். அதற்குக் கண்ணகி,

" அறவோர்க் களித்தலும்
அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர்
சிறப்பின் விருந்தெதிர்
கோடலும் துறந்த என்னை
நும் பெருமகன் தன்
னொடும் பெயர்தலைத் தாள்
மன் பெருஞ் சிறப்பின்
மாந்திக் கிழவன் முந்தை
நில்லா முனிவிகந் தனனா
அன்புளம் சிறந்தாங்கு
அருள் மொழியளாகி
ஏற் பாராட்டயானகத் தொளித்து
நோயுந் துன்பமும்
தொடிவது போலும் என்வாயல்
முறுவதற்கு அவர்
உள்ளம் வருந்தப் போற்று



K 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்ரு உள்ள வாழ்க்கை
யேன் ஆதலின்
ஏற் றெழுந்தனன் யான்''

என்றே கூறுகின்ருள்.

இதில் கற்புடைப் பெண்டிர் கணவனேடு சேர்ந்து வாழுங்கால் பெறும்பயன், அறவோர்க்களித்தல், அந்தணரோம்பல், துறவோர்க் கெதிர்தல், விருந்து கோடல் முதலியவை கூறப்படுகின்றன. பிரிந்திருக்குங்கால் கணவன் பிரிவில் தனக்கேற்பட்ட வருத்தத்தை மாமன் மாமி காணுது மறைத்துவைத்து அவர்களதை அறிந்தால் கணவனை வெறுப்பர் என உணர்ந்து கண்ணகி மேற்கொண்ட கற்பிலக்கணம் ஈண்டு இயம்பப்படுகின்றது.

எவ்வளவோ மறைத்தும் தாய்தந்தையர் அறிந்துகொண்டு உள்ளம்நொந்தனர். அப்படி அவர்கள் உளம்நோக நீர் போற்ரு ஒழுக்கம் புரிந்தீர். ஆயினும், யான் மாற்ரு உள்ள வாழ்க்கையேன் ஆதலின் நின் விருப்பப்படி வந்தேன் என்று கூறுகின்ருள் கண்ணகி.

இம்முறை போற்ரு ஒழுக்கம் புரிந்தவன் கோவலனே என நேரிலேயே கூறிவிட்டாள். தன்னை மாற்ரு உள்ளத்தள் என்றதால் அவன் மாறும் உள்ளத்தன் என்பதனை உணர்த்தினுள். கணவன் தவறித் தீயன செய்யின் மனைவி அதற்காக வெறுத்து மனம் மாறக்கூடாது. அவன் நல்வாழ்வில் கருத்துடையவளாய் இருத்தல் வேண்டுமென்பது இங்கு உணர்த்தப்படுகின்றது.

மற்ருென்று ''நான் வருந்துமாறு நீர் போற்ரு ஒழுக்கம் புரிந்தீர் என்று கூருமல் நும் தாய் தந்தையர் வருந்துமாறு தவறிழைத்தீரே'' என்று கூறுவது போலுளது. கண்ணகி தன் வருத்தத்தைப் பொருட்படுத்தவில்லை. பிறர் வருத்தத்திற்காகவே வருந்தினுள். இம்முறையிற்ருன் கற்பு தவத்திலுஞ் சிறந்ததாகின்றது. தவம் செய்வோன் தன்னலங் கருதியே துன்பத்தைப் பொறுக்கின்ருன். கற்புடைக் கண்ணகியோ பிறர் நலத்திற்காகத் துன்பத்தை ஏற்கின்ருள். இது கேட்ட கோவலன் திருந்துகின்ருன்.

ஒழுக்கம் வாய்ந்த கற்பு நெறியால் கண்ணகி நீதியினை உரைத்து, கணவன் களங்கத்தைத் துடைத்து மதுரையை எரித்தாள். அவளது சீரிய கற்பு சீறிவிழுவதிலும், ஆறிக்கணவனைத் திருத்துவதிலும் செம்மையுற்றுத் திகழ்கின்றது.

''மனைத்தக்க மாண்புடையளாகித்
தற் கொண்டான்
வளத் தக்காள் வாழ்க்கைத்துணை''

என்ற நெறி சிறக்கக் கற்புநெறி வழுவாது நாமும் வாழ்வதே சிலம்பு காட்டும் கற்பு நெறியாம்.

---

அறிவீனத்துள் பெரிய அறிவீனம் எது? அறிவாளிகளான பெரியோர்களுடைய கருத்தின் சிறப்புத் தெரிந்தும் அதனைச் செயற்படுத்தக் கூச்சப்படுவதுதான்.

— டிமாக் ரீடஸ்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காவிய இன்பத்தில் காதலும் கற்பும்"

காதல் என்பது காதுக்கினிய சொல். கருத்துக்கினிய பொருள். காதல் உண்டாயின் இவ்வுலகில் எல்லாம் உண்டு. காதல் இல்லையேல் ஒன்றும் இல்லை. "காதல், காதல், காதல்—இன்றேல் சாதல், சாதல், சாதல்" என்று பாடினார் பாரதியார். ஆயினும், அச்சொல்லை எல்லோரும் கூசாமல் பேசுவதில்லை. சின்னஞ் சிறியவர் காதில் அது விழலாகாதாம். கன்னியர் வாயில் அது வரலாகாதாம். இப்படி ஏன் அச்சொல் ஒதுக்கப்படுகின்றது? தமிழ்க் கவிதைகள் காதல் என்ற சொல்லை எடுத்தாளவில்லையா? நீதி நூல்களில் அச்சொல் வரவில்லையா? திருப்பாடல்களில் அஃது இடம் பெறவில்லையா? காவியங்களிலும் நீதி நூல்களிலும், திருப் பாசுரங்களிலும் பயின்ற அழகிய தமிழ்ச் சொல்லை ஏன் கூசிக் கூசிப் பேசவேண்டும்.

காதல் என்ற சொல்லின் பொருள் தான் என்னே? அன்பு என்றாலும் காதல் என்றாலும் பொருள் ஒன்றே. பெற்றோருக்குப் பிள்ளையிடம் உள்ள அன்பு காதல் தான். 'கடந்த பேர்களும் கடப்பரோ மக்கள்மேல் காதல்' என்று கவிஞர் பாடவில்லையா? பெற்ற பிள்ளையைக் காதலன் என்று கூறுவதுமுண்டு. வாலியின் மைந்தனாகிய அங்கதனை 'வாலி காதலன்' என்று குறிக்கின்றார் கம்பர். இவ்வாறே நண்பனையும் காதலன் என்று கவியரசர் கூறுவர். கங்கைக்கரையிலே இராமனுடைய நண்பனாயினான் குகன். அவன் அன்பிற்கு கங்கு கரையில்லை. அதுகண்ட இராமன்,

"சீதையை நோக்கித்
தம்பி திருமுகம் நோக்கித் தீராக்
காதலாகும் என்று கருணையின்
மலர்ந்த கண்ணன்
யாதினும் இனிய நண்ப
இருத்தி ஈண்டு எம்மொடு"

என்றான்.

எனவே, பக்தியும் காதல். பிள்ளைப் பாசமும் காதல். நேசமும் காதல். சுருங்கச் சொல்லின் தலைசிறந்த அன்பே காதல்.

இவ்வளவு விரிந்த பொருளில் வழங்கிய காதல் என்ற சொல், தற்போது ஆண், பெண் என்னும் இருபாலாரிடையேயும் உள்ள அன்பையே காதல் என்று குறிக்கின்றது. காதலன் என்றால் கணவன். காதலி என்றால் மனைவி. இவ்விருவரையும் இல்வாழ்க்கையில் இழுப்பது காதல். பின்பு இல்வாழ்க்கையை இனிதே நடைபெறச் செய்வது காதல். கண்ணிரண்டும் ஒன்றையே காண்பதுபோல இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருவரையும் ஒரு நெறிப்படுத்துவது காதலாகும்.

"காதல் மனையாளும்
காதலனும் மாறின்றித் தீதில்
ஒரு கருமம் செய்பவே"

என்றார் ஒரு கவிஞர்.

ஆதியில், காதல் மணமே தமிழ்நாட்டில் சிறந்து விளங்கிற்று. "காதல் இல்லாத வாழ்க்கை உயிரில்லாத உடம்பு போன்றது" என்பது பலரது கொள்கையாகும். காதலுற்ற கன்னியர் தம்கருத்து நிறைவேறும் வண்ணம் காமனை வேண்டிக் கொள்ளும் வழக்கமும் முற்காலத்தில் இருந்ததாகக் குறிக்கின்றது. காதல் விளைக்கும் தேவனைக் காமன் என்றும், 'காமவேள்' என்றும் தமிழர் அழைத்தனர். தாம் கருதிய காதலனைக் கணவனாகப் பெறுவதற்கும், பிரிந்த கணவனை மீண்டும் அடைவதற்கும் காமன் கோயிலில் சென்று மங்கையர் வழிபடும் வழக்கம் அந்நாளில் இருந்து வந்துள்ளது. கோவலன், மாதவி என்னும் கணிகையின் மையலிலே மூழ்கித் தன் மனைவியாகிய கண்ணகியைப் பிரிந்திருந்தபோது 'காமவேள் கோயிலில் சென்று தொழுதால் கணவன் மீண்டும் வந்து சேர்வான்' என்று அக்கற்பரசியிடம் அவள் உயிர்த்தோழி எடுத்துரைத்தாள்.

"கடலொடு காவிரி சென்றலைக்கும் முன்றில்
காமவேள் கோட்டம் தொழுதார் கணவ
ரொடு
தாமின்புறுவர் உலகத்துத் தையலார்"

என்று கூறினாள் தோழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனுல் காவிரிப்பூம் பட்டினத்தில் அந்தநாளில் காமன் கோயிலிருந்ததென்றும், குலமாதர் அங்கு சென்று வழிபடும் முறை இருந்ததென்றும் நன்ருக விளங்குகின்றது. இன்றும் தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் காமன் பண்டிகை கொண்டாடப்படுகின்றது, 'ஈசனுடைய நெற்றிக் கண்ணுல் காமன் எரிந்து போனுன்' என்று வாதிப்பாரும், 'அப்படியில்லை' என்று சாதிப்பாரும் இக்காலத்தில் தமிழ் நாட்டிலுண்டு.

காமம் என்ற சொல்லும், காமன் என்ற பெயரும் தமிழ் நூல்களிலே எடுத்தாளப்பட்டாலும் இன்று சுவை இழிந்த பதங்களாகவே எண்ணப்படுகின்றன. காமம் என்பது வடசொல் இன்பம் என்னும் பொருள் அதற்கு உண்டு. உறுதிப் பொருள்களைத் ''தர்மார்த்த காம மோட்சம்'' என்று வடமொழியாளர் கூறுவர். இவ்வடமொழித் தொடருக்கு நேரான தமிழ் அறம், பொருள், இன்பம், வீடு என்பது. எனவே, காமம் என்பது இன்பம் என்ற பொருளைத் தருகின்றது. திருவள்ளுவர் காலத்தில் காமம் என்பது இழிந்த சொல்லாகக் கருதப்படவில்லை. அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலைப்பற்றி எழுதிய வள்ளுவர் இன்பப் பகுதிக்குக் காமத்துப்பால் என்றும் பெயரிட்டாரென்ருல், அவர் காலத்தில் காமம் இழிந்த சொல்லாகக் கருதப்படவில்லை என்பதை விளங்கக்கூடியதாக இருக்கின்றது.

ஆயினும், காலகதியில் காமம் என்பது துன்மார்க்கத்திற்குப் பெறும் இன்பத்தைக் குறிப்பதாயிற்று. காமி, காமுகன் முதலிய சொற்கள் தூர்த்தன் என்ற பொருளிலே வழங்குகின்றன. காமுகன் கல்வி கற்பதற்கும் தகுதியற்றவன் என்று நன்னூல் கூறுகின்றது.

இனி, காதலுக்கும் கற்புக்கும் உள்ள தொடர்பு பற்றிச் சிறிது ஆராய்வோம். காதல் என்பது உணர்ச்சி, கற்பு என்பது ஒழுக்கம். உணர்ச்சியால் ஒன்றுபட்ட நம்பியும் நங்கையும் ஒருவரையொருவர் தமக்கே உரியவராக்கிக்கொண்ட நிலையிலே தோன்றும் ஒழுக்கமே கற்பு என்பர்.

சீதையின் காதலில் வைத்து இந்த உண்மையைக் காட்டுகின்ருர் கம்பர். மிதிலை மாநகரத்தில், கன்னி மாடத்தின் மேல் நின்ற சீதையும் வீதியின் வழியாகச் சென்ற இராமனும் தற்செயலாக ஒருவரை ஒருவர் நோக்கினர். இருவர் கண்ணுேக்கும் ஒத்தது. காதல் பிறந்தது. காதலர் இருவரும் ஒருவர் இதயத்தில் ஒருவர் புகுந்து உறைவாராயினர்.

இந்த நிலையில் இராமன் தன்னுடன் வந்த தம்பியோடும் முனிவரோடும் வீதியிற் சென்று மறைந்துவிடுகின்ருன். அவன் இன்னுன் என்று அறியாள் சீதை. அவன் எங்கே சென்ருன் என்பது உணராள். ஆயினும், அவனையே கருத்தில் வைத்துக் கரைந்து உருகுகின்ருள். அவ்வேளையில் ஓடிவருகின்ருள் அவள் தோழி. என்ன செய்தி என்று கேட்கின்ருள் சீதை. அப்போது தோழி கூறுகின்ருள். அயோத்தி அரசனுடைய மைந்தன், அஞ்சனவண்ணன், செந்தாமரைக் கண்ணன், அவன் தம்பியோடும் முனிவரோடும் நம் மாளிகைக்கு வந்தான்; உன் திருமணத்திற்காக வைத்திருந்த வில்லைக் கண்டான்; எடுத்தான்; வளைத்தான்; ஒடித்தான்; என்று கூறி முடிக்கின்ருள்.

அப்போது சீதையின் மனம் ஊசலாடத்தொடங்கிற்று; கவலையுமுண்டாயிற்று. வில்லை எடுத்து வளைத்த வீரன், தான் கன்னி மாடத்திலிருந்து கண்ட ஆடவனே? அல்லனே? என்ற ஐயம் பிறந்தது. அவனுகத்தான் இருக்கவேண்டுமென்று ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொண்டு, தோழி கூறிய அடையாளங்களை மீளவும் நினைத்துப் பார்த்தாள்.

''கோமுனியுடன் வரு கொண்டல்
என்ற பின்
தாமரைக் கண்ணினுன்
என்ற தன்மையால்
ஆம் அவனே கொல் என்று
ஐயம் நீங்கினுள்.''

ஆனுல், நொடிப்பொழுதில் மற்ருெரு கருத்து அவள் மனதில் புகுந்தது. ''என் தோழி கூறிய அடையாளங்கள் எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடைய மற்றொருவன் வில்லை வளைத்து ஒடித்திருந்தால் நான் என்ன செய்வேன்?" என்று அவள் எண்ணினாள்; ஏங்கினாள்.

அந்த ஏக்கத்தினூடே ஓர் ஊக்கம் பிறந்தது. உணர்ச்சியினிடையே ஒழுக்கம் எழுந்தது. காதல் கற்பாக உருவெடுத்தது. "அவன் அல்லனேல் இறப்பேன்" என்று சீதை முடிபுசெய்தாள். 'கண்ணுற் கண்ட காதலனும் வில்லை ஒடித்த வீரனும் ஒருவனேயாயின் அவனை மணம்புரிந்து வாழ்வேன்' இல்லாவிட்டால் இறந்து படுவேன் என்று உறுதிகொண்டாள் சீதை. கற்புநெறி என்பது இதுதான். காதலனையன்றி மற்றோர் ஆடவனை மனத்திலும் கருத ஒருப்படாத உறுதியே கற்பு எனப்படும். இதையே திருவள்ளுவர் வியந்து பாடினார்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள
கற் பெனும்
திண்மையுண்டாகப் பெறின்"

என்பது அவரது திருவாக்கு. கற்புடைய மாதரிடம் மென்மையுமுண்டு. மனத்திண்மையும் உண்டு. பொறுக்கும் திறனும் உண்டு. மாறுபட்டோரை ஒறுக்கும் திறனும் உண்டு. சிலப்பதிகாரத்தின் கதாநாயகியாகிய கண்ணகியிடம் இவ்விரு தன்மையையும் பார்க்கின்றோம். கொண்ட கணவன் அவளுக்குக் கொடுமைசெய்தான். செல்வத்தையெல்லாம் செலவுசெய்தான். அல்லும் பகலும் அயலார் அறியாமல் கண்ணீர் வடித்தாள் கண்ணகி. மங்கல அணியைத் தவிர மற்றைய நகைகளையெல்லாம் மறந்தாள். தன்னை அழகுசெய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தை அறவே துறந்தாள்.

"அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப
பவள வாள்நுதல் திலகம் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையாறு நெஞ்சத்துக் கண்ணகி"

என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. அடக்கமும், பொறுமையும், கற்பும், கண்ணீரும் கண்ணகியின் வடிவம். "கண்டார் வெறுப்பனவே காதலன் தான் செய்திடினும் கொண்டானையல்லால் அறியாக் குலமகள்" என்று ஆழ்வார் பாடிய திருப்பாட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தாள் கண்ணகி.

இத்தகைய மென்மையும், பொறுமையும் வாய்ந்த கண்ணகி, மதுரைமாநகரில் தன் கணவனை இழந்தபோது வன்மையின் வடிவம் கொண்டாள். கற்பென்னும் திண்மை அவ்வடிவத்திலே களிநடம் புரிந்தது. அத்தகைய திண்மையைக் கண்டு திடுக்கிட்டான் அரசன். அப்பால் அவள் பேசிய திடமொழியைக் கேட்டபோது மயங்கி வீழ்ந்து மாண்டான். தவறுசெய்த அரசனைக் கற்பின் திண்மையால் ஒறுத்த கண்ணகி, வீரபத்தினியாகத் தமிழ் நாட்டிலே போற்றப்பட்டாள். அன்று முதல் இன்றுவரை கண்ணகி, மாதர் குலமணி விளக்காய், வீரக்கற்பின் விழுமிய கொழுந்தாய் விளங்குகின்றாள்.

— திருமதி. புஷ்பராணி தவராசா,
விடுகை வருடம்.

---

பிழைப்புக்கு ஒரு நல்ல தொழிலும், வாழ்விற்கு ஒரு சிறந்த குறிக்கோளும், பொழுது போக்கிற்கொரு சிறந்த கலையும் தேவை.

— சுத்தானந்த பாரதியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியும் கவிதைகளும்

இலக்கிய உலகிலே கவிஞன் ஒரு புதுமை மனிதன். தானுணர்ந்ததைப் பிறரும் உணரச்செய்பவன். அவன் இயற்கையுடன் உறவாடுகின்ருன். காதல் கொள்கின்ருன். இந்த உறவே கவிதைகளாகின்றன. இச் சிறப்பினுக்கு நம் கவிக்குயில் பாரதி விலக்கல்லன்.

நாட்டிற்காகப் பிறந்து கூட்டிலடைபட்ட குயிலாக மாருது, பாட்டுக்கொரு புலவனுகி பாமாலேதனைப் புனைந்து பாரதத் தாயின் பாதங்களில் அர்ப்பணித்தான்.

பாரதநாடு, தமிழ்நாடு, சுதந்திரம், தேசீய இயக்கம், தேசீயத் தலைவர், பிற நாடுகள், தெய்வப் பாடல்கள், ஞானப் பாடல்கள், நீதி, சமூகம், முப்பெரும் பாடல்கள் என்பன அவர்தம் இதயத்தினின்று ஊற்றெடுத்துப் பிரகாசித்தன. அவை பாமரர் உள்ளத்தைத் தட்டியெழுப்பியதுடன் அவர்தம் அறியாமையிருளை அகற்றின. இவற்றுட் சில பாடல்களெழுந்த சூழ்நிலேதனை ஈண்டு நோக்குவோம்.

பாரதியார் காலத்திற்குச் சிறிது முன்பாகவுள்ள காலத்தில் சாதிப் பொய்களும் சமய வாதங்களும் வீண் பெருமைகளும் அதிகரித்திருந்தன. மடைமைத் தனமான காரியத்தை மகிமை பொருந்தியதென மாந்தர் கருதினர். முயற்சியின்றி சோம்பல் மிகுந்து, தொழில்கள் சிதைந்து, கலைகள் மங்கி அந்நிய மோகம் தலைவிரித்தாடிய சமயம் பாரதியார் இம் மாசுகளை அகற்றி வேதகால வாழ்வை அகில உலகிற்களிக்க ஆவல் கொண்டார். ரிசிகள் காலத்து நூல்களை ஆராய்ந்தார். அவர்களது மந்திரங்களைப் படித்தார். மனத்தை மாசுபடுத்தும் குணங்களான பொருமை, பகை, அச்சம் என்பன என்றும் போரிட்டு மன்பதையை அழித்துக்கொண்டே யிருக்கும்; மனப் பகையைக் கொன்ருல் மனிதன் அமரனுவான் என்பதைத் தான் அனுபவித்து உணர்ந்த உண்மையை உலகிற்குப் பறை சாற்றினுர் பாரதியார். கல்விக் கடலில் ஞானமுதம் கடைந்தெடுத்து அதை உண்ண வொட்டாது தடுக்கும் பகையான அஞ்ஞானத்தைத் தலையிலடித்துக் கொன்று விட்டு, அன்பெனுமமுதத்தை யுண்டால் மனிதன் புத்துயிர் பெற்றுப் பொலிவான் என்பது அவரெண்ணம். அதனுல்,

ரிசிகள் :

எங்கள் வேள்விக் கூடமீதில்
ஏறுதே தீ! தீ! — இந்நேரம்
பங்க முற்ற பேய்க ளோடப்
பாயுதே தீ! தீ! — இந்நேரம்

அசுரர் :

வலியிலாதார் மாந்த ரென்று
மகிழ்ந்து வாழ்ந்தோமே—ஐயோ நாம்
கலியை வென்ருேர் வேத உண்மை
கண்டு கொண்டாரே — அம்மாவோ!

என மெய்மறந்து பாடினுர்.

அந்நிய மொழியில் மோகங் கொண்டதால் நம் இன்தமிழாம் செந்தமிழ் அழிந்தொழியுமென அந்நிய மொழியை இகழ்ந்தனர் சிலர். அந்நிய மொழிதனைப் போற்றி உரையாடினர் சிலர். தமிழன்னைக்குத் தம் முள்ளத்தே உயரிய இடமளித்த தண்டமிழ்ப் பாரதியின் செவியில் இவ்வார்த்தைகள் நாராசம் போலாயின. முடியுடை மூவேந்தர் போற்றி வளர்த்த தமிழின் பெருமைதனை உணராத பேதைகள் இவர்கள். தமிழ்மொழி என்றும் மங்காது அழியாது தமிழ்த்தாய் தோன்றியவிதம் யாருமே அறியீரோ என அறியச் செய்தான் பாரதி. எங்ஙனம்?

"யாரும் வகுத்தற்கரிய பிராயத்தள்
ஆயினுமே எங்கள் தாய் — இந்தப்
பாருளென் நாளுமோர் கன்னிகை யென்னப்
பயின்றிடுவாள் எங்கள் தாய்—எங்கள்
தாய்"

தமிழன்னையே கூறுகின்ருள்.

"ஆதிசிவன் பெற்று விட்டாள்
ஆரிய மைந்தன் அகத்திய னென்ருேர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே — நிறை
மேவு மிலக்கணம் செய்துகொடுத்தான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தந்தையருள் வலியாலும் — இன்று
சார்ந்த புலவர் தவவலியாலும்
இந்தப் பெரும்பழி தீரும் — புகழ்
ஏறிப் புவிமிசை என்று மிருப்பேன்"

என வெகுண்டு சோகங் கலந்த குரலிற் பாடினார். அதிகாலை வேளை ஆதித்தனை வழிபடக் கடலன்னையைச் சரணடைந்தான் கவிக்குயில். மதுரகீதம் கடலலையெழுப்பிற்று. மலர்கள் மலர்ந்து இயற்கையன்னைக்கு மகிழ்வைத் தெரிவித்தன. அவளது ஸ்பரிசத்தினால் இன்பமெய்தினார். உண்பதற்கு எத்தனை உணவுகள்; பக்தியெனும் அனுபவத்தைப் பாரிலுள்ளோர் அறியும்படி காதல் புரியக் கன்னியர்; வர்ணத்தைத் தெரிந்துகொள்ள வானத்திலும் மலரிலும் எத்தனை வர்ணஜாலம்; அஞ்சா நெஞ்சம் படைக்கக் குன்றுகள் எங்கும் அலறலொலி; வீடெங்கும் வெள்ளக்காடு; வெளிப்போந்தும் ஆற்றும் பாரதியின் முயற்சி தடைப்பட்டது. யாவும் சக்தியின் அருள், அன்னையின் அற்புத விளையாடல் என்ற எண்ணமே எழுந்தது. ஆடினார், பாடினார், குதித்தார்.

"திக்குகள் எட்டும் சிதறி — தக்கத்
தீம் தரிகிட தீம் தரிகிட தீம் தரிகிட
தித்தோம்.
பக்கமலைக ளுடைந்து — வெள்ளம்
பாயுது பாயுது பாயுது — தாம் தரிகிட"

"கண்டோம், கண்டோம், கண்டோம்
— இந்தக்
காலத்தின் கூத்தினைக் கண்முன்பு
கண்டோம்"

என்றார். சற்றுப் பொழுதில் மழை ஓய்ந்தது.

புன்னகை யென்பது சுகமான சிரிப்பு, நகைப்பின் கோபச்சிரிப்பு, ஏளனச்சிரிப்பு, உற்சாகச் சிரிப்பு, துக்கச்சிரிப்பு எனப் பல வகையின. ஆயின் மோகனப் புன்னகை எவருக்கும் இன்பமளிப்பது. எந்நேரமும் நகைக்கும் பெண்ணொருத்தியைக் கண்ணுற்ற காளையர் தம்மை நோக்கிச் சிரிக்கின்றாளென்ற தப்பெண்ணம் கொண்டனர். இதனை யுணர்ந்தார் நம் கவிக்குயில். அவர்களை நோக்கினார். "காதல் தெய்வீகமானது." நாட்டில் எத்தனையோ சாதிகள், கட்டுப்பாடுகள், வழக்கங்கள் உண்டு. தமக்கென வாய்த்த மனைவிபால் பூரண அன்பு செலுத்தினால் அவளும் தானாகவே அன்பு கொள்வாள். இனிய வாழ்வு அமையும். ஆனால் கன்னி கண்களுக்கு இனிமையாக இருந்தால் புன்னகை புரிந்தால் அவள் நம்மிடம் காதல் கொள்கின்றாளெனத் தப்பிதமாகக் கொள்ளல் தகாது. பெண்களுக்கு மனப்பூர்வமான மரியாதை யளித்தல் வேண்டும்.

"பெண்கள் வாழ்கென்று
கூத்திடு வோமடா!
பெண்மை வெல்கென்று
கூத்திடு வோமடா!
தண்மை யின்ப நற்
புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பேரும்
சதியென்ற நாமமும்"

எனும் முதலையுடைய பாடல் எழுந்தது.

கவிஞன் பாரதி கற்பனையுலகிற் சஞ்சரித்த நேரம் பாவலருக்குத் தோன்றும் பகற்கனவு கண்டார். அவர்தம் வாய் முணுமுணுத்தது.

"எங்கிருந்து வருகுவதோ? ஒலி
யாவர் செய்குவதோ? அடி தோழி!

ஒரேவித வாழ்க்கையில் ருசியில்லை என்பதற்காக இன்ப துன்பம் வெற்றி தோல்வி இவையாவும் நம் தாயின் மகத்தான அருளென உணர்ந்தார் பாரதியார்.

"உண்ண உண்ணத்
தெவிட்டாதே — அன்னை
உயிரெனும் முலை
யினிலுணர் வெனும் பால்
வண்ணமுற வைத்
தெனக்கே — எந்தன்
வாயினிற் கொண்டூட்டுமோர்
வண்மை யுடையாள்."

யாண்டு மெக்காலத்திலும் — அவள்
இன்னருள் பாடு நற்றொழில் புரிவேன்
நீண்டதோர் புகழ் வாழ்வும் — பிற
நிகரறு பெருமையு மவள் கொடுப்பாள்.

எனும் பாடல் அவர் சிந்தையி லெழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத நாட்டின் விமோசனத்திற்காகப் பதறித் துடித்தவர் பாரதியார். பழைய பொய் நீங்கிப் புதுவீரம் பிறக்க வேண்டும்: அன்னை பராசக்தியின் அடி பணிந்தார். நீலவானில் மங்கிய நிலவு; 'அடே பாரதி! தூங்காதே எழுந்தென்னைப் பார்!' என்றாள். வயது பதினாறு: அழகுத் தெய்வமே இவள்தான். தன் ஐய வினாக்களை ஆரம்பித்தார் பாரதி. 'அன்னையே! பயிர்களின் தாகத்தை அறிந்து தான் மழை பொழிகிறதா? அன்றி ஈகைக் குணத்தினாலா? காலத்தின் விதி மதியைக் கடந்திடுமா?'

'மகனே! காலந்தான் மதிக்குக் கருவி' என்றாள் அன்னை. 'ஞானத்தில் விரும்பியது நண்ணிடுமோ?'

'நாலிலே ஒன்றிரண்டு பலித்திடலாம்' எனமலர்ந்தாள் தாய்.

அழகுத் தெய்வத்தின் வதன மலர்ச்சிதனைக் கண்டு அருள் பெற்றதும் மனச் சோர்வு அகன்றது. கனவிலிருந்து விழித்தும்கூடக் காட்சி அகக்கண்ணிலே பதிந்திருந்தது அதுவே,

''மங்கியதோர் நிலவினிலே கனவிலிது
கண்டேன்
வயது பதினாறிருக்கும் இளவயது
மங்கை''

மூலத்தைச் சொல்லவோ?
வேண்டாவோ? என்றேன்
முகத்திலருள் காட்டினாள்
மோகமது தீர்ந்தேன்.

எனும் 'அழகுத் தெய்வம்' பாடலாக மிளிர்ந்தது.

அமைதியாக இருந்த இயற்கையன்னை கோபாவேஷத்துடன் பொங்கி யெழுந்த நேரம். வாயுவின் உறுமலும் மழையும் மக்களை மருட்டிற்று; மாடிகள் தரைமட்டமாயின.

குன்றினின்று வருகுவதோ? மரக்
கொம்பினின்று வருகுவதோ?

கண்ணன் குழலிசை யின்பத்தில் ஆழ்ந்துவிட்டார். அந்த ஒலியின் இன்பத்தை அமுது பொங்கித் ததும்பும் கீதத்தை கள்ளால் மயங்குதல் போன்று, செவிகளாற் பருகி மயங்கினார்.

''காட்டினின்று வருகுவதோ — நிலாக்
காற்றைக் கொண்டு தருகுவதோ—வெளி
நாட்டினின்றுமித் தென்றல் கொணர்
வதோ
நாத மிஃதென் உயிரை யுருக்குதே''

எனத் தெவிட்டாத தீங்குழலமுதைத் தாமுமுண்டு எமக்குமீந்தார். கவிக்குயில் இங்ஙனமாக

''தாமின்புறுவது உலகின்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்''

எனும் குறள் மணிக்கொப்பத் தாம் பெற்ற இன்பத்தை இவ்வையகமும் பெறும் வண்ணம் கவிதைக் குவியலை ஈந்து சென்றார்; அன்னாரது சேவை என்றும் பொன்றாது நிலைத்து வாழி! வாழ்க பாரதி பாமாலை! வாழ்க பாரதி புகழ்!

செல்வி. குகானந்தநாயகி தம்பித்துரை.
(பழையமாணவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மையியல்பு

எவ்வுயிர்களிடத்தும் பிறவிக்கே உரிமையாக அமைந்து காணப்படும் தன்மைகளே இயல்பு என்று கொள்ளப்படுகிறது. அவ்வாறே பகுத்தறிவுடன் கூடிய மனித வர்க்கத்திலும், பொதுவாகிய இயல்புக் குணங்களும், மாறுபட்ட செயற்கைக் குணங்களும் விளக்கமுறுகின்றன. ஆண், பெண் பாலாரிலும் இயல்புக் குணங்கள் மாறுபட்டே அமைந்துள்ளதென்பது கண்கூடு.

பெண்பாலாரின் இயல்புக் குணங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மீன் தண்ணீரிலேயே பிறந்து வளர்தலும், பிறக்கும்போதே நீந்துவதும் இயற்கை. பறவையின் குஞ்சு இளமையிலேயே ஆறறிவுடைய மனிதரால் எண்ணவும் முடியாத ஆகாயவெளியில் எவ்வகைப் பயிற்சியும், சாதனங்களும் துணைவலியுமின்றிப் பறக்கின்றது. இது இயல்புக் குணமே. புலியின் குட்டி உதிக்கும் பொழுதே அஞ்சாது எதிரேறிச் சென்று பாயும் வன்மை பெறுவதியற்கை. இவ்வாறே ஒவ்வோர் உயிர்களிடமும் இயற்கை வன்மையைக் கருவிலேயே அமைப்பது கடவுள் நியதி.

மனித வருக்கத்தில் மட்டும் இயற்கைத் தன்மைகளும் மிகவும் விரவியிருக்கக் காண்கிறோம். இதுதான் நல்வினை தீவினைகளின் பயன் எனக் கொள்ளல்வேண்டும். கண்ட புகையினால் காணாத நெருப்பினை உணர்வதுபோல இயற்கைக் குணமுடையோர்களை நல்வினையாரென்றும், செயற்கைக் குணமுடையோரைத் தீவினையாரென்றும் கொள்வது மரபு. இதனுக்கிலக்கணமாக நமது ஓதாதுணர்ந்த மூதாட்டியாராகிய ஔவைப் பிராட்டியாரும்,

'' அன்னை தயையும் அடியாள்
பணியு மலர்ப்
பொன்னி னெழிலு
புவிப்பொறையும் — வன்னவுடல்
வேசி துயிலும்
விறல்மந் திரிமதியும்
பேசிலி வையுடையாள் பெண் ''

என ஒரே வெண்பாவில் பெண்பாலாரின் இயல்புக் குணங்களை அமைத்துக் காட்டினார்.

தயை, பணி, எழில், பொறை, மெய்ப்பாடு, விறல் மந்திரி மதி, இவ்வாறு குணங்களே மகளிரின் பெருமைக் கறிகுறியாகிய இயல்புக்குணங்கள் என்றறிதல் கடன். இவ்வாறு குணங்களுக்கும் சிறப்பு வகையால் அன்னை, அடியாள், இலக்குமி, புவி, வேசி, மந்திரி ஆகிய ஆறு பெயர்களைச் சூட்டியுள்ளார். இவ்விஷயம் பெரிதும் குறிப்பிடற்பாலது. இவற்றுள் ஐந்து பெண்பால் உவமை. ஒன்று ஆண் பாலுவமை. இதனால் ஐந்து பங்கு பெண்ணீர்மையும், ஒருபங்கு ஆண்ணீர்மையும் இயற்கையில் அமைந்திலங்குபவரே உத்தமப் பெண்ணாவர்; உண்மைப் பெண்ணாவர்.

இவ்வாறன்றி முழுவதும் பெண்ணீர்மை உடையவரும், பெரும்பான்மையும் ஆண்ணீர்மையுடையவரும், பயனற்ற பேதையராகி இதமற்ற வனவிலங்குகட்கு இணையாவர். இவ்வாறே பெண்ணீர்மை சிறிதளவு கலவாத முழு ஆண்ணீர்மையாளர் உளராயின் அவரே கொலைஞர்; அரக்கர் என்று அழைக்கப்படத்தக்கவராவர். இவ்வமைப்பு முறை இவ்விதமாக மேலே எடுத்துக்காட்டிய பெண் பாலில் உள்ள இயல்புக் குணங்களைக் கூர்ந்து ஆராய்வோமாயின் பெண்மையின் பெருமையும், அவசியமும் இனிது புலனாகும்,

முதலாவது அன்னை தயை: இது தாய்மைப் பேற்றினையடைந்த பெண்பாலாருக்கே பொருந்துமென்பதில்லை; தன்னலங்கருதாது கைம்மாறு கருதாது எழுகின்ற ஈன்ற தாயின் இயற்கைப் பேரன்பானது பெண்பாலாருக்குக் கருவிலேயே அமைந்து ஒக்க வளரும் தன்மைத்தாகும்; இயற்கையில் இல்லாததொன்றும் பருவம்வந்து தாயாகியபொழுது அரும்ப முடியாது. இயற்கையில் அரும்பும் ஒன்றே பருவத்தில் மலரக்கூடும்; இத்தகைய தூய அன்பே மக்களிடத்து சிறப்புவகையாலும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன், விருந்தினர், எளியோர் இவர்களிடத்துப் பொதுவகையாலும் பரவித் தொண்டு செய்கின்றது. இஃதின்றேல் இவ்வுலகம் சாரமற்றதாகும். அன்றியும், அன்பே சிவம் என்பதற்கேற்ப இது தெய்வீகக் குணமாகும்.

இரண்டாவது, அடியாள் பணி என்றதில் பணிசெய்து பிறரைப் போஷிப்பதைத் தனது கடமையாகக் கொள்ளும் எண்ணமும், அடக்கமும் பேதியாத சகிப்புத்தன்மையும், தனது பெருமையைத் தானுணராத பெரும் பண்புடமையும் இனிது விளங்குகின்றது. அடியாள் என்றது கூலிக்குக் கட்டுண்டு பணியாற்றும் ஒரு பெண்பாலைக் குறிப்பிடுவதால் இல்லத் தலைவிக்கு இழுக்கு உண்டென்று கொள்ளுதல் கூடாது. உத்தம குணங்கள் அமையப்பெற்ற பெண்கட்கு உண்மையாகவே தங்களுடைய நாயன்மார், மக்கள், நெருங்கிய சுற்றம் இவர்களுக்கு ஆகவேண்டிய உதவிகளைத் தாங்களே நேரில் ஏற்றுத் தொழிற்படுதலில் விருப்பம் அதிகம். ஏவலாளர் மூலம் பூர்த்தி செய்து கொள்வதில் அமைதியுண்டாவதே இல்லை. அதுபற்றி அடியார்போன்று பணி செய்வதிலும் விரும்பிச்செய்யும் வேட்கையுடையவர் என்பது பெறப்படும். இக்குணம் பின்னும் அத்தகையாருக்குச் சிறப்பே தரும்.

இனி, மலர்ப் பெண்ணாகிய இலக்குமி போன்ற எழிலுடையார் என்று விளக்கின காரணம் ஆராய்தற்பாலது. முகப் பொலிவையே எழில் என்பது குறிக்கும். "இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்பதும் இதனையே புலப்படுத்தும். இல்லை என்று உரையாத இரக்கமும், ஈகையும் பெருகி அறநூற் பயிற்சி மிக்குடைய பெண்கட்கு, அகத்தின் அழகு முகத்திற் றெரியும் என்றபடி அகவிளக்கம், அகவிலாசம் இவைகளை முகம் செவ்வனே புலப்படுத்தும். உண்மைபற்றி பொன்னின் எழில் உடையராயிருத்தலே பெண்ணின் இயற்கை அழகென ஔவையார் துணிந்து கூறினர். இலக்குமி தங்கிய விடத்தில் இல்லாத பொருள் இராதென்பதுபோல முகப்பொலிவுடைய பெண்கள் இருக்குமிடத்திலும் எவ்வித குறைபாடுகளும் இராவென்பது உறுதி.

இவைகட்கு மேல் புவிமாது போன்ற பொறுமை உடையராய் இருத்தலும் இயல்பெனக் காணப்படுகின்றது,

"அகழ்வாரைத் தாங்கும்
நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

எனத் தெய்வப் புலவர் பொறுமையைக் காண்டற்கு அகழ்தலை ஓர் உபாயமாகக் குறிப்பிட்டமையால், அவ்வாறே தமக்கு இன்னா பல செய்வாரிடத்தும் சினக்குறிப்புக் காட்டாது சகிப்புத் தன்மையுடன் ஏற்றுப் பொலிவதே பெண்மைக்குப் பேரலங்காரமாக எண்ணப்படுகிறது. உதாரணமாகப் பெண்களின் சகிப்புத்தன்மை ஆண் மக்களிடம் காணமுடியாதென்பதை இல்லறம் நடாத்தும் எவரும் மறுக்க முன்வரார்.

இனி வன்னவுடல், வேசி துயில் எனக் குறிப்பதனையும் சிறிது ஆராய்வோம். வன்னவுடல் என்றதனால் இயற்கையில் மென்மையேயன்றிச் செயற்கையாலும் தூய்மையாக வைக்கப்பட்டு மனங்கவர் பொலிவுடையவராக வொளிர்தல் உணரப்படுகின்றது. இப்பண்பினைப் பெரிது போற்றிக் காப்பவர் வேசியராதலின், தனது நாயகன் அளவில் மட்டும் குலமகளிரும் இன்பத்துறையில் அன்னாரை ஒப்ப நடந்து ஆடவனின் அன்பைப் புறஞ்செய்ய விடாமல் காத்து ஒழுகல் வேண்டுமென்பது பெறப்படுகின்றது. அருவருக்கத்தக்க செய்கைகளும், வெறுப்புண்டாக்கும் வன்மொழிகளும் உணர்வை மங்கச்செய்யும் சோம்பலும் பெண்களிடம் அமையுமேல் அவர்கள் உத்தம குணவதிகளாக ஏற்கத் தக்கவர் ஆகார்.

மேலே காட்டிய இவ்வைந்து வகைக் குணங்கட்கும் உதாரணங்களாக ஐந்து பெண்பாலினரையே எடுத்தாண்ட மூதாட்டியார் ஆறுவதாக விறன் மந்திரி என ஆண்பாலியற்கையிலும் அறிவிற் சிறந்த மந்திரியை உதாரணமாக்கினர். இதன் நுட்பத்தை ஆராய்தல்வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்மக்களிலும் பெண்மக்கள் நுண்ணறிவுடையார் என்பதும் அவ்வறிவை நாயகன் கடமையிற் சோர்வுறுங்கால் வலிந்து வற்புறுத்தி எடுத்துக்கூறித் திருத்தித் தீமையினின்றும் விலகும்படி செய்தல் கடமையென்றும், அக்கடமையை உரிமையாக உடையவர் உத்தமப் பெண்கள் என்றும் அங்கீகரித்திருக்கின்றூர். இதற்குக் குசேலர் மனைவியே உதாரணமாகும். பெண்பாலார் தாம் இல்லக்கிழத்திகள் என்ற முறையில் அல்லல் நேர்ந்தபோது ஆலோசனை கூறும் உரிமையை இயற்கைக் குணமாகப் பெற்றிருத்தல் உண்மைப் பெண்களின் இலக்கணமேயன்றி, அடிமை வாழ்க்கை நடத்தவேண்டியவர் அல்லர் என்பதும் இதனுற் பெறப்படும்.

மாயச் சூதினுல் தருமபூபதி தமக்கென உள்ளவை அனைத்தையும் தோற்று வனவாசம் செய்யத் துரியோதனர் ஆதியோரால் ஏவப்பட்டுப் புறப்படத் துணிகையில் அடிமைத்தன்மையுடன் வனம் சென்று வாழ்ந்து மீண்டபின்னும் இவ்விழிநிலையே தொடரும் ஆதலின் அதனை நீக்கிக் கொள்ளுதல் கடமையெனப் பாஞ்சாலி எடுத்துரைத்த நீதிவாதம் அரசவைக்கண் இருந்த அறிஞராலும் போற்றப்பட்டது. அவ்வாறு ஆகுவதற்குப் பந்தயம் வைக்க எப்பொருளும் இன்றெனத் தருமர் தயங்க, இவர் இதுகாறும் செய்த தருமத்தையே பந்தயம் வைக்கும்படி திரௌபதியார் கூறியது அதனிலும் போற்றுதற்குரியதாயிருந்தது. அவ்வாறே ஆடியபோது தருமன் இழந்த பொருள்களை எல்லாம் திரும்பப் பெற்றனன்; அடிமை தீர்ந்தனன்; தருமம் வெல்லும், பாவம் தோற்கும் என்ற நிலைபெருகிற்று. ஆகவே, இத்தருணத்தில் தேவியார் தமது மதிமந்திரக் கடமையை ஆற்றினுர் என்பதே ஈண்டு கொள்ளற்பாலது.

ஆகவே, மூதாட்டியார் எடுத்தோதிய 'அன்னை தயையும்' என்ற தொடக்க வெண்பாவின்படி பெண் என்பதற்குமேலே விபரமாக எடுத்துக்காட்டிய ஆறு குணங்களும் அமையப் பெற்றவர்களே உத்தமப் பெண்கள் என்பதற்கு உரியவர் ஆவார்கள் அவ்வாறமையப் பெருதவர்கள் உத்தமப் பெண் இனத்தில் சேர்க்கப்படமாட்டார்கள்.

— திருமதி. இ. மண்டலேஸ்வரன்,
விடுகை வருடம்.

---

பெண்மையில் தெய்வத்தன்மை இசைந்து நிற்கின்றது. கொந்தளிக்கும் வாழ்க்கைப் புயலுக்கிடையே மனேதிடத்தை அளிப்பதற்குரிய சஞ்சீவி பெண்மைக்கோலத்தில் இருக்கிறது. பெண்மையில்லாவிட்டால் உலகத்திலுள்ள வேகத்திற்கு சமாதானம் இல்லை. வீரத்திற்கு வெறியின்பம் இல்லை.

— கி. வா. ஜகநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்சொல் விளைநிலனாய்........

இன்றைய இலங்கையில் பயிர்ச்செய்கை விருத்திக்காக அதிக முயற்சிகள் மேற் கொள்ளப் படுகின்றன. இந்தச் சூழ்நிலையில் ஒரு புலவரின் ஒருபாடல் மணியின் அடிப்படையிலும், வள்ளுவன் வாசகத்தை ஆதாரமாகப் பற்றியும் ஒரு பயிர்ச்செய்கையை ஈண்டுக் காண்பாம். வெறும் புறக் கண்ணால் அதைக்காண முடியாது. அகக் கண்களைக் கூர்மைப்படுத்திக் கொண்டு பார்த்தால் பச்சைப்பசேல் என்று காட்சியளிக்கும் அந்தப் பயிர்ச்செய்கை. பயிர்ச் செய்கை பற்றிய ஒரு சில விபரங்களை உங்களுக்கு முதலில் தெரிவித்து விடுகிறேன். இது செறிவான பயிர்ச்செய்கையல்ல; மனமாகிய பரந்த இடத்தில் நடைபெறும் ஒரேயொரு பயிர்ச்செய்கை; வாழ்க்கைப் பயிர்ச்செய்கை. இப்பயிரின் காலம் எவ்வளவு என்று கேட்டு என்னைச் சங்கடத் துக்கு உள்ளாக்காதீர்கள். அதன் கால அளவு காலனுக்குத்தான் தெரியும். பயிரின் பலனாக அறமாகிய கதிர் ஈற்றில் கிடைக்கும் என்பதை முதலிலேயே தெரிவித்து விடுகிறேன். மனித வாழ்வின் இலட்சியம் என்ன? மனிதன் வாழும் வகை என்ன? மனிதவாழ்வின் முடிவென்ன? பூக்கள் உதிருவதுபோல் மனிதனின் பொன்னுடலமும் ஒருநாள் முதிர்ந்து உதிரப் போகிறதே; அதற்குள் வாழ்வில் பசுமை தோன்ற வேண்டாமா? இறுதியில் பயன் கிடைக்கவேண்டாமா? வாருங்கள் வாழ்க்கைப் பயிர்ச்செய்கையைக் கண்டு சிந்திக்க.

எல்லா நிலங்களிலும் பயிர் செய்ய முடியாது. பயிர்ச்செய்கை நல்ல பயனைக் கொடுக்க நல்ல நிலமும்வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதானே. இங்கு வாழ்க்கைப்பயிர்ச்செய்கையில் இன்சொல் பண்படுத்தப்பட்ட நல்ல விளைநிலமாக அமைகிறது. அந்த விளைநிலத்தின் தன்மை நன்றாக விளங்கவேண்டுமானால் வள்ளுவர் மறையைப் பார்க்கலாம். 'இன்சொலால் ஈரம் அளை இப்படிறு இலவாம், செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்' என்பது வள்ளுவரின் விளக்கம். அன்புடன் சேர்ந்த வஞ்சனை இல்லாத சொற்கள் அவை. நல்ல பண்படுத்தப்பட்ட இன்சொல் நல்ல விளைநிலமாக இருக்கிறது.

பயிர்ச்செய்கை விருத்திபெற நல்லன வாக்கப்பட்ட விளைநிலங்களெல்லாம் பயன் படுத்தப்பட வேண்டும். வாருங்கள் நல்ல வித்துக்களைத் தேர்ந்தெடுப்போம். புதிய இன வித்துக்களைக்கொண்டு இன்று விளைவைப் பெருக்குகிறார்கள் உழவர்கள். ஆனால் வாழ்க்கைப்பயிர்ச் செய்கையில் எக்காலத்திலும் நல்ல விளைவைத் தரக் கூடிய நல்ல விதை தயாராக இருக்கிறது. அது எது என்று யோசிக்கிறீர்களா? அற நூல்களைப் புரட்டிப்பாருங்கள் தெரியும். ஈகை அதிக பயன்தரும் வித்து. 'அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன், பெற்றான் பொருள்வைப் புழி' என்று ஈகையின் சிறப்பினைக் கூறுகிறார் வள்ளுவர். ஈதலால் இசைபட வாழலாம்.

ஈதலாகிய வித்தை இன்சொல்லாகிய ஈரம்பொருந்திய விளைநிலத்திலிட்டால் அது இன்பமாக வளரத்தொடங்குகிறது. ஆனால், பயிருடன் களைகளும் சேர்ந்து வளர்ந்தால் பயிரைப் பாழாக்கிவிடுமே. பயிர்ச்செய்கையில் களை பிடுங்குதலும் கருத்துள்ள உழவனின் தொழிலாகிறது. இங்கு ஈகை எனும் விதையை அருமையான இன்சொல் விளைநிலத்தில் விதைத்து வளர்ந்த பயிரை வன்சொல் என்கின்ற களை மூடப் பார்க்கலாம். அதனால் அந்தக் களையைக் கருத்துடன் கவனித்துக் களையவேண்டும்.

'' அகன் அமர்ந்து ஈதலின் நன்றே முகன் அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின் ''

என்கிறார் வள்ளுவர். இப்படிப்பட்ட இன் சொல்லைவிட்டு வன்சொல்லுக்கும் ஈகைக்கும் என்ன பொருத்தமிருக்க முடியும்? ஆதலால் அதைக் களைந்து ஈகைப் பயிரைப் பாதுகாக்க வழிசெய்யவேண்டும்.

பயிர் அதிக பலனைக் கொடுப்பதற்கு இக்காலத்தில் செயற்கை உரத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுகிறுர்கள் கமக்காரர்கள். நீங்கள் வேறிடங்களில் உரத்தைத் தேடிக் கஷ்டப் படவேண்டியதில்லை. வாருங்கள் என் இனத்தினர்களே; உரத்தினை உங்கள் உள்ளத்தில் தேடுங்கள். வாய்மை என்கின்ற வளமாக்கி உங்கள் வாழக்கைப் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற உரமாக இருக்கிறது.

''யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும்
வாய்மையி னல்ல பிற''

என்ற வள்ளுவன் வாசகமும் வாய்மைக்கு உரமூட்டுகிறது.

இன்சொல் விளைநிலத்தில் ஈதல் வித்தாக வன்சொல் களை களைந்து வாய்மை எருச்சேர்த்துவிட்டீர்களா? பயிர் வளர நீர் இன்றியமையாததாயிற்றே. இங்கு என்ன நீராக அமையப்போகிறது. சிந்தனைசெய்துபாருங்கள். உங்கள் வாழ்க்கை எதனுல் உயிருட்டமுள்ளதாக அமைகிறது. எது நிறைந்த இடம் சுவர்க்கலோகமாகக் காட்சியளிக்கிறது. எதைத் தேடி வீட்டுக்கு ஓடுகிறீர்கள். இப்போது புரிந்ததா எதுவென்று? அதுதான் அன்பு. அன்பையே தெய்வமாக வழிபாடு செய்தார்கள் எம் முன்னேர். அந்த அன்பைத்தான் சொல்கிறேன். ''அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை, வன்பாற்கண் வற்றல் மரந் தளிர்த்தற்று'' என்கிறுர் பொய்யாமொழியார். வலிய பாலை நிலத்திலுள்ள வற்றலாகிய மரம் தளிர்ப்பது எவ்வாறு சாத்தியமாகாத செயலோ அதேபோல மனதிலே அன்பு இல்லாத உயிர் வாழ்வும் சிறப்புறமுடியாது. பயிர் நீர் இல்லாவிடில் வாடிக் கருகிவிடும். வாழ்க்கைப் பயிர்ச் செய்கையிலும் மற்றெல்லாம் சிறப்புற அமைந்தும் அன்புமட்டும் இல்லாவிட்டால் வாழ்க்கைப் பயிர் கருகியே போய்விடும். நீர்மட்டம் உயர உயரப் பயிரும் நன்ருக உயர்ந்தோங்கி வளரும். வாழ்க்கைப் பயிர்ச் செய்கையிலும் அன்பாகிய நீர் மட்டம் உயர உயர நண்பெனும் நாடாச் சிறப்பும் ஏற்பட்டு வாழ்வு வளம்பெறுகிறது. ஆதலால், உலகத்து மக்கள் எல்லோரும் சகோதரர் என்றெண்ணி அன்பு செய்வோம். ஏனைய உயிரினங்களும் இறைவனின் வடிவம் என்று எண்ணிக் கருணை செய்வோம். அப்போது வாழ்க்கைப் பயிரின் வளர்ச்சி பூரணத்துவமடைகிறது.

பயிர் நன்ருக வளர்ந்தபின் கதிர் விடுகிறது, இங்கு வாழ்க்கைப் பயிரில் அறக் கதிர் பயனுகக் கிடைக்கிறது. வாழ்நாள் வழியடைக்கும் கல்லாக அமையும் அந்த அறம். அதனுல் வருவதோ பேரின்பம். வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோள் பேரின்பநிலையை அடைவது என்று கொண்டால் அதற்காக வாழ்க்கைப் பயிர்ச்செய்கையைக் கருத்துடன் செய்யலாம்தானே.

இன்சொல் விளைநிலமாய்,
ஈதலே வித்தாக,
வன்சொல் களைகட்டு,
வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி,
அறக் கதிரினவேர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்

என்று பாடலில் தோன்றும் பயிர்ச் செய்கையை அகக்கண்ணுல் காண முடிந்ததா? வணக்கம் வருகிறேன்.

— திருமதி. இராஜராஜேஸ்வரி வல்லிபுரம்,
முதலாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காருடன் வருவார்

"கற்றறிந்தாரேத்துங் கலி" என்பது புலவர் பெருமக்கள் எட்டுத் தொகை நூல்களுள் ஒன்ருகிய கலித்தொகைக்கு அளித்த சிறப்புப் பெயராகும். இது பண்டைத் தமிழர் கண்ட ஐந்திணைப் பாகுபாட்டை விளக்கும் நூற்றைம்பது கலிப்பாக்களைத் தன்னகத்தே கொண்ட விழுமியநூல். தமிழர் நாகரிகம்,பண்பாடு இவற்றை எடுத்துக்காட்டும் நிலைக் கண்ணுடி. தமிழ் இலக்கணப் பெருநூல்களிற் கூறப்படும் அகப்பொருட்பகுதிக்கு இலக்கியமாக விளங்கும் கலைப் பொக்கிஷம், கற்பனைச் சோலை. இவ்வரும் பொக்கிஷத்தில் நவமணிகளாக ஒளிவீசிக் கண்டோரை மகிழச்செய்வனவும், கற்பனைச் சோலையின் மரங்களாக நிழல்தந்து அறஞ்செய்வனவுமாய தன்மையும் வாய்ந்தனவாய் உள்ளன இந்நூலில் உள்ள வரும் செய்யுள்கள் என்ப. அவை துள்ளலோசையுடையனவாய்க் கற்போர் மனதையும் துள்ளச் செய்யுங் கவின்வாய்ந்தன. இப்பொக்கிஷம் தமிழன்னை எமக்களித்த உரிமைச் சொத்து. அதில் ஒருபங்கை அஃதாவது நூற்றைம்பதில் ஒருபங்கை நாம் அனுபவிப்போம்.

இச் செய்யுளில் கூறப்படும் செய்தி எமக்குப் பொருந்தும். எமக்கே பாடப்பட்டதென்று கூறினுலும் மிகையாகாது. இங்கு பலர் பயிற்சிபெற வந்தார்கள். நாம் வந்திருக்கின்ருேம். இன்னும் வருவார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் இல்லறத்தை மேற்கொண்டவர்கள். துணைவரைப் பிரியத் துணைவர் எம்மைப் பிரிய இங்கு தனிமையிலிருந்து வாழுகின்ருேம். அங்கு அவர்கள் வாடுகின்ருர்கள். இங்கு எங்கட்குத் தலைவி தோழியின் உறவுக்குக் குறையில்லை. ஒரு தலைவி இன்னெருத்திக்குத் தோழி. ஒரு தோழி இன்னேரிடத்துத் தலைவி. எம்மிடையே இப்படி உறவு தாராளமாக நடைபெறும். எங்கள் தலைவர்களோ எங்களை விட்டுப் பிரிந்து சொந்த ஊர்களிலும், பிற ஊர்களிலும் இருக்கிருர்கள். அவர்கள் பிரிவு எம்மை வாட்ட, எமது பிரிவு அவர்களை ஆட்டுகிறது. வருவார்கள் என்ற நிலையில் வாழுகின்ருேம்.

இக்கூட்டத்தில் ஒரு சிறு கூட்டம். ஒருத்தி ஒருத்தியை அணைகிருள். முன்னவள் தோழி. பின்னவள் தலைவி. முன்னவள் பின்னவளை அவதானிக்கிருள். உரையாடல் பிறக்கிறது. "அடீ! நீ வந்து மாதம் மூன்ருகிறது. ஆனுல், உன் கணவர் இதுவரை ஒருநாளும் வரவில்லையே; உங்களுக்கிடையில் ஏதும் மனத்தாபமா? அவர் வந்தாரா? இனி வருவாரா? நாம் ஒருமுறை பார்க்கலாமா?" என வினவுகிருள். தலைவி கூறும் பதிலைக் கேட்பதன் முன் சங்ககாலத்துக்குச் சென்று கலித்தொகை என்ற சோலையில் நுழைவோம். பாலைக் கலியில் ஒரு பெருவீடு. அதிலும் இருவர். ஒருத்தி தலைவி, மற்றவள் தோழி. தோழியே முதலில் பேசுகிருள்:

"தலைவி! எமது தலைவரோ பொருள் உடையர். ஆயினும், தன்னிடம் வரும் அந்தணர், அகதி முதலியோருக்குப் பொருள் தேடித் தருமஞ்செய்தலும், பெரிய பகைவரை வென்று அச்செருக்கினுல் தம்மைப்படாதாரை அழித்தலும், முற்பிறப்பில் இருவருக்கும் உண்டான காதலால் இப்பிறப்பில் மனம் பொருந்துதல் அமர்ந்த கூட்டத்தினையும் தருமென்று கூறிப்பிரிந்த காதலர் வருவாரா?" என வினவுகிருள். காலங்கழிகின்றதே கார்காலம் வருகின்றதே தலைவி எப்படிப் பிரிவைத் தாங்குவாள் என்ற பயம் தோழியை வாட்டுகிறது.

இதைக் கேட்டதும் தலைவிக்குத் தலைவன் முன்கூறிய செய்திகள் நினைவுக்கு வருகின்றன. அவை தலைவிக்கு மாத்திரம் தலைவன் கூறியன. தோழி அறியாத தலைவியின் உள்ளத்தில் தலைவன் வருவான் என்ற திட்டத்தை ஊட்டுவன. பாலையிற் கண்டு விண்ட காட்சிகள் கூறுகின்ருள்.

"தோழி! அவர் சென்ற பாதையில் ஒரு காடு உண்டு. அது மரஞ்செடி நிறைந்த காடன்று, அழற்காடு. காண்டவ தகனம் நடக்கும் நிலையில் வெயில் தகிக்கின்றது. அவ்வெம்மையில் ஒரு தண்மை. யானைக் குடும்பம் ஒன்று வருகின்றது. அதில் பாத்திரங்கள் மூன்று. ஒன்று தாய், மற்றது தந்தை, ஏனையது கன்று. மூன்றும் தண்ணீர் தேடி அலைகின்றன. ஈற்றில் ஒரு சிறு சுனை காணப்படுகின்றது. தண்ணீரோ கொஞ்சம். அதைக் கண்டதும் கன்றுக்கு ஒரே மகிழ்ச்சி. இறங்கிக் குடிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவகையாற் சேருக்கியே விட்டது; அதைப் பொருட்படுத்தாது "அமிழ்தினு மாற்ற இனிதே தம்மக்கள் சிறுகை அளாவிய கூழ்" என்று பிடியை உண்ணச் செய்து பின் தானே உண்கிறது.

மற்றைநாள் முன்னைய காட்டிலும் கொடிய காடு ஒன்றைக் காணுகிறார். மரங்கள் இல்லை. குழையற்றுத் துறவிகளைப்போல் காட்சியளிக்கின்றன. அங்கு பறவைக் குடும்பங்கள் விட்டகலாது வாழுகின்றன. ஆனால், கொடிய வெப்பம் பெண் பறவைகளை வாட்டுகிறது. அவற்றில் ஒரு பெண்புறு வெப்பம் தாங்காது கீழே விழுந்தது. இதனைக்கண்ட ஆண் புறு தனது சிறகால் வெயிலை மறைத்து நிழலைச்செய்கிறது. இம்மட்டா? அசைத்துக் காற்றூடவும் செய்கிறது.

வேறொரு நாள் சூரிய வெப்பத்தால் மூங்கில்கள் வாடிவதங்குகின்றன. வெடித்துப் பறக்கின்றன. அதனிடையே ஒரு மான் குடும்பம்; கலையும் பிணையும் நிழல் தேடி ஓடி அலைகின்றன. நாவரண்டு விடுகின்றது. குடிக்க நீரோ, ஒதுங்க நிழலோ அற்ற காட்டில் தனது நிழலில் பிணையை நிற்கும்படி செய்து வருத்தத்தைப் போக்குகிறது என்று தான் கண்ட மூன்று காட்சிகளையும் அவரே முன்பு கூறியுள்ளார்.

ஆகவே, இவற்றைக் கண்டால், நினைத்தால் உடனே திரும்பிவருவார். கார் காலத்து எம்மை வருந்த விடமாட்டார். எமது நலத்தைக் கெடுக்க மாட்டார். அதற்கிசைவாகப் பல்லியும் சொல்கிறது. இடது தோளும் துடிக்கிறது" என்கிறார் தலைவி. இப்பாடலை முழுமையாக நோக்குவோம்:

> அரிதாய வற னெய்தி
> யருளியோர்க் களித்தலும்
> பெரிதாய பகைவென்று
> பேணாரைத் தெறுதலும்
> புரிமவர் காதலிற்
> புணர்ச்சியும் தருமெனப்
> பிரிவெண்ணிப் பொருள்
> வயிற் சென்றநங் காதலர்
> வருவர் கொல் வயங்கிழாஅய்
> வலிப்பல் யான்கே எளினி;
> அடிதாங்கு மளவின்றி
> யழலன்ன வெம்மையாற்
> கடியவே கனங்குழாஅய்
> காடென் றூரக்காட்டுட்
> டுடியடிக் கயந்தலை
> கலக்கிய சின்னீரைப்
> பிடியூட்டிப் பின்னுண்ணுங்
> களிறெனவு முரைத்தனரே:
>
> இன்பத்தி னிகந் தொரீஇ
> யிலையீந்த வுலவையாற்
> றுன்புறூஉந் தகையவே
> காடென்றூரக் காட்டு
> ளன்பு கொண் மடப்பெடை
> யசைஇய வருத்தத்தை
> மென்சிறகா ராலாற்றும்
> புறவெனவு முரைத்தனரே;
>
> கன்மிசை வேய்வாடக்
> கனைகதிர் தெறுதலாற்
> றுன்னருஉந் தகையவே
> காடென்றூ ரக்காட்டு
> ளின்னிழ லின்மையான்
> வருந்திய மடப் பிணைக்குத்
> தன்னிழலைக் கொடுத்தளிக்குங்
> கலையெனவு முரைத்தனரே;

என வாங்கு;

> இன நலமுடைய கானஞ் சென்றோர்
> புனை நலம் வாட்டு நகரல்லர் மனைவயிற்
> பல்லியும் பாங்கொத் திசைத்தன
> நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே.

கார் காலமென்பது பிரிந்தவர்களிடையே துயரை ஊட்டி வாட்டுங்காலம்; ஆகவே, அவர் பிரிந்திருப்பினும் காருடன் வருவார் என உய்த்துணர வைக்கிறாள் அத்தலைவி.

இனி, எமது தலைவியைக் கேட்போம். அவளும் இப்படியே பதில் கூறுகிறாள்; அவள் கூறும் பதில் இலக்கியத்திலில்லை; "அவரிடம் தவணை அட்டவணை உண்டு. தினமும் அட்டவணையையும் இக்காட்சிகளையும் காணுபவர் தவணைமுடியும் நாள் மாலை காருடன் வருவார்," என்கிறாள். இவள் கூறும் கார், கார்காலமல்ல; பயணம் செய்வோர் செல்லும் வாகனமே;

— திருமதி. இராசம் சிங்காரவேலு,
(முதலாம் வருடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணார்! கணார்!! கணார்!!!

அதிகாலை ஐந்துமணி; கணார்! கணார்!! கணார்!!! கோவை மகளிர் கலாசாலை மணி மங்கையரைத் துயில் எழுப்புகின்றது. துள்ளி எழுந்து துரிதமுடன் காலைக் கடன்களை முடித்து இன்பமாய் ஸ்நானம் செய்து அழகிய ஆடைகள் அணிந்து ஆயத்தமாகின்றனர். சிலர் படுக்கைகளில் இருக்கின்றனர். கணார்! கணார்!! சகலரும் செபக் கூடங்களை நோக்கி விரைகின்றனர். டக்! டக்!! தலைமை மாணவி: எல்லோரும் எழுந்திருங்கள்; செபக்கூடத்திற்கு எல்லோரும் போங்கள். எல்லோரும் சென்று இறைவனை வழிபடுகின்றனர். பின்பு அங்கிருந்து வெளிவந்து உணவுச்சாலையை நோக்கி கூட்டங் கூட்டமாகப் பாத்திரங்களுடன் சென்று எறும்புச் சூப்பாகிய காப்பியைச் சுடச் சுடச் சுவை பார்த்து மகிழ்கின்றனர்.

கணார்! கணார்!! கணார்!!! புத்தகக் கட்டுகளுடன் வகுப்பறைக்குச் சென்று மனனம் செய்யவேண்டிய பாடங்களை மனனம் செய்கின்றனர். கணார்! கணார்!! கணார்!!! போருக்கு விரையும் படையினர் போன்று தோள்களிலே மண்வெட்டியும், கைகளில் கிண்டியும், வாளியுங் கொண்டு போட்டி போட்டுக்கொண்டு தோட்டங்களை நோக்கி ஓடுகின்றனர், சிலர், "மண்வெட்டி தோளில் தூக்கலாச்சே, எங்கள் மையழகும், கையழகும் போகலாச்சே" என்று புழுங்குகின்றனர். அன்பர்களே! எங்கள் கைவலியும் தோள்வலியும் காட்ட இதோ ஓர் அரிய சந்தர்ப்பம். மண்ணுள்மறைந்திருக்கும் நம் எதிரியைக் குத்தி வெளியில் வீசுங்கள். இந்தக் கல்லர்கள் இல்லாவிட்டால் நாம் வைக்கும் செடிகள் தடையின்றிச் செழித்து வளரும்; அதோ விவசாய மந்திரி வருகிறார்; வெட்டுங்கள், குனியுங்கள். கணார்! கணார்!! கணார்! !! அப்பாடா! எல்லவரும் வெற்றி வாகை சூடிய வீரரைப்போன்று விரைவுடன் திரும்பி ஆயுதங்களை வைத்துவிட்டு உணவுச்சாலையை நோக்கிச் செல்லுகின்றனர். நைலோன் இடியப்பமும் தேங்காய்ப் பால் அறியாத சொதியுஞ் சாப்பிடுகின்றனர். பின்னர் உவப்புடன் உடைகளை மாற்றி, பாடசாலைக்கு ஆயத்தமாகின்றனர்; கணார்! கணார்!! கணார்!!! அடுக்கிய புத்தகங்களுடன் அணி அணியாக வகுப்பறைகளை அடைகின்றனர்; கணார்! கணார்!! கணார்!!! அனைவரும் கல்விக் கூடத்தின் முன்றிலில் அழகுற நிற்கின்றனர். 'அகரமுதல எழுத்தெல்லாம்'...... என்ற இன்னிசை விண்ணகத்தை அடைகின்றது; பின் வகுப்பறைகளில் அமர்கின்றனர். கணார்! கணார்!! பரிசுத்த கன்னியர் அவர்களும் அருள்நிறை ஆசிரியைகளும் வற்றா ஊற்றின் வரப்பிரசாதங்களாகச் சமயபாடங்களை விளக்குகின்றனர்; மாணவிகள் யாவரும் ஆன்ம இருள் அகற்றி அகமகிழ்கின்றனர்.

கணார்! கணார்!! கணார்!!! அரிவையர் அனைவரும் அருணோதயம் கண்ட அம்புஜங்கள் என மிளிர அழகே உருவாக அமைந்து எளிமையே இலக்கியமாய் நிறைந்து விளங்கும் அன்பு அன்னையாம் அதிபர் அவர்கள் தமது ஆற்றல் நிறைந்து பொங்கும் அறிவினால் உள நூலையும், கல்விக் கொள்கையையும் ஆணி வேராகக்கொண்டு அகிலத்தின் தொழில்கள் யாவையும் ஆராய்ந்து தெரிவு செய்யும் திறமையை மாணவருக்களிக்கும் ஆற்றலை எடுத்தியம்ப அவ்வறிவுக்கதிர்கள் எம்மை ஊடுருவிச்சென்று எம் உள்ளங்களை நிரப்புகின்றவேளை கணார்! கணார்!! கணார்!!!

எல்லோரும் உணவுச்சாலைக்குச் சென்று தேநீர் அருந்தி உறவினர் கடிதங்களுடன் உறவாடி மகிழ்ந்திருக்கும்வேளை; கணார்! கணார்!! கணார்!!! கலாசாலையின் செந்தமிழ்ச் செல்வியாம் தமிழ்ப் பேராசிரியை அவர்கள் கன்னித்தமிழ் வளர்க்கும் கலை நிறைந்த உள்ளத்துடன் எம்மை நோக்கி இன்முகத்துடன் வந்து உலகின் உயிரினங்களை எல்லாம் உய்யச்செய்யும் மாரிபோன்று பயில் தொறும் பயில் தொறும் பரவசமூட்டும் தமிழ் மழையாக,

*"வேற்றுமை யைம்முத லாரும் அல்வழி*
*தொழில்பண் புவமை யும்மை யன்மொழி*
*எழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி*
*தழுவு தொடரடுக் கெனவீ ரேழே."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தமிழ்மழை பொழியாநிற்கின்றார். அவரின் செந்தமிழ்த்தேனை அள்ளி அருந்தித் திளைத்து நிற்க, கணூர்! கணூர்!! கணூர்!!! எல்லோரும் எழுதுகோலும் புத்தகமும் எடுத்து ஆரவாரஞ் செய்கின்றனர். அனைவர் முகங்களிலும் ஆனந்தம். சரித்திர அறிவோடு தொடர்புபடுத்திக் குடியியல் அறிவும் சேர்ந்தாற்றான் உண்மையில் நாடு உயர்நிலை அடையும் போலும். மேல் நாட்டினரின் அரசியற் புரட்சிகளையும் இலங்கையின் ஆட்சிமுறைகளையும் சுவைபடக்கூறி எம் நெஞ்சில் பதிய வைக்கின்றார். கணூர்! கணூர்!! கணூர்!!! கரும்பலகையில் விதைகள் முளைகள், துளிர்கள், செடிகள், மரங்கள் இப்படியாகத் திடீர் மரங்கள் தோன்றுகின்றன. மரம், செடி, கொடிகளின் பருவங்களையும் விஞ்ஞானத்தின் விந்தைகளையும் புன்னகையுடன் புரியவைக்கின்றார் பொது விஞ்ஞானப் பேராசிரியை அவர்கள்.

கணூர்! கணூர்!! கணூர்!!! ஒரே சிரிப்பொலி. எல்லோரும் வீட்டுக்குப் போய் விட்டீர்களா; இங்குத்தான் இருக்கிறீர்களா. முதலில் உங்கள் முட்டுக்களைத் தீர்க்க வேண்டும். இப்படித் தம் பரிகாசச் சொற்களால் எம்மை வயிறுகுலுங்கச் சிரிக்க வைத்துச்சோர்ந்த உள்ளங்களைச் சுறுசுறுப்படையச் செய்து பாலர் தோட்டத்திற்கு அழைத்துச்சென்று பாலருக்கும், எமக்கும் பெற்றோருக்கும்இருக்கவேண்டிய தொடர்புகளையும் அங்கு நாம் பணிபுரியவேண்டிய முறைகளையும் பக்குவமாக விளக்கி நிற்கின்ற வேளை, கணூர்! கணூர்!! கணூர்!!! அன்புமுறுவலை அணிகலனாய்க் கொண்டிலங்கும் கணிதப் பேராசிரியை மூவகைக் கணிதங்களிலும் எமை முடுக்கிவிட கை, வாய், கண், மூளை ஆதியன கடுகதியில் தொழில்செய்து நிற்கின்ற வேளை, கணூர்! கணூர்!! கணூர்!!! அவ்விடத்திலிருந்தே பிரமனின் வாரிசுகளாக ஐந்து கண்டங்களையும் ஆக்கி அவற்றில் மலைகள் பீடபூமிகளுக்கெம்மை அழைத்து அங்கிருந்து ஊற்றெடுக்கின்ற நதிகளோடு அவற்றின் வடிநிலங்களை அடைந்து அங்குவிளையும் பயிர்களாம் கோதுமை, நெல், கரும்பு, சோளம், பருத்தி முதலியவைகளையும் பழங்களையும் அறுவடைசெய்து தலைப்பட்டினங்கள் துறைமுகங்களை அண்மிக் கொண்டிருக்கும் நேரம், கணூர்! கணூர்!! கணூர்!!! எல்லோரும் அவசரம் அவசரமாகக் களிமண், தண்ணீர், சவர்க்காரம், மரப்பட்டைகள், வர்ணங்கள், வர்ணத்தாள்கள், முட்டைப் பெட்டிகள் முதலியவற்றுடன் காணப்படுகின்றனர். சித்திரம் கைப்பணிப் பேராசிரியை தம் திறமையை நிலைநாட்ட நாம் எல்லவரும் கற்பனைச் சிற்பிகளாகவும் ஓவியர்களாகவும் மாறிக் கிலு கிலுப்பைகள் செய்து மகிழும் வேளை, கணூர்! கணூர்!! கணூர்!!!

தையலர் பெருமையைத் தையலால் உயர்த்தவும், உயிர்ச்சத்துள்ள உணவு வகைகளைத் தெரிவு செய்யவும், வேண்டிய அறிவை மனையியல் ஆசிரியை அவர்கள் ஒலிபரப்பிபோல் அள்ளி வீசிநிற்கும் வேளை, கணூர்! கணூர்!! கணூர்!!! சகலரும் தனியிடம் தேடித் தரையினில் அமர்ந்து தாளம் போடத் தயாராயிருக்க, சங்கீத ஆசிரியை தமது இசை ஞானத்தை எங்கள்மீது அள்ளித் தெளிக்கின்ற வேளை, கணூர்! கணூர்!! கணூர்!!! எல்லோரும் வகுப்பறைகளில் சரண் அடைகின்றனர். சுக ஆதாரம் சுகம் தரும் மார்க்கம் என்பதையும், சுக மார்க்கங்களில் உடற்பயிற்சி அவசியம் என்பதையும் எமக்கெடுத்தியம்பித் தன்னிகர் இல்லாப் பயிற்சிகளை அளித்து பஞ்சாபிய அணங்குகளைப் போன்று 'பிஜாமா' மேலங்கி மேலாடை அணிந்து கூடி விளையாடிக் குதூகலிக்கும் வேளை' கணூர்! கணூர்!! கணூர்!!!

யாவரும் விடுதியை அடைந்து உடைகளை மாற்றி உச்சியை உறுத்திக் கொண்டிருக்கும் அளகபாரங்களை அவிழ்த்து விட்டு ஆறுதல் அடைகின்றனர். அமெரிக்கன் மாவினாலாய 'றெக்கோட்டுக்'களையும் பீரங்கிக் குண்டுகளையும் ஆத்திரத்துடன் கடிக்கின்ற வேளை ஞானோதயம் உருவாகின்றது. இன்று மூன்றாம்நாள் அதோ வாச்சர் யாரையோ தேடுகின்றார். எனக்கு அப்பா வருவார். இல்லவே இல்லை. எனக்கு அவர் வருவார் என அங்கலாய்க்கின்றனர். சிலர் இல்லை இல்லை எனக்கு அம்மா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவார் என்னைத்தான் தேடுகின்றார் என் பார் சிலர்.


கணார்! கணார்!! கணார்!!! மணிச் சத்தம். பலர் பந்துகள் வளையங்கள் வடங்கள் முதலியவற்றுடன் விளையாட்டிடத்தை அடைந்து ஆடி மகிழ, சிலர் மண்வெட்டி, வாளிகளுடன் தோட்டங்களைச் சென்றடைந்து வாட்டமுடன் நிற்கும் செடிகளுக்கு நீர் ஊற்றிச் செழிப்படையச் செய்கின்றனர். கணார்! கணார்!! கணார்!!! சிலர் ஜெப கூடங்களை அடைந்து இறைவனை வழிபட, பலர் படுக்கை அறைகளில் இருந்து பரிகாசச் சிரிப்பொலி எழுப்ப அதோ மிஸ் வருகிறு: உடனே சிலர் படுக்கைகளின் கீழ், சிலர் சாப்பாட்டறையுள் ஓடிஒளிய, சிலர் சமையலறையின் பின் மறைகின்றனர். கணார்! கணார்!! கணார்!!!.

சகலரும் கல்விக் கூடங்களை அடைந்து அன்று முழுவதும் படித்த பாடங்களை மீண்டும் ஞாபகப் படுத்துகின்றனர். கணார்! கணார்!! கணார்!!! எல்லோரும் உணவுச் சாலையை அடைந்து பங்கிடப்பட்ட பாண் துண்டுகளையும் வறுத்த கஸ் கொட்டையும் முந்திரிகைப் பருப்பும் போன்று பளிச்சிடும் புழுக்களையும் வண்டுகளையும் கண்டு மனம் புளுங்கும் போது, கணார்! கணார்!! கணார்!!!.

கையிற் புத்தகங்களுடன் சென்று எழுத வேண்டிய கட்டுரைகள் பாடங்களை எழுதி முடித்து அதிபரோ மிஸ் அவர்களோ வருகிறார்கள் என்று அங்கும் இங்கும் பார்த்து இரகசியமாகக் கலந்துரையாடி மகிழ்ந்திருக்கும் வேளை, கணார்! கணார்!! கணார்!! கணார்!!! மங்கையரெல்லாம் மகிழ்வுடன் விடுதியை அடைந்து மாற்றுடை அணிந்து கற்பனையில் உற்றவர்களைக்கண்டு மகிழ்ந்து துயில்கொள்ள ஆயத்தமாகும் நேரம் கணார்! கணார்!! கணார்!!!. உஸ்..... அமைதி! அமைதி!! படுக்கைகளிற் சாய்ந்து பள்ளி கொள்ள ஆயத்தமாகின்றனர். நித்திராதேவி நேசமுடன் அனைவரையும் ஆட்கொள்ளுகின்றாள். ஓய்வின்றி வாடும் கணார் கணருக்கும் ஏழுமணி நேரம் உல்லாசமான ஓய்வு.

திருமதி. இ. மயில்வாகனம்;
(முதலாம் வருடம்)

# சுற்றுலாக் காட்சிகள்




மைசூர் மகாராசாவின் மாளிகை முன்
கோவைக் கழக மகளிர்.



கிளிநொச்சிக்
குருளையர் முகாமில்
மகிழ்ச்சியுடன் உணவு தயாரிக்கும்
மங்கையர்.



குருளையர் பயிற்சியைக்
குதூகலத்துடன் முடித்துக்
கழகத்திற்கு விரைந்தேக விழையும்
வனிதையர்.



பங்களூர், லால் பூங்காவினருகே
நங்கையர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவை மகளிரின் தென்னிந்தியச் சுற்றுலா

ஆயிரத்தித் தொளாயிரத்து அறுபத்தேழாம் ஆண்டு, மார்கழி மாதம் நாலாந்தேதி கோப்பாய் அரசினர் மகளிர் கல்லூரியிலிருந்து முப்பத்தெட்டு ஆசிரிய மாணவிகளும், நான்கு பேராசிரியர்களும் கல்வி சம்பந்தமான தென்னிந்திய சுற்றுலாவை மேற்கொண்டோம்.

## முதலாம் நாள் : (4-12-67)

காலை ஒன்பதரை மணியளவில் பலாலி விமான நிலையத்தில், சுங்க இலாகா அதிகாரிகளினால் பரிசோதிக்கப்பட்ட பின்னர் விமானத்துள் எமது இடத்தைப் பெற்றுக் கொண்டோம். ஒவ்வொருவரின் உள்ளமும் விமானம் மேலெழும்புவதை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தது, வானஊர்தி மெதுவாக மேலெழும்பத் தொடங்கியது. நாம் மெதுவாக இடுப்புப் பட்டியைப் பூட்டி ஆசனத்தில் ஜாக்கிரதையாக அமர்ந்திருந்தோம். விமானத்தின் சிறு ஜன்னல்களினூடே வெளியுலகை ஆவலுடன் நோக்கினோம். முகிற்கூட்டங்களினூடே விமானம் சென்றுகொண்டிருந்தது. பார்ப்பதற்குப் புதுமையானதும் பரவச மூட்டக்கூடியதுமான காட்சி. பார்த்த இடமெல்லாம் கடைந்தெடுத்த வெண்பஞ்சைப் பரப்பினாற்போன்ற முகிற் கூட்டங்கள். மார்கழிமாதத்தின் குளிர்ச்சி பொருந்திய முகிற்கூட்டங்கள் சலனமற்றுக் காட்சியளித்தன. முகில்களினூடே அவற்றின் கீழுள்ள பூமியின் காட்சியைக் காணக்கூடியதாக இருந்தது. ஓவியன் வரைந்த சித்திரம்போன்று நகரங்களின் காட்சிகளும், வயல்களின் காட்சிகளும் காணப்பட்டன. தாயகத்தையும், சேயகத்தையும் பிரித்துநிற்கும் ஆழியையும் கடந்து இப்போது தாய்நாட்டின் நிலப்பரப்பின் மேல் போகத்தொடங்கியதும் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் நீண்டகால ஆசை நிறைவேறியதின் பூரிப்பு முகத்தில் பிரதிபலித்தது. முக்கால் மணிநேர ஆகாய மார்க்கப் பிரயாணத்தின் பின்னர் எங்கள் விமானம் இந்தியமண்ணை நோக்கிக் கீழ் இறங்கத் தொடங்கியது. தாய்நாட்டில் காலடி எடுத்து வைக்கப்போகிறோம் என்ற எண்ணம், மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியது. அந்நேரமும் வந்தது. எங்களைச் சுங்க அதிகாரிகளிடம் அழைத்துச் சென்றார்கள். பரிசோதனை முடிந்தபின்னர் விமான நிலையத்திற்குரிய மோட்டார் மூலம் திருச்சி விமான நிலையக் கந்தோருக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்து ''டாக்ஸி'' மூலம் திருச்சியிலுள்ள 'திருச்சிலுவைக்' கல்லூரிக்குப் (Holy Cross College) போனோம். அக்கல்லூரியிலுள்ள சங்கைக்குரிய சகோதரிகள் எம்மை இன்முகத்துடன் வரவேற்றுத் தங்குவதற்கு வேண்டிய வசதிகளையெல்லாஞ் செய்து தந்தார்கள். சற்றுக் களைப்பாறிய பின்னர் முன்னுள்ள 'மொடேன் ஹொட்டலில்' மதியஉணவை ஏற்றோம். எங்கள் தாய்நாடாகிய பாரதத்திற்கே வந்திருக்கிறோம் என்பதை அவர்கள் எங்களைத் தாய்போல் ஆதரித்தமையே நிரூபித்துவிட்டது. அன்று மாலை ஆறுமணிபோல் திருச்சிக் கடைவீதியைப் பார்வையிட்டோம். எங்கள் மகிழ்ச்சிக்கு அளவில்லை. எந்நேரமும் திரள்திரளாக ஜனக்கூட்டம் நகர்ந்துகொண்டேயிருந்தது. ஆவணந்தோறும் அழகு நிறைந்த பொருள்கள் நிறைந்து கிடந்தன. தெருக்கரைகளிலே பூச்சரங்களும், தீங்கனிகளும் பெருவாரியாகக் காணப்பட்டன. எமது நங்கையர்கள் ஆசைதீர அப்பூச்சரங்களை வாங்கித் தமது குழல் கற்றைகளில் சூடிக்கொண்டனர். இக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டுகளிப்புற்றோம். பின்னர் இரவு உணவை முடித்துக்கொண்டு கண்ணயர்ந்து விட்டோம்.

## இரண்டாம் நாள் : (5 12-67)

இன்று ஆதவன் தான் எழும்புவதற்குத் துணையாக எம்மையும் அழைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டெழுந்தான். சுறுசுறுப்பாக நாமும் எங்கள் காலைக்கடன்களை முடித்தோம். காலை 9 மணிபோல் மலைக்கோட்டைப் பிள்ளையார் கோயிலுக்குச் சென்றோம். குகையினுள் குடைந்து குடைந்து கட்டப்பட்டுப் பார்க்குமிடமெல்லாம் சிற்ப ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. மேல் உச்சியில் பிள்ளையார் பெருமையுடன் வீற்றிருந்தார். ஏறுவது கடினமாக இருந்தாலும் பிள்ளையாரைக் காண வேண்டுமென்ற ஆவலால் உந்தப்பட்டுச் சென்றோம். உச்சியில் நின்று திருச்சிப் பட்டணத்தைப் பார்த்து ஆனந்தப் பரவசத்தில் மூழ்கினோம்.

## மூன்றும் நாள் : (6-12-67)

பொழுது புலர்ந்தது. இலங்கையிலிருந்து வரும் எங்கள் இரண்டாம் வருட சகோதரிகளை எதிர்கொண்டழைக்க ஆவலுடன் இருந்தோம். தங்கள் இறுதிப் பரீட்சையை முடித்துவிட்ட களை, விமானமேறித் தாயகம்வந்த மகிழ்ச்சியினால் நீங்கப் பெற்றவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்கள் தங்களுடன் இலங்கையிலிருந்து கொண்டுவந்த செய்தி எங்கள் மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்துவதாக இருந்தது. ஈழநாட்டின் சிலபகுதிகளை இயற்கை அழிவு செய்துவிட்டதாகக் கூறினார்கள். வெள்ளப்பெருக்கும், சூறுவளியும் சேர்ந்து மக்கள் இல்லங்களை அள்ளிக்கொண்டன.

## நாலாம் நாள் : (7-12 67)

இச்சூறுவளி தாயகத்திலும் வீசும்என எதிர்பார்க்கப்பட்டது. எனவே, இவ்விரு நாளும் திருச்சியிலேயே தங்கியிருந்தோம்.

## ஐந்தாம் நாள் : (8-12-67)

இரவு மறைந்தது. பொழுது புலர்ந்தது. மதுரைக்குச் செல்லப்போகிறோம் என்ற ஆனந்தம் எங்களை அவசர அவசரமாக ஆயத்தப்படுத்தச்செய்தது. ஆயத்தமானோம். எங்களுக்கென ஒழுங்குசெய்யப்பட்ட பஸ்வண்டியும் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்துநின்றது. காலை 8-55 மணிபோல் கல்லூரியிலிருந்து புறப்பட்டோம். மழைபொழிந்துகொண்டேயிருந்தது. அத்துடன் சேர்ந்து நாமும் இசைமாரி பொழிந்துகொண்டே சென்றோம். 4-30 மணிபோல் திருமலை நாயக்கர் அரண்மனையைப் பார்வையிடச் சென்றோம். அங்கிருந்த ஒருவர் அதன் வரலாற்றினை எமக்கு நன்கு விளக்கினார். அரசன் வீற்றிருக்கும் இடம், கல்யாண மண்டபம், படுக்கை அறைகள், இராணி குளிக்குமிடம், அவ்விடத்தில் நான்கு மேல் மூலைகளிலும் கருங்கற்களில் செதுக்கப்பட்ட நால்வரின் உருவங்கள் என்பவற்றைக் கண்டு வியந்தோம். மகாராணியார் நீராடும் கழிவுநீர் சென்ற தெப்பக்குளம் இப்பொழுது புனித நீர்கொண்ட குளமாகச் சரித்திரப் புகழ் பெற்று விளங்குகிறது. பின்னர் மாலை 6 மணிபோல் மீனாட்சி அம்மன் கோயிலுக்குப் போனோம். வானளாவி நிற்கும் உயிர் ததும்பி வழியும் கோபுரம். கோயிலின் மத்தியில் விளங்கும் ஒரு கேணி. கோயிலின் உட்புறம் பார்க்குமிடமெல்லாம் தெய்வ ஓவியமாகவே காட்சியளித்தன. உலகப் பொதுமறையாம் திருக்குறளின் 1330 குறள்களும் சுவரிற் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டு வியந்தோம். கலியாண மண்டபத்தினுள் பிரவேசித்தோம்; கலைநுட்பங்களின் சிறப்புகளையும், சைவப் பெரியார்களதும், சங்கப் புலவர்களதும் சிலையினையும் கண்டு சிலையானோம். ஒரு தூணில் தட்டி இசையெழுப்பி இன்புற்றோம். மன அமைதியின்றிக் கோயிலைவிட்டுப் பிரிந்து சென்றோம். அன்றிரவு ஒரு சத்திரத்தில் தங்கினோம்,

## ஆறும் நாள் : (9-12-67)

அடுத்த நாட்காலை 5-15-க்கு மதுரையிலிருந்து புறப்பட்டோம். தூத்துக்குடியைப் பார்வையிட்டோம். அங்கிருந்து ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூரை 11-30 மணிபோல் சென்றடைந்தோம். அங்கே எல்லோரும் கடலில்மூழ்கி முருகனை வழிபட்டோம். 4-30 மணிபோல் கன்னியாகுமரியை வந்தடைந்தோம். நம் தாய்நாட்டின் முடியைக்கண்டு கொள்ளாவிடினும் அடியைக் கண்டுவிட்டோமே என்ற பூரிப்பு எங்கள் உள்ளத்தை ஆட்கொண்டது. காந்திமகானின் அஸ்தி கடலில் கரைத்ததன் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்ட அலங்காரக் கட்டடத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையிட்டோம். எங்கள் பாதஅணிகளைக் கழற்றிவிட்டு உட்சென்றோம்; அங்கே அக்கட்டடத்தைப்பற்றிய விபரமும், அது 2-12-1948-ல் கட்டப்பட்ட தென்பதையும் கல்வெட்டின் மூலம் அறிந்தோம். மகாத்மாவின் ஆத்மா சாந்தியடைய மௌனமாகப் பிரார்த்தித்துக் கொண்டு வலம் வந்தோம்; தொடர்ந்து மேல்மாடியையும் பார்வையிட்டோம். மேலிருந்து இயற்கை அன்னையின் எழிலுருவைப் பருகினோம்; இங்கிருந்து சுசீந்திரம் ஆலயத்திற்குச் சென்றோம்; கலை ததும்பும் சிற்பங்களையுடைய பிரமாண்டமான கோபுரத்தையுடைய கோயிலில் வீற்றிருக்கும் சுசீந்திரரை வணங்கினோம்; அங்கிருந்து நாகர்கோயிலிலுள்ள 'திருச்சிலுவைக் கல்லூரியை' அடைந்தோம். அங்கு சங்கைக்குரிய சகோதரிகள் எங்களை இன்முகத்துடன் வரவேற்றனர். அன்றிரவு அக் கல்லூரியிலேயே தங்கினோம்;

## ஏழாம் நாள் : (10-12 67)

அதிகாலையிலெழுந்து எங்கள் காலைக் கடன்களை முடித்தோம். அக்கல்லூரியைச் சுற்றி எங்கும் பார்த்தோம். இங்கிருந்து காலை 8 மணியளவில் பிரயாணத்தை ஆரம்பித்தோம்: இன்று வைகை அணையைப் பார்க்கப்போகிறோம் என்ற ஆவலால் உந்தப்பட்டவர்களாய், இசை பொழிந்துகொண்டே சென்றோம்; மாலை 5-30 மணிபோல் வைகை அணையைச் சென்றடைந்தோம்; சென்றவுடன் ஓர் எழிலுரு மங்கை இன்முகத்துடன் வரவேற்கிறாள்: ஆம். அது ஒரு சிலைதான். அதற்கு உயிர் கொடுத்த ஓவியனை மனமார வாழ்த்திவிட்டு, மேலும் நடந்தோம். மேற்சட்டை இல்லாத ஒரு சாதாரணப் பெண். அவள் இடுப்பில் ஒரு குழந்தை. தலையில் ஒரு கூடை; அருகே அவள் கணவன். தலையில் தலைப்பாகையும் கையில் மண்வெட்டியும் கொண்டு நின்றான். இவ்வுருவங்கள் உண்மையான உருவங்கள் என்று எண்ணிக் கிட்டச் சென்ற எமக்குப் பெரும் ஏமாற்றம். இதுபோல் ஆங்குள்ள சிலைகள்மூலம் நாம் பெரும் ஏமாற்றம் அடைந்தோம். இதனால் உண்மையான மனிதர்கள் அசையாது நின்றவுடன் அதுவும் சிலையா என்று எண்ணுவோம்; இப்படியாக எங்கள் பேதையுள்ளங்கள் பேதலித்தன; இச் சிலைகள் என்றுமே எங்கள் உள்ளத்தில் சிலையாகவே இருக்கின்றன. அடுத்து,பயன்படும் முறையில் வைகையைநிறுத்தி பாரிய அணை ஒன்று கட்டப்பட்டிருக்கின்றது. இவ்வணைக் காட்சியைப் பார்க்க ஒரு குட்டிப் புகை வண்டியும், மின்சக்தியின் உதவியினால் சென்றுகொண்டிருந்தது. வைகை பாயும் அழகும் அதன் இருமருங்கும் செயற்கை அழகு ஆக்கப்பட்டுள்ள முறையும் எங்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தின. தாயைப் பிரிந்து செல்லும் சேயைப்போல் பிரிய முடியாது பேராசிரியர்களின் கட்டாயத்தின் பேரில் அவ்விடத்தைப் பிரிந்து சென்றோம். இரவு பழனியாண்டிக் கல்லூரியில் தங்கினோம்;

## எட்டாம் நாள் : (11-12-67)

முருகனைக் காணவேண்டுமென்ற ஆவலால் உந்தப்பட்ட நாம் அதிகாலையிலெழுந்து ஸ்நானம் செய்து காலை 5 மணிபோல் பழனியை அடைந்தோம்; முருகா! முருகா! என்று சொல்லிக்கொண்டே அறுநூற்றியெழுபதுக்கு மேற்பட்ட படிகளைத் தாண்டி ஏறினோம்; தமிழ்நாடு போற்றும் முழுமுதற் கடவுளாகிய வேலவனைக் கண்டு வியந்தோம்; பத்திப் பாடல்கள் பாடி ஆனந்தக் கண்ணீருகுத்தோம்; அங்கிருந்து சரவணப் பொய்கைக்குப் போனோம். திருவாவி நன்குடி கோயிலுக்குச்சென்று இறைவனை ஏத்தினோம்; சிற்ப சித்திர வேலைப்பாடுகள் நிறைந்து காணப்பட்டன; முருகன் வள்ளி கதைகளை ஓவியங்கள் மூலம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்; இவற்றையெல்லாம் கண்டுகளித்த நாம் கோயம் புத்தூரிலுள்ள வழக்கறிஞர் இராமச்சந்திர குப்தர் வீட்டிற்குச் சென்றோம்; உணவை அங்கே ஏற்றோம்; அவருடைய மகள் அவினாசலிங்கம் மனையியல் கல்லூரியிற் கல்விபயில்கின்றார். அவர் எங்களைத் தங்கள் கல்லூரிக்கு அழைத்துச்சென்று எல்லா இடமும் காட்டி விளங்க வைத்தார். அக் கல்லூரியினுள் புகுந்தவுடன் சாரதாதேவி அம்மையாரின் படம் வைத்திருக்கும் மண்டபத்திற்குள் சென்று 5 நிமிட மௌன வணக்கம் செலுத்திய பின்தான் வேறு இடங்களைப் பார்வையிட்டோம். அன்றிரவு அவ்வீட்டிலேயே தங்கினோம்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் நாள் : (12-12-67)

மறுநாள் கோயம்புத்தூரிலிருந்து ஊட்டிக்குப் புறப்பட்டோம். போகப் போக சுவாத்தியநிலை மாறிக்கொண்டே இருந்தது. உயரமாக பஸ்வண்டி ஏறிக்கொண்டே போனது. இறப்பர், தோடை, கமுகு, தென்னை, பலா, வாழை, சாதிக்காய், கறுவா, ஏலம், தேயிலை போன்ற பயன் தரும் தாவரவகைகளைக் கண்டுகொண்டே போனோம். 8000' உயரத்தை அடைந்து விட்டோம். சுவாத்தியநிலை வேறுபாட்டால் அநேகர் காய்ச்சலினால் பீடிக்கப் பட்டார்கள். ஊட்டியிலே மதிய உணவை ஏற்றோம். ஊட்டியிலிருந்து மைசூரை நோக்கிச் சென்றோம். அங்கே ஒரு சத்திரத்தில் இரவு தங்கினோம்.

## பத்தாம் நாள் : (13-12-67)

காலை ஆறுமணிபோல் பிரயாணத்தை ஆரம்பித்தோம். ஆங்கு கிறீஸ்தவ ஆலயத்திற்குச் சென்றோம். இயேசு சிலுவையில் அறையப்பட்ட சோகக் காட்சியே எம்மை வரவேற்றது. பின் சுரங்க வழியாகக் கீழேசென்றோம். அங்கே துயில் கொள்ளும் புனித பிலோமினாவின் உருவச் சிலையைக் கண்டோம். இங்கிருந்து பிரமாண்டமான அழகுவாய்ந்த லலிதா மகாலைச் சென்று பார்வையிட்டோம். அடுத்து குன்றிலுறை சாமுண்டீஸ்வரியைத் தரிசிக்கச் சென்றோம். ஆகாயத்தை அளாவி நிற்கும் முன்கோபுரம், அதைக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள அகன்ற நீண்ட பெருங் கோயில். அதனுள் கோயில் கொண்டுள்ள அம்மை சாமுண்டீஸ்வரியைத் தரிசித்தோம். அம்மையின் தரிசனத்தைப் பெற்ற பின்னர் பட்டு நெசவாலைக்குச் சென்றோம். நெசவாலையைக் காண்பதற்கு முன்னர் முசுக்கட்டைச்செடி வளர்க்கப்படும் இடம், பட்டுப்பூச்சிகள் கண்ணாடி அலுமாரியில் வளர்க்கப்படும் இடம் என்பவற்றைப் பார்த்தோம். நூல்நூற்கும் நிலையத்தையும் சேலை நெசவுசெய்யும் நிலையத்தையும் பார்வையிட்டோம். பட்டுப்பூச்சிகள் தங்களைச்சுற்றி கூடுகள் அமைத்து விடுகின்றன. கூட்டைவிட்டுப் பூச்சிகள் பறக்கும் பருவத்திற்கு முதல் இக்கூடுகளிலிருந்து நூல்களை எடுப்பர். இக்கூடுகளைச் சுடுநீரில் அவித்து இயந்திரமூலம் நூல் சுற்றுவர். இந்நூல்களைத் தரம்பிரித்து சேலை நெசவு செய்வார்கள். இதன் பின்னர் அழகே உருவெடுத்த காட்சி தந்திருக்கும் மைசூர் மன்னனின் அரண்மனையை அடைந்தோம், அம் மாளிகையின் சிற்ப சித்திர வேலைப்பாடுகளும், வாழ்க்கை வசதிகளும், சொல்லிலடங்கா இன்பம் பயப்பனவாக விளங்கின. இதன் பின்னர் மகாராசாவின் மோட்டார் இரதங்கள் விடும் இடத்தைப் பார்த்தோம். இங்கிருந்து ஆறுமணிபோல் பிருந்தாவனத்தைப் போயடைந்தோம். அங்கே வீறடித்துப்பாயும் காவேரியைத் தடுத்தி நிறுத்தி, பிரமாண்டமான அணையைக் கட்டி இருக்கிறார்கள். அவ்வணையினூடே பாயும் நீருக்கு இருமருங்கிலும் உள்ள பகுதிகளைப் பலவகைப் பூக்களும், மரங்களும், பலவர்ண மின்சார தீபங்களும் பலவகை நீர்ப்பாய்ச்சுகள் எல்லாம் சேர்ந்து பிருந்தாவனமாக்கியது. அப்பிருந்தாவனத்தைத் துள்ளுநடையுடன் பார்த்தோம். அதன் அழகை இரசிக்க எங்கள் இருகண்களும் போதவில்லை.

## பதினொராம் நாள் : (14-12 67)

மைசூரிலிருந்து காலை ஆறுமணிபோல் பெங்களூரை நோக்கிப் பிரயாணத்தை ஆரம்பித்தோம். வழியில் திப்புசுல்தானின் சமாதிக்குச் சென்றோம். அம் மன்னவன் காலத்தில் நடந்த வரலாற்றுச் சம்பவங்கள் சுவரிலே சித்திரமாகத் தீட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு சித்திரமும் படிப்படியாக வரலாறு கூறும்முறையில் வரையப்பட்டிருக்கிறது. ஒருபுறத்தில் சுல்தான் மன்னனின் பூதவுடல் அடக்கஞ் செய்யப்பட்ட சேமிப்புஅறை; அழகு பூத்துக் குலுங்குகிறது. அருகில் அவர்தம் மனைவியினதும், சேயினதும் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. சிறிதுநேரம் அச்சமாதிக்கு மௌனம் செலுத்திவிட்டு பிரயாணத்தைத் தொடர்ந்தோம். பெங்களூரை அடைந்து அங்குள்ள மின்சாரத்தினால் இயங்கும் பலவித சாதனங்களைக் கொண்ட நூதனசாலையொன்றைப் பார்வையிட்டோம், பூட்டப்பட்ட அறையொன்றிற்குக் கிட்டச்சென்று குறித்த ஓர் இடத்தில் குரல் கொடுத்ததும் கண்ணாடியினால் ஆக்கப்பட்ட அவ்வறையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவு தானுகவே திறந்துகொள்கிறது. அதிசயத்துடன் அறையினுள் காலே வைக்கின்ருேம்: அறை முழுவதும் ஒளி பாய்கிறது. இதெல்லாம் எப்படி ஏற்படுகிறது. அங்குள்ள ஆசனத்தில் போயமர்கின்ருேம். அமர்ந்ததும் மனதைக் கவரும் இசை எழும்புகிறது. என்னதான் நடக்கப்போகிறது என்று பார்ப்போமே. ஆசனத்தைவிட்டு எழுகிருேம். இசை நின்றுவிடுகிறது. அறையின் வெளியே காலே வைக்கிருேம். ஒளி நின்றுவிடுகிறது. கதவு தானுகவே மூடப்படுகிறது. இது மின்சாரத்தினுல் தானுகவே இயங்கும் ஓர் அறை. அங்கே தங்கச் சுரங்கத்தில் நடைபெறும் வேலேகளே, மாதிரி உருவத்தில் கண்டறிந்தோம். இங்கிருந்து பெங்களூரிலுள்ள சவர்க்காரத் தொழிற்சாலேயைச் சென்று பார்வையிட்டோம். பின்னர் லால்பாக் பூந்தோட்டத்தை அடைந்தோம். பாரின் பல பூஞ்செடிகள் அங்கு வருவோரைப் பூத்துக் குலுங்கிப் புன்னகைபுரிந்து வரவேற்றது. அன்று பெங்களூரிலேயே ஒரு சத்திரத்தில் தங்கினுேம்.

### பன்னிரண்டாம் நாள் : (15-12-67)

இன்று காலே 6 மணிபோல் புறப்பட்டோம். வேலூரை அடைந்து மதிய உணவை ஏற்ருேம். பாலாற்றைக் கடந்து சென்ருேம். இரவு சென்னேயில் செட்டியார் மெமோறியல் பாடசாலேயில் தங்கினுேம்.

### பதின்மூன்ரும் நாள் : (16-12-67)

காலே 6 மணிபோல் புறப்பட்டோம். திருமலே கபாலீச்சரக் கோயிலுக்குப் போனுேம். அங்கிருந்து அடையாற்றிலுள்ள கலாசேத்திரத்தை அடைந்தோம். ஓலேகளினுல் வேயப்பட்ட சிறுசிறு குடிசைகளில்தான் மாணவர் இசை, நடனம் பயின்றனர். இங்கிருந்து 1663-ல் உருவாக்கப்பட்ட புனித தோமஸ் கோவிலுக்குப் போனுேம். அன்று சென்னேயிலேயே தங்கினுேம்.

### பதினுன்காம் நாள்: (17 12 67)

சென்னேயில் 'இருமலர்கள்' படம் பார்த்தோம். அன்று சென்னேயிலேயே தங்கியிருந்தோம்.

### பதினேந்தாம் நாள் : (18-12-67)

காலே 5 மணிபோல் சென்னேயிலிருந்து புறப்பட்டு மகாபலி புரத்திற்குப் போனுேம். பஞ்சபாண்டவர்கள் இரவு தங்கிய வீட்டமைப்பு, இரதங்கள், படுத்திருந்த கட்டிலமைப்பு, பாரிய வெண்ணெய்க்கல், விஷ்ணு பெருமான் சயனித்திருக்கும் பாரியஉருவம், யானேகளின் உருவங்கள் போன்றவற்றைக் கண்டோம். இவை பல்லவ அரசன் மகேந்திரவர்மன் காலத்தில் செதுக்கப்பட்டவை. அவன் இறக்க அவனது மகன் நரசிம்மவர்மன் தொடர்ந்து செய்து முடித்தான். இன்றைய உயிர் ததும்பும் சிற்பங்களுக்கெல்லாம் வித்தாக அமைந்துள்ளது மகாபலி புரமாகும். அரசர்கள் இறந்தாலும் அவர்கள் புகழை நிலேநாட்டிக்கொண்டிருக்கிறது. இங்கிருந்து திருக்கழுக் குன்றத்திற்குப் போனுேம். செங்குத்தாக அமைக்கப்பட்டிருந்த படிகளில் கழுகுகள் சாதம் சாப்பிட வரும் நேரமென அறிந்தநாம் ஆவலால் உந்தப்பட்டு எதுவித கஷ்டமுமின்றி ஏறினுேம். என்ருலும் எங்களில் சிலர்தான் கழுகுகளேப் பார்க்கக்கூடியதாக இருந்தது. அந்தணர் கையிலிருந்த சர்க்கரையும், நெய்யும் கலந்த சாதத்தைக் கழுகுகள் வந்து சாப்பிட்டுவிட்டு கோயிலின் கோபுரத்தின் உச்சியில் போய் இருந்தன. மலேயின் உச்சியில் கோயில் கொண்டுள்ள வேதகிரீஸ்வரரை இறைஞ்சி மீண்டோம். அன்று மாலே காஞ்சிபுரத்தையடைந்து அங்கேயே இரவு தங்கினுேம்.

### பதினுரும் நாள் : (19-12-67)

காஞ்சிபுரத்திலிருந்து காலே 5-30 மணிபோல் பிரயாணத்தை ஆரம்பித்தோம். அங்கேயுள்ள பூசகரால் நடராஜப் பெருமானுக்குப் பூசை நடைபெற்றது. இறைவனே வணங்கி பூசகரால் தரப்பட்ட பிரசாதத்தை வாங்கி உண்டுவிட்டு பஸ்ஸில் பிரயாணமானுேம். இங்கிருந்து வரதராஜப் பெருமான் கோயிலுக்குப் போனுேம். பின்னர் இராமலிங்க அடிகளின் கோயிலுக்குப் போனுேம். மதிய பூசை நடைபெற்றுக் கொண்டிருந்தது. எதுவித உருவங்களுமின்றி ஏழுதிரைகள் நீக்கம் செய்யப்பட்டு தீபம் காட்டப்பட்டது. இங்கிருந்து விசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாட்சி அம்மையாரின் பூதஉடல் அடக்கம் செய்து வைத்திருக்கும் சமாதியைக் காணச் சென்றோம். சமாதிக்கு வணக்கம் செலுத்தி விட்டு அவரது சிஷ்யராக இருந்த அம்மை யாரால் மனமுவந்து அளிக்கப்பட்ட மதிய உணவை ஏற்றுவிட்டு சிதம்பரத்தை நோக்கிப் பிரயாணமானோம். 4-30 மணி போல் சிதம்பரத்தை அடைந்தோம். அங்கு வீற்றிருக்கும் தில்லைநடராசனைப் பூசித்தோம். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை யடைந்தோம். கல்லூரியைப் பார்வை யிட்ட பின்னர் இரவு அங்கேயே தங்கியிருந்தோம்.

## பதினேழாம் நாள்: (20-12-67)

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து காலை 6 மணிபோல் புறப்பட்டோம். வெள்ளையாறும் கடலும் சந்திக்கும் கழிமுகத்தைப் பார்வையிட்டோம். அங்கேயுள்ள புனித வேளாங்கண்ணி என்ற மாதாகோயிலுக்குச்சென்று வழிபட்டோம். இங்கிருந்து திருச்சியை நோக்கிப் பிரயாணமானோம்.

## பதினெட்டாம் நாள்: (21-12-67)

இன்றுதான் எங்கள் பிரயாணத்தின் இறுதிநாள். ஸ்ரீரங்கம் சென்று ஸ்ரீரங்க சுவாமியைத் தரிசித்தோம். இங்கிருந்து திருவானைக்கா கோயிலுக்குச் சென்று, இறைவனை வழிபட்டு அங்கிருந்து திருச்சி 'திருச்சிலுவைக் கல்லூரியை' அடைந்தோம். எங்கள் நாட்டிற்குப் போகப் போகிறோம் என்ற ஆனந்தம் ஒருபுறம், மறுபுறம் எங்கள் தாய்நாட்டை விட்டுப் பிரிந்து போகிறோமே, இனி எப்போது காலடி எடுத்து வைப்போம் என்ற பேரிடி. இரண்டு மற்றநிலையில் அமுக்கப்பட்டவர்களானோம். நேரமும் 4-30 மணி ஆகிவிட்டது. மோட்டார் வண்டிகளின் மூலம் விமான நிலையத்தை அடைந்தோம், பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்டபின்னர் எங்களுக்காகக் காத்திருந்த விமானத்தில் 5-15 மணிபோல் ஏறினோம். பலாலி விமான நிலையத்தை 6 மணிபோல் வந்தடைந்தோம். கையசைத்து எங்களை ஆவலுடன் வரவேற்றார்கள் எம்மவர்கள். பலாலி விமான நிலையம் சன சமுத்திரமாகவே காட்சி தந்தது. இங்கேயும் பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்ட பின்னர் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இல்லங்களை நாடி ஏகினர். எங்கள் ஆசிரியர் பயிற்சிக்காலத்தில் நாம் பெற்ற, மறக்கமுடியாத சம்பவங்களில் இந்திய சுற்றுப் பிரயாணம் பெரும் பங்கைப் பெற்று விட்டது.

செல்வி. திலகராணி சரவணமுத்து.
(விடுகை வருடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகை மலர்

மங்கையர் முறுவல் வென்று
மலர்ந்த மல்லிகையே கேள்நீ
எங்கள் தம்மினத்தி னுள்ளே
யேந்திழை யார்க ளெல்லாம்
தங்கள் காதலரைத் தேர்தல்
தனித்தனி யொருவ ரானல்
பொங்கெழி லழகி யேநீ
குலவுதல் பலரோ டன்றே.

வெண்கதிர் தம்மை வென்று
விரிசுடர் பரப்பி வானில்
எங்கெலாம் கதிரை வீசி
இருள்தனை யோட்டி யேமுன்
பொங்கெழில் நிலவு தானும்
பொலிவுடன் பவனி வந்தால்
அங்கெலாம் மகிழ்ந்து நீயும்
மதிதனை மருவு கின்றாய்.

மலையினி லெழுந்து தண்மை
மண்டிய சோலை சார்ந்தே
அலைகளை வருடிக் குன்றின்
அகில்மணம் சுமந்து தோற்ற
மிலையெனும் தென்றல் வந்தால்
இதழ்சிரித் துவகை பொங்க
நிலையிழந் தாடு கின்றாய்
நேர்மையோ நினது கற்பே.

பலமலர் தழுவித் தேனும்
பாங்குற உண்டு உன்னைக்
குலவியே வண்டு வந்தால்
குதிப்புடன் 'கொல்'லென் றேநீ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலருதல் செய்யும் மாண்பு
நின்னது கற்போ என்னத்
தலைதனை நிமிர்ந்து நின்று
தானுமே சாற்று கின்றாள்.

மங்கையர் மனதின் திண்மை
மதிதனைக் கூறும் நீவிர்
இங்கிதை யுணர்ந்து கொள்வீர்
என்னுளம் கவர்ந்த கள்வன்
நந்துத லிலாத வண்டே
நனிகுளிர் தென்றல் தூது
பொங்கொளிர்ச் செல்வன் தந்தை
புகலுவன் அறிகு வீரே.

சி. மனோன்மணிதேவி,
(விடுகை வருடம்.)

உண்மையிலே நல்ல நூல்கள் காட்டில் மலரும் பூக்களைப்போல இயற்கையானதும் எதிர் பாராத அழகானதும், காரணம் கூற முடியாத முழுமை நிறைந்ததுமான பொருளாகும்.

— தேரோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்திணையின் முருகு

சங்கமிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப் புலவர்கள், நிலத்தை நானிலமாக வகுத்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பனவாம். அவற்றுள் முல்லைத் திணையின் முருகுணர் காட்சிகள் சிலவற்றை ஈண்டுக் காண்பாம்.

காடும் காடுசார்ந்த இடமும் முல்லை நிலம் எனப்படும். முல்லை நிலத்தின் ஒருபால் மலையும், மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலமும், மறுபால், வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதநிலமும் எல்லைகளாவன. முல்லை நிலத்தில் மந்தியுமறியா மரன்பயில் அடுக்கங்கள் உள.

இயற்கையன்னையின் அழகு பொதுளிய திணையே முல்லைத்திணை என்க. முல்லைப் பாட்டிலே முல்லைக்காட்சிகளும், முல்லை வாழ் மக்களின் இயல்புகளும் அழகுற விளக்கப்படுகின்றன. நறுமண வெண்மலர் பூக்கும் முல்லைக் கொடி, முல்லை நிலத்தில் இயல்பாய் எங்கணும் காணப்படுவதால் முல்லையெனப் பேரேற்றது.

முல்லைநிலமக்களின் தெய்வம் மாயோன். "மாயோன் மேய காடுறை உலகமும்" எனத் தொல்காப்பியங் கூறுகின்றது. மாயோனே காத்தற் கடவுள். முல்லைத் தேவன் பிருந்தாவன ஆயர் பாடியில் யசோதரையின் மகனுகிக் கண்ணன் என நாமகரணஞ் செய்யப்பட்டான். அவதாரக்கண்ணன், ஆயர்பாடியில் புரிந்த விந்தைகள் அளப்பில. வெண்ணெய் திருடி உண்பான்; தயிர்ப்பானைகளை உருட்டிக் குடித்து விடுவான். ஆயருடன் அநந்த விளையாடல் புரிந்த கார்மேக வண்ணன் ஆயருடன் இரண்டறக் கலந்து முல்லைத் தேவனுனன். இவனே பாற்கடலில் பாம்பணையில் அறிதுயில் கொண்ட அண்ணலுமாவன்.

முல்லை வாழ் மக்களில் ஆண்களை ஆயர் என்றும் பெண்களை ஆய்ச்சியர் என்றும் அழைப்பர். முல்லை நிலத்தில் ஆங்காங்கே வேடுவரும் குடிபுகுந்துள்ளனர். அன்னருள் ஆயர் குலத்தினரே முதன்மை வாய்ந்தவர். ஆநிரை மேய்த்தல் ஆயரின் குடித்தொழில். மந்தைகளே அவர்கள் செல்வம். கானகத்திடையே ஆங்காங்கு புனை நீர்க்குட்டைகளைச் சூழ்ந்த புல்வெளிகளிலே நீரும் மாந்திப் புல்லுந் தின்று மந்தைகள் வளர்வன. அவை வனப்புடன் காணப்படுவன. வைகறையில் துயிலெழும் ஆயன், பசுக்களிற் பால் கறப்பான். கறந்தபாலை விலைப் பொருட்டு ஆய்ச்சியர் கைக்கொடுத்து அனுப்புவான். பின்பு தன் கறவைகளையும், மந்தைகளையும் முல்லைக் காட்டை நோக்கி ஓட்டிச் செல்வான். மந்தைகள் நிரை நிரையாய்ச் செல்வதனுல் நிரையென்று அழைக்கப்படுகின்றன. மந்தைகள் தொன்றுதொட்டே மனிதனின் வளர்ப்புப் பிராணிகள். அவற்றினிடையே மனித அறிவுத் தன்மை அவ்வப்போது புலப்படாமலில்லை.

மந்தைகளுட் தலையாரி மந்தை ஒன்று காணப்படும். நிரையில் அதுவே எல்லா மந்தைகட்கும் முன்செல்லும். அதன் வழியே ஏனைய மந்தைக் குழாஞ் செல்லும். சிலவேளைகளில் அத்தலையாரி மந்தைக்கு ஆயன் மணிகட்டி விடுவான். ஆயன் மந்தைகளை ஓட்டிச் செல்லும்போது இயல்பாய் அடக்கிக்கொண்டு போவான். நிரைமாறிப் போக எத்தனிக்கும் சில தான்தோன்றிகளைக் கிடாரி, சிவப்பி, கறுப்பி, சுட்டியன், மந்தன் எனப் பெயரிட்டுக் கட்டளையிடுவான். அவைகள் நாளாந்தம் இடையன் இட்ட பெயரைப் பழகினமையால் தம்போக்கைத் தாம் அறிந்தனவாய் ஆயனுக்குப் பணிந்து செல்வன.

ஆயர் பாலிற் பெறப்படும் பல்வகை உணவுகளை உண்பார்கள். அவர்களின் உணவுத்தானியம் வரகாகும். புல்லரிசி என்று வரகைச் சொல்வர். வரகு விளைத்தற்குப் புன்செய்நிலம் போதியதாகும். ஆனிரை மேய்த்தலான் வெளிகளில் ஆயன் வரகை விளைவிப்பன். அத்துடன் முதிரை என்னும் தானியத்தையும் விளைவிப்பன். ஔவைப் பிராட்டியாருக்குப் புள்வேளூர்ப் பூதன் புரிந்திட்ட விருந்தினை,

> "வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
> முரமுரென வேபுளித்த மோரும் — திடமுடனே
> புள்வேளூர்ப் பூதன் புகழ்ந்துபரிந்திட்டசோ
> றெல்லா வுலகும் பெறும்"

என்று புலவர் சித்திரிக்கின்ருர். இச்செய்யுளிலிருந்து ஆயரின் உணவுச் சுவையின் தரம் உணரற்பாலது.

மரம் கொன்றையும் குருத்தும் முல்லை மரத்தின் பன்மரக்காக்கள் எங்கும் பொதுளி அழகு செய்தபோதிலும், கொன்றை மரத்துக்கு முல்லையிற்றனியிடம் உண்டு. 'கொன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றை வேந்தர்' என்பது இறைவனைக் குறிப்பது. ''மிளிர் கொன்றை அணிந்தவனே', என அடியார் ஏற்றிப் போற்றுவர். மஞ்சள் வர்ணப் பூவை யலர்ப்பது கொன்றை. கொடியின்பால் தொங்கும் கொன்றைமலர் கவின்பெறு வனப்புள்ளது. முல்லையின் அழகினுக்கழகு செய்வது. கொன்றையும், குருந்தும் முல்லைக்குரிய மரமே. தேவ பூசனைக்கு மணங்கமழ் மலர்கள் விரும்பப் படுவன. முல்லை நிலத்தில் மணங்கமழ்வதற்கு ஏது குருந்து. வானரங்கள் கானகமெங்கும் கடாவி குருந்தின் இளங்கதிர்களைப் பறித்தெறிவதனால் காடே மணங்கமழும். குருந்தின் நறுமணம் முல்லை நோக்கிச் செல்வோரை ஈர்க்கும்.

முல்லை நிலப்பறவை கானங்கோழி. இது கபிலமணியாத்த அழகுச் சிறகும், கழுத்தின்கீழ் வெள்வர்ணமும் பொருந்திய சிறு பறவை. அச்சம் அதற்கு இயல்பாய் அமைந்தது. அச்சங்கொண்ட கானம்புள் தனது பேடையுடன் காட்டின் புதர்களில் வாழும். அவற்றின் ஒலி தினமும் மதுரமாயொலிக்கும்.

முல்லைக்குரிய விலங்குகள் மானும், முயலுமாகும். விலங்குகளில் அழகு மிக்கது மான். முல்லைக்காடு கலைக்கூட்டங்களாலும், பிடிக்கூட்டங்களாலும் நிறைந்து காணப்படும். மானினம் கண்டு மகிழ்பெய்தா மானிடரும் நானிலத்திலுளரோ! பெண்ணின் பார்வைக்கும், அச்சத்துக்கும் மானினையே உவமை கூறுவர். பாண்டிமாதேவியை ''மானினேர் விழிமாதராய்'' என விளிப்பதாலுங் காணலாம். முயலும் முல்லைக்குரியதே. அழகுச் சிறு விலங்கு முயல். அச்சம் நிறைந்ததெனினும் அது ஒரு வண்ண விலங்கு.

கார்காலமும், மாலைப் பொழுதும் முல்லைநில மக்களின் குதூகலமான காலமாகும். ஆவணத்திங்களும், புரட்டாதித் திங்களும் முல்லைவாழ் மக்களின் கார்காலமாகும். கார்காலத்தின் பெரும்பகுதியை ஓய்வுடனும், குதூகலத்துடனும் முல்லைத் திணை மக்கள் கழிப்பர். கார்காலத்தில் ஆயரிடையே மணமங்கல நிகழ்ச்சிகள் இடம்பெறும். மாலை நேரத்தில் இங்கு களியாட்டங்கள் இடம்பெறுவதால் குதூகலத்துடன் விளங்கும் மக்கள் முல்லைமலர் கொண்டு சந்தியா வந்தனஞ் செய்வர். யாழிலே இசைமிதந்துவரும். சதாரிப் பண்ணில் பரமநாமம் பரவிப் போற்றப்படும். இஃது தென்றலில் மிதக்கும் தேவ கானமாகும்.

ஆயரின் ஒழுக்கப் பண்புக்கு ஒரு சிறு கதை கூறப்படுகிறது. வனத்திலே பிறந்த இரு சகோதரர்களில் ஒன்று ஆண், மற்றது பெண். வேட்டையாடச்சென்ற காளையொருவன் கன்னியொருத்தியின் கட்டழகில் தன்னைப் பறிகொடுத்து மன்மத வயத்தனாகின்றான். கன்னியின் தமயனோ, தம் மாயர் குலத்தவனையே தன் தங்கை வதுவை செய்யவேண்டுமென வற்புறுத்துகின்றான். அக்கட்டழகனோ தன்வய காமத்தனான மிழந்து உடல்கருகி உள்ளம் உருகிய நிலையில் காணப்படுகின்ற அக்காளையை, உற்றோரும் பெற்றோரும், மடலேறுவித்து அக்கன்னிக்கு வதுவை செய்து வைக்கின்றனர். இஃதறிந்த பெண்ணின் தமையன், அத்தம்பதிகளைப் புலிக்குணவாக்கச் சூழ்ச்சிகள் செய்கின்றான். இதற்கிடையில் காளையவனைக்கொன்று, கன்னிகையைக் கண்ணுக்கெட்டாத வேற்றிடத்திற்குக் கொண்டு செல்கிறான். இச் சிறுகதைமூலம் அவ்வாயர் குலத்தினரின் வீரம், மானம், காதல், என்பன புலனாகின்றன.

முடியுடை மூவேந்தர் நாட்டில் முல்லைக்கு முதலிடம் கொடுத்திருக்கின்றமையைக் காண்கின்றோம். இங்கு அரசன் குறும்பொறையென அழைக்கப்படுவான். முதியவர்களே முல்லைநில இராசப்பிரதிநிதிகளாவர். மாநிலம் காக்கும் மன்னன் கோனெறி கோடாது ஆண்டுவருவான். ஆண்டுக்கொருதரம் தன்னாடுசென்று குதூகலந்தரும் குரவைக் கூத்தினையுங்கண்டு களிப்பான்.

மாயவனை ஏத்திக்,

**கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ**
**னின்றுநம் மானுள் வருமே லவன் வாயிற்**
**கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ**

**பாம்பு கயிருக் கடல்கடைந்த மாயவ**
**னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி**
**லாம்பலந் தீங்குழல் கேளாமோதோழீ.**

**கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ**
**னெல்லைநம் மானுள் வருமே லவன்வாயின்**
**முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ.**


என முல்லைத்திணையில் ஆய்ச்சியர் ஆடும் குரவைக் கூத்தில் ஆடிப்பாடி மகிழும் செய்தியினை இலக்கியங்களில் பரக்கக்காணலாம். இதுகாறும் முல்லைத்திணையில் கண்ட கவின்பெறு காட்சிகளைப் பழந்தமிழர் போற்றிவந்தனர். இன்றோவெனில் அவையெல்லாம் அருகிவருகின்றன. ஆயினும், முல்லையின் முடிவற்ற வனப்பு இலக்கியங்கள் உள்ளவரை, என்றும் மணங்கமழும்.

**திருமதி. ச. மாணிக்கவாசகன்,**
**(விடுகை வருடம்)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் போட்டிக் காட்சிகள்



வடமாகாண நகர்காவலர் அதிபர் திரு. இ. சுந்தரலிங்கம் அவர்கள்
கழக வண்ணக்கொடியை வானுற ஏற்றுவிக்கின்றார்.



விளையாட்டு முன்றிலில்
அரிவையர் அணிவகுத்து அழகுநடை போடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தடை தாண்டும் ஓட்டத்தில் தன்திறமையைக் காட்டுந் தையலர்.



விநோத உடைப்
போட்டியில்
முதலிடம் பெற்ற
'அருணு இல்ல'
அணங்கன்றே இவள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நகர்காவலர் அதிபர் திரு. சுந்தரலிங்கம் அவர்கள் உரையாற்றுகின்றார்.



திருமதி. சுந்தரலிங்கம்
அவர்களிடமிருந்து
மெய்வல்லுனர்ப்
போட்டியில்
முதலிடம் பெற்ற
'சுவர்ண இல்ல'த்
தலைவி
வெற்றிக்கேடயத்தைப்
பெற்றுக்கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிப் பருவத்திலே

பசுமை நிறைந்த வயல்கள். அவ்வயல் களினூடே கண்ணுக்கெட்டியவரை நீண்டு செல்லும் கருந் தார்ப்பாதை. பாதையோரம் சிறிதளவு தூரத்திற் கொன்ருக அமைந்திருந்த சின்னஞ்சிறு வெண் தூண்கள், பசுமைக்கும் கருமைக்கும் இடைக்கோடு அமைத்தன. அத்தூண்க ளில் ஒன்றில் அமர்ந்திருந்தான் பார்த்தி பன். பனைமரங்களுக்கப்பால் வானத்தை இரத்தச் சிவப்பாக்கி மறைகின்ற மாலைக் கதிரவன் பார்த்திபனின் இளம் மனதிலே எத்தனையோ எண்ணங்களை இறைத்துக் கொண்டிருந்தான். வெகு தொலைவில் இருக்கும் தன் கிராமத்தின் அழகிய காட்சி களையும், பெற்றேரையும் நினைத்துக் கொண்டான். பதினறு வயது நிறைந்த வன் உயர் கல்வியளிப்பதற்காகப் புகழ் வாய்ந்த ஒரு கல்லூரியில் இரண்டு நாட் களுக்கு முன்புதான் சேர்ந்தான். சற்று வசதிமிக்க குடும்பமாயிருந்ததாலே இக் கல்லூரியில் சேரமுடிந்தது.

அவனது அறிவும் அழகும் எவரையும் கவரும் தன்மையது. புதிய சூழலில் அதி கம் கஷ்டமின்றிப் பழகிக்கொண்டாலும், ஏனே ஓர் ஏக்கம். எனவேதான் சகமாண வர் மும்முரமாக விளையாட்டில் ஈடுபடும் இந்தநேரத்தில் அவன் கல்லூரியை ஒட் டிய வயல்வெளியினூடாகச் செல்லும் பாதையருகில் உட்கார்ந்து எண்ணச் சுழல் களில் ஆழ்ந்திருந்தான். எங்கோ தொலை விலிருந்து தென்றலில் மிதந்துவந்த ஒரு பாடலில் அவன் உள்ளம் திளைத்திருந்தது. அவனது உள்ளம் அவ்விசையைக் கேட்டு சிந்தித்துக்கொண்டிருந்தது.

இந்தச் சமயம் பின்னலிருந்து திடீ ரென்று 'கூய்' என்று ஒருசப்தம்; அதைத் தொடர்ந்து பலசிறிய மணிகளை ஒன்ருக ஒலித்ததுபோலக் கிண்கிணி ஓசை. திடுக் கிட்டுத் திரும்பினன் பார்த்திபன். திரும் பியவனுக்குக் கிராமத்திலே ஆற்றிலே தனித்தனி மிதந்துவரும் நீலநிறக் காயாம் பூக்களிரண்டும் அவற்றைச் சுற்றிப் பறக் கும் வண்ணத்துப்பூச்சிகளுமே ஒரு கணம் தெரிந்தன. ஒருவாறு தன்னைச் சுதாகரித் துக் கொண்டு பார்த்ததில் அங்கே குறும் பே உருவான ஒரு சிறு பெண்ணைக் கண் டான். தன் குறும்பு பலித்துவிட்டது என்ற களிப்பில் வாயெல்லாம் முத்துக் களாக நின்ருள் அவள்.

மேல்நாட்டுப் பாணியில் அமைந்த அந்தக் கல்லூரியில் மாணவ, மாணவியர் இவ்வாறு பழகுவது சகஜமாகவேயிருந்தது. இருந்தும் இதைப் பார்த்திபன் எதிர்பார்க் கவேயில்லை. ''கல்லூரிக்குப் புதியவரா நீங்கள்'' என்று அவள் அழகாக ஆங்கி லத்தில் கேட்டபோது தட்டுத்தடுமாறி ''ஆமாம்'' என்று பதிலளித்தான். ''விளையாடுவதற்குப் பயந்தா இங்குவந்து இருக்கிறீர்கள்'' என மீண்டும் அந்தக் குறும்புக்காரி கேட்டாள். பக்கத்தில் இது வரை அவளது களிப்பில் சமபங்குகொண் டிருந்த மற்றப்பெண், ''போதும் சுமதி, புதியவரை வெருட்டியது; வா போகலாம். நேரமாகின்றது'' என அவளது கையைப் பிடித்திழுத்தாள். அந்தக் கருநிறக் கன் னியின் கையில் இணைந்த சுமதியின் சந்த னக் கரத்தைக் கண்ட பார்த்திபனுக்குக் கிராமத்தின் கரும் பச்சைத் தடாகத்தில் தான் பறித்த தாமரையின் ஞாபகம் வந் தது. மீண்டும் நிமிர்ந்து பார்த்தபோது தொலைவில் இரு வண்ணப் புருக்கள் சிறகு விரித்துப் பறப்பதையே கண்டான்.

அடுத்தநாட் காலையில் பார்த்திபன் விடுதியிலிருந்து கல்லூரிக்குச் செல்கையில் கல்லூரிச் சுற்றுப்புறத்திலேயே அமைந் திருந்த அதிபரின் வீட்டின் மாடிப்பக்கம் சென்ற அவன் கண்கள் அங்கே மலர்த் தொட்டிகட்கு நீர் வார்த்துக்கொண்டி ருந்த சுமதியைக் கண்டன. கூடவே வந்து கொண்டிருந்த நண்பனிடம் அவள் அதிப ரின் மகளா என்று கேட்டபோது, 'ஆமாம்' என்ற பதிலே கிடைத்தது. நேற்று மாலை நடந்த சம்பவம் நெஞ்சில் அச்செனத் தெரிந்தது. மீண்டும் மாடிப்பக்கம் செல்ல கண்கள் விழைந்தன. ஆனல், எதையோ எண்ணியவனக மண்ணையே பார்த்தவாறு நடந்தான். இனிமேல் அவளை நேருக்கு நேர் சந்திக்காதவாறு தப்பிக்கொள்ள வேண்டும். இருந்தும் இப்படியா பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் நடந்துகொள்வது என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

பார்த்திபனின் உள்ளத்திலும் உடலிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இந் நிலையில் இறுதித் தவணைப்பரீட்சை வந்தது. அது அரசாங்கத்தால் நாடெங்கும் நடத்தப்பெறும் தேர்வுப் பரீட்சையாயிருந்தது. அப்பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறுவதற்காக அந்த வகுப்பின் பல பிரிவுகளில் உள்ள மாணவ மாணவியர் கடுமையாகப் படித்துக்கொண்டிருந்தார்கள். மிகவும் கூடிய புள்ளியைப் பெறுபவர்க்கு விசேஷ பரிசொன்று கல்லூரியில் காத்திருந்தது. இதேவகுப்பில், ஆனால், வேறொரு பிரிவில் இருந்த சுமதியும் இதற்காகத் தன் குறும்புகளை எல்லாம் ஒருபுறம் மூட்டை கட்டி வைத்துவிட்டு மும்முரமாகப் படித்தாள். ஆனால், பரிசோ வேறு யாருக்காகவோ காத்திருந்தது.

பரீட்சை முடிவு வெளியானபோது பலரும் வந்து பார்த்திபனைப் பாராட்டிச் சென்றனர். அந்த மாகாணத்திலேயே கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக் கல்லூரிக்கே புகழ் தேடித்தந்த மாணவனை யார்தான் பாராட்ட மாட்டார்கள். அன்று யாவரும் கூடியிருக்கும் வேளையில், பார்த்திபனின் திறமைபற்றி அதிபர் அறிவித்த போது கல்லூரி மண்டபமே அதிரும்வகையில் கரகோஷம் கிளம்பியது. அறிமுகம் செய்வதற்காகப் பார்த்திபனை அதிபர் மேடைக்கழைத்தபோது, அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. ஒருவாறு மேடையின்மீதேறிக் கூச்சத்துடன் தன் வணக்கத்தைத் தெரிவிக்கும் முகமாகக் குழுமியிருந்தவர்களைப் பார்த்த போது, அங்கு அத்தனை ஆயிரம்பேரிலும் சுமதி ஒருத்தியே தெரிந்தாள். குப்பென்று வியர்த்தது பார்த்திபனுக்கு. எப்படி வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு வந்து இருக்கையில் அமர்ந்தான் என்பது அவனுக்கே தெரியவில்லை. கூட்டம் முடிந்து வந்ததும் அவனது சக மாணவ மாணவியர் அவனுடைய வெற்றியைத் தம் வெற்றியாகக் கருதி மனமாரப் பாராட்டினர். அங்கு ஓடிவந்த சுமதியும் அவனுடைய கையைப்பற்றி, '' என் மனமார்ந்த பாராட்டுக்கள்; நீங்கள் இத்தகைய கெட்டிக்காரரென எனக்கு இவ்வளவுநாளும் தெரியவில்லையே '' என்று பாராட்டினாள். அவள் மலர்க்கரங்களின் தண்மை உணர்ச்சிமிக்க அவனுள்ளத்தில் பாய்ந்து அவன் மனதை என்னவோ செய்தது, '' மிக்க நன்றி '' என்று அவன் உதடுகள் அசைந்தன. அவன் கண்களோ, சுமதியின் அகன்ற கருநீல விழிகளில் சுடர்விட்ட ஒளியை நோக்கின. பாடம் தொடங்கவே அவள் சென்றுவிட்டாள். அவள் விழிகள் மட்டும் அவன் இதயத்தில் தங்கிவிட்டன.

ஆண்டுகளிரண்டு ஓடி ஒளிந்தன. அரும்புமீசை பார்த்திபனின் சிவந்த முகத்திற்கு மேலும் களையைக் கொடுத்தது. வாலிபத்தில் முதற் படிகளிலே வயது அவனை வளர்த்திருந்தது. என்று அந்தக் காயாம்பூக் கண்களை இதயத்தில் இருத்திக்கொண்டானோ, என்று அவள் கரங்களின் குளிர்மையை அனுபவித்தானோ, அன்றிலிருந்தே அவன் இதயத்தின் ஏதோ ஒரு நரம்பு மீட்டப்பெற்று, காதலோ ஆசையோ என்று கூறமுடியாததோர் விசித்திர உணர்வுக்கு ஆளாகியிருந்தான். இளமையின் உணர்வுக்கு எதிர் நீச்சல் போடவேண்டும் என்பதே தெரியாத பருவம். கடந்த இரண்டு ஆண்டுகளில் அவன் சுமதியுடன் நெருங்கிப் பழகவில்லை. ஆனால், தினமும் தொலைவிலிருந்தே, வண்ணச் சிட்டாய்ப் பறந்துதிரியும் அவளைப் பார்க்கத் தவறவில்லை. அவளோ இப்படியோர் இளம் மனது தனக்காக ஏங்குகின்றதென்பதைப் புரியவில்லை. புரிவதற்குச் சந்தர்ப்பமும் ஏற்படவில்லை. ஆனால், காலம் யாருக்குக் காத்திருக்கவில்லை. பருவத்தின் தலைவாசலில் காலெடுத்துவைத்து மலர் சிந்தும் கொடியாக அவள் அசைந்தாள். அமுதினைப் பொழியும் நிலவுபோல் அங்கமெல்லாம் ஓர் அழகு.

குறுகிய விடுமுறைக்காலத்தில் விடுதி மாணவர் பலர் வீடு சென்றிருந்தனர். தனித்திருந்த பார்த்திபன் இரவு உணவு முடிந்து விடுதியைநோக்கிச்சென்றுகொண்டிருந்தான். பூரண நிலவு பாலாகப் பொழிந்துகொண்டிருந்தது. சுமதியின் வீட்டருகாமையாலே போவதை வழக்கமாக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட அவன் இன்றும் அவ்வழியே போய்க்கொண்டிருந்தான். "பார்த்திபன்" என ஓர் இளங்குயில் கூவியது. தன் வீட்டு முன்றலில் நின்றிருந்தாள் சுமதி. சுபாவமான வெட்கம் பின்னிழுக்க அவள்முன் சென்று நின்றான் பார்த்திபன். "அப்பாவும், அம்மாவும் விருந்துக்குப் போயிருக்கிறார்கள். வேலைக்காரி மட்டுமே இருக்கின்றாள். தனியே இருக்கப் பயமாக இருக்கிறது. அவர்கள் வரும்வரையிலும் துணையாக இங்கிருக்கிறீர்களா" என்று கொஞ்சும் குரலிலே கேட்டாள் அந்தக் கன்னி. தினமும் அவளைப் பார்த்திருந்தாலும் அவள் அறியாமல் பார்ப்பதுதான் அவன் வழக்கம். இங்கும் அவள் விழிகளைச் சந்திக்க வலிமையின்றிப் பேச்சிழந்து, ஊம் கொட்டி நின்றான் பார்த்திபன். முன்றலில் இருந்த பிரம்பு நாற்காலியொன்றில் அவள் அமரவே தானும் அமர்ந்தான்.

அவன் அந்த நிலவிலே அமைதியாக அமர்ந்திருந்த விதத்தைக்கண்ட சுமதிக்குதான் அவனை முதன்முதலில் சந்தித்ததும் கேலி செய்ததும் மெல்ல ஞாபகத்திற்கு வந்தது. "ஏன், பார்த்திபன் நான் உங்களை முதன்முதலில் சந்தித்தது நினைவிருக்கின்றதா" என்று கன்னங் குழியக் கேட்டாள். "உங்கள் கேலியை வாழ்நாள் முழுவதும் மறக்கமுடியாதே" என்று பார்த்திபன் ஒரு புதிய துணிவுடன் பதிலளித்தான். "அன்று ஏன் அவ்வாறு தனிமையிலே இருந்தீர்கள். இன்று நீங்கள் இங்கு அமர்ந்திருக்கும்விதமே எனக்கு அன்றைய ஞாபகத்தைக் கொண்டுவந்தது" என்று அவள் கேட்டதற்கு, "வேறொன்றுமில்லை புதிய இடத்தில் வீட்டு ஞாபகமே எனக்கு அடிக்கடி வந்தது. மேலும் எனக்குப் பிடித்தமானதோர் பாடல் எங்கிருந்தோ கேட்டபடியிருந்தது நீங்கள் வந்தது கூடத் தெரியாமல் என்னை மறந்திருந்தேன்" என்று அவன் கூறினான். "ஆமாம். நீங்கள் நன்றாகப் பாடுவீர்கள் எனக் கேள்விப்பட்டேன். எனக்காக இப்போது ஒரு பாடல் பாடுவீர்களா" எனக் குழைந்தாள் சுமதி. எனக்காக என்று அவள் கேட்டபோது தனக்காகவே அவள் சொன்ன சொல் என்று எண்ணி அவன் இதயம் இன்பத்தில் ஆழ்ந்தது.

பார்த்திபனுக்கு இயற்கையிலேயே கனிந்த குரல். ஓகோ என்று மற்றவர் போற்றும் குரல் இல்லாவிடினும், ஏதோ ஒருவகையில் இழைந்து, மிதந்து மற்றவர் இதயத்தை உருக்கும் குரல் அது. அவன் வானத்தை நோக்கி நிமிர்ந்தான். அங்கு நிலவு சிரித்தது. அவனுக்கு மிகவும் பிடித்த, அன்றுகேட்ட பாடலை இசைக்கத் தொடங்கினான். நிலவைச் சிறைகொண்ட நீலக் கண்களை நோக்கி அமுதைப் பொழியும் நிலவே என்று தன்னையும் அறியாத நிலையில் உருகிப்பாடினான். உள்ளத்தையே உருக்கும் அப்பாடல் முடிந்த பின்னும் அங்கு வீசிய நிலவிலே தேங்கி நின்றது போலிருந்தது அவர்களிடையே நிலவிய மௌனம். குனிந்திருந்த தலையைச் சுமதி நிமிர்த்தியபோது அவள் நீலவிழிகள் குளமாயிருந்தன. இயற்கையின் இறுக்கத்திலேயிருக்கும் தென்னம்பாளை மெல்லப் பிளந்ததுபோலச் சுமதியின் இதயத்தில் மெல்லியதோர் இடைவெளியை ஏற்படுத்திவிட்டது அந்த இசை. "எவ்வளவு அழகாகப் பாடுகின்றீர்கள். எனக்கு அழுகையே வந்துவிட்டது" எனத் தழுதழுத்த குரலில் கூறினாள் சுமதி.

"எதற்காக அழுதீர்கள்" என அவன் கேட்டபோது அவளுக்குப் பதில் கூறத் தெரிந்ததோ இல்லையோ, அவள் பெற்றோரின் கார் நுழைவாசல் வழியாக ஒளி பரப்பிக்கொண்டே நுழைந்தது. காரினின்றும் இறங்கிய அதிபர், "யார் பார்த்திபனா? என்ன விடயம்" எனக் கேட்டார். "இல்லை அப்பா தனியாகவிருக்க ஒருமாதிரியாகவிருந்தது. பார்த்திபன் விடுதிக்குப் போகையில் நான்தான் கூப்பிட்டுப் பேசிக்கொண்டிருந்தேன்" என்ற செல்வமகளை அணைத்துக்கொண்டே, "அப்படியா, மிக்க நன்றி" என்றார் அதிபர். 'நல்லிரவாகட்டும்' என்று அவன் விடைபெற்றுப்போய்க் கொண்டிருந்தபோது, "பார்த்திபன் கல்லூரிக்கே பெருமை தேடித்தரக்கூடிய திறமையும், அடக்கமும்கொண்ட இளைஞன்" என்று மனைவிக்குக் கூறிக்கொண்டே வீட்டினுள் சென்றார் அதிபர். அதைக் கேட்டபோது சுமதிக்கு ஏனோ மிகவும் பெருமையாக விருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்திபன் விடுதிக்கு நடந்து வரவில்லை: நிலவிலேதோய்ந்து, தென்றலிலே மிதந்து வந்தான். கனவினிலே சுமதி வந்தாள்; கண்கள் பனிக்க ''எனக்காகப் பாடுங்கள்'' என்றாள். அவன் பாடப் பாட அவள் இசையிலே மயங்கி அவன் மார்பிலே முகம்புதைந்திருந்தாள். விடிந்த பொழுது பார்த்திபன் இளமையின் நிறை மகனாக விருந்தான். அன்றிலிருந்து அவனுக்குப் பார்க்குமிடமெல்லாம் அவள் தோற்றம். எதற்காக என்று தெரியாமல் ஏங்கியவனுக்கு, எதற்காக என்பதுபுரிந்து கொண்டது. விரைவில் இதுபற்றிச் சுமதியோடு பேசவேண்டுமென எண்ணிக்கொண்டான்; சந்தர்ப்பங்கள் துணை செய்த போதும் அவனுடைய நாவிற்கோ துணிவென்பதே வரவில்லை. வேறுவழியில்லாததால் இறுதியில் துணிந்து தன் மனதைத் திறந்து ஒரு கடிதம் எழுதினான். கடிதத்தின் இறுதி வாசகம் ''நான் உன்னைத் தவறாக விளங்கிக்கொண்டிருந்தால் என்னை மன்னித்துவிடு. அப்படியிருந்தால் இக் கடிதத்தை எரித்துவிட்டு, இப்படி ஒரு கடிதம் நான் எழுதினேன் என்பதையே மறந்துவிடு, என்னிடமும் தயவுசெய்து இதுபற்றிப் பேசவேண்டாம்'' என எழுதி, வழக்கமாகப் பரிமாறும் புத்தகங்கள் ஒன்றினுள் வைத்து, அடிக்கும் இதயத்துடன் சுமதியிடம் கொடுத்தான்.

பாடசாலை முடிந்ததும் அவன் தந்த புத்தகத்தையும் தன்னுடைய புத்தகங்களையும் அள்ளிக்கொண்டு ஓட்டமாக வீடு சென்றாள் சுமதி; அன்று பாடசாலை முடிந்ததும் எங்கோ செல்லவேண்டுமென அவளுடைய அப்பா சொல்லியிருந்ததின் காரணமாகவே அவ்வளவு அவசரப்பட்டு ஓடினாள் சுமதி; போனபோக்கிலே புத்தகங்களைத் தன் சுவர் அலுமாரியின் கீழ்த் தட்டிலே வீசிவிட்டுப் புறப்படுவதற்குத் தயாரானாள். அவள் வீசிய வேகத்தில் பார்த்திபனின் கடிதம் புத்தகத்தினின்றும் நழுவி, சுவருக்கும் அலுமாரியின் கீழ்த்தட்டிற்கும் இடையே வீழ்ந்துவிட்டது; தனக்காக ஏங்குபவனின் இதயமே விழுந்து நொறுங்கிவிடப்போவதையறியாத சுமதி, வேகமாகச் செல்லும் காரிலே இன்பமாகச் சென்றுகொண்டிருந்தாள்;

அன்று இரவுமுழுவதும் பார்த்திபன் உறங்கவில்லை. அவன் உறங்கினாலும் அவன் மனம் உறங்கவில்லை. நனவிலே அனுபவிக்கமுடியாததைக் கனவிலே அனுபவித்தான்; அன்று காலையில் அவசரம் அவசரமாகத் தன் வகுப்பில் போயிருந்தான் பார்த்திபன்; அவனுடைய வகுப்பைத் தாண்டியே சுமதி செல்லவேண்டியிருந்ததால் அவள் வரும் வழியையே ஆவலுடன் நோக்கியிருந்தான்; தன் காதலை ஏற்றுக்கொண்டு தனக்குச் சார்பான பதிலையே அவள் தருவாளென முழு நம்பிக்கைகொண்டிருந்தான்; தொலைவில் அவள் தோற்றம் தெரிந்தது. இதயம் ஒரு கணம்நின்று பின் தீவிரமாக அடித்துக்கொள்ள ஆரம்பித்தது;

ஆனால், சுமதியோ நடந்ததுபற்றி ஒன்றுமேயறியாமல் தன் நண்பி மீனாவுடன் பேசியவாறே வந்து கொண்டிருந்தாள்; அன்று அவன் பாட்டைக் கேட்டதிலிருந்து பெண்களுக்கே இயல்பானவகையில் பார்த்திபனை மற்றவர்கள்முன் சந்திக்க சங்கோஜப்பட்டாள். பருவத்தில் மொட்டு மலராவது இயற்கை. மலருக்கு மணமேன் என்பது மலருக்குத் தெரிந்திருக்கவேண்டியதில்லையே! மேலும், சிலநாட்களாகவே தோழி மீனா பார்த்திபனை அவளுடன் சம்பந்தப்படுத்திக் கேலிசெய்ய ஆரம்பித்திருந்தாள். பார்த்திபன் நேற்றுக் கொடுத்த புத்தகத்தை அவள் வாசித்து முடித்திருந்தாள். இன்று அதைத் திருப்பிக் கொடுப்பதற்காகக் காலையிலிருந்தே முயற்சித்தாள் முடியவில்லை. இப்போதும் மீனா கூடவே வருவதால் அவனுடைய வகுப்பிற்குச் செல்லவே வெட்கப்பட்டாள்.

மீனா பார்த்திபனின் வகுப்பில் படிப்பவள். எனவே, அவர்கள் பார்த்திபனின் வகுப்பருகில் வருகையில் ''மீனா தயவுசெய்து இந்தப் புத்தகத்தைப் பார்த்திபனிடம் கொடுத்துவிடு'' என்று சொல்லிவிட்டு, பார்த்திபன் பக்கமே பார்க்காமல் நேரே தன் வகுப்பை நோக்கி நடந்தாள்; தன் வகுப்பைத்தாண்டிச் சுமதி போவதையும், மீனா உள்ளே நுழைவதையும் கண்ட பார்த்திபனின் முகம் வாடிவிட்டது; இதேசமயம் மீனா, சுமதி கொடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகக் கூறிப் புத்தகத்தை அவனிடம் தந்தாள். ஓகோ, தானே தருவதற்கு வெட்கம் வந்துவிட்டதாக்குமென எண்ணிக் கொண்டு, அடிக்கும் இதயத்துடன் தன் இருக்கையில் போய் அமர்ந்துகொண்டான். கடிதத்தை உடன் படிக்காவிட்டாலும், ஒருமுறை பார்த்துவிட்டாவது வைப்போம் என யாரும் பார்க்காதவாறு புத்தகத்தை மெல்லத் திறந்தான். அங்கே கடிதம் எப்படி இருக்கமுடியும்? தன் ஆசைக் கடிதம் அவளின் கண்களிலேயே படவில்லை என்பது பாவம் இவனுக்கெப்படித் தெரியும்? கடிதத்தைக் காணமல் மீண்டும், மீண்டும் பக்கங்களைப் புரட்டியவனுக்கு, புத்தகத்தின் தாள்களே வெறுமையாகத் தெரிந்தன. ஒருவேளை அவளின் கடிதம் எங்கேயாவது விழுந்துவிட்டதோ என ஒருகணம் நினைத்தான். நினைத்தவனுக்குப் பேரிடியாய் நினைவுக்கு வந்தது. அவன் தன் கடிதத்தில் எழுதியிருந்த இறுதி வாசகங்கள்தான். ஆமாம்! நீ என்னை விரும்பாவிடில் இது பற்றியே மறந்துவிடு என்று எழுதியதும், இப்போ யாதொரு கடிதமும் புத்தகத்தினுள் இல்லாததும் இதயத்தில் இரும்பாகக் கனத்தது.

வகுப்புத் தொடங்கி ஆசிரியர் பாடத்தை விளக்கிக்கொண்டிருந்தார். பார்த்திபனின் மனமோ அந்தவேளை யாதொரு உணர்வுமின்றி வரண்டுவிட்டது. அவன் கண்கள் மட்டும் எங்கோ தொலைதூரத்திலே தன்னைவிட்டுப் பிரிந்து பயணம் போகும்வண்ணப் பறவையைத் தொடர்ந்து கொண்டிருந்தன. '' பார்த்திபன், என்ன வீட்டு நினைப்பா? '' என்று ஆசிரியர் கேட்டதும் ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு உட்கார்ந்தான். எனினும் இளம் இதயத்தில் விழுந்த அந்த அடி அவன் போக்கையே மாற்றிவிட்டது. உணவு, உறக்கம் குறையவே உடல்நிலையும் தளர்ந்தது. பாடங்களில் அக்கறையின்மையால் வகுப்பிலும் தரத்தில் தாழத் தொடங்கினன். மற்றவர்களோடு சிரித்துப் பழகுவது நின்றுவிட்டது. தன்னைச் சுற்றி ஒரு துன்பச் சுவரை எழுப்பிக் கொண்டு சதா ஏக்கத்தில் ஆழ்ந்திருந்தான். உணர்ச்சிமிக்க அவன் மனம் இன்பத்தை முழுமையாகவே நுகர்ந்ததுபோல் துன்பத்தையும் அதே அளவிலே உணர்ந்து உருகியது. சுமதியை மீண்டும் சந்திக்காதவாறு நடந்துகொண்டான். இவன் போக்குச் சுமதிக்கும் புரியவில்லை, மற்றைய நண்பர்க்கும் புரியவில்லை.

மற்றவர்களின் இன்பத்தில் மட்டும் பங்குகொண்டு, துன்பத்தில்விட்டு விலகுவது வளர்ந்தவர்கட்கு மட்டும் உரிய சிறப்பல்லவே! நெடும் பயணத்தில் பின் தங்கிவிட்ட பறவைக்காக அதன் இனம் காத்து நிற்பதுமில்லையே. ஒருவேளை அதன் துணை தங்கக்கூடும். ஆனல், பார்த்திபனின் வாழ்வில் தான்தான் துணை என்பதையே அறியாத பருவத்தில் இருந்தது சுமதியின் குற்றமா? எப்போதாவது சுமதி அவனைக் காணுவாள். அவன் அவளைக் கண்டதும் காணுததுபோல் பராமுகமாய் இருப்பதைக் காண அவளுக்கு மனத்தை என்னவோ செய்யும். இப்படியே ஒருவர் நிலை மற்றவர்க்குப் புரியாமல் ஒருவர் இதயம் மற்றவர்க்காக ஏங்கும் நிலையில் காலமும் கடந்துசென்றது. அவ்வாண்டின் இறுதிப் பரீட்சையும் வந்தது. பாடங்களில் கவனம் செலுத்தாதவன் எப்படித் தேற முடியும்? முன்பு எவ்வளவுக்குப் புகழ் கிடைத்ததோ, இப்போது அவ்வளவுக்கு மற்றவர்களுடைய அநுதாபந்தான் கிடைத்தது. மென்மையான உள்ளங் கொண்ட பார்த்திபனுக்கு இந்த நிலையைத் தாங்கவே முடியவில்லை. மேலும், மற்றவர் அநுதாபமே அதிக துன்பத்தைக் கொடுத்தது. கல்லூரியை விட்டே போய்விட வேண்டும் என்று தோன்றியது.

ஆனல், போவதற்குமுன் ஒரே ஒருமுறை சுமதியிடம் பேசி, நான் போகிறேன் என்று கூறத் துடித்தது அவன் உள்ளம். என்னை விரும்பாதவளிடம், என் இசையை மட்டும் இரசித்து, என் இதயத்தை நொறுக்கியவளை நான் ஏன் காணவேண்டும். நான் பேசினலும், அவள் தான் முகங் கொடுத்துப் பேசுவாளா? என்று புரட்சி செய்தது அறிவு. அறிவுக்கும், உணர்வுக்கும் நடந்த போராட்டத்தில் அறிவே வென்றது. ஆனல், அவள் அறியாமல் ஒரேயொரு தடவை அவளைப் பார்த்துவிட்டு, அவள் உருவத்தை இதயத்திலே பதிந்து அந்தத் துன்பந்தோய்ந்த சுகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடனே சென்றுவிட வேண்டுமென்று விழைந்தான்.

அன்று மாலை கல்லூரிப் புத்தகசாலை அருகில் நின்றுகொண்டிருந்தாள் சுமதி. அவள் கையிலே அப்போதுதான் வாங்கிய ஒரு "ஆட்ரோகிராப்" இருந்தது. தற்செயலாக அந்தப்பக்கம் வந்த பார்த்திபனும் அவளும் நேருக்குநேர் சந்தித்துக் கொண்டனர். அவன் விலகிப்போய்விட எத்தனித்தபோது, 'பார்த்திபன்' என அழைத்தாள் சுமதி. என்னைக் காணும் போதெல்லாம் எதற்காக விலகிப் போய் விடுகிறீர்கள் என்று கேட்பதற்கு எண்ணி, அங்கு தயங்கி நின்றவனை நெருங்கினாள் சுமதி. கேட்க நினைத்ததை ஏனோ கேட்க முடியவில்லை. "ஏன், பார்த்திபன் படிக்கவில்லையா? நீங்கள் தேருமல்போவீர்கள் என நான்சிறிதளவும் எதிர்பார்க்கவில்லை" என்று அனுதாபம் தோய்ந்த குரலில்கேட்டாள் சுமதி. அவளுடைய அனுதாபமே அவனை எரிகணையாகத் தாக்கியது. அவனுடைய கண்கள் கலங்கின என்றேசொல்ல வேண்டும். அவன் "எதிர்பார்ப்பதெல்லாம் எப்போதும் நடக்கின்றனவா?" என்றபோது சுமதிக்கு மௌனம் சாதிப்பதைவிட வேறொன்றும் தோன்றவில்லை. அவள் தலைதாழ்த்தி, இமை கவிழ்த்து நின்றதை அவன் அப்படியே மனதில் வாங்கிக் கொண்டான். அவளிடம் எல்லாவற்றையும் சொல்லிவிடவேண்டுமென்று உள்ளத்திலோர் உத்வேகம் பிறந்தது. "சுமதி, நான் உங்களிடம் ஒன்று சொல்லவேண்டும்" என்றான்.

நீந்தும் விழிகளால் என்ன என்பது போல் அவனைப் பார்த்தாள். ஆனால், அவனுக்கோ நினைத்ததை ஏனோ சொல்ல முடியவில்லை. சுமதியோ அவன் இதயத்தைத் திறந்து, 'உன்னை விரும்புகிறேன்' என்று சொல்லமாட்டானா என ஏங்கினாள். அவனோ "நான் இன்று இந்தக்கல்லூரியை விட்டே போகின்றேன்" என்றான். ஏன் என்று கேட்க வாயெடுத்தாள் அவளாலும் ஏனோ கேட்க முடியவில்லை. சட்டென்று தன் கையிலிருந்த 'ஆட்டோவை' அவனிடம் நீட்டி "இதில் உங்கள் நினைவாக ஏதும் எழுதமாட்டீர்களா?" என்று அவனிடம் இறைஞ்சினாள். அதை வேண்டிய பார்த்திபனுக்கு என்ன எழுதுவதென்றே முதலில் புரியவில்லை. பேனாவை எடுத்து, அவளை உற்றுநோக்கினான். உள்ளத்தினின்றும் உணர்ச்சி கொப்பளித்தது. வார்த்தை வரிவடிவமாகப் பிறந்தது.

'மீண்டும் எப்போதாவது உங்களைச் சந்திக்க நேர்ந்தால்,

என்னையே நீங்கள் மறந்திருக்கவேண்டும்.

என்ற ஆசையுடன் போகின்றேன்'—
பார்த்திபன். எழுதிமுடித்தவன் அவள் கைகளிலே தான் எழுதியதைக் கொடுத்தான், சுமதி சிரந்தாழ்த்தி அதனைப் படித்தாள். இதயத்தை அப்படியே கசக்கிப் பிழிந்தன அந்த வரிகள். படித்துவிட்டுக் கலங்கிய கண்களுடன் நிமிர்ந்த சுமதிக்குக் கண்ணீர்த் திரையினூடாகப் பிரிந்து, போய்க்கொண்டிருக்கும் அவனது உருவமே தெரிந்தது. வீரிட்டுக்கூவி அவனை அழைக்கவேண்டும் போலிருந்தது. ஆனால், அழைக்காமலே நின்றுகொண்டிருந்தாள். அழுதைப்பொழியும் நிலவுக்கு ஆசைப்பட்டவன், அந்த நிலவுக்கும் ஓர் உள்ளம் உண்டு என்பதை அறியாமல் போய்க்கொண்டிருந்தான்.

— செல்வி. ம. தேசரத்தினம்,
விடுகை வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை கற்பித்தல்

**பண்டிதர் சு. இராசையா.**

"நவில்தொறும் நூல்நயம்போலும்
பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு"

என்பது வள்ளுவர் வாய்மொழி. ஆயுந் தொறுந் தொறும் இன்பந்தருவது அருந் தமிழ். எத்தனைமுறை படித்தாலும் எவ்வித சலிப்பும் தராத தன்மை வாய்ந்ததே தமிழ் இலக்கியமாகும். ஒரோரு காலைக்கு ஒருகால் உயர்ந்தின்பம் ஓங்குவதும் அவ்விலக்கியமே.

இவ்விலக்கியம் கவிதை வடிவம் உரைநடை வடிவம் என இரு வடிவங்களில் அமையும். கவிதை வடிவம் அழகுக்கூடாக உண்மையை உணர்த்துவது; செறிவும் சுருக்கமும் கொண்டது; கற்பனையை அடிப்படையாக உள்ளது; யாப்பிலக்கண அமைதியானது. உரைநடை வடிவம் இவ்வித இயல்புகளின்றி நெகிழ்ச்சி யுடைமையால் உண்மையை மாத்திரம் உரைப்பது. எனவே, தாய்மொழியில் கவிதையே தனிச் சிறப்புடையது.

கவிதையில் ஓசைநயம், சொல்நயம், பொருள்நயம் என விசேட நயங்கள் உள்ளன. ஆகையால், மாணவர்கட்கு இளமையிலிருந்தே கவிதை கற்பித்தல் அவசியம். கவிஞன் உளத்தை மாணவன் அறிதல் வேண்டும்.

**கவிதை கற்பித்தலின் நோக்கங்கள்:** கவிஞனின் உணர்ச்சிகள், அவன் கண்ட இயற்கையழகுகள், மக்கள் மனப்பான்மை என்பவற்றை அறிதலே சிறந்த நோக்கமாகக் கொள்ள வேண்டும். கவிதை பல வாழ்க்கைகளை அழகுபொருந்தச் சித்தரிப்பது. கவிஞனின் மன எழுச்சியையும் கற்பனை ஆற்றலையும் காணவேண்டும். நற் கருப்பஞ்சாற்றினிலே தேன்கலந்து, பால் கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, ஊன்கலந்து, உயிர்கலந்து உவட்டாமல் இனிக்கும் ஆற்றலை மாணவன் உணரவேண்டும். ஆசிரியனுக்கு நாவூற, மாணவனுக்கு அது வழிந்து ஓடவேண்டும். கற்பனையை வளம்படுத்தி அவனிடத்து ஒரு தனித்தன்மையைக் காணவேண்டும்.

**கவிதை கற்பிக்கும் ஆசிரியர்கள்:** கவிதை இன்பந் துய்ப்பவராகவும், இசையுடன் படிக்கும் ஆற்றலுடையவராகவும், தான்பெற்ற இன்பத்தை மாணவருக்கு எடுத்துரைக்கும் தன்மையுடையவராகவும் ஆசிரியர் இருத்தல் வேண்டும். தொட்டனைத்தூறும் மணற்கேணிபோல ஆசிரியன் அமைதல் வேண்டும். சந்தநயம், கற்பனையாற்றல், அணிநயம், சொல்நயம், பொருள் நயம் எல்லாம் அறிந்தவராகுதல் வேண்டும். பல பூக்களிலுமுள்ள தேனைக்கொண்டு வந்து சேர்க்கும் தேனீபோல, சிறந்த கவிதைகளைச் சேர்த்து வைக்கும் இயல்புடையராதல் வேண்டும். கூடிக்குடித்து மகிழும் குடிகாரன்போலவும் தன் மாணவனுடன் கவிதையைக் கலந்துரையாடிச் சுவைக்கும் இயல்புடையவனுகவும் இருத்தல் வேண்டும். கவிதை கற்பிக்கும் ஆசிரியர் சிலர் வாய்விட்டுப் படிப்பதேயில்லை. அவர்களுக்கு உண்மையில் பொருள் தெரியாது. தமக்குப் பொருத்தமற்ற தொழிலில் ஈடுபட்டுச் சமூகத்திற்கே பெரும் இழுக்கினைத் தேடுகின்றனர். இவர்கள் இத்தொழிலை முற்றாக விடுவது மிக நல்லது.

**கவிதையைத் தொடங்கும் முறைகள்:** வேண்டாத வேற்றுரை பகர்ந்து பேச்சாளரைப் பேசவிடாது தடுக்கும் சில தலைவர்களைப்போல, ஆரம்பவுரையில் நேரத்தை எடுப்பவர்களும் உண்டு. அப்படிக் கவிதையில் ஒருபோதும் எடுக்கவே கூடாது. இக் கவிதையின் சந்தர்ப்பத்தைச் சுருக்கிக் கூற வேண்டும். கவிஞனின் வரலாறு கூறித் தொடங்குதல் ஏற்றதன்று. ஆனால் கவிச் சுவைக்கு ஏற்றதாயின் அதனை அளவாகக் கையாளுதல் நல்லது. மாடங்களுக்குச் சித்திரமும் மாநகர்களுக்குக் கோபுரமும் அமைதல்போல முகவுரையும் நன்கு அமைதல் வேண்டும். இம்முகவுரைதான் கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைத் தூக்கி வைக்கவல்லது; சில பாடல் களுக்குச் சூழ்நிலையும் காட்டவேண்டும்.

**"என்று வருவான் எமனென்றெதிர் நோக்கி**
**நின்று தளர்கின்றேன் நித்தமுமே—மன்**
**நடங்கண்ட ஈசன் நடராசன் பாதத் [றில்**
**திடங்கண்டு வைநீ எமக்கு."**

இது பண்டிதமணி கதிரேசன் செட்டியார் இறந்த செய்தி கேட்டுக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடிய பாட்டு. இன்னும் கடின பதங்களுக்கு கருத்துப் படித்த பின் சிலர் தொடங்குகிறார்கள். தனியாக இருக்கும் குண்டு வேறு, துப்பாக்கிக்குள் இருக்கும் குண்டு வேறு என்ற கருத்துணராதவர்கள் இவர்கள்.

**கவிதையை விளக்கும் முறை:** கவிதைகளைப் பாவத்துடன் இருமுறையாவது வாசித்துக்காட்டி அதன்பின் ஓசையோடு படித்துக்காட்டவேண்டும்; குறைந்தது இருமுறையாதல் வேண்டும்; அதன்பின் முடிக்குஞ் சொல்லிலிருந்து வினாக்கள் உண்டாக வேண்டும்.

**சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரங் கரிய செம்மல்**
**அல்லொக்கும் நிறத்தினாள்மேல் விடுதலும் வயிரக் குன்றக்**
**கல்லொக்கும் நெஞ்சிற் றங்காது அப்புறங் கழன்று கல்லாப்**
**புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்றே;**

போயிற்று, எது போயிற்று? எவ்வாறு போயிற்று? தங்காது, எங்கே தங்காது? என்றிவ்விதமாக வினவலாம். அரும்பதங்களை அவ்வப்போதே விளக்கவேண்டும்; இனிக் கருத்தறிந்ததும் பொருளைத் தொகுத்து முடிக்கலாம். தனித்தனிச் சீர்களாகப் பிரித்தலாவது, அவற்றுக்குப் பொருள் கூறவாவது கூடாது.

**நயத்தல்:** கவிதையில் நயத்தலே விசேடமானது, நயக்கும்போது கவிதையைப் பாடலாம். இவ்வாறு கூறாமல் இவ்வாறு கூறியது என்ன நயம்? இவ்வித வினாக்கள் இடலாம். 'உடல் புகுந்து தடவியதோ ஒருவன் வாளி.' இதில் தடவியது என்று கூறுவதன் காரணமென்ன? இன்னும் அணி நயங்களையும் காட்டலாம். இதிலேதான் ஒப்பிடுகை வரலாம். "அரிச்சந்திரனென்றே அடாத சொற் சொன்னையே; ஆர்க்கடிமையாயினேன்; ஆர்கையிற் பெண்டு விற்றேன்." அடாதசொல் இதிலமைந்துள்ள நயமென்ன? என்றிவ்வாறு வினவலாம்?

**கவிதை கற்பிப்பதில் வேண்டாதவை:** உரைநடைபோற் கற்பிக்கக்கூடாது; சிதைத்துப் பொருள் கூறக்கூடாது; நயக்கும் பண்பை இளம் மாணவரிடம் எதிர் பார்க்கக்கூடாது. வேண்டா வெறுப்பாக எதையும் செய்யக்கூடாது. மாணவரிடம் ஆற்றலைச் சிதைக்கக்கூடாது. நெட்டுருச் செய்வதைக் கட்டாயப்படுத்தக் கூடாது;

கவிதையென்பது சிறந்த பாடம். அதனைச் சிறந்தமுறையிற் கற்பிக்கவேண்டும். இல்லாவிட்டால் மாணவர் தேர்ச்சி குன்றுவர். அந்த ஆசிரியர் கேவலமான நிலையில் மதிக்கப்படுவர். எந்த ஆசிரியரும் தனக்குப் பாடவராது என்றிருத்தல் கூடாது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அழகன்

திங்கட்கிழமை காலையிலே
திடீரென வந்தது பெருமழையே
எங்கும் வெள்ளம் போட்டிடவே
நன்ருய் நனைந்த நாய்க்குட்டி

தயங்கித் தயங்கி வந்தெங்கள்
வாசல் அருகே ஒதுங்கியதே
அயலில் இருந்த நான் அதனை
அணைத்தே கையில் எடுத்தேனே.

எடுத்தே அதனீரந் துடைத்து
உணவும் கொடுக்கத் துணிந்து சென்றேன்.
படுத்திருந்த என் பாட்டி
"அடசீ அதென்ன கறுமம்" என்ருள்.

எட்டிப் பார்த்த என் அன்னை
வெளியே அதைநீ துரத்து என்ருள்.
பட்டினி கிடந்த நாய்க்குட்டி
பட பட என்றே நடுங்கியதே.

கட்டிலி லிருந்த அப்பரிடம்
குட்டியைக் காட்டச் சென்றேனே.
குட்டியைப் பார்த்த என் அப்பர்
"கொட்டிலில் விட்டுண விடு" என்ருர்.

அன்று முதல் அக் குட்டிதனை
"அழகன்" எனவே அழைத்து வந்தேன்.
அழகன் என்றவுடன் என்றும்
அழகாய் வாலைக் குழைத்துவரும்.

இன்னும் அதை நான் கண்டவுடன்
இனிய பாரதி பாட்டுவரும்.
நன்று நன்று என் அப்பர்
இல்லாவிட்டால் இது வருமோ.

திரு. க. இராசரத்தினம்,
பலாலி ஆசிரியர் கழகம்,
வசாவிளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதம் கசப்பக் காரணம் என்ன ?

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்னும் ஆன்றோர் வாக்கிற்கிணங்க, எண் கல்வியுலகில் முதலிடத்தைப் பெறுகின்றது. எனவே, எண் மனித வாழ்க்கைக்கு மிகவும் அவசியம் என்பது தெள்ளிதிற் புலனாகின்றது. எண்ணம் என்னும் போது அந்த நினைப்பிற்குள் எண்ணுதல் கரந்து கிடக்கின்றது. எண்ணத்தின் வளர்ச்சி கணிதத்தின் வளர்ச்சியாகும். முன்னேறிய இன்றைய சமூகத்தின் விஞ்ஞான விளைவுகள் எல்லாம் எண்ணின் அடிப்படையிற்றான் உருவாகியுள்ளன. கணித்தல் எல்லாவற்றிலும் இரண்டறக் கலந்துள்ளது என்பது புலனாகின்றது. ஒவ்வொரு பிரசையும் தனது அன்றாட வாழ்க்கைக்கு வேண்டிய கணிதத்தை அறிந்திருக்க வேண்டியதவசியம். வாழ்க்கையைப் பூரணத்துவம் பெறச் செய்யும் கணிதம் ஒரு சில மாணவருடைய உள்ளத்தில் வேம்பாகிவிடுகிறது. கணித பாடம் கல்வியின் நோக்கத்தை முறியடிக்கும் அளவிற்கு மாணவரிடையே வெறுப்புணர்ச்சியை வளர்த்து விடுகிறது. ஆசிரியர்களின் அனுபவத்தில் இது புலனாகாது இருக்கமுடியாது. இதற்கு ஒருசில ஆசிரியர்களும் காரணம் என்று தயக்கமின்றிக் கூறலாம். இந்நிலை வளர்வதற்குப் பல காரணங்களுண்டு.

பாலர் வகுப்புக்கு கணிதம் கற்பிக்கும் போது கவர்ச்சிகரமான முறைகள் கையாளப்படல் வேண்டும். மாணவரின் இயல்பூக்கங்களைப் பூர்த்திசெய்யக்கூடிய முறை விளையாட்டு முறையே. இம் முறையைக் கையாளுவதால் மாணவர் விருப்பத்துடன் கணிதத்தைக் கற்பர். இதற்கு வேண்டிய உபகரணங்களையும் கவர்ச்சியாக அமைத்தல் அவசியம். விளையாட்டு முறையைக் கையாளும்போது மனதில் குதூகலமும், உடலுக்கு வேண்டிய பயிற்சிகளையும் பெற முடிகிறது.

கட்புல சாதனங்களைக் கையாண்டு கற்பித்தால் விரைவாகக் கற்றுக்கொள்வர். இப்படிக் கற்ற விஷயத்தை மறக்கவும்மாட்டார்கள். மாணவரின் புலன்கள் சிதறுண்டு போவதையும் இச் சாதனங்களின் மூலம் தடுத்து நிறுத்திக் கற்பிப்பது இலகுவாகின்றது. பாடத்தில் கவனமில்லாத மாணவரிடையே தேய்வு ஏற்படாதிருத்தற்குக் கற்ற விஷயங்கள் அடிக்கடி அண்மைப்படுத்தப்படல் வேண்டும். கற்றலில் தேய்வு ஏற்படாதவிடத்தில் மாணவர் தேர்ச்சி நன்கு அமையும். இதனால் மாணவர்களுக்குக் கற்றலில் ஆர்வம் உண்டாகும்.

மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்கீனமாக இருப்பதும் கணிதத்தில் வெறுப்பை ஏற்படுத்தலாம். ஒரு புதிய பாடம் படிப்பிக்கும்போது வகுப்பிற்கு வராத மாணவனுக்கு அந்தப் பாடத்தைக் கிரகித்துக் கொள்ள முடியாது போய்விடுகிறது. எனவே, அதை அவன் வெறுக்கின்றான். பலமுறை வகுப்பிற்கு வரத் தவறும் மாணவன் நாளடைவில் கணித பாடத்தையே வெறுக்கின்றான். எனவே, மாணவர் பாடசாலைக்கு ஒழுங்காக வந்தாற்றான் கணித பாடம் இலகுவாகும்.

குறியீடுகளை மாணவர் தெளிவாக விளங்கிக்கொள்ளுதல் அவசியம். குறியீடுகளைச் சரியாகக் கையாளமுடியாமையால் கணக்குகளைச் சரியாகச் செய்ய முடியாது போகிறது. இதனால் வளர்ச்சி தடைப்படுகிறது. எனவே, குறியீடுகளைச் சரியாகப் போடத் தெளிவான நிலையில் மாணவரைப் பயிற்றல் வேண்டும். தெளிவான, திட்டமான பயிற்சி கற்றலுக்கு மாணவர்களை ஊக்குவிக்கிறது.

நீண்ட முறையில் கணக்குகளைச் செய்யும்போது மனதில் சலிப்பு ஏற்படுவது இயற்கை. எனவே, சலிப்பு ஏற்படாவண்ணம் இலகுவான, சுருக்கமான முறைகளைக் கொண்டு கணக்குகளைச் செய்யக் கற்பித்தால் சலிப்பின்றிக் கணக்குகளைச் செய்வர். இதனால் விரைவாகவும், குறைந்த நேரத்திலும் செய்து முடிப்பதால் மனதில் மகிழ்ச்சி உண்டாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பவை பயனுடையனவாக இருந் தால் கற்றல் இலகுவாகின்றது எனப் பயன் விதி கூறுகின்றது; கற்றல் மாத்திரமின்றிக் கற்பித்தலும் இலகுவாகின்றது; எனவே, வாழ்க்கைத்தேவையுடனும் அனுபவத்துட னும் தொடர்புபடுத்திக் கற்பித்தல் அவசி யம். இதனுல் கணிதத்தைக் கற்கவேண்டு மென்னும் ஆவல் உண்டாகின்றது.

எண்பாடம் அறிவுப்பாடம் ஆகையால் நேரசூசியில் இப் பாட நேரம் காலையில் முதல் பாடமாக இடம் பெறல் வேண்டும். காலையில் புத்துணர்ச்சியுடன் இருக்கும் மாணவர் எண் பாடத்தில் சிந்தனையைச் செலுத்தவும் பயனடையவும் முடிகிறது. மற்றப் பாடங்களைப் படித்தும், விளையாடி யும் களைப்புற்றிருக்கும் நிலையில் கணித பாடங் கற்றல், கற்பித்தல் பூரண பலனைத் தரமாட்டாது. களைப்புற்ற நிலையில் கற் பித்தால் வெறுப்பே வளரும். பாடத்தை ஆசிரியர் நன்கு ஆயத்தம் செய்து, கவர்ச்சி யான முறையைக் கையாண்டு கற்பித்தால் மாணவர் கணிதத்தில் கசப்புக் கொள்ளக் காரணம் இல்லாது போய்விடுகிறது.

**செல்வி. சி. புனிதவதி**
(விடுகை வருடம்)

கோழைத்தனத்திற்கும் அசட்டுத் துணிச்சலுக்கும் இடையில் இருப்பது வீரம். பணிவுக்கும் கர்வத்துக் கும் இடையில் இருப்பது அடக்கம். துக்கத்துக்கும் சளசளப்புக்கும் இடையில் இருப்பது சத்தியம். இவ் வாறுன இடைக்குணங்களெல்லாம் அறிவுக்குப் பொருத்தமானவை; இன்பந் தருபவை.

— அரிஸ் டாலிஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணும் சிறுரும்

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பது முதுமொழி. இவை இரண்டிலும் எண்ணே உலகின் கண் முதலிடம் வகிப்பது என்ருல் மிகையாகாது. இவ்வெண் கண்ணிலும் சிறந்ததென்று கூடச் சொல்லலாம். இவ்வரிய எண்ணினைப் பற்றி இங்கு சிறிது சிந்திப்போம்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்கிருர் இரண்டடிகளால் உலகளந்த வள்ளுவனுர். இதனின்றும் எண்ணின் முதன்மை பெறப்படும். சிறுவர்க்கு எண் மிகவும் இன்றியமையாதது. துள்ளித்திரியும் பள்ளிச் சிறுவர் எண்ணைக் கற்காது விடில் அவர் வாழ்வில் என்ன பயனும் இல்லை எனலாம். வாழ்க்கையைச் செவ்வனே நடாத்துவதற்கு முக்கியமானது எண். அப்படியாயின் எண் தெரியாத சிறுவன் என்ன செய்வான்? தனது தொழிலையோ, உத்தியோகத்தையோ இன்றேல் சாதாரணமாகத்தான் இல்லறத்தையோ நடாத்த, சீவனுேபாயத்தைச் சீராக்க எண்ணின்றி முடியுமா? எனவே இவ்வெண் பாடம் இளமையில் கற்கப்படவேண்டிய தொன்று.

உலகின்கண் எந்த விடயத்தையும் சரியான முறைப்படி கணக்குப்பண்ணித் திட்டமிட்டுச் செய்வதற்கு எண் எத்துணை இன்றியமையாததென்பதை நாம் எமது நாளாந்த வாழ்க்கையில் காணமுடிகிறது. ஆகையால் ஆசிரியராகிய நாம் சிறுவர் எண்ணைச் சரியாகக் கணிப்பதற்கு அவர்களுக்கு வழி காட்ட வேண்டும். சமுதாயத்தில் ஒரு சிறந்த மாணவனை உருவாக்குபவன் ஆசிரியனே. மாணவனுகிய பயிரை நன்கு செழித்து வளரச் செய்வதற்கு எண் எழுத்து ஆகிய பசளைகளே முக்கியமானவை. ஆசிரியர் அறிவு என்னும் நீரை ஊற்றி இப் பசளைகளை இட்டு மாணவன் என்னும் பயிரைச் செழிக்கச் செய்யவேண்டும். வளரும் இளம் சிறுர்களைப் பொறுத்தமட்டில் அவர்களது கணிதத்திறமை அல்லது கணிதத்தில் மிகக்குறைந்த தரம் காணப்படின் அவற்றை நிறைவு செய்யும் கடமை ஆசிரியருடையது. ஆசிரியர் ஆற்றலை வளர்ப்பவர் மாத்திரமல்ல, ஆர்வத்தைத் தூண்டுபவரும் கூட. ஒரு மாணவனைப் போதிய திறமையுடையவனுக்கி அவனை ஒரு கணித மேதையாக்குவதற்கு ஆசிரியரது நற்பணியும் அன்னுரது அயராத உழைப்பும் இன்றியமையாததாகும்.

கணிதத்தைப் பெரியவராயினுஞ் சரி சிறுராயினுஞ் சரி பிரயோகிக்கும் தன்மையை ஈண்டாராய்வோமாஞல் அஃது ஒன்றல்ல, இரண்டல்ல; அளவிட முடியாதன. பண்டைக் காலத்தில் கணிதம் முதியவர்களின் அனுபவ வாயிலாக நடைமுறைக்கு வந்தன. கால், அரை, சாண், முழம், பாகம் என்னும் சொற்கள் இன்றும் எம் பாடசாலைகளில் சிறுவர்களின் வாயில் ஒலித்துக் கொண்டிருப்பதை நாம் காண்கிறேம்.

இன்னும் இளஞ் சிறுர்களை மகிழ்ச்சியுடையவராக்குவதற்கும் அவர்கள் சந்தோஷமான மெய்ப்பாட்டுடன் கற்பதற்கும் கணிதத்தைப் பாட்டு ரூபத்தில் கற்பிக்கலாம். சிறுவர் ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணவும், இலக்கங்களை ஒன்றன்பின் ஒன்ருகச் சொல்லவும் சிறிது தயங்குவார்கள். இந்நிலையில் பாடல்களை எண்ணுடன் இணைத்து உருவாக்கிக் கற்பித்தால் சிறுவர் மகிழ்ச்சியுடன் கற்பர். படிக்கும் பாடமும் மனதில் பதியும். எண் கற்பிக்கும்பொழுது எப்படி ஒரு நிலாப்பாட்டுடன் இணைத்துக் கற்பிக்கிருர் என்பதை ஈண்டு காணலாம்.

"வெள்ளை வெள்ளை நிலவே
வெளியே வந்து உலவே
ஒன்று, இரண்டு, மூன்று
என்பதற்குள் தோன்று
நாலு, ஐந்து, ஆறு
நாங்கள் சொன்னேம் பாரு
ஏழு, எட்டு, ஒன்பது
ஏன் வராமல் நிற்கிருய்?
பத்து, நூறு, ஆயிரம்
பறந்து வா நீ சீக்கிரம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஆசிரியர் இலக்கத்தைச் சொல்லாமல் பாட்டு மூலம் பாடுவதால் பாலர்கள் பாடலைப் பரவசத்தோடு கற்கிறார்கள்; அத்துடன் எண்ணையும் இலக்கியத்தையும் இணைத்துக் கற்கிறார்கள். எண் கற்கிறோம் என்ற ஏக்கமும், தியக்கமும் அடையமாட்டார்கள்.

அப்பாலும் பணத்தை எண்ணிப் பலருக்குக் கொடுக்கவும், நீளம், அகலம், கனம், பரப்பு, செறிவு, திணிவு, அடர்த்தி என்பவற்றைப் பொருட்களினின்று கணிக்கும் தன்மையும், வரவு செலவு வாழ்க்கைத் தரம் என்பவற்றின் ஏற்றம் இறக்கம் என்பது பற்றிய அறிவும் வளர்வதற்குக் கணிதம் இன்றியமையாதது; நந் நாட்டு மக்கள் "ஆற்றிலிடினும் அளந்திடுக" என்று கூறுவர். இக்கூற்று ஒன்றே மனித வாழ்விற்குக் கணிதம் எவ்வளவு இன்றியமையாதது என்பதைக் கூறும்;

எனவே, சிறார் மனதைச் செப்பனிடும் கணிதம் ஆசிரிய - மாணவ உலகில் மென்மேலும் உயர்ந்து வளர்ந்து பச்சிளஞ் சிறுவரின் பசிய மனத்தில் நன்கு வேரூன்றி அன்னாரையும் கல்வியையும் வளம்படுத்தி என்றும் குன்றாப் புகழடைவதாக.

வாழ்க சிறார்!
வாழிய கணித சாத்திரம்!!

செல்வி. அம்பாலிகை விசுவலிங்கம்
(விடுகை வருடம்)

---

பரிமாறப்படுவதை ஏற்றுக்கொள்ளாமல் அது கொண்டுவா, இது கொண்டுவா என்று இல்லாததை எல்லாம் விருந்தாளி கேட்க ஆரம்பிக்கலாமா? வாழ்க்கையில் எத்தனையோ இன்பங்கள் நமக்கு வழங்கப்பட்டிருக்கையில் வழங்கப்படாதவற்றிற்காக வேண்டுவது முறையாகுமா?

— எபிக்டெடஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் உலர்ப்பிரதேசம்

இலங்கையின் உலர்ப்பிரதேசம் இத்தீவின் மூன்றில் இரண்டு (⅔) பகுதியை அடக்கியுள்ளது. தெதுருஓயா தொடங்கி வளவை கங்கை ஈருகக் கிழக்குப்புறமாக உள்ள பிரதேசம் இப்பகுதிக்குள் அடங்கும். இதன் மேற்கு எல்லையாக 75" சராசரி மழை வீழ்ச்சிக் கோடு அமைந்துள்ளது. இவ்வுலர்ப் பிரதேசம் பெரும்பாலும் சமதரையாகவே காணப்படுகின்றது. புவிப் பௌதிக உறுப் பின்படி இப்பிரதேசத்தை மூன்று பிரிவுகளாக வகுக்கலாம்.

அவையாவன: 1, வட சம நிலம், 2. கிழக்குச் சமநிலம், 3. மத்திய மலைப் பகுதியின் கிழக்கு மலைச்சாரல்கள்.

வடசமநிலம் பெரும்பாலும் 500 அடிக்குக் கீழ்ப்பட்ட நிலமாகும். தெற்கில் சிறு குன்றுத் தொடர்கள் உள. கிழக்குச் சம நிலத்திலே திருகோணமலைப் பகுதியில் மலைத்தொடர்கள் உள்ளன. ஆனுல், இவற்றின் உயரம் அதிகமில்லை. 500 அடிக்குக் கீழாகவே உள்ளது. இப்பகுதி தவிர்ந்த ஏனைய பகுதி சமநிலமாகவோ, தொடரலை நிலமாகவோ காணப்படுகின்றது. கிழக்குப் பகுதிக் கரையோரம் நேரானதாக அமையாது சிறுசிறு கடல் நீரேரிகளையும், குடாக்களையும் கொண்டமைந்துள்ளது. இதனுல் இங்கு வள்ளங்கள், பெரிய கப்பல்கள் ஆதியன தங்கக்கூடியதாக இருக்கின்றது. மத்திய மலையின் கிழக்கு மலைச்சாரற் பகுதியே உயரத்திற் கூடியதாகக் காணப்படுகின்றது. ஊவாப் பள்ளத்தாக்கின் கிழக்கு எல்லைப் பகுதி இப்பிரதேசத்திற்குள் அடங்குகிறது. இப்பகுதியின் சராசரி உயரம் 3,500 அடியாகும்.

இப்பகுதியின் காலநிலையை நோக்கின் வெப்பநிலை 80° F-க்குக் கூடியதாகவே காணப்படுகின்றது. இவ் உயர் வெப்ப நிலைக்குக் காரணம், இப்பகுதி இந்திய உப கண்டத்திற்கு அண்மையில் அமைந்திருப்பதனுலும், உலர்க்காற்றுக்களினுல்தாக்கப் படுவதினுலும், மழை வீழ்ச்சிக் குறைவினுலுமேஎன்க. வெப்பநிலை எப்பகுதியிலும் 80°-க்குக் குறைவானதாக இல்லை. இவ்வுலர்ப்பிரதேசத்தின் மழைவீழ்ச்சி 75"க்குக் குறைவாகவேயுள்ளது. இவை வடகீழ்ப் பருவக் காற்றினுலும், மேற் காவுகையினுலும், சூருவளியினுலுமே அதிகமான மழையைப் பெறுகின்றது. தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்ருனது தென்மேற் பகுதிகளுக்கு அதிக மழையைக் கொடுத்துவிட்டு, கிழக்குப்பகுதிக்கு வரண்ட காற்ருக வீசுகின்றது. இதனுல் தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றுக்காலம் உலர்ப் பிரதேசத்தில் உலர் மாதங்களாகக் காணப்படுகிறது. வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக்காற்று நவம்பர் தொடக்கம் ஜனவரி வரை பெரும்பான்மை மழையைக் கொடுக்கிறது. இப் பருவம் இப் பிரதேசத்தின் ஈரலிப்பான பருவமாகும். உதாரணமாக, இப் பருவக் காற்றினுல் அநுராதபுரம் 57" மழையையும், புத்தளம் 44" மழையையும், மட்டக்களப்பு 69" மழையையும், திருகோணமலை 65" மழையையும், மன்னுர் 40" மழையையும் பெறுகிறது. இப் பருவமழை நிதானமானதன்று. இவ்வாறு ஒரு பருவகாலத்தில் மட்டும் மழை பெய்வதனுல் வரட்சி ஏற்படுகிறது.

இவ்வாருன காலநிலை இங்கு நிலவுவதால் இங்கு தோன்றும் தாவரம் அடர்த்தியற்றதாகிறது. வரட்சியைத் தாங்கவல்ல வன்மரங்களும், பற்றைகளும், முட்புதர்களும், கள்ளி, பனை போன்றனவும் தாழ் நிலத்தில் காணப்படுகின்றன. வரண்ட மலை நாட்டில் தலாவாப் புல்வெளிகள் உண்டு. இத்தகைய காடுகளை அழித்துப் பயிர் செய்வது கஷ்டமல்ல. காடுகளை அழித்துச் சேனைப்பயிர்ச் செய்கையை உண்டுபண்ணியமையால் நாட்டிற்கே பெருஞ் சேதமேற்படுமென அரசு தடுத்து நிறுத்தியுள்ளது. இதனுல் நிலையான பயிர்ச்செய்கையை ஊக்குவித்து வருகிறது. இக்காடுகள் அழிக்கப் படுவதனுல் காலநிலையில் பாதிப்பு ஏற்படும்; காற்ருல் உண்டாகும் சேதம் கூடுதலாக இருக்கும். அத்துடன் வெள்ளப்பெருக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில அரிப்பு ஆகிய சேதங்கள் கூடுதலாக இருக்கும்.

இப் பிரதேசத்தில் பாயும் நதிகளை ஆராயின் மகாவலிகங்கை இவ்வுயர் சம நிலத்திற்கூடாகப் பாய்ந்து திருகோண மலைக்குத் தெற்கே கொட்டியாரத்திலும், கொக்கிளாய்க் குடாவிலும் சங்கமமாகின் றது. இப்பகுதியில் பாயும் நதிகளை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன:

(அ) மேற்கேயும் வடக்கேயும் ஓடுவன; தெதுறு ஓயா, கால ஓயா, மல்வத்து ஓயா.


(ஆ) கிழக்கே ஓடுவன: நான் ஓயா, மகா வலிகங்கை, கல்லோயா.

(இ) தென்கிழக்கே ஓடுவன: கிட ஓயா, கும்புக்கன்ஓயா, கிரிண்டிஓயா, வளவ கங்கை.

இந்நதிகளே விவசாயத்திற்குத் துணை புரிகின்றன.

பண்டைக்காலத்தில் இப்பகுதி குடிசனஞ் செறிந்த பகுதியாகவும், பொருளாதாரம் விருத்தியடைந்த பகுதியாகவும் காணப் பட்டது. இவ்வாறு காணப்பட்ட இப் பகுதி 13-ம் நூற்ருண்டளவில் பொருளா தாரத்தில் வீழ்ச்சியுறத் தொடங்கியது. குடிச்செறிவும் குறைந்தது. இப் பிரதே சம் கவனிப்பாரற்றுக் கிடந்தமையினுல் இங்குக் கொடிய வியாதிகள் தாண்டவ மாடின. இதனுல் விவசாயம் சீரழிந்தது; குடிசனம் குறைவாகக் காணப்பட்டது. இந்நிலைமை 1920 ம் ஆண்டுவரை நீடித்து வந்தது. இரண்டு உலக யுத்தங்கள் நடந்த போது இப்பிரதேசம் ஓரளவு கவனிக்கப் பட்டது. யுத்த காலங்களில் இறக்குமதி தடைப்படவே உணவிற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இத்தட்டுப்பாட்டை நிவிர்த்தி செய்யுமுகமாக அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்தது. அதிலொன்று உலர்ப் பிரதேசத்தைச் சீர்செய்து உணவுப் பயிர்ச் செய்கையைப் புத்துயிர் அடையச் செய்தமையாகும். இதனுல் ஓரளவு உண வுத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய தாக இருந்தது. 1920-ம் ஆண்டின் பின் இப் பிரதேசம் நன்கு கவனிக்கப்பட்டது; காடு களைத் திருத்திக் காணிஅபிவிருத்தி இலாகா நெற் செய்கையை ஊக்குவித்தது. அர சாங்கம் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தி

**இலங்கையின் உலர்ப் பிரதேசம்**




யும், பழைய வாவிகளையும் கால்வாய்களை யும் பழுதுபார்த்தும், குடியேற்றத் திட்டங் களை ஆரம்பித்து இலங்கையின் அத்தியா வசிய உணவுத் தேவையைப் பூர்த்தி செய் தது. தற்போதைய பொருளாதார நெருக் கடியில் இலங்கையின் உலர்ப் பிரதேசம் போதியளவு உணவுப் பயிரைப் பயிரிட்டு நாட்டின் சுயதேவையை ஓரளவு பூர்த்தி செய்கிறது.

இப்பகுதியின் பயிர்ச் செய்கையில் முத லிடத்தை வகிப்பது நெற்பயிர்ச் செய்கை யாகும். நெற்பயிர்ச் செய்கைக்கேற்ற கால நிலையும், தரைத் தோற்றமும் இங் குண்டு. இருபோகப் பயிர்ச்செய்கையும் இங்குண்டு. இவ்வாறு இரு போகத்திலும் பயிர் செய்வதற்காக அரசாங்கம் தனது திட்டத்தின்கீழ் பல நீர்ப்பாசன வசதிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்துக் கொடுத்திருக்கின்றது; இலங்கையில் நெல் பயிரிடப்படும் நிலத்தில் 60% நிலம் இங்குக் காணப்படுகின்றது; குடியேற்ற நிலங்களில் நெல்லே பொருளாதாரத்துக்கு அடிப்படையாகவுள்ளது. குடியேற்றவாசிகள் புகையிலைச் செய்கையை இவ்வுலர்ப் பிரதேசத்தில் செய்ய விரும்புவதில்லை. ஏனெனில், நெல் எப்போதும் பாதுகாப்பான பயிர். அத்துடன் குறிப்பிட்ட திடமான இலாபத்தையும் கொடுக்கக்கூடியது; (8) புகையிலைச் செய்கைக்கு நெற்செய்கையிலும் கூடிய முயற்சி இன்றியமையாதது. புகையிலைச் செய்கை நெற்செய்கையைப்போல முக்கியத்துவம் பெறுவிடினும் ஓரளவு பயிரிடப்படுகிறது. யாழ்ப்பாணப்பகுதி இதில் முக்கிய இடம் வகிக்கிறது. ஏனைய இடங்களாகிய, குருணுகல், சீழ்மாகாணப் பகுதிகளில் சிகரெட் புகையிலை பயிரிடப்படுகிறது.

நெற்செய்கையை விடச் சிறு தானியங்களாகிய குரக்கன், எள், சாமை, இறுங்கு முதலியனவும், காய்கறி, கிழங்குவகைகள், வெங்காயம், மிளகாய், வாழை ஆதியனவும் பயிரிடப்படுகின்றன. தென்னை பெருந்தோட்டச் செய்கையாகப் புத்தளம், குருணுகல், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, பளை ஆகிய இடங்களில் நடைபெறுகிறது. கரும்புச் செய்கை கல்லோயாவிலும், கந்தளாயிலும் உண்டு. பருத்திச் செய்கையை மன்னூர், அம்பாந்தோட்டை, நுணுக்கைப் பகுதிகளில் காணலாம். இச் செய்கை நன்கு முன்னேற்றமடையவில்லை.

இத்தகைய பயிர்கள் செய்யக்கூடியதாயிருந்தும் நிலப்பிரச்சனை, போதிய தொழிலாளர் உள்ள குடும்பமின்மை, சோம்பல் என்பனவற்ருல் மேனிலங்கள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது; மட்காப்புமுறைகள் கையாளப்படுவதில்லை; நவீன தொழில் நுட்பம் கையாளப்படுவதில்லை; வரண்ட பிரதேசத்தில் ஆடுமாடு குறைவு. உயர் நிலத்தில் பச்சை எருக் காணப்பட்டபோதும் பயன்படுத்துவதில்லை; இத்தகைய காரணத்தால் மேனிலப் பயிர்ச் செய்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

மத்திய மலைப்பகுதியின் கிழக்குப்பகுதி விவசாயத்துக்கு உகந்ததன்று; பிபிலை என்ற இடத்தில் பழச்செய்கை நடைபெறுகிறது. இதைவிடக் கால்நடை வளர்ப்பும் நடைபெறுகிறது.

இவ்வுலர்ப் பிரதேசத்தில் இயற்கை கொடுத்த செல்வங்களுங் காணப்படுகின்றன. உப்புச் செய்கை புத்தளம், ஆனையிறவு, நிலாவெளி, அம்பாந்தோட்டைப் பகுதிகளிலுண்டு. இப்பிரதேசத்தின் கரையோரங்களில் அதிக அளவு மீனும் பிடிக்கப்படுகின்றது. மன்னூர், புத்தளம், மட்டக்களப்பு, திருகோணமலை, ஆனையிறவு ஆதியன மீன்பிடித் தலங்களாக விளங்குகின்றன. இலங்கையின் கரையோர மீன்பிடித் தலத்தின் பெரும்பகுதி உலர்ப் பிரதேசத்திலேயே உள்ளது.

கனிப்பொருள் வளத்தைப் பொறுத்தவரை உலர்ப் பிரதேசம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இரணைமடுவிலும், முல்லைத் தீவிலும் வெண்களி காணப்படுகிறது. வவுனியா, கொறவப்பொத்தானை, தம்புள்ளை, நிக்கவரெட்டியா ஆகிய பட்டினங்களை இணைக்கும் நாற்கோணப்பிரதேசத்தில் காரீயப் படிவுகள் உண்டு; கற்பிட்டியில் படிக மணல் காணப்படுகிறது; திருகோணமலையின் வடக்கேயுள்ள புல்மோட்டையிலும், மட்டக்களப்புக்குத் தெற்கேயுள்ள திருக்கோயிலிலும் 'இல்மனைற்' படிவுகள் காணப்படுகின்றன.

தற்போது இங்குக் கைத்தொழில்களும் தோன்றியிருக்கின்றன. காங்கேசன்துறையில் சீமெந்துத் தொழிற்சாலை, பரந்தனில் இரசாயனப் பொருள்கள், வாழைச்சேனையில் கடுதாசி, கந்தளாய் - கல்லோயாவில் சீனி முதலியன இங்கு தோன்றியிருக்கும் கைத்தொழில்களாகும். இப்பிரதேசத்தில் பொருளாதார மேம்பாடும், குடியிருப்புகளும் வளர்ந்துவருகின்றது; கிராம அபிவிருத்தியின் பயனுகப் பற்பல குடிசைக் கைத்தொழில்களும் தோன்றியிருக்கின்றன; செங்கல், ஓடு, நெசவு, பாய், பெட்டி செய்தல் ஆதியன விருத்தியடைந்துவருகிறது.

இவ்வாருன பொருளாதார விருத்தியின் பயனுக ஓரளவு குடித்தொகையும் பெருகிவருகிறது; தற்போது இப்பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுரமைலுக்கு 80 பேர் மட்டில் வசிக்கின்றனர். அநேக சிறுபட்டினங்களும் வளர்ந்திருக்கின்றன. யாழ்ப்பாணம், திருகோணமலே, அநுரதபுரி ஆகிய இடங்களில் சதுர மைலுக்கு அடர்த்தி 250-க்கு அதிகமானதாகக் காணப்படுகிறது. பயிர்ச்செய்கைப் பிரதேசத்தில் 50 — 250 வரை காணப்படுகின்றது. ஏனைய இடங்களில் 50-க்குக் குறைவாகக் காணப்படுகின்றது. வடமத்திய மாகாணத்தில் குடித்தொகை மேலும் அதிகரித்து வருகின்றது. இவ்வாருன குடித்தொகை அதிகரிப்பு அப்பகுதியின் பொருளாதார அபிவிருத்தியைக் காட்டுகிறது. ஏனைய பகுதிகளில் வாழ்க்கையில் விவசாயத்துடன் வேறும் பொருளாதார நடவடிக்கைகளும் இடம் பெறுகின்றன. ஆனுல், இவ்வுலர்ப்பிரதேசத்தின்வாழ்க்கை விவசாயத்தில் விசேட இடம் பெறுகிறது. விவசாயம் நன்கு கவனிக்கப்பட்டு வருவதனுல் குடித்தொகையும் பெருகிக்கொண்டு வருகிறது. இப்பகுதியின் போக்குவரத்தும் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாருன முன்னேற்றத்துக் காரணம், அரசாங்கம் அதிக கவனமெடுத்தமையாகும். தற்போது இப்பகுதி இலங்கையின் ஏனைய பகுதிகளைப்போல அநேக வசதிகளுடன் காணப்படுகின்றது. பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள், வங்கிகள், போக்குவரத்து வசதி சகலதும் இங்கு காணப்படுகின்றன. தற்போதைய நமது இலங்கையின் பொருளாதாரநெருக்கடியை இப்பிரதேசம் ஓரளவு ஈடுசெய்யும் என நம்பக்கிடக்கின்றது. நமது அரசாங்கம் செய்துவரும் முயற்சிகளும் சிறந்தனவாகக் காணப்படுகின்றன. அரசாங்க முயற்சியின் பயனுக அநேக நிலங்கள் விவசாயத்துக் குட்பட்டிருக்கின்றன. அரசாங்கம் விவசாயிகளுக்குக் கடனுதவி செய்வது மட்டுமல்ல, அவர்களுக்குப் பரிசில்களும் கொடுத்து ஊக்குவிக்கின்றது. இதனுல் அநேகர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். இதே நிலை நீடித்து நடைபெறுமானுல் இலங்கை ஒரு சிறந்த விவசாய நாடாக மாறலாம். ஏனைய தொழில்களும் இப்பகுதியில் வருங்காலத்தில் விருத்தியடையும்.

இலங்கையின் உலர்ப் பிரதேசம் தரைத்தோற்றம், வெப்பம், மழைவீழ்ச்சி, பயிர்ச்செய்கை, கைத்தொழில், குடியேற்றம் என்ற ஒவ்வொன்றிலும் புவியியல் தனித்துவம் பெற்றுள்ளதாம். இது ஒரு தனிப்புவியியல் பிரதேசமாகவுள்ளது.

செல்வி. படைவீரசிங்கம் விமலேஸ்வரி
(விடுகை வருடம்)

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலமும் வளமும்

நிலவளம் நீர்வளம் இரண்டும் மனித சீவியத்தை மட்டுப்படுத்தும் ஏதுக்களில் மிகவும் இன்றியமையாதன. இலங்கை இந்து சமுத்திரத்தில் ஒரு முக்கிய நிலையத்தைப் பெறுகின்றது. இலங்கைக்கு அருகிலிருக்கும் நாடுகளான இந்தியா, பர்மா, பாகிஸ்தான் அரேபியா, மலேயா, இந்தோசீனம், இந்தோனீசியா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளுள் இலங்கைக்கு மிக அண்மையிலிருப்பது இந்தியாவாகும். இலங்கை இந்தியா இரண்டும் ஒரே கண்ட மேடையில் அமைந்துள்ள கண்டத்தில் இருந்தே தமது வடிவத்தைப் பெறுகின்றன. இலங்கைத்தீவின் ஆகக்கூடிய நீளமும் அகலமும் முறையே 270, 140, மைல்களாகும். எனவே பரப்பு 25000 சதுர மைல்களாகும்.

தீவின் நில உயரத்தையோ அல்லது தரைத் தோற்றத்தையோ சிறிது கவனித்தால் தென்மத்திய பாகம் முழுவதும் குன்றுகள் செறிந்த மேட்டுத்தரையாக இருக்கின்றது. கிட்டத்தட்ட 1000 அடிகட்கு மேற்பட்ட உயரமுள்ள பிரதேசங்களை இலங்கையின் மலை முகடுகள் என்று கூறுவோம். கடல் மட்டத்திலிருந்து 1000 அடிகள் வரையுமுள்ள பிரதேசங்களைச் சமபூமி என்று சொல்லலாம். குறிப்பாகக் கூறின் மத்திய மாகாணம், ஊவாமாகாணம் சப்பிரகமுவாமாகாணம் ஆகிய மூன்றும் மலைநாட்டு மாகாணங்களாகும். வடமாகாணம், வடமத்திய மாகாணம், வடமேல் மாகாணம், மேல்மாகாணம், தென்மாகாணம், கீழ்மாகாணம் ஆகிய ஆறும் சமபூமியுள்ள மாகாணங்களாகும். இத்தீவின் அதி நீண்ட ஆருன மகாவலிகங்கை 207 மைல் நீளமானது. மற்றைய ஆறுகள் யாவும் 100 மைல்களுக்குக் குறைவான நீளமே உடையன.

இலங்கைத்தீவின் தரைத்தோற்றத்தை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன :

1. கரையோரச் சமநிலப் பிரதேசங்கள்.
2. மத்திய மலைப் பிரதேசங்கள்.

சமநிலப்பிரதேசங்களை

1. தென்மேல் சரிவு.
2. தென்கீழ் சரிவு.
3. வட சமபூமி.

எனவும் வகுக்கலாம். இன்னும் குடாநாடுகளும், தீவுகளும், கரையோரக் கடல்நீர் ஏரிகளும், மணல் மேடுகளும் சேர்ந்து ஐந்து பெரும் பிரிவுகளில் அடக்கலாம். அவையாவன :

1. மத்திய மலைப் பிரதேசம்.
2. தென்மேல் பிரதேசம்.
3. கிழக்குப் பிரதேசம்.
4. தாழ்ந்த வடக்குப் பிரதேசமும், குடாநாடும், தீவுகளும்.
5. கரையோரக் கடல்நீர் ஏரிகளும் மணல் மேடுகளும்.

இவ்வைந்து பிரிவுகளையும் இன்னும் பல உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம். மத்திய மலைப் பிரதேசம் தெற்கிலே தென்மலைச் சுவர் எனப் பொதுவிற் கூறப்படும் செங்குத்தான மலையினுலும் வடக்கிலே கண்டி தொடக்கம் மினிப்பை வரை குறுக்குப் பள்ளத்தாக்கினுலும் சூழப்பட்டுள்ளது. நக்கிள்சும், றக்குவானையும் மத்திய மலைத் திணிவினின்றும் பிரிபட்ட பகுதிகளே. இம்மூன்றும் ஒருமித்தே மத்திய மலைநாட்டுப் பிரதேசமாகும்.

தென்மேற்குப் பிரதேசம் ஒரு தனி வகை நில அமைப்புப் பிரிவு. இது நன்கு நீர்ப்பாய்ச்சப்படுகிறது. பள்ளத்தாக்குகளும் இடையிடை வர இணையாய் ஓடும் நீண்ட மலைமுகடுகளின் தரையமைப்பை இது கொண்டுள்ளது. கிழக்கிலும் தென்கிழக்கிலும் ஒத்த வரட்சிப் பிரதேசமே காட்சியளிக்கும். ஆனுல் இதன் தரைமீது உயர் சமவெளியில் உள்ளதுபோலப் பல எஞ்சிய குன்றுகளும் மலைச்சிகரங்களும் சிதறுண்டு காணப்படுகின்றன. இயற்கையமைப்பிலே வேற்றுமையில் ஒற்றுமையுண்டு.

தீவின் வடக்கிலும் கிழக்கிலும் முக்கியமாக வடமாகாணத்திலும், கீழ்மாகாணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலுமே தாழ்ந்த பிரதேசங்கள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. இப்பகுதிகளே இலங்கை வாழ் தமிழ்பேசும்மக்களின் பரம்பரைத் தாயகமாகும். மழைவீழ்ச்சி, வெப்பநிலையைப் பொறுத்தவரையில் இலங்கையின் வடக்குக் கிழக்குத் தாழ் பகுதிகள் வரட்சிப் பிரதேசத்துள்ளேயே அடங்கும். இலங்கையில் மட்டுமல்லாமல் உலகின் மற்றும் இடங்களிலுமுள்ள வரண்ட பிரதேசங்களின் தன்மைகளை ஆராய்ந்தோர் இவை எதிர்காலத்தில் இலாபகரமான விருத்தியைத் தரக்கூடியனவென முடிவு செய்திருக்கிறார்கள். கனிப்பொருட் செல்வங்களைப் பொறுத்தவரையில் கூட வரண்ட பிரதேசம் வறுமையானதன்று. சீமேந்து, கண்ணாடிபோன்ற தொழில்கள் நடைபெறுவதற்கேற்ற மூலப்பொருள்கள் கிடைக்கின்றன. ஆழமற்ற கடல்களும், கடல்நீர் ஏரிகளும் மிகச் சிறப்பான மீன்பிடித்தொழில், சாதாளைத் தொழில் ஆகியவற்றின் செழிப்பிற்குத் தகுந்ததாகவுள்ளன. அத்துடன் கடலேரிகளிற் கடல் நீர் இயற்கையாகக் குவிந்து தங்குவதால், உப்பு விளைவைத் தருகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், அதையடுத்த தீவுகளிலும் தரையிலே சரிவுகள் இல்லாததால் பெருங் குளங்கள் ஏற்படுத்த வசதியற்றிருக்கின்றன. என்றாலும் சுண்ணாம்புக்கல் பெரும் அளவு சுத்தமான மழை நீரை ஆவியாகப் போய்விடாமல் நிலமட்டத்தின்கீழ் சேமிப்பதால் கிணறுகள் மூலம் நீரை மேலே பெற முடிகிறது. இன்னும் வரட்சிப் பிரதேசத்துக்கு இயற்கையின் பெருங்கொடை பனைமரம். நிலம் வேறு இலாபகரமான பயன்களுக்கு உதவாத இடங்களில் நன்கு வளருகிறது. மனிதருக்கும், ஆடு-மாடுகளுக்கும் உணவு தருவதினாலும், வீடமைப்பிற்கும், கைத்தொழிலுக்கும் தேவையான பொருள்களைத் தருவதினாலும் இது பெரும் மூலச் செல்வமாகத் திகழ்கிறது. எனவே, மேற் கூறியவற்றிலிருந்து நிலமும் வளமும் எத்தகைய முறையில் அமைந்துள்ளன என்பது புலனாகும்.

**செல்வி. சி. சின்னத்துரை**
(நிறைவாண்டு)

ஆடம்பரமாக ஆடையாபரணம் அணிவது கொலைக்குரிய ஆயுதம் படைத்திருப்பது, மிகைபட உண்பது, பெருமிதமாகப் பொருள் தேடுவது ஆகிய இவையாவும் நாகரிகமான திருட்டு.

— **ஸ்ரீஇராமக் கிருஷ்ணர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வீரன் பண்டார வன்னியன்

ஈழநாட்டில் இன்றும் வன்னி என்று வழங்கப்படும் நாடு, யாழ்ப்பாணத்தில் சங்கிலியன் ஆட்சிசெய்த காலத்தில், பண்டார வன்னியனால் ஆட்சிசெய்யப்பட்டது. வன்னிநாட்டில் பண்டார வன்னியன் ஆதிக்கம் பரவியிருந்த காலத்தில் மக்கள் ஆதிக்கம் செலுத்திய பண்டார வன்னியனுக்கு உதவியாக இருந்து தமது நாட்டைக் காக்கவேண்டி, கமச் செய்கையில் ஈடுபட்டனர். ஒல்லாந்தர் ஆட்சிக்குப்பின் இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் பரவியது. இலங்கையின் கரையோர மாகாணங்களை 1505இல் அடிமை கொண்ட போர்த்துக்கீசருக்கும், அதே பகுதியை 1658 முதல் 1796 வரை ஆட்சி செய்த ஒல்லாந்தருக்கும் அடிபணிய மறுத்த வன்னிநாட்டு மக்கள், ஒன்றுபட்ட கூட்டுறவால் வளமார் வன்னியில் வீரம்பரப்பி வாழ்ந்தனர். யாழ்ப்பாணத்திலும், திரிகோணமலையிலும், மன்னாரிலும் கோட்டைகள் அமைத்துத் தமது ஆதிக்கத்தின்மூலம் வன்னிநாட்டை ஆட்சிசெய்த பண்டார வன்னியனை அடிமைப்படுத்த, ஆங்கிலேயர் படாதபாடுபட்டனர். 1796—1803-ம் ஆண்டுவரை ஆங்கிலேயரின் சூழ்ச்சி நிறைந்த ஆட்சி பண்டார வன்னியனின் வீரத்தைச் சுற்றி வளைத்தது.

வன்னிநாட்டில் வீரக்கொடி நாட்டிய பண்டார வன்னியன், வன்னியைக் காக்க வேண்டி, கண்டிய மன்னனுடன் தொடர்பு கொண்டு, படைகளைத் திரட்டி வீரத்தை ஊட்டினான். ஆங்கிலேயரின் ஆட்சி பரவாது தடுக்கவேண்டி ஆங்கிலத் தளபதிகளை விரட்டியும், வெட்டிக் கொலையும் செய்தான். பண்டார வன்னியனின் கொட்டத்தை அடக்கவேண்டி ஆங்கிலேயரால் முல்லைத்தீவில் எழுப்பப்பட்ட கோட்டை பண்டார வன்னியனால் இடித்துத் தரைமட்டம் ஆக்கப்பட்டது. பண்டார வன்னியனின் கோட்டை எனப்படும் ஒட்டுசுட்டானை அடுத்த பண்டாரக் குளத்தைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்திருக்கலாமென நம்பப்படுகிறது. இவனுடைய பெயருடன் தொடர்பு கொண்ட இடமாகக் குமுளமுனை இன்று திகழ்கின்றது. குமுளமுனையில் இன்று தூர்ந்து, சேதமற்ற நிலையில் விளங்கும் "பண்டார வன்னியனின் கிணறும். யானை கட்டிய புளியும், பண்டார வன்னியன் வளவும்" காணப்படுகின்றது. இங்குத்தான் முல்லைத்தீவுக் கோட்டையைச் சேதப்படுத்தவேண்டிப் படைமுகாம் அமைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

கண்டி அரசின் முத்திரை பொறிக்கப்பட்ட துப்பாக்கிகள், 1803-ம் ஆண்டில் ஆங்கிலேயரால் பண்டார வன்னியன் தோற்கடிக்கப்பட்டான் என்பதைக் காட்டுகின்றன. "கற்பூரப் புல்லு" என்று பெயர் தாங்கிய பகுதிகள் தண்ணீரூற்று, குமுளமுனை, நெடுங்கேணி எனத் தற்போது விளங்குகின்றன. இப் பகுதியிலேயே மாவீரன் பண்டாரவன்னியன் தன்னுடைய வீரத்திறனை நிலைநாட்டவேண்டி ஆங்கிலேயருடன் சளைக்காது போராடினான். இதன் காரணமாகவே, ஒட்டுசுட்டான் என்னுமிடத்திலிருந்து ஒரு மைலுக்கப்பால் கொலை செய்யப்பட்டான். பண்டாரவன்னியனின் வீரத்திறமையை உணர்ந்த ஆங்கிலேயர் அந்தஇடத்தில் "மாவீரனின் வீரம் 1803-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் திகதி தோற்கடிக்கப்பட்டது" எனப் பெரியதோர் கல்லில் பொறித்து நாட்டியுள்ளனர். இதனை இன்றும் 'கற்சிலை' என அழைப்பர். இதனைச் சூழந்துள்ள கிராமத்தையும் கற்சிலைமடு என வழங்குவர்.

வன்னிநாட்டுச் செல்வங்களை அன்னியர் அபகரித்துச் செல்லவிடாது, தோள் தட்டிக் கொடிபிடித்த வீரன் பண்டார வன்னியன். சிங்களமக்களுக்கும், தமிழ் மக்களுக்குமிடையே நல்லுறவை ஊட்டி வளர்த்தவன் என்ற பெருமை கண்டிய மன்னனுடன் நிலவிய உறவால் விளங்குகின்றது. இந்த உறவால் இரு இனமக்களின் ஒற்றுமை, வீரம், பண்பு என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து வளர்ந்தன. வீரம் அன்னிய ஆட்சியால் விலைபோகாது காக்கப்பட்டது. இத்தகைய மாவீரனின் புகழ் ஆங்கிலேயரால் காக்கப்பட்ட கற்றூணுகவே காட்சிகொடுக்கிறது. அக்காலத்தில் ஆதிக்கம் செலுத்திய ஆங்கிலேயர் தமக்குச் செய்த கொடுமைகளைப் பொறுக்கமுடியாமல் தமது நிர்வாகத்தில் ''கொள்ளைக்காரன்'' என்று இவனை வர்ணித்துள்ளனர். இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் பரவியிருந்த காலத்தில் கட்டப்பொம்மன் ஆங்கிலேயரை நாட்டைவிட்டுத் துரத்தவேண்டி ஓயாது போராடினுன். அவ்விதமே மாவீரன் பண்டார வன்னியனும் வன்னி நாட்டிலிருந்து ஆங்கிலேயர் ஆட்சியை விரட்டியடிக்கப் போராடினுன்.

இத்தகைய மாவீரனின் ஞாபகமாகக் ''கற்சிலைமடுக் கிராம''த்தின் நடுவே விளங்கும் ''கற்சிலை''க்கு வன்னிநாட்டு மக்கள் ஒன்றுதிரண்டு அக்டோபர் 31-ந் திகதியில் அஞ்சல் செய்வோமாக. இப்பொன்னுன நாளை வீரத்திருநாளாகக் கொண்டாடுவதோடு விட்டுவிடாது, இலங்கையின் தேசிய வீரர்கள் வரிசையில் இவனையும் சேர்த்துக் கொள்ளச் செய்வது வன்னிநாட்டுத் தமிழ் மக்களின் தலையாய கடமையாகும்.

திருமதி. க. மாகிறெற்.
(விடுகைவருடம்)

---

மண்ணிற் பிறந்த பொன்னும், மலையிற் பிறந்த மணியும், கடலிற் பிறந்த முத்தும் ஒன்றுசேர்ந்து மாலையாகத் திகழ்ந்து ஒளி வீசுகிறது. இதைத் தங்கள் கழுத்தில் அணிந்து வாழும் மக்கள் ஒரு குடியிற் பிறந்தும் ஒன்று சேர்ந்து வாழ மறுப்பது எதன் பொருட்டு?

— கி. ஆ. பெ. விசுவநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைக்காகப் போராடிய மகான் மார்டின் லூதர் கிங்

உலகில் தலைசிறந்த நாடாகக் கருதப்படும் அமெரிக்கா பல பேரறிஞர்களைக் கண்டுள்ளது. அறிவாளிகளைப் படைத்துள்ளது. அரசியல் ஞானிகளை உருவாக்கியுள்ளது. ஜனநாயகத்தின் இமயமாகவும் விளங்குகின்றது. இத்தகைய சிறப்புடைய நாட்டிற்ருன் சில நியாயமற்ற செயல்களும் இடம்பெற்றுள்ளன. ''நல்லவர்கள் நீண்ட நாட்களாக உலகில் வாழ்வதில்லை'' என்பது பெரியோர் வாக்கு. இதை அமெரிக்காவில் அகால மரணம் அடைந்த தலைவர்கள் நிருபித்துவிட்டார்கள்.

உலகம் போற்றும் உத்தமதியாகி, அமெரிக்க நீக்ரோவர்களின் குடியுரிமை இயக்கத்தலைவர் டாக்டர் மார்டின் லூதர் கிங்கின் மறைவு அமெரிக்காவுக்கு மாத்திரமல்ல உலகத்திற்கே ஈடுகொடுக்க முடியாத பெரிய நஷ்டமாகும். ''சத்தியமும் சாத்வீகமுமேஎப்பொழுதும் வெற்றியடைவன'' என்ற காந்தியின் தத்துவத்தை மேலை நாட்டவர்களுக்கு நிருபித்தவர் டாக்டர் கிங் அவர்களே. இந்து—முஸ்லிம் ஒற்றுமைக்காக உடல் பொருள் ஆவி அனைத்தையும் தியாகம் செய்த மாந்தர் குல மாணிக்கம் மகாத்மாகாந்தியும் கொலை செய்யப்பட்டார். அமெரிக்க ஜனுதிபதிகள் வரலாற்றில் தனிச் சிறப்பிடம் பெற்று உலகத்தார் உள்ளங்களிலெல்லாம் நீங்காத இடம் பெற்றுவிட்ட, ஜனுதிபதி ஆபிரகாம் லிங்கனும் 1865-ம் ஆண்டு வாஷிங்டனில்நாடக அரங்கு ஒன்றில் நாடகம் பார்த்துக்கொண்டிருந்தபோது கொலை செய்யப்பட்டார். நீக்ரோ மக்களின் அபிலாசைகளை ஆதரித்த ஜனுதிபதி கென்னடியும் சுட்டுக் கொலை செய்யப்பட்டு அகாலமரணம் அடைந்தார்.

இவர்களைப்போல் 39 வயதையுடைய டாக்டர் மார்டின் லூதர் கிங்கும் லொறேன் பல்கனியில் நின்று கொண்டிருந்த போது மறைந்திருந்த ஒருவரால் சுடப்பட்டிறந்தார். நீக்ரோ மக்களின் உரிமைக்காகப் போராடிய மார்டின் லூதர் கிங்கின் கொலையும் எவ்விதத்தில் இனவெறி, ஒரு நாட்டையே சிதைக்கும் என்பதை எடுத்துக் காட்டியிருக்கின்றது.

காந்தியினுடைய போதனைகளாகிய, சத்தியத்தையும் சாத்வீகத்தையும் தனது உயிர் மூச்சாகக்கொண்டு அமெரிக்க நீக்ரோ மக்களுக்கு அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காகச் சாத்வீக அடிப்படையில் முயற்சி செய்து தனது வாழ்நாளைச் செலவிட்ட டாக்டர் கிங்கின் மரணத்திற்காக உலகமே கண்ணீர் சிந்துகின்றது.

மார்டின் லூதர் கிங் அவர்கள் 1929-ம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ம் திகதி ஜார்ஜிமா மாகாணத்தில் அட்லாண்டாப் பகுதியில் பிறந்தார். இவரது தந்தையார் ஒரு பப்டிஸ்ட் மதகுரு. இவரது இளம் பிராயத்தில் நடந்த சில நிகழ்ச்சிகளே இவரது நாட்டுப்பற்று வளரக் காரணமாய் அமைந்தன. நீக்ரோக்களின் நலனையே தம் மூச்சாகக் கொண்டார். இளம் வயதிலேயே இன சகிப்பின்மைபற்றி அறிந்துகொண்டார்.

இவர் பொஸ்டன் சர்வகலாசாலையில் தத்துவஞான கலாநிதிப் பட்டம் பெற்ருர். டாக்டர் கிங் அவர்கள் அதிக பணவருவாய் பெறக்கூடிய வசதியிருந்தும் மக்களின் நல உரிமைகளைப் பாதுகாப்பதிலேயே தன் நேரத்தைச் செலவிட்டார். அமெரிக்காவின் தென் மாகாணங்களுக்குச் சென்று அங்கு நீக்ரோக்களின் மனித உரிமைப் போராட்டத்தை ஆரம்பித்தார். இவர் பின்னர் ஒரு மதகுருவாகி, கிறீஸ்தவத்தையும் சத்ய சாத்வீகத்தையும் தனது போராட்டத்தின் வழிவகையாகக் கொண்டார்.

மனித உரிமைப் போராட்டத்தின் காரணமாக, கிங் அவர்கள் பலமுறை சிறைக்கு அனுப்பப்பட்டார். அபராதங்கள் அவர்மீது விதிக்கப்பட்டன. ஆனுல் ஒவ்வொருமுறையும் அனுமதேயப் பேர்வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரே அபராதத்தைச் செலுத்தினுர் எனச் சொல்லப்பட்டது. அமெரிக்காவில் நீக்ரோக்களுக்கு எதிராக நடைபெறும் அட்டூழியங்களை ஆட்சேபித்துப் பல அணி வகுப்புக்களை நடத்தினுர். அதில் வெற்றி யும் கண்டார்.

அமெரிக்க நீக்ரோ ஒருவரின் சிறந்த சாதனைக்கான ''ஸ்பின்கான்'' பதக்கம் 1957-ல் இவருக்கு வழங்கப்பட்டது. 1963-ம் ஆண்டு ''ரைம்'' சஞ்சிகை இவ ருக்கு அவ்வருடத்தில் ''சிறந்த மனிதர்'' என்ற பட்டத்தைச் சூட்டியது.

அமெரிக்க நீக்ரோ மக்களின் உரிமைப் போராட்டத்தை நடத்தியதற்காக டாக் டர் கிங்கிற்கு 1964-ம் ஆண்டில் சமாதா னத்திற்காக வழங்கப்படும் நோபல் பரிசு கொடுக்கப்பட்டது. இவர் ஒருவரே இப் பரிசை இதுவரை பெற்றவர்களில் வயது குறைந்தவராவர்.

1965-ம் ஆண்டு மார்ச்மாதம் அலபா மாவில் செல்மா நகரில் இருந்து, நீக்ரோ வர்களின் கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பதற் காக 4000 நீக்ரோவர்களை ஊர்வலமாக ''மொண்ட்கமரிக்கு'' அழைத்துச் சென் ருர். அமெரிக்காவின் சரித்திரத்தில் இது ஒரு மாபெரும் ஊர்வலம் என்று அவரே வர்ணித்தார்,

டாக்டர் கிங் அவர்கள், தன் மனதிற்கு எது சரியெனப் படுகின்றதோ அதையே செய்வார், வியட்னும் போரின் காரணமாக அமெரிக்க மக்களின் நலவுரிமைகள் புறக் கணிக்கப் படுவதாகக் கருதிய டாக்டர் கிங் அவர்கள் வியட்னும் யுத்தத்தை ஆட்சே பித்து, அதிகாரபீடத்தின் அதிருப்தியைச் சம்பாதித்துக்கொண்டார்.

மக்கட்பண்பையுந் மனிதாபிமானத் தையும் வளர்ப்பதிலேயே வாழ்நாளைச் செல விட்ட டாக்டர் கிங் ஒருமுறை, ''அரும் பெரும் பணிக்காக உயிர்விடாதவன் உயிர் வாழ்ந்து பயனில்லை'' என்று கூறினுர். அவர் கூற்று ஏப்ரல் மாதம் 4-ந் தேதி உண்மையாகிவிட்டது.

அகிம்சா வழியொன்றே நாகரிக மக்க ளுக்குத் தஞ்சமளிக்கும் ஒரேவழியாக இருக் கிறது. அத்தகைய உலகின் முன்னணி வீரர் ஒருவர் மறைந்தது நீக்ரோவர்களுக்கு, அமெரிக்காவுக்கு மட்டுமல்ல உலகம் முழு வதற்குமே மாபெரும் நஷ்டமாகும்.

டாக்டர் மார்டின் லூதர் கிங்கின் மர ணத்தைக் குறித்து அனுதாபம் செலுத்து முகமாக அமெரிக்காவில் தேசீயக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. அரசாங்கப் பிரஜை அல்லாத ஒருவருக் காகத் தேசீய துக்கதினம் அனுட்டிக்கப் பட்டதும் தேசீயக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டதும் அமெரிக்க சரித்திரத் தில் இது முதற்றடவையாகும்.

டாக்டர் மார்டின் லூதர் கிங் மறைந்து விட்டார். ஆனுல் அவரது கனவு மறைய வில்லை. அது என்ருே ஒருநாள் நனவாகும் என்பது திண்ணம்.

செல்வி. பொ. புனிதவதி.
(முதலாம் வருடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார்ப் பகுதியில் கூட்டுறவு அபிவிருத்தி

"கூட்டுறவே நாட்டுயர்வு" என்பது ஆன்றோர் அமுதமொழி. கூட்டுறவின் மேன்மைபற்றி ஏட்டில் எழுதினாலும் அடங்காது. பலர் ஒருவருக்காகவும், ஒருவர் பலருக்காகவும் உழைப்பதே கூட்டுறவின் நோக்கமாகும். ஒரு சமூகம், தனிப்பட்டவரின் நலன் கருதியும், தனிப்பட்டவர் சமூக நலன் கருதியும் உழைப்பதின் மூலமாய் முதலாளித்துவக்கொள்கையின் பயனையும், சமதர்மக் கொள்கையின் பயனையும் கூட்டுறவு பெற்றுத்தருகின்றது. கூட்டுறவுச் சங்கங்கள் தமது அங்கத்தவர்களது பொருளாதார முன்னேற்றங்கருதிக் கருமமாற்றுகின்றன. அங்கத்தவர்களிடையே பரஸ்பர ஒற்றுமை, சுய உதவி, சகிப்புத்தன்மை, சிக்கன வாழ்வு ஆகிய இன்னோரன்ன நற்பண்புகளை வளர்த்துவருகின்றன. சுருங்கக் கூறின்:—

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே — நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே"

என்ற பொன்மொழியின் சிறந்த உட்கருத்தைக் கூட்டுறவு கொண்டு விளங்குகிறது. இன்றைய உலகில் கூட்டுறவு இயக்கத்தின் தத்துவங்கள் வாழ்க்கையின் சகல துறைகளிலும் புகுத்தப்படுகின்றன. விசேடமாகப் பிற்போக்கான, பொருளாதாரமுள்ள நாடுகளிலும், வறுமையும் பிணியும் ஏழ்மையும், சனப்பெருக்கமும் தாண்டவமாடும் நாடுகளிலும் இவ்வியக்கம் அமோகமான ஆதரவைப் பெற்றுத் தன் அளப்பரிய சேவைகளைச் செய்து, மக்களின் வாழ்க்கையை வளமாக்குகின்றது.

கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாகும். கடன் பழுவால் கஷ்டப்படும் கிராமவாசிகளை வரண்ட பிரதேசங்களில் குடியேற்றிக் கமத்தொழிலில் ஈடுபடச்செய்து, அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதே இலங்கையில் கூட்டுறவு இயக்கம் தோன்றியதன் முதற்காரணமாகும். அன்றியும் சாதாரண வாழ்க்கை நடாத்தும் மக்கள், தங்கள் அன்றாடத் தேவைகளுக்குரிய பொருள்களை நியாயமான விலையில் பெறுமதி குறையாமல் பெற்றுக்கொள்ள உதவி செய்வதே இவ்வியக்கத்தின் மற்றொரு நோக்கமாகும். 1942-ம் ஆண்டுக்குப் பின்னரே இலங்கையில் கூட்டுறவு இயக்கம் சகல துறைகளிலும் துரிதமுன்னேற்றம் அடைந்தது.

வடமாகாணத்தின் ஒரு பகுதியாகிய மன்னார் மாவட்டம் சகல வசதிகளிலும் ஒரு பிற்போக்கான மாவட்டமாகவே இன்று வரையிருப்பினும், சென்ற பல வருடங்களாக மன்னார் வாழ் மாந்தரிடையே முற்போக்குச் சக்தியையும், பரஸ்பர ஒற்றுமையையும், விவசாய விருத்தியையும், பொருளாதார வளர்ச்சியையும் காண முடிகிறதென்றால், அது கூட்டுறவின் மகத்துவமெனவே கூறவேண்டும்.

மிகச் சமீபமான காலந்தொட்டே, மன்னார் மாவட்டத்திலுள்ள மக்கள் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபாடுடையவர்களாக இருந்து வருகிறார்கள். இம் மாவட்டம் 964 சதுர மைல்களைக் கொண்டிருந்த போதிலும், குடிசனத்தொகை ஏறக்குறைய 55,000 எனக் கணிக்கப்பட்டுள்ளது. கிராமங்களில் குடிசனச்செறிவு ஐதாகவும், போக்குவரத்து மிகவும் சீர்கேடான நிலையிலுமுள்ளது. வருடந்தோறும் பல லட்சக் கணக்கான புசல்நெல்லைச் சாகுபடிசெய்து, இலங்கையின் உணவு அபிவிருத்திக்குத் தனது உரியபங்கைத்தவறாது செலுத்திவரும் 75 சத விகித விவசாயிகளைக் கொண்டுள்ளது. விவசாய வளர்ச்சிக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முதுகெலும்பாய் அமைந்துள்ளன. வேளாண்மைச் செய்கையும், மீன்பிடித் தொழிலுமே இப்பகுதிவாழ் மக்களின் பிரதான தொழில்களாக இருந்துவந்த போதிலும், இவர்களின் பொருளாதாரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப் பெருக்கும் உயரிய கொள்கையோடு இம்மாவட்ட விவசாயிகளுக்கும், மீன்பிடியாளருக்கும் குறைந்தவீத வட்டியில் நிதியுதவி செய்யும் நோக்கமாகவே 1927-ம் ஆண்டில் முருங்கனில் ஓர் ஐக்கிய நாணய சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

1936-ம் ஆண்டுக்குப் பின்னர் நடைமுறையிலிருந்த சங்கங்கள் ''றெபைசன்'' முறையில் அமைக்கப்பட்டவையாக இருந்தன. இச் சங்கங்களின் வெற்றி அதன் அங்கத்தவர்களின் நேர்மையிலும், திறமையிலுமே தங்கி இருந்தது.

1942-ம் ஆண்டு தொடக்கம் 1945-ம் ஆண்டுவரையுள்ள காலப்பகுதி நுகர்ச்சிப் பொருள் வினியோக இயக்கத்தின் அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க காலப்பகுதியாகும். இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது ஏற்பட்ட உணவுப்பொருள் தட்டுப்பாட்டைச் சமாளித்து, தகுந்த முறையில் உணவுப்பொருள்களைச் சமமான முறையில் வினியோகிப்பதற்கு அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டவையே நுகர்ச்சிப் பொருட் பண்டசாலைகளாகும்.

இம்மாவட்டத்தின் பிரதான கிராமங்களில் இத்தகைய பண்டசாலைச் சங்கங்கள் அநேகம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஆயின், உலக மகாயுத்தம் முடிவடைந்த பின்னர் அரசாங்கம் உணவுப் பொருள் வினியோகத்திலிருந்த தட்டுப்பாட்டைத் தளர்த்தியபின்னர், இப்பண்டசாலைச் சங்கங்களிற்சில தனிப்பட்ட வியாபாரிகளோடு போட்டியிட முடியாததன் காரணமாக அவைகளின் பதிவுகள் அழிக்கப்பட்டு, அதன் அயலாக உள்ள சங்கங்களோடு இணைக்கப்பட்டுள்ளன.

ஆயின், ஸ்திரமான அமைப்புப்பெற்ற பண்டசாலைச் சங்கங்கள் தொடர்ந்து பணியாற்றி வரலாயின. இவை கைக்காசுக்கு விற்றல், இலாபம் அங்கத்தவர்களின் கொள்வனவுக்கேற்பப் பிரித்தல் ஆகிய வழிகளைக் கையாண்டமையே இவற்றின் ஸ்திரத் தன்மைக்கு அடிகோலியது. சுருங்கக்கூறின், இச்சங்கங்கள் 'றொச்டேல்' முன்னோடிகளின் வழியைக் கடைப்பிடித்தன.

அங்கத்தவர்களுக்குச் செல்லுமதியான இலாபப் பணங்கள் அவரவர் பங்குப்பணத்துடன் சேர்க்கப்பட்டன. தற்போது மன்னார் பலநோக்கக் கூட்டுறவுச்சங்கச் சமாசமாயிருக்கும் மன்னார்க் கூட்டுறவுப் பண்டசாலைச் சமாசத்தில் பண்டசாலைச் சங்கங்கள் தங்களின் தேவைக்குரிய பொருள்களைக் கொள்வனவு செய்துவந்தன.

அநேக காரணங்களினால் இச்சமாசத்தின் வளர்ச்சி அவ்வளவு திருப்திகரமானதென்றுசொல்வதற்கில்லை. அதன் முக்கிய காரணம், கௌரவ சேவை செய்வதற்கேற்ற தகுந்த நிர்வாகிகள் இல்லாமையேயாகும்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பிறகு உணவுற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் விளைபொருள் உற்பத்தி-விற்பனவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. உத்தரவாத விலையின்கீழ் அரசாங்கத்தின் ''ஏஜன்ற்'' ஆக விவசாயிகளிடமிருந்து விளைபொருள்களைக் கொள்வனவு செய்து வந்தது. தவிரவும், கிராமவாசிகளின் வருமான விருத்திக்காகக் கூட்டுறவு முறையில் கோழிப்பண்ணைகளும், கால்நடை வளர்ப்பு ஸ்தாபனங்களும் ஏற்படுத்தப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் 1956-ம் ஆண்டில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் திறக்கப்பட்டதன் காரணமாகக் கூட்டுறவு இயக்கமானது விரைவில் முன்னேறி ஐக்கியநாணய சங்கங்கள், விளைபொருளுற்பத்தி - விற்பனவுச் சங்கங்கள், பண்டசாலைச் சங்கங்கள், கோழிவளர்ப்புச் சங்கங்கள், குடிசைக் கைத்தொழிற் சங்கங்கள், மீன்பிடிச் சங்கங்கள் ஆதியன உருவாக்கப்பட்டுப் பதிவு பெற்றன. 1956-ம் ஆண்டிலுள்ள சங்கங்களின் தொகை 126 ஆகும்.

1958-ம் ஆண்டைப் பலநோக்கக் கூட்டுறவுச்சங்க ஆண்டு எனக் கூட்டுறவாளர்கள் வர்ணிக்கின்றனர். அப்போதைய உணவமைச்சின் கொள்கைக்கிணங்கக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபித்தது. அத்தோடு சங்கங்கள் இல்லாத கிராமங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் புதிய சங்கங்கள் பதியப்பட்டன; தற்போது 51 பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவற்றின் முக்கிய நோக்கம் கடன் வசதியையும், விற்பனை வசதியையும் ஒருங்கே அளிப்பதாகும்.

இதனையொழிந்த ஏனைய பொருளாதார முயற்சிகளில் ஈடுபடவும், அவற்றிற்கு உபவிதிகளின் பிரகாரம் உரிமையுண்டு; மன்னார் மாவட்ட கூட்டுறவுச் சமாசத்தால் கூட்டுறவு ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கும் நோக்கத்துடன் கூட்டுறவு விஸ்தரிப்பு நிலையமொன்று ஸ்தாபிக்கப்பட்டு இயங்கி வருகிறது; மூன்று காரியாதிகாரிகளின் பிரிவிலும் மூன்று பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களுள்ளன. இங்கு 1962-ம் ஆண்டில் நான்கு கூட்டுறவுத் தொழிலாளர் சங்கங்கள் பதியப்பட்டுள்ளன. 1960-ம் ஆண்டில் மாவட்டக் கூட்டுறவு வங்கி ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, இயங்கிவருகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் இம்மாவட்டத்தில் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னரும், ஏற்படுத்தப்பட்ட ஆரம்ப காலங்களிலும் மக்களின் வாழ்க்கைத்தரம் தாழ்ந்த நிலையிலிருந்தது. ஆயின், நாளடைவில் கூட்டுறவு இயக்கத்தின் அபிவிருத்தியின்காரணமாக மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்ததுடன், ஒன்றுபட்ட சூழலில் பிறரோடு ஐக்கிய மனோபாவத்தில் பழகவும் தலைப்பட்டார்கள். அன்றியும் தனிப்பட்டோரால் செய்யப்பட்டுவந்த அரசாங்க ஒப்பந்த வேலைகளில் அநேகமானவை, தற்போது பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களினாலும், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களினாலும் செய்யப்பட்டுவருவதால், சாதாரணமாகத் தொழில் செய்யும் நேரங்கள் தவிர்ந்த மீதி நேரங்களிலும் வருமானம் வரக்கூடிய முறையில் கழிக்கக்கூடியதாகவுள்ளது; அத்துடன் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஓரளவில் ஒழித்திருக்கிற தென்பதும் குறிப்பிடத் தக்கது.

ஒரு நாட்டை, அந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை, பொருளாதார வளத்தை மேம்படச் செய்யவேண்டுமாயின் அதற்குக் கூட்டுறவு முறையே மிகச் சிறந்ததும், உயர்ந்ததுமென்பது சர்வதேச ஆராய்ச்சிக் குழுவினரின் தீர்க்கமான முடிவாகும்; எனவே, இதற்கிணங்கக் கூட்டுறவு இயக்கத்தின் அபிவிருத்தியில் மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டுக் கூட்டுறவுத் தீபத்தின் ஒளியை விளங்கவைப்பார்களாக.

திருமதி. பொன்ரோஸ் சந்தாம்பிள்ளை
(1-ம் வருடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் சமுதாயம்

வைத்திய கலாநிதி ப. சிவசோதி,
[அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.]

மகளிர் கலாசாலையில் இரண்டாண்டுப் பயிற்சிபெற்று வெளியேறும் ஆசிரியர்களுக்கும், அடுத்தாண்டு பயிற்சி முடிந்து புறப்படவிருக்கும் ஆசிரிய மாணவிகளுக்கும் எனது வாழ்த்துக்கள். என்னையும் பொருட்படுத்தி, ஒரு கட்டுரையை உங்களுடைய சஞ்சிகைக்கு எழுதும்படி கேட்டதற்கு என்னுடைய நன்றி. இறைவன் உங்களுக்குச் சகல சித்திகளையும்கொடுத்து, நீங்கள் எதிர் நோக்கியிருக்கும் புதுக் கற்பனையுலகில் நீங்கள் கல்விக்கு ஆற்ற இருக்கும் பணியில் மனச்சோர்வில்லாமல் பூரண திருப்தியோடு வெற்றிபெற இறையருள் பாலிக்கவேண்டும்.

தற்போது கடமையாற்றும் சமுதாயத்திற்றான் எதிர்காலச் சமுதாயத்தின் நலனுஞ், சித்தியும், புகழுந் தங்கியிருக்கின்றன. இந்த ஒப்பற்ற செயலில் நீங்களும் உங்களைப்போல் ஒத்த பலதுறைகளில் ஈடுபட்ட தன்னலமற்ற சேவையில் பங்குபெறும் பல தியாகிகளிலும், போதனாசிரியர்களிலும், பேராசிரியர்களிலும், பொது நலப்பணியில் கலந்துகொள்ளும் பெரு மக்களிலுந்தான் எங்கள் எதிர்வரும் சமுதாயத்தின் திறமை தங்கியிருக்கிறது. வாழ்வின் இலட்சியம் நிலைத்திருக்கிறது.

சுவர் இருந்தாற்றான் சித்திரம் எழுதலாம் என்ற முதுமொழிக்கிணங்க, எங்கள் மாணவ மாணவிகள் சுக தேகிகளாயும், திடகாத்திரமான உடல்நிலை உடையவர்களாயும்இருந்தாற்றான் அவர்களுக்கு வேண்டிய கல்வி வித்தைகளைச் சீரியமுறையில் பெறமுடியும். இதற்கு ஆகவேண்டிய முறைகளை வைத்தியப்பகுதியில் கடமையாற்றுபவர்களும், பெற்றோர்களும் கூடியளவு பிரயாசையெடுத்துச் சுகாதார முறைகளை நன்கு அனுசரித்து நன்கமைந்த உணவை, உட்கொள்ளுவதினாலும், சுற்றுடல், இல்லம் முதலிய இடங்களின் சுகாதார ஒழுங்குகளைப் பின்பற்றிவருவதினாலும் நம்நாட்டில் அநேகமாகச் சத்துள்ள உணவுக்குறைவினால் பீடிக்கப்பட்ட பிள்ளைகள், சுற்றுடல், சூழ்நிலைச் சுகாதாரக் குறைவினால் உண்டாகும் நோய்கள் குறைபாடுகள் சமுதாயத்தில் அருகிக்கொண்டு வருகின்றன. இத்துறைகளிலும் மேலும் நாங்கள் பன்மடங்கு விருத்தியடையவேண்டியவர்களாயிருக்கின்றோம். மேலும், அடைந்துள்ள வெற்றியை வீண்போகாமல் பாதுகாக்கவேண்டியவர்களாயும் அமைந்துள்ளோம். இதற்கு விடாமுயற்சியும் ஊக்கமுந்தான் தேவை.

இந்த நூற்றாண்டில் உடல்நிலையோடு கூடிய உன்னத மனநிலையும் அத்தியாவசியமாக இருக்கிறது. ஒரு சீரிய சமுதாயத்தை அமைக்க இத் துறையிற்றான் நாங்கள் விழிப்புணர்ச்சியோடு இருக்க வேண்டியவர்களாய் உள்ளோம். பலதுறைகளில் வெற்றிபெற்றுவரும் மனிதகுலம் உளத்தூய்மையிலும் பண்பாட்டிலும் அதிகம் வெற்றிபெற்றதாகத் தெரியவில்லை. கலை, கலாச்சாரம், விஞ்ஞானம், பௌதிகம், இரசாயனம், அணுசக்தி விருத்தியாகிய பலதுறைகளில் நாம் முன்னேறிவருகிறோம். ஆனால், இந்த முன்னேற்றத்தை பேணிக்கொள்வதற்குத் தகுந்த பண்பாடற்றவர்களான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதாகத் தோற்றுகிறது.

இக்குறைபாட்டிற்குப் பலவேறு காரணங்கள் தரப்படுகின்றன. கல்வி நிலையங்களில் தகுந்த ஒழுக்கமுறைகளைக் கையாளாத காரணத்தாலும் இளைஞர் சமுதாயத்தில் ஆத்மீக நல்லுணர்ச்சியும், கடவுள் பக்தியும் அருகிவருவதினாலும், குடும்ப ஒற்றுமைப்பாடு சீர்குலைந்து வருவதினாலும் அந்நியரது கலை கலாச்சாரம், நாகரிகம் எங்கள் சமுதாயத்தில் குடிகொண்டு, பண்டு தொட்டுப் பழகிவந்த சமூகமுறைகள், விதிகள் உருக்குலைந்து ஒரு மிருகத்தன்மையான (Hy-brid) கலாச்சாரம் குடிகொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் இந்நிலை பெறப் பெற்றோம் என்ற நம்பிக்கை நிலவிவருகிறது.

எக்காரணத்தைக்கொண்டு இக்குறை பாடு சமுதாயத்தில் நிலவி வந்தாலும் எங்கள் பொறுப்பு இக்குறை பாட்டுக்கு மூல காரணமாயுள்ள காரணங்களைக் களைந்து அதற்குப் பதிலாக நல்ல முறைகளைக் கையாண்டு நல்ல பண்பாட்டை வளர்ப்பதினுல் எங்கள் வருங்காலச் சமுதாயத்தில் ஒரு மாற்றம் கட்டாயம் ஏற்படும். இவ்வித மாற்றத்தை உண்டுபண்ணுவதற்குத் தற்போதைய சமுதாயம் எவ்வளவு ஊக்கமும், விழிப்புணர்ச்சியும் காட்டுகிறதோ அவ்வளவிற்கு வெற்றிபெறுவோம்.

மனிதனுகப் பிறந்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்று அம்சங்களாலும் சத்தியத்தைக் கடைப்பிடித்து, நேர்மையான வாழ்வைக் குறிக்கோளாக வைத்து நடந்தால், அதிகமாகச் சமுதாயத்தில் செறிந்திருக்கும் உளநோய் ஊழல் இருக்காது.

மனத்தால் சிந்திக்கும் சிந்தனைகள் சீலமுள்ளதும் சீரியதுமாக இருக்கவேண்டும். வாயால் பேசும் பேச்சுக்கள் வாய்மையானதும் தன்னலமற்றதும், தியாக சிந்தனையில் அடிப்படையானதும், சமூக ஒழுக்கத்திற்குள் வரையறுக்கப் பட்டதுமாக இருந்தால், அப்படியான மனம் வாக்குப் படைத்தவர்களினுடைய செய்கைகள் புனிதமானதும், தீவிரமானதுமாகத் தான் இருக்கும். இந்த உண்மைத் தத்துவத்தைக் கொண்ட எங்கள் தமிழ்மொழியில் — சத்தியத்திற்கு மூன்று சொற்கள் பாவனையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மனிதனுல் சிந்திப்பதற்கு—உண்மை. வாயினுல் பேசுவதற்கு—வாய்மை. மெய்யினுல் செய்வதற்கு — மெய்ம்மை என்று இந்த முச்சொற்களும் ஒரு பொருள்பட்ட கருத்தை—சத்தியத்திற்கு வெளிப்படுத்துவது. இது தமிழின் இனிமைக்கும், தமிழர் சத்தியத்திற்குக் கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதாக வல்லவா இருக்கிறது.

இந்த அடிப்படையில், தமிழ்ப் பயிற்சி ஆசிரிய கலாசாலையில் பயிற்சிபெறும் ஆசிரியர்களாகிய யாவரும் தங்கள் தொழிலை ஏற்றுச்செல்லும் கலைக்கூடங்களில் பயில வரும் மாணவ மாணவிகளுக்கு ஒழுக்கம், பண்பு, கலை, கலாச்சாரம், சத்தியம், தர்மம் ஆகிய சீரிய சீலங்களை இளஞ் சிறுரின் இதயத்தில் கல்மேல் எழுத்துப்போல் பதிய வைத்தால் எங்கள் எதிர்வரும் சமுதாயம் எதுவித குறைபாடுகளும் இல்லாத சமுதாயமாக விளங்கும் என்பதற்கு ஐயமில்லை. இத்தொண்டுக்கு ஒவ்வொரு பெற்றோரும் உறுதுணையளித்தால் இப்பேற்றைப் பெறுவது கடினமாயிருக்காது.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினு மோம்பப் படும்".

சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் உணவியல்

செல்வி. ச. சின்னப்பு,
*(விரிவுரையாளர் பலாலி)*

இவ்வுலகம் ஒரு காட்சிக் கூடம். ஏனெனில், இங்கு நாம் எத்தனை எத்தனையோவிதமான உயிரினங்களைப் பார்க்கின்றோம். அவற்றின் உணவுப் பழக்கவழக்கங்கள் எவ்வளவோ வேறுபடுகின்றன. உடல் நலத்திற்கு மற்றத் தேவைகளைவிட உணவு மிகவும் இன்றியமையாதது. உணவு ஆராய்ச்சி முதன்முதலில் விஞ்ஞானமுறையில் மேலைநாடுகளில் ஏற்பட்டது. ஆய்வுக் கூடத்தில் உணவுப் பொருள்களை ஆராய்ந்து பரிசோதனைசெய்து, வெவ்வேறு உணவுப் பொருள்களில் காணப்படும் உணவுச் சத்துக்களின் அளவு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

பற்பல நாடுகளிலுள்ள மக்களின் உணவு, ஒழுக்கம் வேறுபட்டதாகக் காணப்படுகிறது. இவர்கள் வெவ்வேறு நேரங்களில் உண்கிறார்கள். சிலர் நடுப்பகலிற் பேருணவையும், சிலர் இரவிற் பேருணவையும் உட்கொள்வது வழக்கம். ஒரு நாட்டில் உள்ளவர்கள்கூட உணவை வெவ்வேறு நேரங்களில் உண்கிறார்கள். எப்பொழுது உண்டாலும் எல்லாச்சத்துகளும் அடங்கிய சம உணவாக இருத்தல் அவசியம். சம உணவு என நாம் உண்ணும் பொழுது அவ்வுணவில் உடம்பினது வேலைக்கும், உள்ளுறுப்புக்களின் தொழில்களுக்கும் தேவையான வெப்பத்தையும், சக்தியையும் அளிக்கக்கூடிய உணவுகளாகிய தானியவகைகளையும், எண்ணெய் வகைகள், வெல்லம் இவைகளையும் சேர்த்துக் கொள்ளல்வேண்டும். தசைகளையும், இழையங்களையும் வளர்ப்பதற்கும், சிதைவை ஈடு செய்வதற்கும் புரத உணவுகளாகிய மீன், முட்டை, இறைச்சி, பருப்பு போன்றவற்றை உண்ணவேண்டும். உடலைப் பாதுகாப்பதற்கும், உடலின் உறுப்புக்கள் சரியாகத் தொழிற்படுவதற்கும் உயிர்ச்சத்துக்கள், தாதுப் பொருள்கள் நிறைந்த காய்கனிகளையும், பச்சை இலைவகைகளையும் உண்ணல் அவசியம். இவ்வுணவுகளைச் சரியான முறையில், சரியான அளவில் உட்கொள்ளல் அவசியம். உணவு கூடுதலினாலும், குறைவதினாலும் உடல்நலம் பாதிக்கப்படுகிறது. சில நோய்களும் தற்காலத்தில் உணவினால் குணமாக்கப்படுகிறது.

உணவு கூடுதலும், குறைதலும் ஓர் ஆளின் பருமன், நிலை, வயது, செய்யும் தொழில் முதலியவற்றில் தங்கியிருக்கிறது. குழந்தைகளின் தேவையை வளர்ந்தோரின் தேவையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவர்களது தேவை மூன்று விசேஷ அம்சங்களில் வேறுபடுகிறது. முதலாவதாக அவர்களின் உடம்பின் அளவின் விகிதத்திற்குத் தேவையான சக்தி அதிகமானதாக இருக்கிறது. இரண்டாவதாக வளரும் வயதினராக இருப்பதனால் அவர்களது உணவில் அதிக புரதங்களையும், தாதுப் பொருள்களையும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். மூன்றாவதாக அவர்களது சமிபாட்டு உறுப்புக்களுக்கு ஏற்றதாக உணவு இருத்தல்வேண்டும். யுவப்பருவத்தை ஒரு முக்கிய பருவமாகக் கருதி, இப்பருவத்தில் ஆண்களினதும், பெண்களினதும் உடலமைப்பில் காணப்படுகின்ற மாற்றத்திற்கேற்றவாறு உணவைத் தெரிதல் வேண்டும். உருவத்தில்மட்டும் உடல் பருமனடையாது; சில உறுப்புக்களின் தொழில்களிலும் மாற்றம் ஏற்படுகின்றது. ஆதலினால் இப்பிள்ளைகளுக்கு வளர்ச்சியையும், விருத்தியையும் ஏற்படுத்தக்கூடிய உணவுச் சத்துக்களாகிய புரதம், கல்சியம், இரும்பு போதியளவில் உட்கொள்ளப்படல் வேண்டும். பச்சைநிறக் கீரைகள், காய்கனிகள் அதிக அளவிற் சேர்த்தல் நன்று. உடலுழைப்புச் செய்யும் மக்கள் சக்திச் செலவை ஈடு செய்வதற்காகச் சக்தி நிறைந்த உணவுகளை உட்கொள்ளல்வேண்டும். இதற்குத் தானியம், கொழுப்பு, வெல்லம் போன்ற உணவுகள் அதிக அளவில் உட்கொள்ளப்படல் வேண்டும். இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுலகில் ஒருசிலர் நல்ல உடலமைப்புப் படைத்தவராகவும் சிலர் நலிவடைந்தும் காணப்படுகின்றனர். இந்நிலை உணவினுல் மட்டுந்தான் ஏற்படுகிறதென்று திட்டமாகக் கூறமுடியாது; எனினும், உணவு ஒருவரினது உடலமைப்பில் முக்கிய இடம் பெறுகிறது. சிலசமயங்களில் பொருத்தமான உணவுகளை உட்கொண்டும் உடலைத் திருத்திக் கொள்ளலாம். உதாரணமாக உடல் பருமனடைந்தோர் தானியவகைகளையும், கிழங்கு வகைகளையும், எண்ணெய், வெல்லம் போன்றவற்றையும் குறைத்துக் காய்கனிகளைப் பெருமளவில் சேர்த்துக்கொள்வாரேயானுல் அதிக உடல் நிலையைக் குறைத்துக்கொள்வது மட்டுமல்லாமல், சில குறிப்பிட்ட நோய்களாகிய நீரிழிவு, இரத்தாசய நோய் போன்றவற்றைத் தடுத்தும்கொள்ளலாம். உடல் நிலை குன்றியவர் கூடியளவில் தானியங்களையும், புரதம், கொழுப்பு, வெல்லம் நிறைந்த உணவுகளையும் மூன்று நேரப் போசனத்திற்குப் பதிலாக நாலு அல்லது ஐந்துநேரம் உட்கொண்டால் அவர்களினது உடலமைப்பில் மாற்றம் ஏற்படுமென்பதில் ஐயமில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்புவரை மூளை உழைப்பாளிகளுக்கு மிகுதியான உஷ்ணத்தையளிக்கும் உணவு தேவையென மக்கள் கருதியிருந்தனர். ஆனுல், அப்பேர்ப்பட்டவர்களுக்கு ஒரு சாதாரண ஆளுக்குத் தேவையான உணவு போதுமானதாகும். மூளையினுல் வேலைசெய்பவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் உணவுத் தேவைகளைக் குறிப்பிடல் அவசியமன்று.

பொதுவாகப் பெண்களுக்கு ஆண்களை விடக் குறைந்த அளவு உணவு போதுமானது; சிலநிலைகளில் அதாவது கருவுற்றிருக்கும்போதும், பாலூட்டும் காலங்களிலும் விசேஷ உணவுத் தேவைகள் உண்டு. தாய்மார்களிடையே சில மூடநம்பிக்கைகள் காணப்படுகின்றன. சில கர்ப்பிணிகள் அதிக உணவு உட்கொண்டால் பிள்ளை அதிகம் வளர்ந்துவிடும் எனவும், வேறு சிலர் உணவை இருவருக்காக உண்ண வேண்டுமெனவும் அளவுக்கதிகமான உணவுகளை உண்கின்றனர்; உடல்நலம் வாய்ந்த, ஆரோக்கியமான சிசுவைப்பெற வேண்டுமாயின் மற்றப் பெண்மணிகளிலும் பார்க்க அவர்கள் தம் உடலிலே ஏற்படுகின்ற விசேஷ தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக, புழுங்கலரிசிச் சோறு, காய்கறி, மற்றைய தானியங்கள், பால், முட்டை முதலிய உணவுப் பொருள்களை அன்றுட உணவில் சேர்த்தல் அவசியம்.

சிலசமயங்களில் போதிய உணவு இருப்பினும் அவற்றை நாம் சரியாகத் தெரிந்தெடுத்து உண்ணுதிருப்பதினுல் உடல் நலத்தையிழக்கின்ளேம். நீரிழிவையும் நிறையக் கொழுப்புணவுகளையும் உண்பதனுல் இரத்தாசய நோய்களையும் பெறுதல் இதற்கு உதாரணங்களாகும். குறிப்பிட்ட சில உணவுச்சத்துக்களை உண்பதனுல் சில நோய்களிலிருந்து குணமடையலாம். தற்காலத்தில் உயிர்ச்சத்து B யைக் கூடுதலாக உண்பதனுல் நரம்பு சம்பந்தமான நோய்களையும், இரும்புச்சத்து நிறையவுள்ள ஈரல், பச்சை இலைவகைகளை உண்பதால் இரத்தச் சோகையையும் தடுக்கலாம் எனவும் கண்டுபிடித்துள்ளார்கள்.

உணவைத் தயாரிக்கும்போது பின்வரும் சில முக்கிய குறிப்புகளைக் கருத்தில் கொள்வதனுல் உணவுச்சத்துக்கள் அழிவதையும் வீணுகுவதையும் தடுக்கலாம்:

1. அரிசியை அதிகம் கழுவுவதனுல் தவிட்டிலேயுள்ள உணவுச் சத்துக்கள் நீருடன் சேர்ந்து வீணுக்கப்படுகின்றன. ஆகவே, அரிசியைக் கழுவமுன்னரே சுத்தம்செய்தல் நன்று.
2. பச்சையரிசியைச் சமைக்கும் போது மேலதிக நீரைச் சேர்த்துச் சமைத்து, பின் அவிந்த நீரை வடித்து எறிவது தவறு; ஆகவே, அளவான நீரைச் சேர்த்து மூடிய பாத்திரத்துள் சமைக்கவும்.
3. காய்கறிகள், இலைகள், பழவகைகள் வாங்கும்போது அவை புதிதாகவும், அழுகல் இல்லாதவையாகவும் இருக்கின்றனவா எனக் கவனிக்கவும். நீண்ட நாட்களுக்குச் சேமித்து வைக்கப்பட்ட, வாடிய காய்கறிகள் இலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைகளில் உணவுச்சத்துக்கள் குறைவு படுகின்றன.

4. காய்கனிகள் இலைவகைகளை வெட்ட முன்னரே கழுவுதல் நன்று; சிறுசிறு துண்டுகளாக வெட்டுதலினாலும் நீரில் ஊறவைப்பதனாலும் காய்கனி இலைகளில் உள்ள உணவுச் சத்துக்கள் வீணாகின்றன.

5. பச்சையிலை வகைகளையும், கிழங்கு வகைகளையும் நீரில் நீண்டநேரம் வைப்பதனால் முக்கிய உணவுச் சத்துக்கள் கழுவுப்படுகின்றது.

6. உருளைக்கிழங்கு போன்ற கிழங்குவகைகளின் தோலில் உணவுச் சத்துக்கள் இருப்பதனால், இவற்றைச் சமைக்கும் போது தோலுடன் சமைப்பது நன்று.

7. காய்கனிகளைச் சமைக்கும்போது அவற்றைக் குளிர்ந்த நீரில் போடுவதிலும் பார்க்க, சூடாக்கிய நீரில் இட்டுக் கொதிக்கவைத்தல் நன்று. குறைந்த நீரை உபயோகிக்கவேண்டும். நீரைச் சுடவைக்கும்போது உப்புச் சேர்த்தல் வேண்டும்.

8. காய்கறிகளைச் சமைக்கும்போது மூடிய பாத்திரத்துள் சமைப்பது நன்று. இதனால் அவற்றின் இயற்கை நிறம், மணம், உருசி என்பன பாதுகாக்கப்படுகின்றன. காய்கனிகளை 10, 15 நிமிடம் சமைத்தாற்போதும். ஆனால், கிழங்கு வகைகளுக்கு நீண்ட நேரம் தேவை.

9. காய் கனிகளைச் சமைத்தவுடனேயே சாப்பிடுதல் நன்று. சமைத்ததைச் சூடாக வைத்திருப்பதனாலோ திரும்பச் சூடாக்குவதனாலோ உணவுச் சத்துக்கள் அழிவுபடும்.

10. இலை வகைகளைச் சாப்பிடுவதற்குச் சிறந்த வழி சொற்ப நீர்விட்டுச் சுண்டுதலாகும். சுண்டிய இலைக் கறியைச் சாப்பிடமுன் சிறிது தேசிக்காய்ச்சாறு சேர்த்தல் விரும்பத்தக்கது.

11. சில இலைவகைகளைப் பருப்புடன் சேர்த்துச் சமைத்து உண்ணலாம்.

12. சில பச்சையிலை வகைகளை எண்ணெயில் பொரித்து வறுத்துச் சாப்பிடலாம். முருங்கையிலையைத் தேங்காய் எண்ணெயில் பொரித்து, வறுத்துச் சாப்பிடுவது மிக உவப்புத்தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையலரும் அலங்காரத் தையலும்

இப் பூவுலகின்கண் மானிட உருவெடுத்த அனைவரும் தங்களை அலங்கரித்துக் கொள்வதில் அவாவுடையோராய்க் காணப் பட்டார்கள்; காணப்படுகின்றார்கள். இவ் விதமான அலங்காரம் உடலுக்குத் தூய் மையையும், சுகத்தையும் அளிப்பதோடு அல்லாமல் உள்ளத்துக்கும் பூரிப்பை அளிப் பதால் மனிதன் நோய்நொடியின்றி வாழ முடியுமென்று அறிஞர் எமில்கூ தமது மனோதத்துவ ஆராய்ச்சி மூலம் அழுத்தந் திருத்தமாக எடுத்துக்காட்டியுள்ளார்.

நமது அறிவைச் சற்று முன்னோக்கிப் பார்க்கப்போனால் பண்டைய காலங்களில் மக்கள் நாகரீகமின்றி வாழ்ந்தபோது, தங் களை மரப் பட்டைகள், இலைகள், கொடி கள், தோல்கள், உரோமங்கள் என்பவற் றால் அலங்கரித்துக்கொண்டார்கள் என்ப தைச் சரித்திர ரீதியாக அறியக்கூடியதாக இருக்கின்றது. நாகரீகம் முதிர முதிர மக்கள் தங்களை மணிமாலை, முத்துமாலை இவைகளைக்கொண்டு அலங்கரித்துக் கொண்டார்கள் என்றும் அறியக்கிடக் கிறது.

தங்கம் புடமிடப் புடமிடத்தான் ஒளி பெறுவதுபோலும், குழந்தை பேசப்பேசத் தான் மழலை திருந்துவதுபோலும் நமது முன்னோர்கள் ஆடை நெசவு கண்டுபிடித்த தன் பின்தான், ஆடைகள் மீது அலங்காரங் கள் செய்து தங்களை அலங்கரித்துக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

நமது தாய்நாடாகிய இந்தியாவில், பல் லாண்டுகட்கு முன்பே உடைகளில் சித்தி ரத் தையல் செய்யும் முறைகளில் சிறந்து விளங்கினர் என்பதை, மெகஸ்தனீஸ் என்ற மேல்நாட்டு அறிஞர் தமது குறிப்புகளில் எழுதியுள்ளார். இத்தாலியிலிருந்து வந்த மார்க்கபோலோவும், ஆங்கிலேயரான டேனியல் டீபோவும் நம்நாட்டுப் பெண்கள் இந்தியச் சித்திரத் தையல் வேலைப்பாடு களை உபயோகித்து ஆடைகளை அணிந்தார் கள் என்று தங்களது நூல்களில் எழுதி வைத்துள்ளனர்.

இந்தியர்கள் கி. மு. 5,000 ஆண்டு களுக்கு முன்பே சித்திர நெசவுக் கலையில் சிறந்து விளங்கினர் என்பது மொகஞ்ச தாரோவிலும், ஹாரப்பாவிலும் நடத்தப் பட்ட அகழ்வாராய்ச்சிகள் மூலம் கிடைத் துள்ளன. ஆண்கள் தங்கள் வீட்டுப் பெண் கள் நெசவுசெய்த உடைகளையே அணிந்த னர். வேதகாலத்தில் பெண்களால் நெய்யப் பட்ட 'உஷ்நிஷா' தலைப்பாகை, 'நிவி' பாவாடை, 'வதுயா' கல்யாண உடை, 'டுபா' ஆடைகள் பெயர்பெற்றனவாயும், கவர்ச்சியானவையாயும் விளங்கின.

நம் தாய் நாட்டில் மாத்திரமன்று எகிப்து, மொசப்பொத்தேமியா, பலஸ் தீன, சீன நாட்டுப் பெண்களும் சித்திர நெசவுத் தையற்கலையில் சிறந்து விளங்கி னர் என்பதற்குக் கல்வெட்டுக்களும், பண் டைய உடைகளும் சான்று பகர்கின்றன.

இவ்வாறான பெருமை பொருந்திய சித் திரத் தையலை இன்றைய நாகரீகப் பெண் மணிகள் எவ்வண்ணம் உபயோகிக்க முடியு மென்பதையும், அதற்குரிய வழிவகைகளை யும் ஈண்டு ஆராய்வாம்.

தையலீர்! தையல் பூரண வெற்றி அளிக்கவேண்டுமாயின் பின்வரும் விடயங் களை அறிந்திருக்கவேண்டும்.

**1. தையலுக்கு உபயோகிக்கும் கருவிகள்:**

தைப்பதற்குப் புடவை, மெல்லிய ஊசி, வர்ணப் பருத்திப் பட்டு நூல்கள், சாதா ரணக் கத்திரி ஒன்று, பென்சில், அடிக் கோல், பூ வடிவ மாதிரிகள், விரல் உறை அட்டை, மை, வட்டமான சட்டம், பெரிய துணி இளைப்புச் சட்டம், அளவு நாடா, பெட்டி, குத்தாணி, சுண்ணக் கட்டி, காபன் பேப்பர், சித்திரம்வரையும் காகிதம், கண் ணாடிக் காகிதம் என்பன.

**2. சித்திரத்தைத் துணியில் பதித்தல்:**

காபன் தாள் முறை, மெல்லிய துணி யைச்சித்திரத்தின்மேல் வைத்துப்பதித்தல், கண்ணாடிக் காகித முறை, சூட்டின் மூலம் வடிவ மாற்றல், டென்சிங் மாற்றும் முறை, சூரியவெளிச்ச முறை என்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சித்திரத் தையல் வகைகள் :

காம்புத் தையல், எலும்புத் தையல், சங்கிலித் தையல், சிறு முடித் தையல், விதைத்தையல், தட்டைத்தையல், அடைப் புத் தையல், ஓட்டைத் தையல், நிரப்புத் தையல், செற்றின் தையல், சோம்பேறித் தையல், பொத்தான் துவாரத் தையல், எரிங் எலும்புத் தையல், வெட்டுவேலைத் தையல், ஸ்கலப்பிங் தையல், ரூமேனியன் தையல், இழையுருவித் தையல், புழுத் தையல், ஊசி நெசவுத் தையல், சிக்கன் வேலைத் தையல், ஜலட் துவாரம், ஏணி வேலைத் தையல், நிழற் தையல், அப்ளிக் வேலை, குட்டை - நெட்டைத் தையல், பொன் ஜரிகைத் தையல், தாம்பூர்தையல், குறுக்குத் தையல், எழுத்துக்கள் தைத்தல், ஏன் ஏன்ட் குறுக்குத் தையல், பறக்கும் தையல், கோச்சிங் தையல், வளைந்த ஓரத் தையல், உருட்டுத் தையல், இறகுத் தையல், கிழிஞ்சல் வடிவத் தையல், தேன் கூட்டுத் தையல், ஸ்மோக்கிங் தையல் எனப் பலவகைப்படும்.

" ஆவதும் பெண்ணாலே ... " என்ற முதுமொழியைப் பெண்களாகிய நாம் மேற்கொண்டு, மேற்கூறிய அலங்காரத் தையல்களைத் தக்க ஆசான்மூலம் கற்று, வீட்டுக்கும் நாட்டுக்கும் ஏற்ற தொண்டினை யாற்றி, நம் வாழ்க்கையில் வெற்றி காண்போமாக.

ரச ஞானம் மனிதனின் ஆயுளை அதிகமாக்கும் என்ற அறிஞர் எமில்கூவின் கூற்றுப்படி நடனம், நாட்டியம், சங்கீதம், ஓவியம், காவியம் போன்றவை மாத்திரம் அன்று, அலங்காரத் தையலும் மனிதனுக்கு உளப் பூரிப்பை அளித்துத் தீர்க்காயுளை நல்குமென்பதைக் காட்டுவோமாக.

" எல்லாரும் பட்டுடுக்க, என்மகள் பார்த்திருக்காள் " என்ற நாட்டுப் பாடற்கொப்ப நாம் ஏங்கித் துக்கித்து வாழாது, 'நாமும் பட்டுடுப்போம்' என்று இன்று பல துறைகளிலும் முன்னேறி வரும் வீரப் பெண்மணிகளைப்போல் தையற்கலையையும் கற்றுச் சிறப்புடன் வாழ்வோமாக !

வாழ்க பெண்ணுலகம் !
வளர்க தையற்கலை !!

திருமதி. வ. சூ. மேரி பிலீசியா பெர்னாண்டோ
(முதலாம் வருடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்க்கையில் மனையியற் கலை

மனித வாழ்க்கை சீருஞ்சிறப்புடனும் மிளிர வேண்டுமானல் ஒவ்வொரு குடும்பமும் நல்வாழ்க்கை யுடையதாகக் காணப்படவேண்டும். ஒரு நாட்டின் முன்னேற்றமும் பெருமையும் வழி வழி வளரற்பாலது; அவ்வளர்ச்சிக்கு முக்கிய கருவிகளாய்த் திகழ்பவர்கள் நம் தாய்மார்களே யாவர். நமது குழந்தைகள் ஆண்மையோடும் சக்தியோடும் வீரர்களாக வளர்வதும் அன்றிக் கோழைகளாக ஆவதும் தாய்மார்களைப் பொறுத்ததேயாகும். ஒருதாயின் ஆற்றல், பக்தி, தூய்மைக் கேற்றவாறே அவள் பெற்றெடுத்து வளர்க்கும் குழந்தையுமிருக்கும்.

"புகழ்புரிந் தில்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை"

என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு; ஒருவன் வாழ்க்கையிற் பிறரால் மதிக்கப்பட்டு பொறுமையுடன் வாழ்ந்து மகத்தான காரியங்களைச் செய்யவேண்டுமானல் அவன் மனையாளும் சிறந்த குணங்களையுடைய இல்லாளாகத் திகழவேண்டும்; அவனுக்குக் குறிப்பிட்ட நேரங்களில் உடலுக்கேற்ற சத்துள்ள உணவுகளை அளித்து அவன் வருவாய்க் கேற்றவாறு வாழ்க்கையை நடத்தி அவன் சோர்வுறும்போது தெளிவும் தைரியமும் ஊட்டி, நோயுற்றபோது பராமரித்து வீட்டில் இருக்கும் உறவினர்களையும் விருந்தினரையும் அன்புடனும் இனிய முகத்துடனும் உபசரித்து வீட்டை அழகாகவும் தூய்மையாகவும் வைத்திருந்து வாழ்க்கை நடத்துபவளே சிறந்த இல்லாளாவாள்.

"அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு" என்ற நிலைமாறி பெண்கள் ஆண்களுக்குச் சரிநிகராகக் கல்வி பயில வேண்டுமென்ற நிலை தோன்றியது; இந்நிலையிலும் இயற்கையன்னையின் திட்டப்படி ஆண்களுக்கும் பெண்களுக்கும் அமைந்துள்ள வெவ்வேறு கடமைகளுக்கேற்ப அக்கல்விமுறை அமையவில்லை. சிறிது காலத்திற்குப் பின்புதான் அவரவர்களுடைய கடமைக்கேற்ப, அவர்களுடைய ஆற்றல்களை வளர்த்து, அறிவு புகட்டக்கூடிய கல்வி முறை ஒன்று பெண்களுக்கென வகுக்கப்பட வேண்டுமெனக் கருத்துத் தோன்றியது; அதுவும் மனையறத்தைச் செவ்வனே ஏற்று நடத்தக்கூடிய கல்விமுறையாக அமைந்திருக்க வேண்டுமாதலால் அதற்கு மனையியல் எனப் பெயர் கொடுக்கப்பட்டது; முதலில் இதுபற்றிய சிந்தனை அமெரிக்காவில் ஏற்பட்டதால் அங்கேதான் இக்கல்லூரிகள் முதன்முதல் ஆரம்பிக்கப்பட்டன. காலகட்டத்தில் இக்கல்வி முறை அகில உலகிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் போதிக்கப்படுகிறது.

பெண்கள் கடமைகளுக்கேற்ப இக்கல்வி முறை பல அம்சங்களைக் கொண்டுள்ளது; அவர்களின் முதன்மையான கடமைகளிலொன்று உணவு தயாரித்தல்; மனித உடலில் எலும்பு, தசை, நரம்புகள் முதலிய பல அம்சங்களும், உடலின் மென்மையான முதன்மையான பகுதிகளாக இருதயம், சுவாசப்பை, மூளை, ஈரல் என்பனவும் இருக்கின்றன. நாம் நாவுக்குச் சுவையான உணவுகளை உண்பது மாத்திரமன்று, மேற்கூறிய உடலின் பல்வேறு உறுப்புக்களையும், பகுதிகளையும் ஒருமித்துப் பொருத்தமுற வளரச் செய்யவேண்டிய சத்துள்ள நல்லுணவுகளை உண்ணவேண்டும். இத்தகைய உணவுதான் மனிதனைத் திடகாத்திர முள்ளவனுகச் செய்யும்; இவற்றைப்பற்றி யெல்லாம் நன்கு அறிந்து உணரக்கூடிய முறையில் உணவுச் சத்துக் குணங்கள் கற்பிக்கப் பெறல் வேண்டும்; இவற்றுக்கெல்லாம் சிறப்பிடம் அளிக்கப்பட்டிருக்கும் மனையியற் கல்வி மனித வாழ்க்கைக்கு அவசியமானதாகும்.

சத்துள்ள நல்ல உணவுகளை அருந்தினுல் மட்டும் போதாது; "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற முதுமொழிக்கிணங்க நோய் ஏற்படாது கவனிக்கவேண்டியது எமது கடமை. வீட்டில் உள்ளவர்களுக்கு நோய் ஏற்படின் அவர்களை நல்ல முறையிற் பராமரித்து வாழ வழிதேடிக் கொள்வதற்கு மனையியற் கலை துணையாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடும்பம் பொருளாதாரத் துறையில் முன்னேறுவதும் அன்றிக் கடன் பட்டுக் கலங்கி ஏழைகளாவதும் பெரும்பாலும் பெண்களைப் பொறுத்தேயிருக்கிறது. தமது குடும்பத்துக்கேற்ற வருவாயை அறிந்து அதற்கேற்ற முறையில் திட்டமிட்டுச் சிக்கனமாகச் செலவுசெய்து வீட்டை முன்னேறச் செய்யும் திறமை பெண்ணுக்கே உரியது. இவை தெரியாமல் ஆடைகளும் ஆபரணங்களும் வாங்கி ஆடம்பரச் செலவு செய்து கடனாளிகளாய்க் குடும்பத்திற்குள் பிரச்சினைகளை எழுப்பிக் குடும்பங்களைச் சிதறிவாழச் செய்யாத முறையில் இருக்கக் கூடியதாக ''தொட்டில் ஆட்டும் கையே தேசத்தை ஆளும்'' என்றபடி பெண்களை ஆக்கி வைக்கிறது மனையியற் கலை.

இவை யாவற்றிற்கும் மேலாகத் தம் குழந்தைச் செல்வங்களை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வளர்ப்பது தாய்மையின் முதற் கடனாகும். குழந்தைகளிடத்தில் நிறைந்த அன்பு கொண்டவர்கள் தாய்மார்களே. அந்த அன்பைக் குழந்தைகள் நன்கு வளரும் முறையிற் பயனுறச் செய்யச் சில தாய்மார்களுக்குத் தெரிவதில்லை. குழந்தைகளின் பருவத்திற்கேற்ற உணவும் பழக்க வழக்கங்களும் நல்லமுறையில் அமைய வேண்டும். குழந்தைகள் அச்சந் தவிர்த்து ஆண்மையுடன் நல்லது தீயது தெரிந்து வாழ வழி தேடல்வேண்டும். ஒரு தாய் இளமையிற் பயிற்றி அமைத்த நற்பண்புகள்தான் அக்குழந்தைகளின் எதிர்காலத்தைய பெருமைகளை எடுத்துக்காட்டக் கூடியனவாக இருக்கும். எனவே இத்தகைய சிறப்புறு குழந்தை வளர்ப்பும் மனையியற் கலையில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

இலைதழைகளையும், மரப்பட்டைகளையும், மிருகங்களின் தோல்களையும் ஆடைகளாக அணிந்த மனிதன், இன்று புதிய புதிய முறையில் எத்தனை எத்தனை விதமான ஆடைகளையெல்லாம் அணிந்து கொள்கின்ற வேளையில் அவற்றிற்குரிய துணிகளை வாங்கிச் சிக்கனமான முறையில் தைத்து அழகுபடுத்தவோ, சலவைசெய்து பத்திரப்படுத்தவோ வேண்டிய வழிகளையெல்லாம் எடுத்துக் கூறுகின்றது மனையியற்கலை.

எனவே கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும் மாத்திரம் மனையியற்கல்வி போதிக்கப்படுவது மாத்திரமன்று, மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததாக விளங்கும் இக்கலை, பாடசாலை செல்லாது வீட்டிலிருக்கும் பெண்களும் அறிந்துகொள்ளக் கூடிய முறையில் நாடெங்கும்பரவி வளர்ச்சியுற வேண்டுமென்பது எனது பேரவா.

செல்வி. இராஜேஸ்வரி சின்னத்துரை.
(முதலாம் வருடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைத் தமிழன் இசைக் கருவிகள்

இயற்கையோடு ஒட்டி வாழ்ந்த தமிழக மக்கள் இன்னெலிகளேத் தரும் பல இசைக் கருவிகளேக் கையாண்டு இன்புற்றன ரென்று பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலிருந்து அறியக்கிடக்கின் றது. வேடர்கள் வேட்டையாடுங்கால் தமது வில்லில் இறுகக் கட்டிய வில் நாணி லிருந்து எழுந்த இன்னெலிகளேச் செவி மடுத்து, அவ்வில்லும் ஓர் இசைக் கருவி யாகப் பயன்படக்கூடும் என்பதை நாளடை வில் உணரத்தொடங்கினர்கள்.

இதன்பயனுல் ஆரம்பத்தில் வில் யாழ் தோன்றிற்று. பின்பு இடையர்கள் பசுக் கூட்டங்களே மேய்த்து வருங்கால் வயல் களின் நடுவே நின்ற மூங்கிற் புதர்களில் வண்டினுல் துளேக்கப்பட்ட துவாரங்கள் வழியாகக் காற்றுப் புகுந்து வெளியேறிய ஓசையைக் கேட்டு ஆனந்தித்து, இதுவும் ஓர் இசைக்கருவியாக வரலாமென எண்ணி னர். அதன்பயனுல் வேய்ங்குழல் தோன் றிற்று.

வேடர்களால் தோற்றுவிக்கப்பட்ட வில் யாழ் பிற்காலத்தில் பல ஆராய்ச்சி களின்பின் பலவித யாழ்களாக உருப் பெற லாயிற்று. தமிழ் மக்கள் பேரியாழ், சீரி யாழ், சகோடயாழ், மகரயாழ் என நால் வகை யாழ்க் கருவிகளேயும் உபயோகித்தன ரெனத் தெரியவருகின்றது. வில் யாழுக் குப் பின் தோன்றிய பேரியாழ் மூன்று ஸ்தாயிகளிலும் ஏழு சுரங்களே இசைக்கக் கூடிய முறையில் 21 நரம்புகள் பூட்டப் பட்டதாகத் தெரியவருகின்றது. இதற்குப் பின் சிலப்பதிகார காலத்தில் ஏழு நரம்பு கள் சீரியாழும், மகரயாழும் தோன்றலா யின. 7-ம் நூற்றுண்டிலிருந்த திருநீல கண்ட யாழ்ப்பாணர் கையாண்ட யாழ் சகோடயாழ் எனவும், அதற்கு 14 நரம்பு கள் பூட்டப்பட்டிருந்ததெனவும் தெரிய வருகின்றது.

இன்னும் 1000 நரம்புகள் பூட்டப் பட்ட நாரதப் பேரியாழ், 100 நரம்புகளேக் கொண்ட கீஜகப் பேரியாழ், 9 நரம்புகளேக் கொண்ட துரும்புயாழ் என்பனவற்றையும் பண்டைத்தமிழன் கையாண்டிருக்கின்றுன். இலங்கை வேந்தனுகிய இராவணன் தனது கொடியில் வீணையைப் பொறித்திருந்ததாக வும், யாழை வாசித்து சாமகானம் செய்த தாகவும் செய்திகள் கிடைக்கின்றன. உதயண காவியத் தலேவனுன ஜீவகன் யாழ் வாசிப்பதில் வல்லவனுகத் திகழ்ந்தானென் றும், மதங்கொண்ட யானேயைத் தனது யாழிசையால் மடக்கினுனென்றுஞ் செய்தி கள் கிடைக்கின்றன.

தில்லேயில் இறைவன் திருநடனம் செய்த சமயம் நந்தியெம்பெருமான் மத் தளம் என்ற கருவியை வாசித்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன. ஒரு சமயம் இறைவன் காளியுடன் திருநடனம் செய்த போது ஊர்த்துவதாண்டவம் ஆடியதாக வும், அப்போது இறைவனுடைய பாதச் சிலம்பு ஒன்று கழன்று தோட்பட்டை, தொடைப்பட்டை, தொடைப்பாதம் ஆகிய இடங்களில் பட்டு, த ... தீ ... தொ நம் என்ற ஓசை எழுந்ததாகவும், இந்தச் சொற் கட்டுக்களே வைத்தே இன்று மிருதங்கம் வாசிக்கப்பட்டு வருகிறது என்ற ஒரு செய்தி யும் நிலவிவருகின்றது. தினேப்புனத்தைக் காவல் செய்துகொண்டிருந்த தலேவி தனது காதினே மகிழ்விப்பதற்காக யாழை மீட்டிப் பாலேப் பண் பாடினுள் என்றும், அவ்வமை யம் தினேக்கதிர் உண்பதற்காக வந்த யானே அப் பாலேப் பண்ணேக் கேட்டுத் தம்வயம் இழந்து இருந்ததாகப் பெரும்பாணுற்றுப் படை செப்புகின்றது.

இவற்றிலிருந்து பண்டைத் தமிழன் யாழ், முளவு, வேய்ங்குழல், வீணே ஆகிய இசைக்கருவிகளேக் கையாண்டிருப்பது பெறப்படுகின்றது. பிற்காலத்தில் யாழ்க் கருவி மறைந்துபோக, வீணேயையும் வேய்ங் குழலேயும், நாதசுரத்தையும் இசைத்தனர். இன்னும் 17-ம் நூற்றுண்டின் மத்தியில் மேலேநாட்டிலிருந்து வந்த சித்தார். அதன்பின் வயலின் எமது இசை நிகழ்ச்சி களில் முக்கிய இடம் பெற்றுவருகின்றது. அக்காலத்தில் யுத்தம் வருவதை அறிவிப்ப தற்கு வாத்தியங்கள் இருந்தன. இங்ஙனம் பண்டைத்தமிழர் பண்டைக்காலத்தில் எம் மால் நினேக்கவும் முடியாத பலவித இசைக் கருவிகளே எவ்வளவோ முயற்சி செய்து தமிழ்நாட்டில் புகுத்த அரும்பாடுபட்டனர். அவற்றை இடையிலே வந்தவர்கள் பயன் படுத்தாமல் அழியவிட்டனர். இனிமேலா வது உள்ள இசைக்கருவிகளே அழியவிடாமல் பாதுகாப்பது இப்போதுள்ள தமிழரின் கடமையென்பதை ஒருவரும் மறந்துவிடக் கூடாது.

செல்வி. வே. திரவியம்

(முதலாம் வருடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைக்கலை

ஓடிச் செல்லும் நதியும், பாடிப் பறக்கும் பறவையும், கூடி மகிழும் உயிர்கள் அனைத்தும் பண்ணை இசைக்கின்றன. அண்ட சரா சரங்கள் அசையாது ஒரு கணமும் இருப்பதில்லை. அவைகள் அசைந்து சுழலும்போது அழகான இசை ஒலிக்கின்றது. இந்த இசையின் வடிவமே இறைவன் என்று கருதினர்கள் சமயப்புலவர்கள். அத்தகைய இறைவனை இசையினாலே போற்றிப் பாடினார்கள்.

''ஏழிசையாய் இசைப்பயனாய், இயலவன் இசையவன்'' என்னும் தொடர்கள் இறைவனின் வடிவத்தைக் காண்பிக்கின்றன. இறைவனுக்கும், இசைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்று சான்றோர் எண்ணினார்கள். உள்ளத்தை உருக்கும் இசையைப் பாடும்போது இறைவன்கூட அதனை விரும்புகின்றான் என்ற கருத்து மக்கள் உள்ளத்தில் என்றும் நிலவுகின்றது. இசை விரும்பும் கூத்தனார் என்று இறைவனை அழைத்தனர்.

இசை என்னும் சொல்லுக்கு இசைவிப்பது, அதாவது தன்வயப்படுத்துவது என்பது பொருள். ஆறறிவு படைத்த மனிதனைத்தான் இசை தன்பால் ஈர்க்கிறதென்று கருதுதல் தவறாகும். மரம், செடி, கொடிகள் என ஓரறிவு உயிர்முதல் மக்கள் என்னும் ஆறறிவு உயிரீறாக எல்லாவற்றையும் கடந்து நிற்கும் மாபெரும் சக்தியாகிய ''கடவுள்'' என்ற தெய்வத்தையும் கூட இது தன்வயப்படுத்த வல்லது. அறிஞர்கள் கண்ட உண்மை இது.

இசையின் சக்தியை அளவிட முடியாது. நஞ்சை உமிழும் நாகத்தையும், மதம் பொழியும் யானையையும் இசை கட்டி அடக்க வல்லது. சீறும் நாகம் மகுடியின் நாதத்துக்கு மயங்கி ஆடுகின்றது. மதம் பொழியும் யானை ஒன்று குறிஞ்சிப் பண்ணைக் கேட்டு தினைக்கதிரை உண்ணாமல் மயங்கி நின்றதாக அகநானூற்றுச் செய்யுள் ஒன்று கூறுகின்றது.

''குறிஞ்சிபாடக் குரலுங்கொள்ளாது
நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடு பெற்றோய்
என மறம்புகல் மழகளிறுறங்கும்.''

குத்துக்கோலுக்கும் அடங்காத மதம் பிடித்த யானை இசைக்கு அடங்கிவிடுமாம். ''அசுணமா'' பறவையும், விலங்கும் இணைந்த உருவமான ஒரு ஜீவன். அது இன்னிசையிலே தன்னை மறந்து உருகும் இயல்புடையது. அதனைப் பிடிக்க வருவோர் இன்னிசையை இசைப்பார்கள். அவ்வோசையிலே அசுணமா தன்னைமறந்து நிற்கும். அதனைப் பிடிப்பவர் வந்து பற்றிக் கொள்வர். பாலை நிலத்திலே பொருளைக் கவர வரும் கள்வர்கள் பாணர், கூத்தர் முதலியோரின் இசையிலே ஈடுபட்டுத் தம் களவுத் தொழிலை மறந்து, கொலைக்கருவிகளையும் கைநழுவ விட்டுத் திகைத்து நிற்பர்.

வெள்ளி மலையைத் தன் புயத்தினால் அசைத்த இராவணனைச் சிவபிரான் தன் காலின் கட்டை விரலினால் நசுக்கினார். மூன்று உலகங்களையும் வென்று இறுமாப் படைந்த இராவணன் செய்வதறியாது துன்பப்பட்டான். நாரத முனிவரின் அறிவுரையால் தன் தலைகளில் ஒன்றைப் பிடுங்கி நாதம் எழுப்பிச் சாம கீதம் பாடினான். இசையில் தன்னை மறந்த ஈசன் அவனை மன்னித்ததோடு, அவன் விரும்பிய வரங்களையும் கொடுத்தார்.

இசையின் புகழ் பேசும் கதைகளும், காவியங்களும் தமிழ் இலக்கியத்திலே நிறைய உண்டு. இசை என்ற பதத்தைச் சங்கீதம் என்ற பதம் கொண்டு உணர்த்துகிறோம். இது தவறாகும். தமிழ் இலக்கியத்திலே இசையும்படி இணைக்கப்பட்ட சொல்லடுக்குத்தான் இசை என்று கூறப்படும். வெறும் ஓசையை இசை என்று அழைப்பதில்லை. இதன் உண்மையைப் ''பண் என்னும் பாடற்கு இயைபு இன்றேல்'' என்ற வள்ளுவரின் கூற்றிற் காணலாம். இயைபு என்பதும், இசைவு என்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் ஒரே பதம். பாடுதற்கு இசையாத பாட்டு என்ன பாட்டு?

தமிழர்கள் அழகுக் கலைகளில் ஒன்றான இசைக்கலையை இசைத்தமிழ் என்றும் கூறுவர். இது காதினாற் கேட்டு இன்புறத்தக்க இன்கலை. தமிழர்கள் வளர்த்த முத்தமிழுள் இதனை நடுநாயகமாக வைத்துள்ளனர். இயற்றமிழ்ச் செய்யுட்களைச் சுவைப்பதற்கு இசை இன்றியமையாதது. நாடகத்தமிழுக்கு உயிரூட்டுவதும் இந்த இசையேயாகும். ஆகவே, முத்தமிழுள் இசை சிறந்து விளங்குகின்றது.

தமிழன் தன் குழவிப்பருவத்திலிருந்தே இசையோடு தொடர்புடையவன். அன்னையின் அன்பு கனியப் பாடும் தாலாட்டுப் பாடலில் தன்னை மறந்து உறங்கியவன். ஊஞ்சலிலே வைத்து "ஊசல்வரி" எனப்படும் பாடல்களைப் பிறர் பாடும்போது தன்னை அதில் ஆழ்த்தி மகிழ்ந்தவன். சிறு பையனாக ஓடியாடிப் பந்து விளையாடும் போது, 'கந்துவரி அம்மானை' முதலிய பாக்களைக் கேட்டு இன்புற்றவன். அவன் வளர்ந்து காளையாக மாறியபோது காதல் புரியும் இளம் கன்னியரின் இன்னிசையிலே தன் உள்ளத்தைப் பறிகொடுத்தவன். அவனுடைய வாழ்நாளில் பொன்னான திருமணத்திலே பெண்கள் பாடும் மங்கல வாழ்த்துப் பாடல்களைச் செவியாரக் கேட்டு இன்புற்றவன். புது மனைவி வீட்டு வேலைகள் செய்யும்போது பாடுகின்றாள். உலக்கையை எடுத்து அவள் குற்றிக்கொண்டே வள்ளைப்பாட்டுப் பாடுகின்றாள். அதனைக் கேட்டுக் களிக்கின்றான் காளை. இப்படியே இசையோடு இணைந்த அவன் வாழ்க்கை முடிந்து, அவன் உயிரற்ற சடலமாக இருக்கும்போது பெண்கள் துன்ப கீதம் இசைக்கின்றனர். தமிழர்களுடைய வாழ்வு இசையோடு ஈடுபாடுடையதாய் இருப்பதை நாம் காண்கின்றோம். அவன் புனைந்த காவியங்களும் பாடல்களும் இதனையே கூறுகின்றன. இத்தகைய தமிழன் தன்னைக் கட்டி ஆளும் சக்தியை இசை வடிவமாகவே கண்டு, இசை பாடியே அதனை வழிபட்டான். அவன் பக்தி உணர்ச்சி இசை வெள்ளமாகப் பெருகி ஓடியது.

அழகுக் கலைகளை வளர்த்த தமிழன் இசைக்கலையைத் தன் உயிரென மதித்துப் போற்றினான். அவன் கலையொழுகும் கரங்கள் இசை மங்கையைத் தழுவி இன்பங் கண்டன. இசைக் கலையைச் சங்ககாலத்து மக்கள் வளர்த்து அமைதி கண்டார்கள். சங்ககாலத்தில் இசைவாணர்கள் பலர் வாழ்ந்துள்ளனர். கண்ணனாகனார், கண்ணன் நாகனார், கேசவனார், நல்லச்சுதனார், நன்னாகனார், பித்தாமத்தனார், பெட்டகனார், மருத்துவன் நல்லச்சுதனார் முதலியோர் இசைப் புலவர்களாக இருந்தனர். ஒருவர் நெடும்பல்லியத்தனார் எனப் பெயர் பெற்றிருந்தார். இன்னிசைக் கருவிகள் பலவற்றில் ஆழ்ந்த பயிற்சியுடையவர் என்பதை இக் காரணப்பெயர் குறிக்கும்.

பாணன் இசைக்கும் இனிய பாடல்களுக்கு ஒவியமாக வளைந்து ஆடும் விறலி இசைக்கலைக்கு ஆதாரமானவள். பாணனுடன் இவளும் சென்று அரச சபையில் ஆடிப் பரிசில்களையும் பெற்றுக்கொண்டாள்.

இசைக்கலையை அரசர்கள் போற்றினார்கள் என்பதற்குத் தமிழ் இலக்கியத்திற் பல சான்றுகள் உண்டு. மாதவியின் நாட்டிய அரங்கேற்றத்தைக் கண்டுகளித்த அரசன் தலைக்கோல் பட்டத்தையும், ஆயிரத்தெட்டுக்கழஞ்சு பொன்னையும், பச்சை மாலை ஒன்றையும் பரிசாக அளிக்கிறான். மேலும் இசை பாடிச் செல்லும் புலவர்களையும், பாணர்களையும் தமிழ்நாட்டு வேந்தர்கள் பரிசில் பல ஈந்து அவர்களைக் கௌரவித்தனர்.

இசைக்கலையைப் பற்றிய இலக்கியங்கள் பலவற்றைத் தமிழர்கள் புனைந்தார்கள். அவை பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், பஞ்ச பாரதீயம், பஞ்ச மரபு, தான சமுத்திரம், சச்சபுட வெண்பா, இந்திர காளியம், பதினாறு படலம், தான வகையோத்து, இசைத்தமிழ்ச் செய்யுட்டுறைக் கோவை முதலியன இசைத் தமிழ் இலக்கண நூல்களாகும். சிலப்பதிகாரம், பரிபாடல், கலித்தொகை முதலியவற்றை இசைத்தமிழ்ச் செய்யுள் நூல்களெனலாம். ஆழ்வார்கள் பாடிய திருவந்தாதிகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வர்கள் பாடிய பதிகங்களும் இடைக் கால இசை நூல்களாகும்.

இசையில் பண்கள் பலவுண்டு. திறன் களும் பல உண்டு. பண்கள் ஏழு சுரங்களைக் கொண்டவை. அவை தமிழில் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பெயர்பெற்றன. ஏழு பண் களும் இக்காலத்தில் ச, ரி, க, ம, ப, த, நி எனப் பயிலப்படுவதுபோலத் தமிழ் முறை யில் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழு நெடிலையும் சுரங்கட்கு எழுத்தாகக் கொண்டு அக்காலத் தமிழர் பயின்றனர். பண்களிலிருந்து பிறப்பவை திறன்களாம். பண்கள் பலவகைப்படும். குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனப் பெரும் பண்கள் ஐந்தாகும்.

தமிழர் இசைகளைக் குரலாலும், கருவி களாலும் இசைத்தனர். குரலாற் பாடு வதும், இசைக்கருவிகளால் இசைப்பதும் ஒருங்கு நிகழ்தலும் உண்டு. நரம்புக் கருவி கள் பலவகையின. 21 நரம்புகளையுடைய பேரியாழ், 19 நரம்புகளையுடைய செங் கோட்டுயாழ் என்பன குறிப்பிடத்தக்கவை. வெண்கலத்தாற் செய்யப்பட்ட தாளவகை கள் அனைத்தும் கஞ்சக்கருவிகள் ஆகும்.

பரிபாடல், தேவாரம், நாலாயிரத் திவ் வியப் பிரபந்தம், வரிப்பாடல், குரவைப் பாடல், திருப்புகழ், முத்துத்தாண்டவர், வேதநாயகம்பிள்ளை முதலியோர் கீர்த்தனை கள், சீகாழி அருணாசலக் கவிராயர் இராம நாடகக் கீர்த்தனை, காவடிச்சிந்துகள், நொண்டிச் சிந்துகள், தில்லானா, தெம் மாங்கு, பள்ளு என்பன இன்றுள்ள இசைத் தமிழ்ப் பாடல்களாகும்.

இந்த இருபதாம் நூற்றாண்டில், இற் றைக்குச் சில ஆண்டுகள் முன்வரை தமிழகத் தில் யாண்டும் பிற மொழிப் பாடல்களே பாடப்பட்டு வந்தன. பின் தமிழிசையை வளர்க்கப் பல தொண்டுகள் பலராலும் புரியப்பட்டன. இப் பெரு முயற்சியில் டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் ஆற்றிய அரும்பணி பாராட்டுக்குரியதாகும். இராஜா சேர் முத்தையாச் செட்டியார் போன்ற அறிவு ஆற்றல்களிற் சிறந்த பெரு மக்களும் இசைப்புலமையிற் சிறந்தோங்கும் அறிஞர்களும் இத்துறையில் மிக்க ஊக்கம் காட்டி வருகின்றனர்.

தமிழறிஞர் மேற்கொண்ட இப் புத் துணர்ச்சி தமிழிசைக்கும் புத்துயிர் அளித் துள்ளது. நமது பண்டை இசைப்பெருமை யையும், பழமையையும் உணர்ந்து இசையை நன்கு வளர்ப்பது தமிழ்ப்பெரு மக்கள் கடமையாகும்.

திருமதி. ப. சின்னப்பா
(இறுதி வருடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துக்கள் முப்பத்தொன்பது

உடுப்பிட்டி உவந்தளித்த உத்தமியாள்
அடுத்தவர்க்கு அன்புசெய்யும் அம்பாலிகை
மனைத்தக்க மாண்புடனே வாழியென
மனம்நிறைய வாழ்த்துகிறோம் வாழியவே.

அன்னபூரணியை அறிவீரோ நீவிர்
கன்னம்சிவந்த இவள் கார்குழலி தானே
வீட்டுக்கு விரைந்தேகும் விருப்புடைய மங்கை
நாட்டுக்கு உரியபெயர் பண்டைத்தெரிப்பாமே.

சாந்த குணமுடையாள் சால்புபல வுடையாள்
மாந்தர் புகழ்நெடுந்தீவு மங்கையிவ ளூராம்
அமலோற்பவப் பெயராம் ஆயிழையாள் இவளை
அரிவையரே நீரும் அறியவிழை யீரோ!

கன்னல் மொழியினிமை கமலேஸ்வரிப் பெயராள்
என்ன செய்தாலும் எழுகாதம் நினைந்திடுவாள்
பருத்தித் துறையூராள் பணிவான பதுமையிவள்
கைவண்ணம் வல்ல காரிகை இவளாமே.

மயிலிட்டி தந்தமங்கை வாய்வீச்சில் வல்லநங்கை
நங்கையர் நாமறிவோம் அவள்தந் திறமைகளை
சகுனியாய் மேடையிலே சதுர்கள்பல செய்தவளாம்
சாற்றிடுவீர் இவள்பெயரை நற்கருணேஸ் வரி
யென்றே.

தெய்வேந்திர மடைந்த திவ்விய மணியே
தம்பையா பெற்ற தரும மணியே
நாகரத்தினம் ஈன்ற நாகமணியே
கருணைமிக வுடைய கண்மணியே.

வன்னியனூர் அரசாண்ட வவுனியாப் பதியதனில்
மெல்லியளாம் குகதேவி குமிழ்சிரிப்பு அவளுடைமை
மேதினியில் மணவாழ்வு மேம்பட்டு விளங்கிடவே
மாதைநாம் வாழ்த்துகிறோம் வாழிய நீர்வாழியவே.

சொல்லாற்றல் மிக்குடையாள் சொல்வன தெரிந்
திடுவாள்
நல்லார் பலர்வாழும் பருத்தித்துறை யிவளூராம்
தெள்ளுதமிழ் அரங்கத்தின் சீருடைய செல்வியவள்
எள்ளளவும் நாம்மறவோம் நல்லவளாம் கோமதி
யை.

சந்திராப் பெயருடையாள் சதுர்கள்பல செய்திடு
வாள்
பைந்தொடி இவளூரும் சாவகச் சேரியன்றோ
அன்னநடை பயிலும் ஆரணங்கு மெல்லிடையாள்
சொன்னகலை பயிலச் சாருவான் மீண்டுமிங்கே.

கையினிலே மணியெடுப்பாள் கருத்தினிலே சிவ
நாமம்
தையலிவள் சரஸ்வதியாம் ஊரும் நெடுந்தீவாம்
மெய்யினிலே நோய்காணுள் மெய்யென்றால் பொய்
யென்பாள்
துய்யதமிழ் மொழியினிலே சொல்லொணுப் பற்
றுடையாள்

உருவத்திற் சிறியவளாம் உள்ளத்திற் பெரியவளாம்
கருமங்கள் ஆற்றுநல்ல திறனும் உடையவளாம்
நடனங்கள் ஆடிநம்மை மகிழ்விக்கும் நல்லழகி
சுண்டிக்கு ளியூராள் சரோஜி னிப்பெயராள்.

சிவமணியின் சிறப்புகளைச் செப்புவோம் கேளும்
தவமணியாய் உதித்தஇவ ளூரும்கை தடியாம்
இணக்கமுடன் இனிதாகப் பழகும் இயல்புடையாள்
வணங்குவதும் சிவநாமம் இவளையறிந் திடுவீர்.

மேகவண்ணனுய் வந்த நீலவண்ணப் பாவையிவள்
நாகமணிபோல் விளங்கும் நல்ல குணவதியாம்
சீருடைய சுந்தரியாள் சிசிலியாப் பெயருடையாள்
சாற்றுமூர் மன்னூர்நற் சந்ததியில் வந்தவளாம்.

கதிர்காலும் கரம்பொன்னூர் 'ஜெசின்' என்னும்
பெயராள்
விதுரனுய் அறம்பேசி வந்துநின்றுள் அவையில்
அன்னைமரி அடிக்கமலம் அனைவரதம் போற்றும்
மென்மைக் குணமுடையாள் வீரமும் காட்டிடுவாள்

தையற் கலையதனில் விருப்புடைய தையலிவள்
பைய நடந்திடுவாள் பாரினும் பொறுமையினுள்
முல்லை நகர்தந்த பூவையிவள் மெல்லியளாள்
செல்வ ரத்தினம்நீ வாழியவே வாழி!

எல்லார்க்கும் நல்லதையே செய்யும் இயல்புடை
யாள்
வல்லவளாம் இவள்பெயரும் செல்லப் பாக்கியமே
பருத்தித்துறை உவந்தளித்த பாவை இவள்தாமே
கிருஷ்ணையின் சோதரனும் திட்டத் துய்மனுனள்.

தங்கக் குணம்படைத்த தங்கேஸ்வரிப் பெயராள்
செங்கமலம் போன்ற சிவந்தமுக முடையாள்
சிவபக்தி மிக்குடையாள் ஏழாலை அவளூரே
தவமணி போலிலங்கும் நல்லணங்கே நீவாழ்க!

கௌரவர் தலைவனுய் மேடையிலே வந்தனளே
குருநகர்ப் பதிதன்னை உறைவிடமாய்க் கொண்ட
னளே
திரேசா' எனும் பெயரைக் கொண்ட குலமணியே,
பெருமையுடன் இல்வாழ்வு சிறந்திடவே வாழி.

கற்றைக் குழலழகி கதிர்வீசும் விழியழகி
கிருஷ்ணையாய் வந்தெம்மைக் கவர்ந்திட்ட சொல்
லழகி
கடமையே தவருத கண்ணியம் மிக்குடையாள்
உடுவிற் பதிதந்த உத்தமியாம் திலகராணி.

நல்லவளாம் இவளும் அல்லவை செய்தறியாள்
மெல்லவே நடந்திடுவாள் மீசாலை இவள்பதியாம்
சொல்ல இனிக்கும்நற் பேரன்பு மிக்குடையாள்
.எல்லோர்க்கும் இனியளாம் நல்லம்மா நீவாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனம்படு பனையின் நல்பண்டங்கள் பலசெய்வாள்
சினந்திடும் செயல்தனைச் சிந்தையிலும் கொள்ளாள்
புண்ணியர் நண்ணும் கோணமலைப் பதியுறைவாள்
கண்ணியமாக வே நடந் திடுவாள் நல்லம்மா.

கல்விடைப் பிறந்துநீண்டு கடலிடைவிரிந்த தீவின்
எல்லையில் வதியும்இராம லிங்கரின் புதல்வியாவாள்
தொல்லையில் துறையாம் மன்னர் தோன்றிய குறாசைச்சேர்ந்து
நல்லவன் விகர்ணனை நல்லவள் நிமலாதரனே.

கோணற்புளி போன்றிருக்கும் கூந்தல் நிறையழகி
நாணம் நனிநிறைந்த நங்கையிவள் பத்மா
கேண்மைக் குணத்தினனாய் குந்தியின் மைந்தனுமாய்
ஆண்மை மிகுவிமன் அண்ணனுமாய்த் தோன்றினளே.

துரியோ தனன்தம்பி துச்சாதனப் பெயரான்
அரிவை துகிலுரிந்த தெரிவை பராசக்தி
இனிய விசையெழுப்பி எம்மை மகிழ்விக்கும்
இனிமை மிகவுடையாள் சாவகச் சேரியாள்.

பரம்பொருளை வேண்டிப் பணிசெய்யும் பாவையிவள்
பரமேஸ்வரிப் பெயராள் இவளுருஞ் சுண்ணாகம்
அனைத்துயிரை ஈர்க்கவல்ல இசையாம் கலைதன்னை
எனைத்துணை யாயேனும் பயிலும் விருப்புடையாள்.

அரிய இசைக்கலையில் ஆசிரியை ஆகி
உரியநற் பதவியை உயர்த்திட எண்ணி
அரியாலை நீங்கிக் கோவைப் பதிவந்த
பெரியாள் இவள்பெயரும் புவனேஸ் வரியாமே.

கார்மேவு காரைநகர் வந்துதித்த செல்வி
சீர்மேவு நங்கைநந் தலைமைமா ணவியே
பார்புகழும் புனிதவதிப் பெயருமே பூண்டாள்
தேரினிவள் சொற்கலையில் வல்லவளு மாமே.

மணவாழ்வு தொடங்கியதும் மனமிசைந்தாள் கல்வி கற்க
குணமான செயலுடையாள் குன்றாத அழகுடையாள்
புதுமைகள் பேசும்நற் புதுக்குடி யிருப்பூராம்
பதுமையாமிவள் பெயரும் புஷ்பரா ணியென்பர்.

சாலச் சிறந்த நல்ல சாந்த சொரூபி
பாலர் விரும்பும் நல்ல பாக்கியசாலி
கோலம் வரைய வல்ல கோதையிவள்
பாலசிங்க மடைந்த மகேஸ் வரியாள்.

நாவற்குளி தந்த நலந்திகழ் நங்கையிவள்
பாவையிவள் பெயரைக் கேளும் மகேஸ்வரியாம்
குறிப்பறிந்து பேணும் குணத்திற் சிறந்தவளாம்
குறிக்கோள் உணரவல்ல சகாதேவனு மிவளே.

ஜலந்திரா எனும்நாமம் செவிதனிலே கேட்பின்
சலங்கையொலி ஜல்ஜல்லெனச் சங்கநாதம் எழுப்பும்
முல்லைநகர் மகிழ்ந்தளித்த நங்கையிவ ளன்றோ
மல்லிகா என்பதிவள் நாமமிது கண்டீர்.

வம்பளந்து தனைவாட்டும் வனிதையரை
அன்புசெய்து புன்முறுவல் பூத்திடுவாள்
தும்பளைப் பதிதந்த தூயமணி
மங்கையரைக் கவரும் மனோன்மணி.

திங்கள் முகத்தழகி தங்கப் பொலிவுடையாள்
மங்கை யிவளூரும் சாவகச் சேரியாம்
இசைபாடும் திறமுடையாள் எவர்க்குமே பணிவுடையாள்
இசைபுகழ வாழியரோ மனோன்மணி ராதாநீ.

மங்கையிவள் நாமமது மண்டலேஸ் வரன்என்பீர்
பங்கமிலாள் இவளூரும் பருத்தித் துறையாமே
வல்லான் வகுத்தவழி வாழுந்தக வுடையாள்
நல்லாள் இவளைநீர் நன்கறிவீர் அன்றோ.

சில்லாலைத் திருப்பதியைப் பிறப்பிடமாய்க்கொண்டவளாம்
நல்லாள் இவள்பெயரும் ‘மாகிறேற் சாள்ஸ்’ ஆமே
வல்லாள் கழகப் பண்டசாலைப் பொறுப்பாளி
இல்வாழ்வில் இவள்சிறக்க வாழ்த்துவோம் நாமே.

மெய்வருத்தம் என்பாள் பையவே படுத்திருப்பாள்
கையிலே புத்தகம் கனக்குமவள் கண்துஞ்சாள்
தையலிவள் பெயரு மாகிறேற் கந்தையா
வையத்தில் இவளூரும் புதுக்குடி யிருப்பே.

உருவத்திற் சிறியவளாம் ஊரும் மிருசுவிலாம்
மேரிஅவள் நாமம் மேதினியில் நற்பெயராம்
அன்னநடை பயிலும் அழகுடைய ஆரணங்கு
மின்னும் விழியுடையாள் மென்மைக் குணமுடையாள்.

கள்ளாத நெஞ்சுடையாள் கன்னல் மொழியுடையாள்
தள்ளாத தென்றெதையுந் தள்ளுங் குணமிலதாள்
நல்லார் வாழ்சாவ கச்சேரி யிவளூராம்
சொல்வீர் இவள்பெயரும் விமலேஸ் வரியென்றே.

நாடக மேடைதனில் இவள்திறமை சொன்னால்
ஆடவனும் ஆண்மைமிகு வீமனையே வென்றாள்
இன்னவளின் செயற்றிறங்கள் பலவுண்டு கண்டீர்
பன்னிடுவேன் சில்லாலைப் பெயர்றெஜினா இவளே.

‘சிட்டு’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியக்கலை

க. இராசரத்தினம், (பலாலி அ. ஆ. கலாசாலை, வசாவிளான்.)

உலகத்திலே உள்ள ஓர் அறிவுப்பொருள்கள் முதல் மக்கள் ஈறாகவுள்ள எல்லா ஜீவராசிகளும் இரசிக ஞானத்திற்கு அடக்கம். அதாவது அழகுணர்ச்சிக்கு அடக்கம் என்பதாகும். குயில் தன்குரலின் இனிமையாலும், மயில், வண்ணத் தோகையை விரித்து லயத்துடன் ஆடுவதாலும், பிற ஜீவராசிகளை மயக்குகின்றன. சேவல் தன் ஆண்மை தெரியக் கெம்பீரமாகக் கூவியும், தன் கொண்டையின் தோற்றத்தாலும், இறக்கைகளைச் சிலிர்த்தும் தத்தம் பேடைகளை மயக்குகின்றன. களிறு தன் தந்தங்களைக் காட்டிப் பிடியை மயக்கும். சந்தேகமறப் பிடி தந்தங்களை அசைத்துப் பார்க்குமாம். பூக்கள் தமது அழகிய வண்ணத்தாலும். சுகந்த மணத்தாலும் வண்டுகளை மயக்குகின்றன. அழகிய பூங்கா அங்கு தென்றல் மலர்களின் இனிய மணத்தைப் பரப்பி மெல்லென வீசுகின்றது. குளிர்நிழல், நீர் ஊற்று எல்லாம் கண்ணுக்கும், மனத்துக்கும், உடலுக்கும் ஓர் இன்பத்தைக்கொடுக்கிறது. இந்தச் சூழ்நிலையைவிட்டு வெளிவர முடியுமா? முடியாது.

இப்படியாக இயற்கையிலேயே ஒன்றுக்கொன்று அடங்கிக் கட்டுப்பட்டு இணங்கி வாழ அழகு எனும் சக்தியை இறைவன் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமாக அருளியிருக்கின்ருர். இந்த அழகுதான் ஆளுமைக்கும் அடிப்படையாகும் என்பதை நாம் உணரலாம்.

இப்படியான அழகும் அதை இரசிக்கும், உணர்ந்து அனுபவிக்கும் தன்மையும் நமக்கு இயற்கையிலேயே இறைவன் அருளி இருக்கின்ருர்; இவ்வழகு உணர்ச்சி எல்லோரது உள்ளங்களிலும் பதுங்கியிருக்கின்றது. அதைத் தட்டி எழுப்பிவிடுவதும் ஒரு கலை என்கிறோம். அதுதான் ஆசிரியத்துவம்; அதுவே ஆசிரியராகிய எமது கடமையுமாகும்.

அழகு, ஓவியம், சிற்பம், சங்கீதம், நடனம் என்னும் சொற்களின்பின் 'கலை' என்னும் சொல் சேர்க்கப்பட்டுள்ளது: கலை என்னும் செயற்றிறனைக் கையாளும் விதத்தைக் குறிக்கும் சொல்லாகும். எனவே, ஓவியக்கலை என்பதும் எல்லோராலும் ஓகோ என்று வியக்கும் கலையாகவும் இருக்கலாம்.

ஓவியக்கலைக்கு முதற்காரணம் என்ன? என ஆராயின் தொடக்கம் இரச ஞானம் அடுத்துக் கற்பனை முடிவு எண்ணங்களை வெளிப்படுத்தலும் உத்தியும் ஆகும்.

எத்தனையோ சொற்களாலும் விளக்க முடியாத ஒரு விஷயத்தை ஓவியமூலம் மிக இலகுவில் விளக்கலாம். இதனாலேயே ஓவியத்திற்குச் சர்வதேச பாஷை எனப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

இரச ஞானத்தைக் கொடுப்பது அழகுணர்ச்சி ஆகும். அதன் குணதிசயங்கள் என்ன? அழகு அனமதியையும் ஆத்ம சாந்தியையும் அருளவல்லது. இதனாலேயே முற்காலத்தில் உண்மை அழகை உணர்ந்தவர்களால் ஆலயங்களில் விக்கிரகங்கள் அமைக்கப்பட்ட பக்திக்கும் முதற்கால் அழகே ஆகும். அழகில் மனம்ஒன்றி ஆளுமைக்கு அடிமைப்பட்டுவிடுகிறது.

ஆனால், தற்காலத்தில் அழகு என எண்ணுவது அழகை அன்று. அழகின் வக்கரிப்பையே (perversion). ஒரு பெண் ஒளியுள்ள அழகுள்ள கண்களையுடையவளானல் அவள் கண்ணழகி, மூக்குடையவள் மூக்கழகி, நல்ல கறுப்பு நாய், பஞ்சவர்ணக்கிளி இப்படி ஒவ்வோர் அங்கம் அங்கமாக, நிறங்களாகத் தத்தம் இரசனைக்கேற்ப இயற்கையில் எப்போதும் கண்டு பழகப்படாத புதியதைப் பார்த்தவுடன் உள்ளம் கிளர்ச்சியோ மருட்சியோ அடைகிறது. இச்சை தூண்டப்படுகிறது அன்னமுள்ள ஊருக்குக் காக்கைபோனல் காக்கைக்குத்தான் வரவேற்பு இருக்கும். குழந்தைகளும் இதற்கு விரைவில் அடிமைப்படுகிறார்கள். இவர்களில் இருவிதம். வக்கரிப்பை நீக்குபவரும் வக்கரிப்பை வளர்ப்பவருமாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசஞானம் கொஞ்சம் கொஞ்சமாக அழகைவிட்டு வக்கரிப்பை நாடத் தொடங்கத் தொடங்க அமைதியும் கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியது. அமைதி குறையக் குறைய மனநோய்களும் அதிகரித்துக்கொண்டே வரும்.

இதன் பலாபலன்களே தற்போதைய புதுமுறை ஓவியங்களாகும். பிக்காசோ என்னும் ஓவியமேதை தனது மனந்திறந்து ''நான் இதுவரைகாலமும் கலை உலகில் ஏமாறுபவர்களுக்காகக் கலையையே மாற்றியுள்ளேன்'' எனக் கூறியுள்ளார். இதனால் எத்தனையோ சர்ச்சைகள். ஆனால், அம்மேதை துணிந்து கூறியது கலையுள்ளத்தையும் உண்மையான கலைஞனின் பண்பையும் எடுத்துக்காட்டுகிறது. பிக்காசோ மிகவும் கொடிய நரம்பு வியாதியால் பீடிக்கப்பட்டுள்ளார். இவருக்கு அந்நோய் வரக் காரணம் அமைதியின்மையே யாகும். அமைதியின்மை வளரவளர ஓவியங்களும் மனத்தின் பிரதிபலிப்பைக் காட்டும். படத்தைப் பார்க்கப் பார்க்கக் குழப்பம் அதிகரிக்கும். இப்படி ஒன்றையொன்று வளர்த்துக்கொண்டே போகும்.

இதனை உணராதவர்களும் தொழிற் றிறமையில்லாது விரைவில் புகழ்பெற விரும்புவோரும் பாரதூரமான பொருளடக்கம் உடையதும் கற்பனை நிறைந்ததுமான ஓவியங்களைத் தீட்டுவதும், அனுப்புக்கொடுக்கக்கூடியதும் என உணர்பவர்களுமே இத்துறையில் ஈடுபடப் பெரிதும் விரும்புகின்றனர்.

விளங்கி ஓர் ஆக்கவேலையைச் செய்வதற்கும் கண்டபாவனைக்குச் செய்வதற்கும் எவ்வளவோ வேற்றுமை உண்டு. ஆனால், கண்டபாவனைக்குச் செய்பவர்களாலேயே பண்பியற் கலைக்கு அழிவுதேடப்படுகிறது.

இரசஞானத்தை விருத்திசெய்யும் கலைகளிலே தலை என்று சொல்லப்படும் சித்திரக்கலையானது, எல்லோராலும் விளங்கிக் கொள்ளக்கூடிய சர்வதேச பாஷை எனப் பெயர்பெற்றது. இப்போ எவராலும், செய்த ஓவியராலேயே விளங்கிச் சொல்ல முடியாத விசித்திரக்கலை என அழைக்கப்படுவதை நினைத்துக்கொண்டால் சகிக்குமா?

குழந்தை பிறந்தவுடன் படுத்திருக்கிறது, சில காலம்செல்ல உடம்பு புரட்டுகிறது, தவழ்கிறது, எழுந்து நடக்கிறது. நிதானமாக நடக்கப் பழகியபின்பல்லவா அக்கால்களால் ஓடி ஆடவோ, பாயவோ, நாட்டியமாடவோ, அல்லது மறுபடியும் குழந்தைபோல் தவழவோமுடியும். ஆனால், குழந்தையை இப்படியே சீவியகாலமும் தவழவிடுதலே சிறந்த பண்பியல் என்பதுபோல் மாணவர்களே தயவுசெய்து இயற்கையைப் பாராதீர். உங்கள் கவனத்தை அத்திசை திருப்பாதீர். இதைப்போல் வரைவதே சிறந்த பண்பியல்முறை. 'போல் நூஷ்', 'பிக்காசோ', 'எகன்றிமூர்' என்பவர்களைப் பாருங்கள். அவர்களைப் பின்பற்றுங்கள். உங்கள் தனித்துவத்தை ஆர்வத்தைத் தூக்கி எறியுங்கள் என்று ஆசிரியராகிய நாம் கோஷமெழுப்பலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான போதனையின் நோக்கங்கள்

திரு. எஸ். வேலுப்பிள்ளை, விரிவுரையாளர், நல்லூர்.

நாம் நல்ல வாழ்வு வாழ விஞ்ஞான அறிவு இல்லாமல் முடியாது. ஆதலால், ஆரம்ப உயர்தரப் பாடசாலைகளிலும், நடுத்தரப் பாடசாலைகளிலும் பொதுவிஞ்ஞானம் ஒரு கட்டாய பாடமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானப் பாடத்தின் நோக்கங்களை ஆசிரியர் தெளிவாகவும், திட்டமாகவும் தெரிந்துகொண்டாற்றான் அந் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான பாட விடயங்களையும், முறைகளையும் நன்கு சிந்தித்து முழுப்பயன் அளிக்குமாறு போதித்தல் இயலும். ஆகையால், முதலில் விஞ்ஞானப் பாடப்போதனையின் நோக்கங்களையும், பயன்களையும் அறிந்துகொள்வோம்.

**கல்வியின் பொது நோக்கம்:**

கல்வியின் பொதுநோக்கம் பல காலங்களிலும், பலராலும் பலவாறாகக் கூறப்பட்டுள்ளது. இப்பொழுது அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட நோக்கம் யாதெனில், இளைஞர்கள் பிற்காலத்தில் தனிப்பட்ட முறையில் நல்வாழ்வு நடத்துவதற்கும், நாகரீகம் பெற்ற சமுதாயத்தில் சிறந்த பிரசைகளாக வாழ்வதற்கும் தேவையாகும் அறிவையும், பயிற்சியையும் பெறச் செய்வதேயாகும். இப்பொழுது நோக்கத்துக்கு இணங்க விஞ்ஞானப் போதனையின் நோக்கங்கள் அமையவேண்டும்.

## விஞ்ஞான போதனையின் நோக்கங்கள்

**1. தினசரி வாழ்க்கைக்குத் தேவையான விஞ்ஞான அறிவை அளித்தல்:**

நடுத்தர வகுப்புகளில் படித்துவரும் மாணவர்களிற் பலர் தொடர்ந்து உயரிய வகுப்புகளில் படிக்க இயலாமல் பாடசாலைக் கல்வியை நிறுத்திவிடுகிறார்கள். இவர்களுக்கு அன்றாட வாழ்க்கைக்கு அவசியமாகும் விஞ்ஞான அறிவு அளிக்கப்படுவது முதல் நோக்கமாகும்.

வீடுகளில் பல இயந்திர சாதனங்களை உபயோகிக்கிறோம். உதாரணமாக, மின்சார விளக்கு, வானொலிப்பெட்டி, வெப்பமானி, சைக்கிள், தராசு முதலியன. இவைகளின் அமைப்பையும், அவை இயங்கும் விதத்தையும் விஞ்ஞான பாடங்களில் அறிவதால், இந்த இயந்திரங்கள் பழுதானால் நாமே அவைகளைச் சீர் செய்யலாம். இயந்திரங்களின் அருகில் செல்வதால் அவைகளைத் தவறுதலாகக் கையாளுவதாலும் ஏற்படும் அபாயங்களை அறிந்து தற்காப்புச் செய்துகொள்ளவும் பொது விஞ்ஞான அறிவு உதவும். சுகாதார விதிகளை அறிந்து அவைகளைக் கடைப்பிடிப்பதால் ஆரோக்கிய வாழ்வு நடத்துதல் கூடும். இயற்கை விதிகளுக்கு விரோதமாக நடந்துகொண்டால் அபாயமும் தீங்கும் விளையுமென்று உணர்வார்கள்.

**2. விஞ்ஞானத்தின் சிறப்புப் பகுதிகளைப் படிப்பதற்கு அடிப்படையாதல்:**

உயர் வகுப்புகளில் சேர்ந்து தொடர்ந்து படிக்க விரும்பும் மாணவர் விஞ்ஞானத்தின் மேற் பகுதிகளையும், தனிப் பகுதிகளையும் சிறப்பாகப் பயிலுவதற்கு அடிப்படையாகப் பொதுவிஞ்ஞானப்போதனை அமையவேண்டும். இதன்பொருட்டு விஞ்ஞான விடயங்களையும், விதிகளையும், தத்துவங்களையும் பரந்த முறையில் தெரிந்துகொள்ளச் செய்யவேண்டும். இதனாற்றான் பொது விஞ்ஞானப் பாடத் திட்டத்தில் பௌதிகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல், உடனலவியல், வானசாஸ்திரம் முதலியன பற்றிய பாடங்கள் இடம்பெற்றுள்ளன.

**3. விஞ்ஞானமனப்பான்மை பெறச்செய்தல்**

சிறுவர்களுக்கு விஞ்ஞான முறையில் பயிற்சி அளிப்பதும் விஞ்ஞானப் பாடத்தின் ஒரு சிறந்த நோக்கமாகும். பொருள்களைச் சேகரித்தல், அவைகளை உற்றுநோக்கி ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமைகளை அறிதல், அவைகளை வகைப்படுத்தல், பரிசோதனை செய்து பொது விதிகளைக் கண்டறிதல் முதலியன விஞ்ஞானத்தின் சிறப்பான முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும். இவ்வாறு ஆராய்ந்தறிவது விஞ்ஞான மனப்பான்மை என்பர். இதைக் கண்மூடித்தனமாய் ஏற்காமல் எல்லா மூலைகளிலிருந்தும் நோக்கி ஆராய்ந்த பிறகே ஒரு நேர்மையான முடிவுகட்ட விஞ்ஞான மனப்பான்மை உதவுகிறது. மேலும் இம்முறை ஒரு நிகழ்ச்சிபற்றி அது **என்ன? எப்படி? ஏன்?** ஏற்பட்டது என்று ஆராய்வதற்கு இளைஞர்கள் தூண்டப்படுகிறார்கள். நெருப்பில்லாமல் புகையில்லை என்பதுபோல ஒரு காரணம் இல்லாமல் எக்காரியமும் ஏற்படாது. மேலே வீசி எறிந்த கல் கீழே விழுவதற்குக் காரணம் பூமியின் கவர்ச்சியாகும். இவ்வாறே ஒவ்வொரு நிகழ்ச்சியும் காரணத் தொடர்புள்ளது என்பதை உணரவேண்டும்.

**4. விஞ்ஞானத்தில் ஆர்வம் கொள்ளச் செய்தல் :**

நம்மைச் சூழ்ந்து காணும் பொருள்கள், உயிர்ப்பிராணிகள், ஏற்படும் நிகழ்ச்சிகள், இயற்கைச்சக்திகள் இவைகளைப்பற்றி அறிவதில் மாணவர்களை ஆர்வங்கொள்ளத் தூண்டுதல் விஞ்ஞானப் போதனையின் மற்ற ஒரு நோக்கமாகும். சுற்றுப்புறப் பொருள்களைப் பற்றியும், தோற்றங்களைப் பற்றியும் அறிந்துகொள்ளச் சிறுவர்களுக்கு ஆவல் அதிகம். அவைகளைப்பற்றி அவர்கள் பல வினாக்களை முதியோர்களிடம் கேட்கிறார்கள். அவ்வினாக்களுக்குப் பொறுமையுடன் சரியான விடைகள் அளித்து, அவர்களது அறிவு ஆவலைப் பூர்த்திசெய்து வைக்க வேண்டும்.

மேலும் ஓய்வுநேரங்களில் விஞ்ஞானப் பாடம் சம்பந்தமான விருப்ப வேலைகளில் (Hobbies) ஈடுபடச் செய்தல் நலம்பயக்கும். உதாரணமாக, விஞ்ஞான முறையில் தேனீ வளர்த்தல், வானிலைக் குறிப்புகள் வைத்தல், செடிகள் வளர்த்தல் இவை போன்றவைகளை ஓய்வுநேர விருப்பவேலைகளாகக் கொள்ளச் செய்யலாம். இதனால் பாடசாலையை விட்டு விலகிய பின்னரும் மாணவர்கள் விஞ்ஞான அறிவைப் பெருக்கிக் கொள்ள ஊக்கம் கொள்ளுவார்கள்.

## விஞ்ஞான போதனையின் பயன்கள்

**1. விஞ்ஞானத்தின் நேரிடையான பயன்கள் :**

விஞ்ஞானப் பாடத்தினால் நேரடியான பயன்கள் (Utilitarian Values) பல உள. முதற் பயன் அறிவு வளர்ச்சியாகும். விஞ்ஞான அறிவுஇன்றி நாம் நல்வாழ்வு நடத்த இயலாது. விஞ்ஞானப் பாடத்தினால் மாணவரது உலக அறிவு வளரும். மாணவர்களிடையே பரந்த மனப்பான்மை ஏற்படும்.

முன்னர் கூறியவாறு நமது வீடுகளில் உபயோகிக்கப்படும் விஞ்ஞானக் கருவிகளை இயங்கச் செய்யும் முறைகளையும், அவைகளைப் பழுதுபார்க்கும் முறைகளையும் தெரிந்துகொள்கிறார்கள். இயந்திரங்களைப் பற்றிய அறிவு பிற்காலத்தில் தொழில் செய்து ஓரளவு சிறப்பு வாழ்க்கை நடத்தவும் பயன்படும். மேலும் இயற்கை விதிகளை அறிவதால் சூழ்நிலைக்கேற்ப மக்கள் தம்மைப் பொருத்தமுறச் செய்துகொள்ளல் கூடும். இயற்கைச் சக்திகளை வாழ்க்கையில் பயன்படுத்திக்கொள்வதும் எளிதாகும். உதாரணமாக, வெப்ப - தட்ப காலத்துக்கேற்பத் தமது ஆடைகளை மக்கள் மாற்றி யமைத்துக்கொள்கிறார்கள். விஞ்ஞானத்தில் அடிப்படைத் தத்துவங்களை அறிவதால் பத்திரிகைகளில் அவ்வப்போது வெளிவரும் விஞ்ஞானச் செய்திகளைப் புரிந்துகொள்ள இயலும்.

**2. விஞ்ஞான மனப்பான்மையின் பயன் :**

விஞ்ஞான முறையிற் பயிற்சி பெறுவதால் பிற்காலத்தில் வாழ்க்கைப் பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள், அரசியல் பிரச்சினைகள் இவைகளை விஞ்ஞான முறையில் பரிசீலனை செய்து சீர்செய்யத் திறமை ஏற்படும். இதனால் சமூகத்தில் பொறுப்பேற்கும் திறனை விஞ்ஞானக் கல்வியின் மூலம் மாணவர்கள் அடையலாம்.

**3. மனச் சக்திகளை வளரச் செய்தல் :**

விஞ்ஞானப் பாடத்தில் பொருள்களைக் கூர்ந்து கவனிக்க வேண்டியிருப்பதால் மாணவரின் உற்றுநோக்கும் திறமை அதிகப்படும். பொருள்களைத் தொட்டுக் கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளவேண்டி யிருப்பதால் ஐம்புலன்கள் பயிற்சிபெறும். பரிசோதனைகள் செய்வதாலும், படங்கள் வரைவதாலும் மாணவர்களது செயலாலும், விளையாட்டாலும் திருப்தி அடையும். பொருள்களின் ஒற்றுமை-வேற்றுமைகளைக் கவனித்து வகைப்படுத்துவதால் அவர்களுடைய பகுத்தறிவு கூர்மைபெறும். காரண காரியங்களை ஆலோசிப்பதால் அவர்களின் சிந்தனு சக்தியும், அனுமானங்களை ஊகிப்பதால் கற்பனு சக்தியும் வளர்ச்சியடையும். இயற்கையில் காணும் ஒழுங்குமுறையும், அழகும் மாணவர்களிடத்து ஒழுங்கு உணர்ச்சியையும், அழகுணர்ச்சியையும் வளரச்செய்யும்.

**4. நற்பண்புகள் படிதல் :**

விஞ்ஞானப் பொருள்களை ஆராய்வதிலும், பரிசோதனைகளைச் செய்து முடிவு கண்டறிவதிலும் சுயமுயற்சி, பொறுமை, விடாமுயற்சி, தன்னம்பிக்கை முதலிய பண்புகளை மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. அதனுல் அவர்களிடத்து அந்நற்பண்புகள் இயற்கையாகவே படியும்.

**5. விஞ்ஞானிகளைப் பற்றிய அறிவு :**

விஞ்ஞானத் தத்துவங்களையும், இயந்திரங்களையும் கண்டறிந்த விஞ்ஞானிகளைப் பற்றி விஞ்ஞானப் பாடங்களில் மாணவர்கள் படித்தறிய நேரிடும். அவர்களுடைய அரிய பெரிய செயல்களுக்காக அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருப்பதை உணருவார்கள் மாணவர்கள். அவர்கள் பின்பற்றிய வழிகளைத் தாமும் கடைப்பிடித்து விஞ்ஞானத் துறையில் உழைக்க ஊக்கம் கொள்வார்கள். மேலும் விஞ்ஞானிகள் எந்நாட்டில் பிறந்தவராயினும் அவர்கள் கண்டுபிடிக்கும் விஞ்ஞான உண்மைகளும், இயந்திர சாதனங்களும் எல்லா நாடுகளுக்கும் பயன்படுகின்றன. அதனுல், உலக ஒற்றுமை ஏற்படுகின்றது.

மேலே விபரிக்கப்பட்ட நோக்கங்களையும் பயன்களையும் குறிப்பாகக் கொண்டு விஞ்ஞானப் பாடத் திட்டத்தையும், போதனு முறைகளையும் அமைக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறீஸ்தவ தின விழா

மன்னுயிர்க்காகத் தன்னுயிர் ஈந்த இறை மகன் கிறீஸ்துவுக்கு விழாவெடுக்க விழைகின்றனர் வனப்புறு வனிதையர். இவ் விழா ஒழுங்கும், சிறப்புமாக அமைய வேண்டுமெனும் ஆர்வத்தால், அல்லும் பக லுமாய்த் திட்டமிடுகின்றன அரிவையர் உள்ளங்கள். நிகழ்ச்சிகள் நிரல் படுத்தப் படுகின்றன. அழைப்பிதழ்கள் அச்சாகின் றன. அன்பழைப்புகள் அனைவர்க்கும் அனுப்பப்படுகின்றன.

ஆனித்திங்கள் இருபத்தைந்தாம் நாள். ஆதவன் உதயமாகின்ருன். இந்நாளை ஆவ லுடன் எதிர்நோக்கியிருந்த ஆசிரிய மாண விகள், கதிரவன் கதிர்கண்டு களிபேருவகை யடைகின்றனர். இறைவனடி பணிந்து இன் முகத்துடன் விழாவிற்காய ஆயத்தங்களில் ஈடுபடுகின்றனர். மண்டபத்தை அலங்கரிக் கின்றனர். மங்கையர்கள் இருக்கைகளை அணிபெற அமைக்கின்றனர். மேடையிலே அழகிய பலிபீடமொன்று அமைக்கப்படு கின்றது. சங்கைக்குரிய சகோதரிகளினல் அமைக்கப்பெற்ற அப்பலிபீடம் பார்ப் போரைப் பக்தி பரவசத்தில் ஆழ்த்துகின் றது.

விழா ஆரம்பமாகும் வேளையும் நெருங்கு கின்றது. அழகுற அலங்கரிக்கப்பெற்ற வாயிலில் வண்ண மகளிர்சிலர் அன்றைய நிகழ்ச்சி நிரல்களை வழங்கி வந்தாரை வர வேற்கின்றனர். மண்டபத்தை நிறைக்கின் றனர் விழாக்காண வந்தோர்.

விழா கூட்டுப்பிரார்த்தனையுடன் ஆரம்ப மாகின்றது. கிறீஸ்தவ சேவா ஆச்சிரமத் தைச் சார்ந்த கனம் சாம் அல்பிறட் அவர் கள் தனது கம்பீரமான தொனியில் சேயன் நாமம் வாழ்விலே சேர்ந்தொலிக்கப் பாடு கின்ருர். தொடர்ந்து பாடுகின்றனர் அவை யோர். 'வானத்திலிருந்து வையகம் எழுந்து புனித ஆவியே வருக' என்று தெய் வாவியின் திருவருள் இறைஞ்சி வழிபடு கின்றனர். அடுத்து பரிசுத்த வேதாகமத்தி லிருந்து சில அரிய பகுதிகளைஎடுத்து விளக்கு கின்றனர் அருட்டிரு. சவிரிமுத்து அவர்க ளும், கனம். சாம் அல்பிறட் அவர்களும். அவர்களின் அரிய உரைகள் கேட்போரை அறநெறிப்படுத்துகின்றன.

இறைவழிபாட்டையடுத்து வரவேற் புரை நிகழ்கின்றது. நாட்டிலே அல்லவை தேய, நல்லவை செய்யும் வணக்கத்துக் குரிய பிதாக்களையும், சங்கைக்குரிய சகோ தரிகளையும் விழாவிற்கு விஜயம்செய்து அத னைச் சிறப்பிக்கவந்த பெரியோர்களையும், தாய்மார்களையும், செல்வக் குழந்தை களையும் அன்புக்கரம் நீட்டி அழைக்கின் ருர் கிறீஸ்தவ மன்றச் செயலாளர் செல்வி. சரோஜினி நவரத்தினம் அவர்கள்.

இதன்பின் விழாத்தலைவர் அருட்திரு. இம்மானுவேல் இயேசுதாசன் அவர்களின் தகைவுறு தலைமையுரையுடன் உரையரங்கு விறுவிறுப்பாக நடைபெறுகின்றது. எம் சகோதர கலாசாலை வாழ் பேராசிரியர் திரு. ஜி. என். எற்வர்ட் அவர்கள், ''யார் கிறீஸ்தவன்?'' என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்துகின்ருர். அடுத்து அறிவுரை பகர்கின்ருர் அருட்திரு. ரி. ஏ. எக்ஸ். தேவ தாசன் அவர்கள். புனித ஜேம்ஸ் ஆண் பாடசாலை அதிபர் அவர்கள் கிறீஸ்தவ வாழ்வு பற்றி எடுத்தியம்புகின்ருர். இவ் வுரை விருந்தினைச் சுவைத்து அதில் ஊறித் திளைக்கின்றனர் பார்வையாளர்கள். அறி விலும், ஆற்றலிலும், அனுபவத்திலும் மேம்பட்ட இவர்களின் அறிவுரைகள் அவை யோர்களை அறநெறிப் படுத்துவனவாக இருக்கின்றன. அடுத்து ஆசிரிய மாணவி செல்வி. றெஜீனு யோனுஸ் அவர்கள், 'வாமு முன் வழிவகுத்த அண்ணலாம் இயேசுபெரு மான், அழிப்பதற்கு அல்ல நிறைவேற்று வதற்கே வந்தார்' என்பதைத் தனது உரை யின்மூலம் தெளிவுபடுத்துகின்ருர்.

அடுத்துத் தேநீர் விருந்து இடம்பெறு கின்றது. தளிர்க்கைகள் தயாரித்த சுவை மிகு சிற்றுண்டிகளை மகிழ்வுடன் ஏற்கின் றனர் மண்டபத்தில் உள்ளோர்.

இதன்பின் கதம்ப நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தைச் சார்ந்த இளம் சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகள் நம் ஆண்டவராம் இயேசுபிரானின் உவமைகளி லொன்ருகிய பத்துக்கன்னிகை களின் உவமையை அழகுற நடித்துக் காட் டுகின்றனர். அவர்களுக்குத் தாங்கள் சளைத் தவர்கள் அல்லர் என்பதை நிரூபிக்கின்றனர் புனித ஜேம்ஸ் பெண்பாடசாலை மாணவி கள். தங்கள் இனிய பாடலினுல் கேட் போரின் சிந்தையை மகிழ்விக்கின்றனர் யாழ்ப்பாணத் திருக்குடும்பக் கன்னியர் மடத்தைச் சார்ந்த சிறுமிகள். பாஷையூர் திருக்குடும்பக் கன்னியர் மடத்தைச் சார்ந்த சிறுமிகளின் ஆடல் பாடலில் தம்முள்ளங் களைப் பறிகொடுக்கின்றனர் அவையோர்.

இஃதென்ன! யூதர்களல்லவா அரங்கிலே தோன்றுகின்றனர். அடடா! ஏரோதியா ளின் கணவன் பிலிப்புவும், யூலியானு மல்லவா அவர்கள். ஏரோதியாள் தன் கணவனுகிய பிலிப்புவை விடுத்து அவன் சகோதரன் ஏரோதுடன் வாழ்க்கை நடத்து கின்ருள். இதனுல் கவலையில் ஆழ்ந்திருக் கின்ருன் பிலிப்பு. அவனை ஆறுதல் படுத்து கின்ருன் யூலியான், அறநெறி பரப்பும் யோவானின் புகழை எடுத்தியம்புகின்ருன். அண்ணல் அவரின் அருள் வேண்டுகின்றனர். யோவான் ஏரோதியாளின் மனதை மாற்ற முயல்கின்ருர். தன் தவறைத் தவ முனி வன் சுட்டிக் காட்டியதும் சீற்றமடைகி ருள் ஏரோதியாள். யோவானைப் பழி வாங்கத் துடிக்கின்ருள். தன் காதலனும் ஏரோதின் மனதை மாற்றுகின்ருள் மயக்கு விழியாள். விளைவு? குற்றமில்லா முனிவர் சிறையிலடைக்கப்படுகின்ருர். சிறையி லிருந்தும் அவள் மனம்மாற இறைவனி டம் இறைஞ்சுகின்ருர். ஆனுல் அவரின் உயிருக்கே உலை வைக்கத் துடிக்கின்ருள் அரசி. அன்பு மகளை ஆயுதமாக உபயோ கிக்கின்ருள். அரசனின் பிறந்த தினத் தன்று அழகாக ஆடிப்பாடி அவனை மகிழ் விக்கின்ருள் அவளின் செல்வமகள். அவள் ஆடலில் தன் சிந்தையைப் பறிகொடுத்த அரசன் அவள் விரும்பியதை அளிப்பதாக வாக்குப் பண்ணுகின்ருன். தாயாரின் துர்ப் போதனையால் பரிசுத்தராம் யோவானின் தலையைத் தரும்படி கேட்கின்ருள் அரிவை. மன்னன் திகைக்கின்ருன்; சினக்கின்ருன்; கேலி செய்கின்ருள் மங்கை. கொடுத்த வாக்கை மீறமுடியாத கொற்றவன் முனி வனின் தலையைக் கொய்து கொடுக்கின் ருன். தன் ஆட்டத்திற்குக் கிடைத்த அக் கிரமப் பரிசைத் தாயாரிடம் அளிக்கின் ருள். ஒருபாவமும் அறியாத சிறுமியாகிய அவளை வஞ்சித்துப் பாவவலையில் சிக்க வைத்த தன் தாயாரை வைகின்ருள். பின்பு அவளைவிட்டு வெளியேறுகின்ருள். குற்ற மில்லாத இரத்தத்துளிகள் ஏரோதியாளின் குற்றத்தை உணர்த்துகின்றன. தான் பழி காரி என்பதை உணர்கின்ருள். பரமனிடம் அடைக்கலம் புகுகின்ருள்.

இந்நிகழ்ச்சிகளை மிகத் தத்ரூபமாக நடித் துக் காட்டிப் பார்ப்போரின் பாராட்டுதல் களைத் தட்டிக்கொள்கின்றனர் பாவையர் கள். ஆசிரிய மாணவிகள் நடித்த இந்நாட கம் அனைவரது உள்ளத்தையும் கவர்ந்து விடுகின்றது.

இறுதியாகக் கிறீஸ்தவ மன்றத் தலைவி செல்வி. திரேசா ஞானப்பிரகாசம் அவர்க ளின் நன்றியுரை இடம்பெறுகின்றது. இவ் விழாவினை இவ்வளவு சிறப்பாக நடாத்த சகல உதவிகளையும், ஆலோசனைகளையும் நல்கிய அதிபர் திருமதி. இ. ஆனந்தக் குமாரசாமி அவர்களுக்கும், அயரா துழைத்த கிறீஸ்தவ மன்றப் போஷகர் களுக்கும், பேராசிரியர்களுக்கும், ஆசிரிய மாணவிகட்கும், தங்கள் அரிய உரைகளினுல் நமது வாழ்வை வளம்பெறச்செய்த உரை யாளர்கட்கும், வருகைதந்த அரிவையினர்க் கும் தனது நன்றியை மன்றச் சார்பில் தெரி வித்துக் கொள்கின்ருர் அவர்.

நல்லதொரு விழாவினை நலம்பெற நடாத்திய நங்கையர்கள் களி பேருவகை யடைகின்றனர். எல்லையில்லா மகிழ்வுட னிருக்கும் அவர்கட்கு எல்லாம்வல்ல இறை வனின் ஆசிகளும் கிட்டுகின்றன.

செல்வி. சரோஜினி நவரத்தினம்.
(விடுகை வருடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் விழாவில் கவியரங்கம்

## எது கல்வி?

ஆசிரியர். சி. கார்த்திகேசு.

## எது வீரம்?

பண்டிதர். ப, இராசகுரு.

## எது மானம்?

நடன ஆசிரியர் ந. வீரமணி ஐயர்.

## எது செல்வம்?

கவிஞர், வித்துவான், சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை, பி ஏ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவியரங்கு

கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியர் கழகத்தில் இவ்வாண்டு ஆடித் திங்கள் 21 ஆம் நாள் நிகழ்ந்த தமிழ் விழாவின்போது, வித்துவான் கா. சி. நடராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் உதிர்த்த கவினுறு கவிதைகள்.

# எது கல்வி?

### சரஸ்வதி துதி

தாயே தேவி சரஸ்வதியே சாந்தரூபி கலைவாணி
நாயேன் இன்று கவியரங்கில் நாடும்கல்வி எதுவென்று
வாயாற் கவிகள் செப்புதற்கு வந்தே யமர்ந்தேன் மாதங்கி
நீயே வந்தென் முன்நிற்பாய் நெஞ்சேயகலாக் குஞ்சரியே.

### தலைவர்க்கு வணக்கம்

#### வெண்பா

ஆடும் நடராசன் அம்பலத்தே நின்றுயர்கூத்
தாடும் பொழுதுலகு தானுடும் — பாடும்
நடராசன் பாங்கர் நயனுயர இவ்வரங்கில்
திடமாகப் பாடுவனே தேர்ந்து.

தண்மதியன்ன தண்ணளியும் தகைமை சான்ற பேரறிவும்
எண்ணமதாரும் நிறைநெஞ்சும் இதயம் கனிந்த இன்சொல்லும்
வண்ணக் கவிதை வளப்பாடும் வாய்ந்த மேலாம் தலைவனினை
பண்ணமை சந்தப் பாமலரால் பணிந்தேன் ஏற்பீர் வணக்கங்கள்.

### கவிஞர்க்கு வணக்கம்

கருத்துஞ் சொல்லும் கலந்தமைபோல் கவியும் இசையும் கலந்தார
திருத்தமுற்ற செந்தமிழாற் செஞ்சொற் கவிதை சுவைசொட்டப்
பருத்தமுழக்கஞ் செயவந்த பண்பா ளுயர்ந்த புலவீர்காள்
விருத்தப் பாவால் பலவணக்கம் வேண்டுகின்றேன் உமதாசி.

### சபையோர்க்கு வணக்கம்

அவையி லமர்ந்த அதிபர்க்கும் அருகே துணையாய் அமர்ந்தோர்க்கும்
புவியிற் போற்றுந் தாய்மார்க்கும் பொலிவின் அமர்ந்த பூவையர்க்கும்
கவிதை யரங்கில் சுவைகாண்பார் கற்றுத் தேர்ந்த கலைஞர்க்கும்
சுவைசேர் தீந்தமிழ் வல்லார்க்கும் துதிசால் வணக்கஞ் சொன்னேனே

### எது கல்வி?

தாகமுறு மடியார்கள் கண்ணென்றே தம்மிறையைத் தழுவிச் செல்வர்
சோகமுறு தாய்தானும் தன்மகவைக் கண்ணென்றே பரிவிற் சொல்வள்
போகமுறு தலைவனுமே தன்மனையைக் கண்ணென்றே புகழ்ந்து சொல்வன்
தேகமுறு முறுப்பதனுள் கண்ணுயர்ந்த உறுப்பென்றே தெளிந்தேன்நன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

## வள்ளுவர் கருத்து

கண்ணோட்ட முள்ள துலகினியல் கனிவுடைக் கண்ணோட்டம் பண்ணோட்டம்
கண்ணோட்டம் காட்டும் நிறைகோலே காட்டு மரமாவர் அஃதில்லார்
கண்ணோட்டம் இல்லவர் கண்ணில்லர் கறைகள் தாம் துடைத்தல் அவர்க்கில்லை
கண்ணோட்ட முள்ளர் வல்லவராம் கவினர் வள்ளுவனர் கருத்தினிலே.

3

இத்தகைய கண்ணிற்குச் சொலவுவமை இவ்வுலகை எட்டிப் பார்த்தேன்
எத்தனையோ அறிஞர்தரு நூலெல்லாம் இரவுபகல் புரட்டிப்பார்த்தேன்
நித்த நித்தம் வாழ்க்கையிலே நிகழுகின்ற நிகழ்ச்சியெல்லாம் நீட்டிப் பார்த்தேன்
சித்தமது எட்டியது கண்ணினுக்குச் சிறப்புவமை கல்வி தானே.

4

## 'யோன்டியூஇ'

நான்கல்வி எதுவென்றே யுன்னியுன்னி
நாடினேன் அறிஞர்தமை நண்ணி நண்ணி
யோன்டியூஇ என்பாரின் கூற்றை எண்ணி
ஒரோருகால் அவர்வசமாய்க் கலந்து நிற்பேன்
தான்முதிர்ந்த அனுபவத்தால் தக்கோனுகி
தனக்கிளைஞர் ஆயினர் உள்ளந்தன்னில்
வான்மதியாய் இவ்வுலகில் வாழுமாறு
வகுத்ததனைப் பதித்தல்தான் கல்வி என்றார்.

5

நன்னடையும் நல்லொழுக்கும் நலியாத்தேகம்
நலமுறத் திடவலியும் நாளும் குன்றில்
மின்னென்னும் மிகுவேகம் மேலாய்த் தோன்றில்
விளங்கிடு மூத்வேகம் மிளிரும் பொற்பைத்
தன்னகத்துள் உணர்ச்சியினல் ரசிக்குந்தன்மை
தனிப்பெரும் உயரான்ம சாந்தியென்னும்
இன்னவை என்றென்றும் வளர்க்குமாற்றாய்
இருப்பதே கல்வியென இயம்பினரே.

6

## 'ஹேபேட்'

இத்துடன் நின்றேன் இல்லை ஏகினேன் 'ஹேபேட்' தன்னை
மெத்தவே தேகம் உள்ளம் மேலதாம் ஆன்மா தன்னில்
நித்திய தேவை தன்னை நிறைவொடு பூர்த்தி செய்தல்
தத்துவ வினவுக் கேற்பத் தருவிடை கல்வி என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7

## 'யோன் மில்றன்'

இன்னன போதா தென்றே ஏகினேன் மில்றன் தன்பால்
அன்னவர் கடமை நீதி அளப்பருந் தன்மை புத்தி
பொன்னென இவை தம்மோடு பூசலோ டமைதிப் போதும்
தன்னிலை தளராத் தன்மை தருவதே கல்வி யென்றார்.

## 8

## 'உவைற்கேட் நெப்போலியன்'

சிறந்தநல் லறிவால் வாழ்க்கை சீர்பெறு வழியைக் காண்டல்
திறந்தரு கல்வி யென்று செப்புசீர் 'உவைற்கேட்' சொன்னார்
மறந்தது போக எஞ்சி மனத்தது கல்வி யென்று
இறந்தநெப் போலி யன்றான் இனிதறி வுறுத்திச் சென்றான்.

## 9

## சுவாமி விவேகானந்தர்

அன்றுயர் விவேகா னந்த அடிகளின் உரையைக் கேட்டேன்
என்றுமே மனிதன் தன்னுள் இயல்பதாந் தன்மை யென்னும்
ஒன்றுபூ ரணத்து வத்தை ஒளிருறக் காட்டு மாயின்
நன்றதாம் கல்வி யென்றார் நானுமே யயர்வு தீர்ந்தேன்.

## 10

அரில்தபக் கற்று மேலாம் அறிவினில் அலர்ந்தா ரேனும்
அரியநல் ஆண்மை யெல்லாம் அமைந்துமே சிறந்தா ரேனும்
உரியமார்க் கங்கள் கூறும் உயர்கலை உணர்ந்தா ரேனும்
சரிவுறத் தருணத் தாற்றல் தருவதே கல்வி யென்றார்.

## 11

## பின் இப்பிரபஞ்சத்தை நோக்கினேன் அங்கே

வானியல் தேனிகூ டாக்கி வாழும்
வலைசெய்து சிலந்தியும் மகிழ்ந்து வாழும்
வானிற் பறவையும் பறந்து வாழும்
மந்தியும் கொம்பினிற் றாவி வாழும்
கானினில் இனத்தொடு விலங்கு வாழும்
கலந்துசெல் புற்றினைக் கட்டி வாழும்
நானிலம் மனிதனும் நல்வாய்ப் பமைத்தே
நலம்பெற வாழ்வதிற் புதுமை யென்ன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12

புதுமையுள விஞ்ஞானம் வளர்ந்து மென்ன
பொருளாதா ரத்துறைகள் பூத்து மென்ன
இதுதானென் லட்சியமென் றிருந்து மென்ன
இரவுபகல் பௌதிகம் வளர்ந்து மென்ன
பொதுவாக எத்தனையோ வழிகள் தம்மில்
புதுமைகொளப் புனர்வாழ்வு பொருந்தி யென்ன
மெதுவாக அகவாழ்வு மலர்தல் இன்றேல்
விழலுக்கே இறைநீராய் வீணும் அன்றே.

## 13

முன்புறு சுயநலம் மூழ்க வேண்டும்
முனிவினொடு தீமையும் முடியவேண்டும்
துன்புறுங் கொலைபவந் தொலைய வேண்டும்
துயருறும் வஞ்சனை தூரவேண்டும்
அன்புறும் அகவாழ்வு மலரவேண்டும்
அழுக்கா றவாவெகுளி அகலவேண்டும்
இன்பியல் பண்பது இழைய வேண்டும்
இவைதரு கல்வியைத் தேடவேண்டும்.

## 14

அறம்பொரு ளின்பம் வீடோ
டடைதல் நூற்பயனு மென்று (றே)
திறம்பட நன்னூல் முன்னம்
செப்பிய பொருளுக் கேற்ப
புறம்பொடு அகமும் பூக்கப்
பூமியில் வாழ்க வென்றே
கறங்கிடு முலகிற் கல்வி
காட்டினர் செஞ்ஞாப் போதார்.

## 15

இருமையை இரட்டை தம்மை எய்திருள் இயல்பைச் சூழும்
கருமையர் கழுகி னுய காசறு களிப்பை நீதி
அருமையை அணைந்த சன்மம் அழிந்திடும் அயர்வை நீக்கி
ஒருமையைக் குரவர் கூற்றை உளத்துணர் கல்வி யீதோ.

## 16

பிறப்பினைப் பொருள் செய்யாது பெரும்பிணிச் சலதி நாப்பண்
பறப்பினை யமைத்துப் பாவப் படுகுழி யதனுட் பாய்ந்து
மறப்படு ரவுர வாதி மருவுற மயக்கி னுழ்ந்து
சிறப்பினை யூட்டும் கல்வி சேர்ந்துயர் திகழ்வு ஈதென்னே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

பாதக முணர்த்தாக் கல்வி பழிப்பினை யஞ்சாக்கல்வி
மாதரை மதியாக் கல்வி மாதவம் புரக்காக் கல்வி
வேதனை துடைக்காக் கல்வி வெம்பிணி யகற்ருக் கல்வி
யாதனை யுடற்று கல்வி யாதிது கலியின் பாற்றே.

18

முப்பாலைச் சுவைக்காமல் இளைஞர் இந்நாள்
முழுப்பனையின் பால்சுவைக்கக் கொட்டில் நாடி
அப்பாலும் 'டபிள்டெக்கர்' அதனில் ஏறி
ஆங்கிலஞ்சேர் சினிமாக் கொட்டகைக்குள் சென்றே
ஒப்பாரும் எதிர்ப்பாலார் உடனே ஒன்ருய்
உட்காரும் செய்கையினை யூட்டும் கல்வி
செப்பாமற் செப்பினர்யார் இவர்க்கிக் குற்றம்
திருந்துதற்கு வழிகாணீர் செகத்தி னீரே.

19

'மினிஸ்கேட்டை' 'புஷ்கோட்டை' மதிக்குங் கல்வி
'மேக்கப்'பை மகிமையென விரும்புங் கல்வி
தனிப்பாட்டி மயக்கினிலே தளிர்க்குங் கல்வி
தாகத்தால் மதுக்கடையில் திளைக்கும் கல்வி
தனிக்காட்டின் அரசெனவே தருமங் கொன்று
தந்தைதாய் மதித்தறியாத் தகைசால் கல்வி
தனிப்பாட்டிக் கதையென்றே தள்ளிக் காதல் (லவ்வுச்)
சகதியிலே வீழ்ந்தழியும் கல்வியேனே.

20

## முடிவு

மன்னிய அறிவால் மக்கள் மனிதராம் வாழ்வு காண
இன்னபல் பெரியோர் கூற்றை இங்குநான் எடுத்துச் சொன்னேன்
முன்னவர் கூற்றின் உண்மை முழுமையை உணர்ந்து கொள்வீர்
இன்னவை யமர்ந்த நல்லீர் யாவர்க் கும்என் வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது வீரம்?

## அவையடக்கம்

கன்னித் தமிழைக் கற்றறிந்தே
கனிவாய்ப் பேசும் பெருந்தலைவ
மன்னு உலகில் மன்னுபுகழ்
மதித்துக் கவிசெய் புலவோரே
இந்நாள் தமிழைச் சுவைத்திடவே
இயைந்த புலமைச் சபையோரின்
முன்னால் என்றன் மனங்கனிய
முகிழ்த்து வணக்கம் செய்கின்றேன்.

*　　*　　*

கற்றறிந்தோர் அவையினிலே கவிதைநான் செய்திடவே
உற்றதுவே மடைமையென ஓதுகிறேன் என்றாலும்
சிற்றறிவால் யான்செய்யும் சிறுமையினைப் பொறுத்திடலே
முற்றறிந்த உங்களுக்கு வீரமென மொழிகின்றேன்
சோற்றதற்காய்க் கவிசெய்யாத் தூயதமிழ்ப் புலவோரின்
ஏற்றமது உரைப்பதுவே என்வீரம் என்றிடுவேன்
உடலினுல் இளைத்திருந்தும் உள்ளத்தின் வீரத்தை
மடலிலே வரைகின்றேன் மதித்திடுவீர் என்கருத்தை
தானெடுத்த கொள்கையினைத் தரணியோர் எதிர்த்திடினும்
ஊனெடுத்த உடலதுவே அழிந்திடினும் உள்ளத்தால்
பொய்க்காத தன்மையுடைப் புலவோனே வீரனென்பேன்.

*　　*　　*

நற்றமிழில் புலம்கொண்டே நாளும் பாடல்
நவிலுகின்ற எம்தலைவ உங்கள் முன்னே
சொற்றமிழில் கவிசெய்யும் பேறு பெற்றேன்
தொலையாத இன்பமது கொண்டேன் இன்று
குற்றமிலாத் தேன்சொட்டத் தமிழில் தோய்ந்து
கோலநற் கவிசெய்யும் தமிழாம் புலவீர்
செற்றமிலா மனத்தோடெம் கவிதை கேட்கும்
செம்மைசால் அவையோரே வணக்கம் சொன்னேன்.

*　　*　　*

(1) தன் கணவன் படையினிலே இறந்தான் பின்னும்
தன் மகனை அங்கனுப்பி வீரம் கொண்ட
மன்னுபுகழ் தாய்வாழ்ந்த எங்கள் நாடு
மதிப்பரிய வீரத்தைக் கண்ட நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாளில் புலியினையும் முறத்தால் ஓட்டும்
மொய்ம்புடைய மாதர்பலர் வாழ்ந்த நாடு
என்றாலும் எதுவீரம் என்று சொல்ல
இங்கேயான் வந்துநிற்கும் அதுவும் வீரம்.

* * *

(2) போர்என்றே கேட்டிடிலோ பொருப்பென்ன வீங்கும்
தோள்படைத்த வீரருக்குக் குறைவில்லா நாடு
பார்போற்றும் புகழ்படைத்த நம்தமிழர் வீரம்
பகருகின்ற நூல்பலவும் படைத்தமைந்த நாடு
ஏர்போற்றும் உழவோரும் தமக்கின்றி ஈயும்
எண்ணரிய வீரமது கொண்டமைந்த நாடு
பேர்படைத்த வீரர்பலர் பெட்புடனே வாழ்ந்து
பின்னவர்க்கும் புகழ்கொண்ட செல்வமுடை நாடு.

* * *

(3) கட்டுடலால் தம்வீரம் காட்டல் என்றால்
கரடிபுலி சிங்கமெலாம் வீரராமோ
சுட்டிடலால் நம்வீரம் நாட்டல் என்றால்
சுட்டெரிக்கும் தீயுமிங்கே வீரம் பேசும்
வெட்டிடலால் போர்வீரம் பேசல் என்றால்
வேறில்லாப் பனைவீரம் பேசு மாமே
முட்டிடலால் நம்வீரம் காட்டல் என்றால்
மூவுலகில் யார்வீரர் ஆவார் இங்கே.

* * *

(4) படையினிலே அஞ்சாதே செல்லும் வீரர்
பாரோரை அஞ்சாதே வெல்லும் வீரர்
புடைபெயராப் போர்முகத்தே கொல்லும் வீரர்
போரென்றால் பொருப்பென்றே வீங்கும் தோளர்
தொடை தெரிந்தே பகைவரையும் தோற்கச் செய்யும்
தோல்வியது காணாத வீரர் தாமும்
நடை தெரியாத் தன்மையினால் மாற்றான் இல்லை
நச்சுகின்ற குணமுடனே வாழ்தல் கண்டோம்.

* * *

(5) புறப்பகையை அடக்குகின்ற ஆண்மை ஆளர்
புறங்கொடாத் தன்மையுடை வீரர் வீரம்
அறப்பகையாம் காமத்தை அடக்கும் வீரர்
அழியாத வீரத்தின் பின்னே வீரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறப்பகையை அழிக்கின்ற வீரர் எல்லாம்
மாண்புமிகு சுவர்க்கத்தைச் சேர்வர் என்றால்
அறப்பகையாம் காமத்தை வென்ற வீரர்
அழியாத வீட்டின்பம் அடைவார் கண்டீர்.

* * *

(6) நாற்படையும் வெள்ளம்போல் நிற்கும் போரில்
நாணாதே செல்லுகின்ற ஆண்மை வீரர்
வேற்படையும் இல்லாதே வெல்லும் வீரர்
வெம்பகையும் மதியாத தறுகண் ஆளர்
போற்படையில் புகழன்றி வேறும் வேண்டா
பொய்யில்லா வீரர்தம் வீரம் எல்லாம்
நூற்படையோர் அவையினிலே அஞ்சாச் செல்வர்
நுவலுகின்ற வீரத்தின் பின்னே நிற்கும்.

* * *

(7) கல்வியினில் உயர்ந்தோரும் நாணும் வண்ணம்
கலைமதியால் அவர் நாவை அடங்கப் பண்ணி
சொல்லினிலே வீரத்தைக் கொண்டு நின்றே
தோலாதே அவையெல்லாம் வெல்லும் வீரம்
பல்லுயிரும் பண்புடனே வாழ வென்றே
பலனோராச் செயல் நாட்டி வாழும் வீரர்
செல்லுகின்ற புகழுலகை அடைய மாட்டார்
தேர்ந்திடுவீர் எவர்வீரம் வீரம் என்று.

* * *

(8) எண்ணரிய வீரமெல்லாம் படைத்தோர் தாமும்
இமையத்தை நிலைதிரிக்கும் வீரர் தாமும்
நண்ணரிய உடற்பலமும் படைத்தோர் தாமும்
நானிலமும் போற்றுகின்ற வீரம் கொண்டும்
எண்ணாதே அறிவில்லார் செய்த தீமை
எதுவரினும் பொறுக்கின்றார் பொறையே வீரம்
விண்ணாளும் வேந்தர்க்கும் இதுவே வீரம்
விதிவலியால் நொந்தார்க்கும் இதுவே வீரம்.

* * *

(9) துணிவுடனே எப்படையும் வெல்லும் வரர்
துகளெனவே மாற்றாரை மதிக்கும் வீரர்
அணிவகுத்தே உலகெல்லாம் கொள்ளும் காலர்
அஞ்சாமை மனத்தினிலே நிற்கும் வீரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிவுடைமை கொண்டுநின்றால் அவரின் வீரம்
பாரெங்கும் பரவிடலைக் காண்பீர் நாளும்
தணிவுடனே தம்மனத்தை அடக்கும் வீரம்
தாவில் புகழ் வீரத்துள் வீரம் என்பேன்.

* *

(10) சீராட்டிப் பாராட்டி அன்னை தந்த
சிறந்தநற் பாலோடே குருதியான
பேராத தமிழ்என்றன் உடலிற் பாய
பிறர்மொழியை வருந்திநிதம் கற்று வாழ
நாரான உடல்கொண்டு நாமும் நின்று
நம்தமிழை எம்அமுதைப் பழிப்போர் காலில்
ஆராத காதலுடன் அடிமை ஆக
அழிகின்றோம் எதுவீரம் என்போம் இங்கே.

* * *

(11) காதலொடு வீரமுமே கருவாய்க் கொண்டோம்
கணக்கற்ற நூலெல்லாம் இவற்றைக் கண்டோம்
பாதகராய் நாமின்று வாழல் ஏனோ
பைந்தமிழர் வீரமது எம்மில் இல்லை
காதகரால் எம்அன்னை அழிவு கண்டும்
கனிமொழியில் வீரமது பேசல் ஏனோ
சாதலுக்கும் அஞ்சாதே தமிழைக் காக்க
தாரணியில் நாம்செய்யும் செயலே வீரம்.

* * *

(12) தொலையாத துன்பங்கள் தொடரும் போதும்
துணிவுடனே அவையெல்லாம் எதிர்த்தல் வீரம்
மலையாகப் பொருள்பலவும் படைத்த போதும்
மாநிலத்தில் பணிவுடமை கொள்ளல் வீரம்
உலையாத மனத்துடனே இறைவன் பாதம்
உன்னுகின்ற உத்தமனே உண்மை வீரன்
குலையாத நெஞ்சுறுதி கொள்ளும் வீரம்
குவலயத்தில் உயிரெல்லாம் காக்கும் வீரம்.

* * *

(13) அடைத்திருக்கும் புலியோடு வீரம் பேசில்
அது வீரம் என்போமோ ஆண்மை யாமோ?
கடைவைத்த நாமதனில் வீரம் பேசில்
கதவடைத்துப் போய்வேறு வேலை பார்ப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைகேட்ட தேர்வாளர் முன்னே வீரம்
விளம்பிடிலோ எம்வாழ்வில் தோல்வி சேரும்
முடையோடே பொருள் வீரம் பேசல் கண்டால்
மூதறிஞர் இகழாரோ எம்மைக் கண்டு.

* * *

(14) படையெதுவே வந்திடினும் அஞ்சோம் என்று
பல்நோகச் சொல்லுரைக்கும் எங்கள் வீரர்
படைவீரர் தலைக்கறுப்புக் கண்ட போதே
பணிவாகப் பின்னோடல் வீர மாமோ
உடைசோர உளம்சோர ஓடு வோர்க்கே
ஓராதே அம்பெய்தல் வீர மாமோ
தொடைநடுங்கும் ஆடவர்க்கே அம்பை எய்தல்
துகடீர்ந்த வீரர்க்கு வீர மாமோ?

* * *

(15) பகைவனையும் மதிக்கின்ற பண்பே வீரம்
பண்புடனே தம்குற்றம் காணல் வீரம்
தகைமையுடன் எல்லோர்க்கும் ஈதல் வீரம்
தாவில்புகழ் இல்லாளை உடைமை வீரம்
புகைநிறத்த களிற்றோடே வேலைப் போக்கி
போர்நெஞ்சில் வேல்தேடும் அதுவே வீரம்
நகைசேரும் முகத்தோடு நாளும் வாழல்
நானிலத்து வீரர்க்கு வீர மாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது மானம்?

## காப்பு

வானமளந்த தமிழ்மொழி வாழ்ந்திட வையக மீதினிலே
கானமடந்தையர் கோவை நகர்ப்பதி கொண்டவிழா வினிலே
மானமெதுவெனும் மாண்பு மிகுதமிழ் மன்னு கவிதைசொல
ஆனைமுகனவன் பாத மலர்தரும் அருளது காப்பாமே.

*

எதுமானம் எனுங்கவிதை எழில்மேவு செந்தமிழில்
மதுவான தேனினிக்க மாந்திடவே தந்திடுவேன்
புதுவானம் கண்டகதிர் போலொளிரக் கோவைமகள்
மதுபானம் உண்டவள்போல் மயங்குகவி நானிசைப்பேன்.

## அவையடக்கம்

குழலையாழ் வீணையன்ன குரலினும் இனிமையன்ன
மழலைமென் மொழிகள்பேசும் மதலையை உலகம்போற்றும்
தமிழையாம் யாத்தபோதும் தரணியில பெரியீரெல்லாம்
அமுதவாய்க் குதலையெந்தன் அழகுறு தமிழைஏற்பீர்.

## அவையடக்கம்

கவிக்குலத்தரசே கேண்மின்! கவிஞரின் குழாமே கேண்மின்
புவிக்குயிரன்ன மானம் புரக்குநல் லவையே கேண்மின்
தவிக்குமென்நெஞ்சம் கொண்ட தாகமாம் தமிழின்அன்பால்
செவிக்குண வூட்டும்பாடல் செந்தமிழ்க் கவிபொறுப்பீர்.

## செந்தமிழ்க் கவிபெறுவீர்

உலகினில் அரியதென்பார் உயிரினும் பெரியதென்பார்
நிலவிடும் நீணிலத்தில் நெஞ்சகம் கொண்டமானம்
மலரினும் மென்மையென்பார் மனிதனின் ஜீவனென்பார்
இலரெனின் மானம்ஒன்று இழிசடம் பிணம் என்பாரே.

உள்ளத் துணர்ச்சிகளோ டோடிவரும் குருதியிலே
கள்ளத் தனமின்றிக் கலந்தோடும் தன்மானம்
வள்ளத் தனையுலகில் இழிவரினும் இம்மானம்
உள்ளவரின் இன்னுயிரோ உறைந்துவிடும் வாழ்க்கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவரிமான் ஒருரோமம் கழன்றாலும் தன்னுயிரை
அவனியிலே நீக்கிவிடும் அவமான நெஞ்சத்தால்
புவனியினில் பூவையரோ பூச்சூட்டும் கூந்தலுக்குச்
சவுரிமுடி சொருகியவர் சாவாது வாழ்ந்திடுவர்.

*

வையகத்தில் மானிடர்கள் மானமதற் கேதுவரின்
பொய்யகமாம் வாழ்வுதனைப் போக்கிடுவர் முன்னொருநாள்
கையதனில் சிலம்பேந்திக் கண்ணகியாள் நீர்வடிக்க
மெய்யகமாம் பொன்னுலகம் மேவினனே பாண்டியனார்.

*

மானம் இழந்தபின் வாழாமை முன்னினிது
ஞானம் நிறைந்திட்ட ஞாலப் பதிசெழியன்
ஊனம் மலிந்திட்ட உடம்பிலே ஜீவனெனும்
மானம் இழந்திட்டாள் மாய்ந்திட்டாள் அக்கணமே.

*

தன்மானம் காத்திட்ட தரணியோர் பலகோடி
முன்காப்பர் தன்மானம் முடிந்திட்டால் தான்வாழ்வர்
பொன்பாது காத்தல்போல் போற்றிடுவர் இம்மானம்
தன்மானம் தானிழந்தால் தரணியிலே தான்மடிவர்.

*

மானம் இழந்தவரை மானிலத் தோர்மதியார்
கூனல் கிழவியவள் கூனியவள் இராமனது
பாண மண்ணுருண்டை பட்டதனால் மனம்நொந்து
நாணியதால் இராமனுக்கு நடந்தகதை கேட்டிலையோ?

*

தென்னிலங்கை வேந்தனென மன்னும் இராவணனார்
மன்னிடுமா வீரரெனும் மாமன்னன் ஆனாலும்
முன்னமிரா மண்கணையால் தன்மானம் தானிழந்தான்
அன்னவன் மானம்இழந்து அவனியையே நோக்கிநின்றான்.

*

என்றும்அருள் ரகுராமன் தன்பகைவன் கருணையினால்
இன்றுபோய் நீநாளை வாவென்றந் தாமாழி புகன்றதுவும்
அன்றுவீணைக் கொடியோனும் அவமானப் பட்டதுவும்
நின்றுநிலை கொள்ளுதையா கொன்றதிலும் கொடுமையன்றோ

சின்னஞ்சிறு பிஞ்சுச் சிறுமதலைக் குழந்தைக்கும்
தன்மான மென்றந்த நன்மான உணர்விருக்கும்
அன்னை அரவணைத்து அமுத மூட்டுகையில்
சின்னத் தனம்செய்தால் சிவந்துவிடும் மதலைமுகம்.

*

குமுதக் கனிவாயால் குழந்தைபால் குடிக்கையிலே
அமுத கலசத்தை அன்னை நழுவவிடின்
மழலைக் குழவியது மாந்தாமல் மருவுவிழி
அழலைப்போல் சிவந்துவிட அழுவதைத்தான் காணீரோ

*

அழுகையுடன் விடுவானு அன்னவன் தன்மானம்
வழுவுதல் கண்டுமனம் குமுறுவான் குமுறியவன்
நழுவாது நற்ருயின் அமுத கலசத்தில்
பழுவாகக் கடித்திடுவான் பல்லில்லாச் செவ்வாயன்.

*

குழவிப் பருவமுதல் குடிகொண்ட திம்மானம்
முதுமைப் பருவத்தில் முதுகாடு தான்வரைக்கும்
எழில்நிறைந்த திம்மானம் எல்லோரும் காத்திடுவர்
அழிவு வருமென்ருல் ஆவியையே நீக்கிடுவர்.

*

மானம் எதுஎன்று மாநிலத்தில் நாடுசில
ஞான மெதுமின்றி ஞானத்தில் போர்புரிவர்
தானம் தவமிரண்டும் தன்மானம் என்றறியார்
வானம் பொழிவதுபோல் வான்குண்டு மொழிந்திடுவர்.

*

ஆணவத்தால் நாடுகளும் அவனியிலே போர்புரிதல்
காணுதியோ கவின்பெறுநல் மானமும் காப்பதற்கா
போனவரும் மானம்எது பேதையவர் தானறியார்
ஆணவத்தின் முனைப்பினிலே அக்கிரமம் செய்திடுவர்.

*

தன்னலமு மின்றியிந்தத் தரணியிலே பெரியோர்கள்
நன்னலமாய்த் தொண்டாற்றி நல்லவைதான் செய்திடுவார்
அன்னவரே தன்மானம் அவனியிலே காத்திடுவர்
என்னஇடர் வந்தாலும் எழில்மானம் காத்திடுவர்.

அன்பெனும் ஆயுதத்தை ஆண்டவரும் தந்தாரோ
வன்புநிறை அணுக்குண்டை வல்லரசார் தூக்குவதேன்
துன்பமொரு துயர் நீக்கும் தன்மானம் தானறியார்
பின்பிந்த அவனியிலே போர்செய்து மாய்ந்திடுவர்.

*

மானத்தில் எழுந்ததுதான் மாண்புமிகு காவியங்கள்
கானகத்தில் கைவிட்ட காதலன் நளன்சரிதை
மோனத் தமிழ்க்கம்பன் மூகிழ்த்திட்ட ராமகதை
ஞானத் தமிழ்ச்சிலம்பு நயந்துதவும் இம்மானம்.

*

காவியங்கள் கூறிவழி காட்டிவிடும் மானநெறி
மேதினியில் கல்வியெனும் மேன்மைமிகும் மானநெறி
நானிலத்தில் செல்வமதும் நிறைந்ததும் மானநெறி
பேணவரும் வீரமதில் பெரியதுதான் மானநெறி.

*

பாரதப்போர் மூண்டதுவும் பாஞ்சாலி மானத்தால்
கார்குழலில் கரந்தொட்டுக் கன்னியைத் துச்சாதனனும்
பார்இகழ இழுத்ததுவும் பஞ்சவர்பார்த் திருந்ததுவும்
சூளுரை உரைத்ததுவும் சூழும்தன் மானத்தால்.

*

கல்வியிருந் தாலென்ன காசினியில் பெருநிதியாம்
செல்வமிருந் தாலென்ன செகத்தையே புரட்டுமுடல்
வல்லமையாம் திடவீரம் வாழ்விருந் தாலென்ன
அல்லவைக ளாகிவிடும் அவனியிலே மானம் இன்றேல்.

*

கல்விஎது செல்வமெது கவின் நிறைந்த
நல்வீரம் எது என்று தெரிந்த போதும்
தொல்லுலகில் தன்மானம் என்ற அந்த
தூயமனம் கொண்டவரின் வாழ்வு உய்யும்

*

நல்வரவு தந்து எந்தன்
நற்றமிழை உண்ட அன்பர்
தொல்லுலகில் நீடு வாழ்க
தொன்மையாம் தமிழும் வாழ்க.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏது செல்வம்?

## 1. நம்பிக்கையாற் றெழுவேன்

i

தும்பிக்கை யுடையானைத் துயரமெலாந் துடைப்பானை
நம்பிக்கை யோடின்று நற்கவியாற் பாடுவனே.

ii

எம்மதமுஞ் சம்மதமாய் ஏத்துபுகழ் இறையவனை
நங்கவிஞர் நாயகனை நாவார வாழ்த்துவனே.

iii

செவ்வமிகுந் திருமகளைத் தேசுமிகும் பெருமகளைக்
கல்விமிகும் கலைமகளைக் கைகூப்பித் தொழுவேனே.

## 2. தமிழே வருக!

i

காலையிலும் மாலையிலும்
கடவுளடி கண்டு
கருத்தழகு உளத்தினிலே
கணந்தோறுங் கொண்டு
பாலைநிகர் மொழிபகரும்
பைங்கொடியார் நாணப்
பாவாணர்ப் பாச்செல்வி
பைந்தமிழ்த்தாய் வருக!

ii

மல்லிகைசேர் பல்லைநிகர்
முல்லைமலர்ச் செல்வம்
மங்கையரின் கூந்தலிலே
தஞ்சமெனக் கெஞ்ச
நல்லகவிச் சொற்செல்வர்
நற்கவிதை பாட
நகைபெருக நடைகுலுங்க
நங்கைதமிழ் வருக!

iii

கம்பனொடு வள்ளுவனுங்
கருத்தரங்கிற் சிறக்கக்
கல்வியொடு செல்வமகள்
கவியரங்கிற் களிக்க
நம்புவியின் நாற்கவிஞர்
நடராஜன் முன்னே
நல்லகவிச் சொற்செல்வம்
நவரசத்தில் வடிக்க.

iv

கலைபயிற்றும் கோப்பாயின்
உயர்கழகம் வந்து
கல்விபயில் கன்னியர்கள்
கருத்தழகு கண்டு
தலைநிமிர்ந்து அழகயர்ந்து
நிலையுயர்ந்து வளரும்
தமிழ்ச்செல்வி தவச்செல்வி
கலைச்செல்வி வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. நாடிதே — நாளிதே

i

திட்ட மிட்டுத் தந்தை யன்று
  தீட்டிவைத்த பாட்டினைக்
குட்டை நாம்பன் மாட்டை மேய்த்த
  குழந்தை சின்னத் தம்பியும்
பட்டணத்தைக் கிட்ட வுள்ள
  சட்ட நாதர் அருளினல்
கட்ட விழ்த்து முட்ட றுத்துக்
  கவிதை பாடும் நாடிதே.

ii

பட்ட ணத்தைக் கிட்ட வுள்ள
  திட்ட மில்லாப் பாவலன்
வட்டநிலவு பொட்டின் அழகு
  சொட்டி நில்லாக் கவிகளைக்
கிட்ட வந்தும் எட்டி நின்றும்
  குட்ட தொன்று மின்றியே
கட்ட மின்றி நட்ட மின்றிக்
  கவிதை சொல்லும் நாளிதே.

## 4. வணக்கம்—உண்மை

i

பெருமைமிகு கவியரங்கத் தலைவ ரேறே!
  பேறுபல பெற்றஎங்கள் அதிப ரன்னுய்!
அருமைமிகு மரங்கேறிக் கவிசொல் வோரே!
  அனைத்துயிர்க்கும் அன்பெண்ணும் செல்வம் ஈந்து
இருள்சேரா இறைவன்நல் லருளை நாட்டி
  இலங்குகின்ற தமிழ்ச்செல்வி விழாவி லின்று
வருகைதந்த செல்வர்காள்! செல்வி யர்காள்!
  வனப்புமிகு செல்வமக்காள்! வணக்கம், நன்றி.

ii

எது செல்வம்? எதுகல்வி? மானம்? வீரம்?
  ஏற்றமிகப் பாவலரே! இயம்பி ரென்று
மதுகரஞ்சூழ் முகமதிசேர் மக்கட் செல்வம்
  மருங்கிருந்து திரண்டுகேட்கத் தமிழும் வாழ
இதுசெல்வம்! இதுகல்வி! மானம்! வீரம்!
  ஏற்றிடுவீர் எப்பொழுதும் என்றே யிங்குக்
கதுமெனவே கவிபாடக் கடிதின் வந்தோம்
  கலகலெனக் கரந்தட்டி ஏற்பீர் எம்மை.

iii

தமிழ்விழா வெனவறிந்தும் ஆர்வ மிக்குத்
  தனையரைப்போல் தங்கையரும் தலைமை பூண்டு
தமிழ்விழா நாமெடுப்போம்! தரணி தன்னில்
  தாய்த்தமிழாம் செல்வமிதைக் காப்போம்! என்று
அமிழ்தான மொழிகூறி ஆர்வங் கொண்ட
  ஆசிரிய கலாசாலை மக்கட் பண்பே
பழிதில்லாப் பயன்தருநற் செல்வம் என்போம்
  பாவாணர் பண்பிதுவே! பகர்ந்தேன் உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. அருளே மெய்ச் செல்வம்

i

காலிற் சிலம்பு ஒலிசெய்யக்
கையில் வளையா பதிகுலுங்கக்
காதிற் குண்டலம் ஒளிவீசும்
கன்னித் தமிழும் ஒருசெல்வம்

ii

மார்பிற் சிந்தா மணிபொருந்த [தும்
மணிமே கலையும் இடைபொருந்
வாய்மைக் குறளைத் தந்தளங்கள்
வண்மைத் தமிழும் நம்செல்வம்.

iii

யாதும் ஊரே எனஎண்ணி
எவர்க்கும் உழைப்பதும் ஒருசெல்வம்
தீதும் நன்றும் பிறர்தாரார்
என்றே உணர்வதும் ஒருசெல்வம்

iv

குஞ்சி யழகே செல்வமன்று
குபேர வாழ்வே செல்வமன்று
மஞ்சள் அழகே செல்வமன்று
மனத்தின் அழகே நற்செல்வம்

v

பொய்ம்மை வாழ்விற் செல்வமில்லை
பொறாமை உளத்திற் செல்வமில்லை
மெய்ம்மை அறத்திற் செல்வமுண்டு
மேன்மைச் செல்வம் அதுவாகும்

vi

பொருளின் பொலிவும் செல்வமன்று
பொன்னின் அழகும் செல்வமன்று
இருளில் சுழலும் மாந்தர்க்கு
இறைவன் அருளே மெய்ச்செல்வம்

## 6. நாங்கள் நாடும் செல்வங்கள்

i

சோலையில் ஆடும் மயிற்கூட்டம் — நல்ல
சுந்தரத் தமிழின் இசையீட்டம்
மாலையிற் தோன்றும் மதியினொளி — பண்பு
மங்கையர் கொய்யும் மலரீட்டம்

ii

"காகா" என்னும் காக்கையொலி — என்றும்
கற்றதை மறந்திடா மாணவர்கள்
"கூ கூ" என்னும் குயிலோசை — நாளும்
குறைகள் சொல்லா நல்லாசான்

iii

தத்தி நடக்கும் குழந்தைகள் — உடலைத்
தாங்கி அணைக்கும் தாயின்கை
பக்தி யோடு பாடும்வாய் — கொடிய
பகைவர்க் கிரங்கும் பண்புள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv

இன்சுவை உணவு சமைக்குங்கை — வாழ்வில்
இனிமை யூட்டும் இளமகார்
மஞ்சு சூழ்ந்த மலையோரம் — இன்ப
மான்கள் துள்ளும் மலர்ச்சோலை

v

நோய்க ளில்லாச் சுகவாழ்வு — கலை
நுட்பங் தேரும் மனவுள்ளம்
வாய்மை உரைக்கும் மனவலிமை — நாங்கள்
நாடும் நல்ல செல்வமிவை

## 7. வானவரும் வருவர் இங்கே

i

ஓங்கார இசைமிழற்றும் ஓடைத் தண்ணீர்,
ஒய்யார நடைபோடும் அன்னம் ஆமை,
பாங்காகப் பாட்டிசைக்கும் குயிலின் கூட்டம்,
பண்ணிஞெலி கேட்டுவக்கும் மயிலின் ஆட்டம்,
தாங்காத வெள்ளத்தை வாங்கும் ஆறு
தத்துகின்ற தவளைகள் தாவும் மான்கள்
தூங்காது ஒளிவீசும் சூரியன் திங்கள்
சுடர்விடுநற் சோதியெலாம் இயற்கைச் செல்வம்

ii

பஞ்சைகளாய்ப் பட்டினியால் வாடும் மக்கள்
பசிப்பிணியைப் போக்கிடுதல் பண்பார் செல்வம்!
அஞ்சியஞ்சி அடிமைகளாய் வாழும் மக்கள்
ஆற்றலொடு அறிவுபெற வைத்தல் செல்வம்!
நெஞ்சினிலே உணர்வின்றி நீண்ட காலம்
நித்திரையில் மாள்வோரை எழுப்பல் செல்வம்!
தஞ்சமென வந்தோரைத் தாங்கல் செல்வம்!
தாய்த்தமிழைக் காத்திடுதல் தலைமைச் செல்வம்

iii

வள்ளலென வாழளமை வைத்து நாளும்
வையகத்தைத் தெய்வமய மாக்கித் திண்மை
நள்ளிருளில் நடுவெயிலில் வாடும் வாழ்வை
நாடுபுகழ் குளிர்மைசெயும் பொருளும் செல்வம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் மாதர் கற்பு
காளையரின் கல்விபுகழ் வீரம்! மானம்!
உள்ளுவது உயர்வுள்ளல்! யாவும் செல்வம்!
உத்தமனும் வள்ளுவனின் வாக்குஞ் செல்வம்!

iv

உடற்செல்வந் தனைநாடி மாந்தர் எல்லாம்
உயிர்ச்செல்வம் நாடாமல் ஓடு கின்றார்
கடல்நடுவில் தத்தளிக்கும் கலமே போலக்
கரைகாணு தயர்கின்றார் செல்வம் என்று
உடைமினுக்கல் நடைமினுக்கல் என்றே கொண்டு
உயிர்மினுக்க எண்ணுமல் உலாவு கின்றார்
திடமான மெய்ச்செல்வம் காண வேண்டின்
திருவருளாம் இறையின்பச் செல்வம் வேண்டும்

v

திருவருளாம் திண்மைமிகு செல்வம் சேரின்
திக்கெலாம் இன்பமழை அறமாந் தென்றல்
அருகிருந்து அசைந்தாடும் குயிலாம் பண்பு
ஆவலுடன் பாடுமன்பு அறிவே ஓங்கும்
மருளில்லா மயிலாடும்! மாதர் கற்பாம்
வண்ணநிலா ஒளிவீசும்! வண்டு பாடும்
வருவிருந்து வைகலுமே ஓம்ப வானின்
வழியிறங்கி வானவரும் வருவர் இங்கே.

## 8. வான்மதியேன்

"என்ன கவிராய! ஏதேதோ செப்புகிறீர்
செல்வ மெதுவென்னச் செப்பிடவோ வந்தீர்!
பொன்அணியும் மாதர் பொருந்துநற் செல்வமெனச்
சொல்லித் தொலையும், சூழலிது, சுகமிதுவே!
அன்றேல் அகன்றுநாம் 'செல்வம்' இன்று
மதிபோல் முகத்தர் மாதர் எனவறிந்தும்
விதிசெய் சதியால் வீணே உழன்று
இவ்வுலகச் செல்வமெலாம் இணைத்தே ஒன்றாக்கிச்
செம்மைமிகு அறிவும் கல்வியெலாம் திரட்டி
வீரமொடு மானம் விமானமதில் ஏற்றி
அவ்வுலக வான்மதியை அடைவோம் எனமுயலும்
ஆடவரில் நீரும் ஒருவீர்! ஆதலினல்,
நாம்சொல்வதைக் கேளும், அன்றேல் நாம்'செல்வம்'
என்னும் மொழிகேட்டு இருந்தேன் சிலநிமிடம்
அக்குரல் தான்....................."

" மங்கையர்தாமே மதிபோல் முகத்தர்
தங்கம் அவர்மேனி தாங்கும் அவர்செல்வம்!
நெற்றி நிலாத்துண்டு! நீண்டகுழல் கார்மேகம்!
முற்றியநல் முத்துப்பல் முல்லைநகை முறுவல்!
அத்தனையும் கொண்ட அருஞ்செல்வம் பெண்செல்வம்!
எங்குமே செல்லாமல் ஏக்கமிகக் கொள்ளாமல்
இங்கிருந்தே பாடும் ஏற்றமிகும் செல்வமிதைக்
கண்ணில்லாக் கவிராய கனத்த நும்வாலெங்கே
[கண் + இல்லா ; கண் + நில்லா ; கவி—குரங்கு]
பெண்ணழகு காணார் பெருஞ் செல்வங்காணாரே
விண்ணழகு காண்பார் வீண்செல்வங் காண்பாரே
என்னும் ஒலிகேட்டு எழுந்தேன் துயில்ஒழிந்தேன்
அன்னதன்பின் அறைந்தேன் சிலகவிகள்.

## 9. மாதகலானுன கதை

i

இருந்தமிழ்ச் சொல்லுக் குள்ளே
இறையருள் இருத்தல் போலக்
கருங்கயற் கண்ணார் தம்மில்
கடவுளின் வடிவங் கண்டு
பொருந்திய அன்பும் கற்பும்
புவியினில் உலவுங் காட்சி
ஒருங்கிருப் பதனை எண்ணி
உள்ளத்திற் செல்வம் கொண்டேன்

ii

அன்னைபோல் வடிவு காட்டி
அவளருள் அழகும் காட்டிக்
கன்னிமைத் தன்மை கூட்டிக்
கருணைசேர் நிலவை ஊட்டிப்
பொன்னணி திகழும் கோலம்
புவிதனிற் கொண்ட மாதர்
தன்மையிற் றிருவே அன்னார்
தாய்மை சேர் தலைமைச் செல்வம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii

பாதகத்தை வேரறுக்கும் பண்புமிகு பைங்தோடியார்
தீதகற்றி வையகத்தைத் திகழவைக்கும் நற்செல்வம்
ஆதலினல் அன்னவரும் அழியாநற் செல்வமென்பேன்
மாதகலான் மதிசூடி மங்கைபங்க னுனே !

## 10. நன்றி வணக்கம்

எதுசெல்வம் ? எதுகல்வி ? மானம் ? வீரம்
ஏற்றமுடன் இங்குரைக்கும் வருகை ஏற்று
முதுதமிழை விழாமற்செய் மாதர் சந்தம்
மூந்துதமிழ் ஆசிரிய வணக்கம் நன்றி
கதுமெனவே பாட்டிசைக்கும் தலைவர் அன்னை
கன்னலெனக் கவிதைசொலும் கவிதை வாணர்
மதுவுண்ட வண்டெனக் கவி(க்)கள் உண்டு
வாய்மடுத்த சபையோர்க்கென் வணக்கம் நன்றி.

முற்றும்.

10. 'வருகை', 'சந்தம்', 'கவி(க்)கள்', 'சபையோர்க்கென்' முதலியன சிலேடை.

பூரணம் ஒருபொழுதும் தனது துறையினின்றும் குறைவதில்லை. ஜட உலக இருளிலும் அது வியாபகமாய் இருக்கிறது. ஆனல், இவ்விருளே அதைப் பாதிப்பதில்லை. இறைவன் அருள் எல்லார்க்குமுரியது. ஆனல், மக்களின் குறைபாட்டால் அது பாதிக்கப்படுவதில்லை. நம் கண்ணிலுள்ள தோஷம் சூரியனைத் திரிவு படுத்திக் காட்டலாம். ஆனல், சூரியன் அத்தோஷத்தால் பாதிக்கப்படுவதில்லை.

— விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்கோண வம்மின்

அன்று .. ...... ஆடித்திங்கள் 6-ம் நாள் கோவைக் கழகம் எழில்மிகு கோலம் கொண்டு விளங்குகின்றது. கழக நுழை வாயில் காரிகைகளின் கைவண்ணத்தினால் கவின்பெறு அழகுபெற்றுக் காண்போரின் கண்களையும், கருத்தையும் கவரும் வண்ணம் மிளிர்கின்றது. தமிழன்னைக்கு நங்கையர்கூடி நலம்பட எடுக்கும் நான்காவது தனிப்பெரும் விழாக்காண வம்மின்! வம்மின்! என்று வாயிலில் கட்டிய வாழைக் குலை, சிரந் தாழ்த்தி, வருவோரை வரவேற்பதுபோல வனப்புடன் காட்சி தருகின்றது. உங்களுக்கும் இவ்விழாவின் சிறப்புக் காணச் சிந்தை துடிக்கின்றதா? சற்றே என் பின்னே வாருங்கள்.

இது என்ன விந்தை! கம்பன் காட்டும் அனுமன்கண்ட வீரமாநகரோ என வியப்படைகின்றீர்களா? அதோ, மகர தோரணங்களினூடே தெரியும் மங்கல விளக்குகளுடன் போட்டி போடும் மலர் வதனங்கள் மலர்ச்சரங்களாலும், மாக் கோலங்களாலும் மண்டபத்தை அழகூட்டும் காந்தள் மென்விரல்கள். விருந்தினர்க்கு உபசார வார்த்தை கூறும் செவ்விதழ்கள்! அழகுநடைபோடும் சீதமலர்ப் பாதங்கள்! சுபவேளையும் நெருங்குகின்றதுபோலும்! கண்டவர் மயங்க வண்டெனப்பறந்து வனிதையர் குழாம் அழகாக அணிவகுத்து நிற்கின்றது.

வெள்ளைக் கலையுடுத்தி, கலைமகளோ எனக் காண்போர் ஐயுறும்வண்ணம், திருமுகத்தில் புன்னகைதவழப் பூவையரைப் பார்த்துப் பூரிப்புடன் வருகின்றாரே: அவர் யாரென அறிய ஆவலுறுகின்றீர்களா? அவர்தாம் எமது அன்புசால் அதிபர் அவர்கள். முத்தமிழன்னையின் புத்தொளி முகத்தில் சுடர்விட, நற்றமிழ் நங்கையர் கைவண்ணமும் கலைவண்ணமும் கண்டு, களிபேருவகை கொண்டு காட்சி அளிக்கின்றாரே அருகில்: அவர்தாம் எங்கள் செந்தமிழ்ப் பேராசிரியை ஆவர்.

கடிகாரமுள் மெதுவாக மணி ஒன்பதை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. காரிகைகளின் கரிய கயல்விழிகள் அடிக்கடி வாயிற்புறத்தை நோக்குகின்றன. வருவாரோ, வராதிருப்பாரோ விழாத் தலைவர் என எண்ணி வாட்டமுறுகின்றன வனிதையர் வதனங்கள் ஒருகணம். கணீர், கணீர், இதோ மணி ஒன்பது அடிக்கின்றது. அதோ தாரகைகளின் நடுவண் தண்மதியென வந்திறங்குகின்றார் உயர்திரு. தணிகாசலம் அவர்கள்.

வளம்பெறு வடமாநில வித்தியாதிபதி அவர்கள் விண்ணளாவி நின்ற கொடிக் கம்பத்திலே வண்ணத் தமிழ்க்கொடியை வனப்புடன் ஏற்றுகின்றார். முத்தமிழ்க் கொடி பட்டொளி வீசிப்பறக்கின்றது. 'நாவினில் வேதமுடையவள் கையில் நலந்திகழ் வாளுடையாள்' என நங்கையர் நற்றமிழ்க் கீதமிசைத்து நந் தமிழன்னையை நலம்பெற வாழ்த்துகின்றனர்.

மகரதோரணங்களாலும், மலர்ச்சரங்களாலும் மணம்பெறப் புனையப்பட்ட எழில்மிகு மண்டப நுழைவாயிலை யண்மி மாண்புறு தலைவர் அவர்கள் மங்கல விளக்கேற்றுகின்றார். மண்டபம் முழுவதும் தீந்தமிழ் மணங்கமழ, மலர்மிசையேகினான் மாணடி வாழ்த்தி விழாவை ஆரம்பிக்கின்றனர்.

விழாக்கோலம் பூண்டிருக்கும் இவ்வேளையில் எங்கழக அதிபர் உவப்பத் தலைக்கூடி இருக்கும் உயர்ந்தோர் அனைவரையும் தமிழன்னை மகிழ, உவந்து வரவேற்கின்றார். தொடர்ந்து அறிவுசால் அவைத்தலைவர் அவர்கள் அமுதமொழியில் அறிவுறு உரைகளை வாரி வழங்குகின்றார்.

அடுத்து, பண்டிதர் பொன். கிருஷ்ண பிள்ளை அவர்களின் தலைமையில் உரையரங்கு விறுவிறுப்பாக நடைபெறுகின்றது. கற்கண்டுப் பண்டிதரல்லவா? நகைச்சுவைக்குக் கேட்கவும் வேண்டுமா? மணிமண்டபம் முழுவதும் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம். நற்றமிழ் வல்ல நாவல்லாரின் நயவுரைகள் நம்முள்ளத்தை ஈர்க்கின்றன.

இதன்பின் பண்புமிகு பண்டிதர் சு. இராசையா அவர்களின் தலைமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தரங்கு நிகழ்கின்றது. அடடா! இது என்ன? ஆடவர் குழுமியிருந்த அரங்கிலே அறிவுமிகு அரிவையர் அறுவரல்லவா அழகுற அமர்ந்திருக்கின்றனர். நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் ஓர் அறநூல் என எடுத்துக் கூறுகின்றார் ஒருவர். இல்லை, இல்லை இலக்கியநூல் என இடித்துக் கூறுகின்றார் இன்னொருவர். அம்மம்மா! கொஞ்சுமொழி பேசும் வஞ்சிக்கொடிகளா இவர்கள். அன்று அறநெறி பிழைத்த அரசனின் அவையிலே மெய்யிற் பொடியும் விரிந்த கருங்குழலும் கையிற்றனிச் சிலம்பும் கண்ணீருமாக நின்றாளே கற்புக் கடம்பூண்ட தெய்வம் கண்ணகி, அக் கற்புக்கரசியின் வழித்தோன்றல்களோ இக் காரிகைகள் என்று ஐயுறும் வண்ணமல்லவா அரங்கிலே தோன்றுகின்றனர். கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாதாரும் வேட்கும்படி அமைந்த பழைய மாணுக்கியரின் சொற்பொழிவுகளைச் செவிமடுத்த அதிபர், பேராசிரியர் குழாம் சான்றோன் எனக்கேட்ட தாயின் தன்மையை ஒத்துக் களிபேருவகை அடைகின்றது. காரசாரமான கருத்தரங்கும் ஒருவாறு முற்றுப்பெறுகின்றது. இடைவேளையும் ஆரம்பமாகின்றது.

செவிக்குணவு இல்லாதபோது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்ற பொய்யில் புலவன் பொருளுரைக்கேற்ப விருந்தோம்பலும் இனிது நடைபெறுகின்றது.

அடுத்து, கவின்பெறு கவிஞரின் கவித்திறன் நுவல நுழைகின்றனர் விழா மண்டபத்துள். நுண்மாண் நுழைபுலமிக்க கவிஞர் தாமும் எது செல்வம்? எது கல்வி? எது மானம்? எது வீரம்? என்று கதுமென கவிமாரி பொழிந்தனரே கவியரங்கில். ஆங்கே மதுவுண்ட வண்டினம்போலக் கவிஞர் பொழி கவிதை உண்டு திறம்வியந்து செயன்மறந்து களிப்புற்று இருந்தனரே இவ்வவையில்.

கவியின்பம் சுவைத்தவர்கட்கு இசையின்பம் காத்திருக்கின்றது. முத்தமிழ் வித்தகராம் கலையரசு க. சொர்ணலிங்கம் அவர்களின் தகைவுறு தலைமையுரையுடன் கலையரங்கு ஆரம்பமாகின்றது. இன்னிசைக் கருவிகள் இயம்புகின்றன. அவ் வெள்ளத்தில் மூழ்கித் திளைக்கின்றது மக்கள் குழாம். திரை வீழ்கின்றது. அடடா! என்ன இது? சதங்கை ஒலியல்லவா கேட்கின்றது. பொறுத்திருந்து பார்ப்போம். இதோ திரையும் விலகுகின்றது.

எங்கள் ஈழத்திருநாட்டின் சீருஞ்சிறப்பும் செப்பி, ''உலகில் உயர்நாடு இலங்காவே'' என்று பாடி ஆடுகின்றனர் ஆடலழகிகள். உயர்திரு. கல்வியமைச்சர் இயற்றிய பாடலல்லவா இது? அவர் தந் தாய்மொழியில் இயற்றிய பாடலை, எங்கள் செந்தமிழ் மொழியிலே ஏற்ற இசைக் கருவிகளுடன் குழலினுமினிய குரலில் பாடுவதுடன் மாத்திரமமையாது, அப் பாடலிற்குத் தாளம் தப்பாது தகுந்த அபிநயமும் பிடித்து ஆடும் அழகினையும், சிறப்பினையும் நுகர அமைச்சரவர்கள் ஈங்கு இல்லையே! அரிவையரின் ஆடலைக் கண்டு அயர்ந்திருந்த வேளையில் அழகுத் திரை வீழ்கின்றது.

நாம் காண்பதென்ன? வானளாவிய ஒரு மாடமாளிகையல்லவா எம்முன் காட்சி தருகின்றது. எங்கண்களையே நம்பமுடியவில்லையே! இம்மாளிகையைச் சமைத்த சிற்பி யாரோ? இமையாநாட்டம் பெற்றவர்கள்கூட இதைக்காணத் தங்களிரு கண்களும் போதவில்லையே எனக் கவலும் வண்ணமமைக்கப் பெற்ற அம்மாளிகையின் உப்பரிகையிலே அசைந்தாடும் கொடிகள் யாரையோ வம்மின்! வம்மின்! என்று அழைப்பனபோன்றல்லவா காட்சியளிக்கின்றன. அந்த உப்பரிகையிலே உதயதாரகைகளின் மத்தியிலே ஒளிர்விடும் உதயசந்திரிகை யாரோ? நாணம் திரையிட, நீலோற்பல விழிகள் நிலம் நோக்க நிற்கும் அந்த நிலமடந்தையைத் தாம் நோக்கி நகும் அம்மெல்லியலாரின் வாய்த் துடுக்கை யாமும் சற்றுச் செவிமடுப்போம். பாஞ்சாலன் பெற்றெடுத்த பாவையாம் கிருஷ்ணையையல்லவா பாவைகள் சீண்டி மகிழ்கின்றனர். அவளின் சுயம்வரம் காண வந்த மன்னர் பெருமக்களைப்பற்றி விமர்சித்து அவளை நாணவைக்கின்றனர் அருமைத் தோழிகள்.

தீபங்கள் ஏற்றப்படுகின்றன. ஆலய மணியும் ஒலிக்கின்றது. பூசைவேளையும் நெருங்குகின்றது. தங்கள் அகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்தஅரிமாதவனைப் பூசிக்கின்றனர். அவர்கள் அன்பாரப் பாடும் பாடல் எம்மைப் பக்திப் பரவசத்துள் ஆழ்த்துகின்றது. வில்வீரன் ஒருவனின் மனையாளாகப் போகும் அம்மான் விழியாளாம் கிருஷ்ணை தங்களுடன் இறுதியாகக் களிக்கும் அந் நாளில், அவளை ஆடிப்பாடி மகிழ்விக்கின்றனர் பாங்கியர்கள்.

அடடா! அதோ சுயம்வர மண்டபமல்லவா தெரிகிறது. எண்ணிறந்த மன்னர்களும், மந்திரி பிரதானிகளும், அறநெறி ஓதும் அந்தணர்களும் வீற்றிருக்கும் அவ்வழகிய மண்டபத்துள்ளே, ஓதப்படும் வேதகோஷங்கள் வானை நிறைக்கின்றன. மன்னர் விழித்தாமரை பூத்த அம்மண்டபத்தே பொன்னின் மடப்பாவையாம் கிருஷ்ணை தோழியர் புடைசூழ நுழைகின்ருள். பாஞ்சால மன்னன் மனம்நிறைந்த மகிழ்வுடன் மங்கை நல்லாளை ஆசீர்வதிக்கின்ருன். அவையிலேயுள்ளோர் நாணேற்ற வேண்டிய வில்லையும், நங்கையையும் மாறி மாறிப் பார்க்கின்றனர். போட்டியும் ஆரம்பமாகின்றது. வல்லியனுன சல்லிய மகாராசன் வில்லை அசைத்ததோடு அயர்ந்து நின்றுவிடுகின்ருன். மாவீரனுன துரியோதன மகாராசன் புல்லைத் தூக்குவது போல வில்லைத் தூக்குகின்ருன். அந்தோ! என்னே பரிதாபம். அதை நாணேற்றமுடியாது நாணித் தலைகுனிகின்ருன். கட்டிளங்காளையான அந்தணன் ஒருவன் எழுகின்ருன், சபையிலே ஒரே பரபரப்பு. அந்த ஆணழகன் அரசனின் அனுமதியுடன் வில்லை நாணேற்றுகின்ருன். மங்கல ஒலிகளும், மந்திர கோஷங்களும் ஒலிப்ப, வெற்றிப் பெருமிதத்துடன் கிருஷ்ணையின் கையைப்பற்றுகின்ருன். இவ்வரிய காட்சியைக் காணக் கண்பெற்ரேமே என்ற களிப்பினுல், விழாக்காண வந்தோர் தம்மையும் மறந்து தங்கள் கைகளைக் கொட்டிக் கரகோஷம் செய்கின்றனர்.

இதென்ன விந்தை! அந்தணனை அரசி மணப்பதா என ஐயமுறுகிறீர்களா? அதோ அவ்வீதியிலே போகிருர்களே புரோகிதாகள். அவர்களும் சுயம்வரம் பற்றியல்லவர் தர்க்கமிடுகின்றனர். என்னே! இறைவனின் சித்தம்! வில்வீரனுகிய அர்ச்சுனன் அன்ரே அந்தணக் கோலத்தில் வந்து அங்கயற் கன்னியாம் கிருஷ்ணையை மணந்துள்ளான். அப்பாடா! இருஷ்ணையின் மனேரதமும் நிறைவேறுகின்றது. எங்கள் உள்ளமும் குளிர்கின்றது.

அரண்மனை அந்தரங்கச் செய்திகள் கூடச் சாதாரணக் குடிமக்களுக்கும் எட்டத்தான் செய்கின்றது என்பதைத் தெருவிலே ஒய்யார நடை நடந்து செல்லும் மோர்க்காரிகளின் உரையாடல் நமக்கு எடுத்தியம்புகின்றது. மிகச்சில நிமிடங்களே மேடையில் தோன்றினுலும் பார்வையாளர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டுவிடுகின்றனர் இவர்கள்.

காட்சி மாறுகின்றது. அந்தண வடிவத்திலிருந்த பாண்டவர்கள், அரச கோலத்துடன் வீற்றிருக்கும் அழகினைக் கண்டு தம் உள்ளத்தைப் பறிகொடுக்கின்றனர் அவையிலுள்ளோர். தருமம் நிறைந்த உதிஷ்டிரன் தனது அரசுரிமையின் பாதியைத் துரியோதனனுக்கு உவந்து அளிக்கின்ருன். இந்நேரத்தில் வீரச்செம்மலாம் வீமன் விரைந்தகலுகின்ருன் அரசவையை விட்டு. அண்ணனின் தீர்ப்பு அருமைத் தம்பிக்குப் பிடிக்கவில்லைப்போலும்.

இந்த வேய்ங்குழலின் இனிய கானம் எங்கேயிருந்து வருகின்றது? அதோ, அந்த மாயக் கண்ணன்தான் தன்னை மறந்து குழலிசையை எழுப்புகின்ருன். வீரமைந்தனும் வீமனைக் காணுது அழுது முறையிடுகின்றனர் உழுவலன்பு உற்றவர்கள். உருகி நிற்போர்க்கு அபயமளிக்கின்ருன் பரந்தாமன்.

மங்கல ஒலிகள் முழங்க, மண்ணவரும் விண்ணவரும் ஏத்த, வியாச முனி ஆசிநல்க, பீடு நிறைந்த பீஷ்மாச்சாரியார் அவர்கள் மாவீரனும் தருமனுக்கு முடிசூட்டுகின்ருர். இப் பட்டாபிஷேக விழாவைக் கண்டு களிப்பெய்துகின்றனர் மாந்தர்கள்.

இந்திரப்பிரஸ்தங் கண்டு பொருத துரியோதனன் அவமானத்தினுலும், பொருமையினுலும் புழுங்கித் துடிக்கின்ருன். பாண்டவர்களின் கதையைமுடிக்கத் தவிக்கின்ருன். பக்கத் துணையாக இருந்து அதற்கு மேலும் தூபமிடுகின்ருன் பழிகாரச் சகுனி. முடிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

……… வஞ்சகமாகப் பாண்டவர் அழைக்கப் படுகின்றனர், நூற்றுவர் சமைத்த மணி மண்டபம் பார்ப்பதற்கு. அரண்மனை நர்த் தகிகள் களிநடம் புரிகின்றனர். கைவழி நயனஞ் செல்லக் கண்வழி மனமும் செல்லக் கன்னியர் ஆடும் ஆடலில் அனைவரும் தஞ் சிந்தையைச் சிதறவிடுகின்றனர். அத்தரு ணத்திலே அரவக்கொடியோன் பாண்டவ ரைப் பொழுதுபோக்காகச் சூதாட அழைக் கின்றான். விதியின் வலிமையினால் தருமன் சம்மதிக்கின்றான். தம்பியர் பதறித் துடிக் கின்றனர். தடுக்கின்றனர். ஆனால், தரும தேவதையின் தனயன் கொடுத்த வாக்கை மீறமுடியாது பணயம் வைக்கின்றான். பக டைக் காய் பாவச் சகுனியின் பக்க முருள் கின்றது. உதிஷ்டிரனின் ஊர், பெயர், புகழ், புண்ணியம், நாடு எல்லாமே உருள் கின்றது. யானை, சேனை, படைகள், பாங்கி யர்கள், அரண்மனை, அந்தஸ்து அனைத்தும் சகுனியின் காய்களோடு உருள்கின்றன. தருமம் தலைகுனிகின்றது. தம்பிமாரின் உள்ளம் தவியாய்த் தவிக்கின்றது. ஆனால், தருமனின் உள்ளம்மட்டும் உறுதியாய் நிற் கின்றது. தன் உறுதுணையரான தம்பியரை யும் தோற்றுத் தன்னையும் இழக்கின்றான். இறுதியில் வெற்றிக்கு ஒரேவழி, பாஞ்சா லன் பெற்றெடுத்த பைங்கிளியைப் பணயம் வைப்பதே எனக் கூறுகின்றான் வஞ்சகன் சகுனி. விதியின் வலிமைதான் என்னே! பாண்டவர் தம் பத்தினியையும் பாழுஞ் சூதிலே இழக்கின்றான் தருமன். தலைகுனி கின்றனர் தருமனாதியோர். வெற்றிக் களிப்பினால் துள்ளிக் குதிக்கின்றனர் துரி யோதனனாதியோர். பார்வேந்தன் வீற்றி ருக்கும் சபைக்குப் பாஞ்சாலி இழுத்து வரப்படுகின்றாள். பார்த்திருப்போர் கண் ணீர்வடிக்கப் பாண்டவர் உள்ளம் பதை பதைக்கப் பாவை பதறிக் கதற அவளின் பட்டாடைபற்றி இழுக்கின்றான் பாவி துச் சாதனன். அரிமாதவனை நோக்கி அபய மிடுகின்றாள் அரிவை. அவளின் அபயக் குரல் கேட்போரின் உள்ளத்தை உருக்கு கின்றது. மாயவனின் அருளால் மலைபோல் குவிகின்ற வண்ணப் பட்டாடைகள் அவ ளின் மாந்தளிர் மேனியைக் காக்கின்றன. சோர்ந்து விழுகின்றான் துச்சாதனன்.

கண்ணனே கதியெனக் கலங்கி நின்ற பாண்டவர்கள், அவனருளால் வலிமைமிக உறுதி அடைகின்றனர். மேக கர்ச்சனை என முழங்கி ஆணையிடுகின்றனர். அவர் களின் ஆணையின் எதிரொலி மண்டபத்தை நிறைக்கின்றது. கற்புக் கனலியாம் கிருஷ்ணை காளியாக மாறுகின்றாள். கடுஞ் சினத்துடன் உதிர்க்கின்றாள். ஆணைகளை பாஞ்சாலன் பாவை பாவியரின் உதிரத் தைப் பூசிக்குளிப்பேன் என ஆணையிடுகின் றாள். ஓம் பராசக்தி என்ற நாமம் மண்ட பம் முழுவதும் ஒலிக்கின்றது. திரை வீழ் கின்றது.

நல்லதொரு முத்தமிழ் நாடகத்தை அநுபவித்த நுகர்வு நிறைவு விழாக்காண வந்தோரின் முகத்தில் பளிச்சிடுகின்றது. நாடகத்தைப் புகழாத நாவில்லை என்று கூறும்வண்ணம் புகழ்மாலைகள் குவிகின்றன. கோவைக் கழகம் குதூகலத்தினால் பூரிக் கின்றது. தமிழன்னையின் ஆசியும் கிட்டு கின்றது.

சுபம்!

செல்வி. சரோசினி நவரெத்தினம்,
விடுகை வருடம்.

# இங்கு இவ்வருடத்திலே....

| | |
|---|---|
| 4-1-68 | கல்லூரியை அடைகின்றோம். காலியாக இருந்த இடங்கள் கல கலப்படைகின்றன. |
| 30-1-68 | காந்திமகானின் அமரதினத்தைப் பக்தி சிரத்தையுடன் நினைவு கூரு கின்றோம். |
| 30-1-68 31-1-68 | விடுகைவருட மாணவிகள் விருப்புடன் சிரமதானப் பணி புரிகின் றனர். |
| 1-2-68 | முதலாம் வருடத்தவரான ஐம்பத்தெட்டுப் புதிய முகங்களைக் கல் லூரியில் வரவேற்கின்றோம். |
| 11-2-68 | தமிழ் மன்றம் இல்லங்களிடையே நடாத்தும் கதைப்போட்டியில் ஈடுபட்டுக் களிக்கின்றோம். |
| 14-2-68 | விடுகை வருட மாணவிகள் படிப்பித்தற் பயிற்சி பெறப் பாடசாலை களைச் சரணடைகின்றனர். |
| 26-2-68 | இன்று சிவன் இராத்திரி தினம். மாணவிகள் விழிப்புடன் இருந்து விரதமனுட்டிக்கின்றனர். |
| 7-3-68 | தமிழ்மன்றம் இல்லங்கட்கிடையே பேச்சுப்போட்டி நடத்துகின்றது வண்ணமகளிர் சொல்லம்புகள் தொடுக்கின்றனர். |
| 15-3-68 | இராதா, அருணு இல்ல மகளிர் வலைப்பந்தாட்டப் போட்டியில் ஈடு படுகின்றனர். |
| 16-3-68 | அருணு, சுவர்ணு இல்ல மகளிர்க்கிடையில் வலைப் பந்தாட்டப் போட்டி நிகழ்கின்றது. |
| 22-3-68 | அமெரிக்காவைத் தாயகமாகக் கொண்டவரும் 'ஹோப்' கப்பலுடன் தொடர்புடையவருமான செல்வி. சேம்பலீன் அவர்கள் கலா சாலைக்கு வருகைதந்து உரை நிகழ்த்துகின்றார்கள். |
| 23-3-68 | பேராசிரியர்களும், மாணவிகளும் கைதடியிலுள்ள குருடர், செவி டர் பாடசாலைச் சகோதரர்களைக் காண்பதற்காகச் செல்கின்றோம். |
| 25-3-68 | 'மியூசியஸ்' ஆசிரியகலாசாலை மாணவிகளையும், விரிவுரையாளர் களையும் வரவேற்று மகிழ்கின்றோம். |
| 28-3-68 | தானத்தில் சிறந்த தான இரத்ததானம் பத்து மாணவிகளால் அளிக்கப்படுகின்றது. |
| 30-3-68 | தமிழ் மன்றம் இல்லங்கட்கிடையே நாடகப்போட்டி நடத்துகின் றது. |
| 31-3-68 | முதலாம் பருவ இறுதிநாள். மகிழ்ச்சியோடு வீடு செல்கின்றோம். |
| 27-4-68 | இரண்டாம் பருவம் ஆரம்பமாகிறது. |
| 2-56-8 | பாசறையிலிருந்து குருளையர் பயிற்சிபெற விடுகைவருட மாணவி கள் கிளிநொச்சி செல்கின்றனர். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் பருவம்

10-5-68 இல்லங்கட்கிடையில் மெய்வல்லுனர்ப் போட்டி நடைபெறுகின்றது.

14-5-68 கல்லூரிக் காவலாளியான திரு. எஸ். சூசைப்பிள்ளை அவர்கள் இளைப்பாறியதால் அன்னாரின் சேவைநலனைப் பாராட்டுகின்றோம்.

17-5-68 தமிழ் மன்றம் இல்லங்கட்கிடையில் செய்யுள் அபிநயப்போட்டியை நடாத்துகின்றது.

20-5-68 இன்று விடுகைவருட மாணவிகளின் படிப்பித்தற் பயிற்சி ஆரம்பமாகின்றது.

30-5-68 இல்லங்கட்கிடையே உடற்பயிற்சிப் போட்டி நடைபெறுகின்றது.

2-6-68 திருவள்ளுவப் பெருந்தகைக்குக் குதூகலமாக விழா எடுக்கின்றோம்.

11-6-68 நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரின் குரு பூசைத்தினத்தைக் கொண்டாடுகின்றோம்.

18-6-68 யோகி சுத்தானந்த பாரதியார் கலாசாலைக்கு வருகைதந்து உரையாற்றுகின்றார்.

20-6-68 விடுகைவருட மாணவியான திருமதி. சி. வீரசிங்கத்தின் மறைவு கேட்டு வருந்துகின்றோம்.

21-6-68 திருமதி. சி. வீரசிங்கத்தின் இறுதி யாத்திரையில் கழகங் கலந்து கொள்கிறது.

4-7-68 நுண்கலை மன்றம் இல்லங்கட்கிடையே இசைப்போட்டி நடாத்துகின்றது.

8-7-68 கிறீஸ்தவ தினத்தை மகிழ்வுடன் கொண்டாடுகின்றோம்.

10-7-68 இரண்டாம் பருவத் தேர்வு தொடங்குகின்றது.

21-7-68 கன்னித் தமிழுக்குக் கன்னியர் விழாவெடுத்துக் குதூகலிக்கின்றனர்

30-7-68 இரண்டாம் பருவ இறுதிநாள். மகிழ்ச்சியோடு வீடு செல்கின்றோம்.

## மூன்றும் பருவம்

1-9-68 ஏடுகளைத் திறக்கக் கலாசாலைக்கு வருகின்றோம்.

1-9-68 புதிய இலிகிதர் பதவி ஏற்கிறார்.

11-9-68 பாரதி நினைவு தினத்தைக் கொண்டாடுகின்றோம்.

12, 13, 15, 16, 17-9-68 கோப்பாய் வட்டாரத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு நாடகம் (கிருஷ்ணையின் ஆணை) நடாத்திக் காண்பிக்கப் படுகின்றது.

13-9-68 கலாசாலை மாணவர்களில் சிலர் கொழும்பில் விவசாயப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்கிறார்கள்.

16-9-68 தமிழ் ஆசிரிய கலாசாலைகளுக்கிடையே நடந்த நாடகப்போட்டியில் கலந்து கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18-9-68 நாடகப்போட்டியில் 'கிருஷ்ணையின் ஆணை' என்னும் எங்கள் நாடகம் முதலிடம் பெற்ற செய்தியை அறிந்து மகிழ்கின்றோம்.

23-9-68 ஆசிரிய வாரம் முதல்நாளைத் தொடங்கி வைப்பதன் நோக்கமாக அணிவகுப்பு, வளைய ஆட்டம் இரண்டிலும் பயிற்சி பெறுவதற்காக 'மஹரகம' ஆசிரிய கலாசாலைக்கு இருபத்தைந்து மாணவிகளும், பொருட்காட்சிப் பொறுப்பாக ஐந்து மாணவிகளும், பேராசிரியர்களும் செல்கின்றனர்.

23-9-68 சக்திவிழா எடுக்கும் முகமாகக் கோலமிட்டுக் கும்பம் வைத்துப் பூசை ஆரம்பமாகின்றது.

27-9-68 ஆசிரியர் வாரம். அதிபர்-பேராசிரியர்களும்-மாணவிகளும் பங்கு கொள்ளுகின்றனர்.

27-9-68 ஆசிரியவார முதன் நாள் அணிவகுப்பிலும், வளையஆட்டத்திலும் பங்கு கொள்கின்றோம்.

27-9-68 ஆசிரியவார முதன்நாளில் பங்குகொண்ட அனைவரும் கலாசாலை வசம் புறப்படுகின்றனர்.

1-10-68 கொழும்பில் நாடகம் நடிப்பதற்காகவும், பொருட்காட்சியைப் பார்வையிடுவதற்காகவும் அதிபர், பேராசிரியர், மாணவிகளின் புறப்பாடு.

3-10-68 கொழும்பில் 'லும்மினி' படமாளிகையில் வெற்றிநாடகத்தை மேடைஏற்றி இரசிகப் பெருமக்களின் புகழைப் பெறுகின்றோம்.

4-10-68 அதிபர், பேராசிரியர்கள், மாணவிகள் கழகந் திரும்புகின்றனர்.

13-15-68 யாழ் மாநகரசபை மண்டபத்தில் நாடகம் 'ஜாம் ஜாம்' என மேடையேற்றப் படுகின்றது.

29-10-68 இரண்டாம்வருட மாணவிகளின் படிப்பித்தற் பரீட்சை ஆரம்பமாகின்றது.

3-11-68 கிறீஸ்து பெருமானின் பிறந்த தினத்தை மகிழ்வுடன் கொண்டாடுகின்றோம்.

10-11-68 எங் கலாசாலை விருந்துபசாரம் நடைபெறுகின்றது.

23-11-68 முதலாம் வருட மாணவிகளும் இறுதிப் பரீட்சை எழுத ஆரம்பிக்கின்றனர்.

26-11-68 இரண்டாம்வருட மாணவிகள் இறுதிப் பரீட்சை எழுத மண்டபத்துள் நுழைகின்றனர்.

30-11-68 மூன்றும் பருவ இறுதி நாள். எல்லோரும் மகிழ்வுடன் வீடு செல்கின்றனர்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கழக ஆளுமன்றம்

**ஆள்பதி :**

திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி (அதிபர்)

**முதலமைச்சர் :**

செல்வி. புனிதவதி சிற்றம்பலம்.

**உதவி அமைச்சர் :**

செல்வி. றெஜினு யோனுஸ்.

**கல்வியமைச்சர் :**

செல்வி. மல்லிகாதேவி நேசரத்தினம்.

**கலாச்சார அமைச்சர் :**

செல்வி. மகேஸ்வரி தம்பு.

**போக்குவரத்தமைச்சர் :**

செல்வி. சரோஜினி நவரத்தினம்.

**சுகாதார அமைச்சர் :**

செல்வி. திரேசா ஞானப்பிரகாசம்.

**விவசாய அமைச்சர் :**

திருமதி. நல்லம்மா பொன்னம்பலம்.

**உணவமைச்சர்கள் :**

1-ந் தவணை திருமதி. கோமதி அம்பிகைபாகன்.
3-ந் தவணை செல்வி. மகேஸ்வரி தம்பு.
3-ந் தவணை செல்வி. பராசக்தி சிவசுப்பிரமணியம்.

**வகுப்புத் தலைமை மாணவிகள் :**

| | | | | |
|---|---|---|---|---|
| II ஆம் | வருடம் | A. | செல்வி. | திலகராணி சரவணமுத்து. |
| II ஆம் | ,, | B. | ,, | பத்மாவதி சின்னத்துரை. |
| I ஆம் | ,, | A. | ,, | இராஜேஸ்வரி சின்னத்துரை. |
| I ஆம் | ,, | B. | ,, | பிறிஜெட் ஸ்ரனிஸ்லஸ். |

ஈழத்துத் தமிழ்மகளிர் ஆசிரியர் கல்லூரியாகத் திகழும் எங்கழகம் தனது நிர்வாகத்தை நலம்பெற நடாத்தவேண்டும் என்னும் உயரிய நோக்குடன் உருவாக்கியதே எம் ஆளுமன்றம்.

ஆண்டுதோறும் எங்கலாசாலையில் நடைபெறும் சகல நிகழ்ச்சிகளும், விழாக்களும் இனிது நடைபெற எம்மன்றம் உறுதுணைபுரிந்து வந்துள்ளது. இக்கல்லூரியில் நாம் நாலாபக்கத்திலுமிருந்து வந்து ஆசிரியர்கள் பயில்கின்றனர். பலதரப்பட்ட ஆசிரியர்கள் பயிலும் இடத்தில் பலபிரச்சனைகள் எழலாம். அவற்றையெல்லாம் நொடியிற் போக்கி செவ்விய ஆட்சிபுரிந்து சீர்பெருக்கித் திகழ்கின்றது எம்மன்றம். எம்மன்ற ஆள்பதியாம் அதிபர் திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி அவர்கள், இன்மொழியாலும் புன்னகையாலும், ஊக்கமும் ஆக்கமுமூட்டி எம்மன்றத்தைப் பேணிவளர்த்து வருகின்றூர்.

இம்மன்றம் மேன்மேலும் வளர்ச்சியுற்று குன்றிலிட்ட தீபமென விளங்க, பரம கருணை நிதியாகிய இறைவனை இறைஞ்சுகின்றேன்.

செல்வி. சி. புனிதவதி.
(தலைமை மாணவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், பேராசிரியர்களுடன் கழக ஆளுமன்ற உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மன்றம்

காப்பாளர் : செல்வி. க. சௌந்தரம் சந்தனநங்கை.

தலைவர் : திருமதி. அ. கோமதி.

செயலாளர் : செல்வி. செ. செல்லப்பாக்கியம்.

பொருளாளர் : செல்வி. சி. சிவமணி.

பாராண்ட பண்டைத்தமிழக முடியுடை மூவேந்தரும் முச்சங்கம் அமைத்து முத்தமிழை வளர்த்தனர். அவ்வாறே ''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்ற பாரதியின் கனவை நனவாக்கும் பெரும் பணியில் கோவைக் கோதையரால் அமைக்கப்பட்டதே இம்மன்றம்.

''கல்தோன்றி மண்தோன்ருக் காலத்து முன்தோன்றிய'' எம் முருகு தமிழ் பாரினில் பட்டொளி வீசிப்பறக்க பாவையர் நாம் திங்களில் ஒரு முறைகூடித் திக்கெட்டிலுமிருந்து பாவலரையும், நாவலரையும் அழைத்து, அவர்கள் சொரியும் செந்தமிழ்த் தேனைப் பருகுகின்ரேம். தமிழ் வளர்த்த பெரியார்களுக்கு விழாவெடுத்துப் பூரிப்படைகின்ரேம். அன்றியும் இம்மன்றம் உரை அரங்கம், கருத்தரங்கம், கவியரங்கம், நாடகம், நடனம், அபிநயம் என்னும் பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் நம்மாற்றலை வெளிப்படுத்த உதவுகின்றதென்பதைப் பெருமையுடன் அறியத் தருகின்ரேம்.

இக்கலாசாலை தோன்றி இருபத்திரண்டு ஆண்டு அகவையை நிறைவாக்கியுள்ளது. அன்று தொட்டு இன்றுவரை தமிழ்த்தாய்க்குச் செய்யும் தொண்டுகளில், எம்மன்றம் இடைவிடாது உழைப்பதில் இறும்பூதெய்துகின்றது.

இம்மன்றத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டி உற்சாகப்படுத்தும் பேராற்றல்மிக்க எங்கள் அதிபர் அவர்கட்கும், மன்றக்காப்பாளராக இருந்து அறிவுரைகளும், ஆலோசனைகளும் கூறி அருந்துணையாக விளங்கும் பேராசிரியர் செல்வி. க. சௌந்தரம் சந்தனநங்கை அவர்களுக்கும் நாம் என்றும் கடப்பாடுடையோம். மன்ற நிகழ்ச்சிகளிற் பங்கு கொண்டு சிறப்பிக்கும் சகோதரிகட்கும் எமது உளம் நிறைந்த நன்றி உரித்தாகுக.

இம்மன்றம் குன்றிலிட்ட தீபம் என ஒளிவீசி தமிழன்னையின் புகழைத் தரணியில் பரப்பி என்றும் நிலைத்து வாழ்க !

செ. செல்லப்பாக்கியம்
மன்றச் செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்கலை மன்றம்

மன்றக் காப்பாளர் — **திருமதி. பொ. பத்மநாதன்**

தலைவர் — **செல்வி. ம. இ. சின்னையா**

செயலாளர் — **திருமதி. இ. மண்டலேஸ்வரன்**

உள்ளத்திற்கு இன்பமூட்டுவது கலையாகும். அது இதயத்தை உருக்கி, உள்ளக் கிளர்ச்சியையுண்டுபண்ணி மனத்தைத் தூய்மை பெறச் செய்யும்.

கலைமகளின் பூரணகடாட்சம் பெற்ற எங் கலாசாலை நுண்கலை மன்றம் கலைகளில் எல்லாம் தேர்ச்சிபெற ஆசிரிய மாணவிகளுக்கு அரிய சந்தர்ப்பத்தைக் கொடுத்துள்ளது.

மாதம் ஒருமுறை கூடும் இம்மன்றத்திலே இசை வல்லுநர், நடன வல்லுனர் என்பவர்கள் தமதறிவை விருத்தியாக்குவதுடன் மற்றையோரும் பயனுறும்படி செய்து வருகின்றனர்.

இந்நுண்கலை மன்றம் சிறப்புடன் வளர ஆவனசெய்து உதவிய அறிவுச்சுடராம் அதிபர் அவர்கட்கும், அரிய உதவிகளைப் புரிந்து எம்மை ஊக்குவித்த மன்றக் காப்பாளரான சங்கீத விரிவுரையாளர் அவர்கட்கும் எம்மன்றச்சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மன்றம் மேன்மேலும் அரிய கலைகளை எல்லாம் வளர்த்து முன்னேறவேண்டுமென்று முதல்வனை வேண்டுகிறோம்.

**இ. மண்டலேஸ்வரன்,**
மன்றச் செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக இயல் மன்றம்

காப்பாளர்: திருமதி. சு. செல்லத்துரை.

தலைவர்: ,, ச. மாணிக்கவாசகர்.

செயலாளர்: ,, ப. சின்னப்பா.

மனிதன் பகுத்தறிவு படைத்தவன். எனினும், தன் சமூகத்துடன் சேர்ந்து அனுசரணையாய் வாழ இலகுவில் அவனால் முடியாது. பலருடன் சேர்ந்து பழகியும், அளவளாவியும், பல நூல்களைக் கற்றும் பல்வேறு இனத்தினருடன் சேர்ந்து வாழ்ந்து வரும்போதுதான் அவன் சமூகத்துடன் வாழப் பழகுகின்றான் எனலாம். இப்பழக்கத்தை விரைவிலேயே கைக்கொள்ளக் கல்வி உறுதுணை புரிகின்றது. படியாத ஒரு பாமரனிலும், படித்த ஒருவன் ஒரு பகைவனுடன் கூடச் சமரசமாய்த் தனது புத்தி சாதுரியத்தால் வாழ வழிவகுக்கின்றான். அவ்வாறு சமூகத்துடன் வாழும் முறையை இளம் பருவத்திலேயே பிள்ளைகள் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்கு ஆசிரியர்களே பெரும்பான்மையாகத் துணைபுரிய வேண்டும். அவ்வரும் பணியை எவ்வாறு பண்புடன் பயிற்றலாம் என்பதை ஆசிரியரனைவரும் உணர்ந்துகொள்ளு முகமாக எங் கலாசாலையில் "சமூக இயல் மன்றம், ஆசிரிய மாணவிகளால் நடாத்தப்படுகின்றது. இதனாற் சமூக இயையை வளரும் பிரஜைகளான இளஞ்சிறார்களிடம் எவ்வாறு இலகுவாக ஏற்படுத்தலாம் என்பதை ஆசிரிய மாணவிகள் தெரிந்துகொள்கின்றனர்.

இம் மன்றத்தின் சார்பில் சமூக சம்பந்தமான கருத்தரங்கு, உரையரங்கு, நாடகம் போன்றவை இடம்பெற்றன.

இம் மன்றத்தின் மேலான வளர்ச்சிக்கு ஊக்கமளித்து உற்சாகப்படுத்தும் அறிவுசால் அதிபரவர்கட்கும், இம்மன்றக் காப்பாளராக இருந்து இது சிறப்பாக வளர்ச்சி பெறவும், நன்முறையிற் செயலாற்றவும் ஆலோசனைகள் பலகூறி எம்மை வழிநடாத்தும் பேராசிரியர் திருமதி சு. செல்லத்துரை அவர்கட்கும், மன்ற நிகழ்ச்சிகளிற் பங்குகொண்டு சிறப்பிக்கும் எம்மாணவ சோதரிகட்கும் எமது உளம்நிறைந்த நன்றி உரித்தாகுக.

இம்மன்றம் என்றும் ஓங்கிவளர்ந்து நற்பணி புரிய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மகளிர் மன்றம்

காப்பாளர் : செல்வி. க சௌ. சந்தனநங்கை.

தலைவர் : திருமதி. மாணிக்கவாசகர் சரஸ்வதி

செயலாளர் : செல்வி. சி. பரமேஸ்வரி

"அரிது அரிது மானிடராதல்." அதிலும் அறிவறிந்த மக்களாதல் அரிது. கற்றதன் பயன் காருண்ய சீலரான இறைவனைத் தொழுதேத்து வதே. இதனை மனதிற்கொண்டு எங்கழக இந்துசமய மகளிர் மன்றம் உரிய முறையில் இறைவழிபாட்டை நடத்தி வருகின்றது. முழுமுதற் தலைவரான சிவனின் பெருமை மிக்க இராத்திரியை நான்கு சாமமும் பூசனை புரிந்து சிறப்புறச் செய்கிறது. சைவசமயமே மெய்ச்சமயமென உலகமெலாம் உணர நிறுவிய நாயன்மார் குருபூசைத் தினங்களையும் குருபக்தி நிறையக் கும்பிட்டுப் பாடி பண்பொடு நிறைந்த விழாக்களையும் நடாத்துகின்றது. மேலும், சகல கலைகளையும் தரும் சக்தியின் விழாவாம் நவராத்திரியைப் பக்தி சிரத் தையுடன் பாங்காக நடாத்தி வருகின்றோம்.

சைவம் வளரத் தொண்டாற்றிவரும் பெரியார் சுத்தானந்த பாரதி யார் ஈழத்துக்கு வருகைதந்தபோது அவரது அரிய சொற்பொழிவைக் கேட் கும் வாய்ப்பினை எம்மன்றம் அளித்தது. இவ்வாறு சமய முயற்சியில் ஈடு படுத்தி அயராத் தொண்டுகள் செய்யக் காரணமாய் இருப்பவர் எம் மன்றக் காப்பாளர் பேராசிரியை செல்வி, க. சௌ. சந்தனநங்கையாகும். பல்லாற் றானும் முன்னேற உதவி புரிந்தமைக்கு எம் மன்றம் அன்னாருக்கு எஞ்ஞான் றும் நன்றியுடைத்து. அன்றி அன்னையாம் அதிபர் திருமதி இ. ஆனந்தக் குமாரசாமி அவர்களுக்கும், எல்லாப் பேராசிரியர்களுக்கும், மன்றத்து உறுப் பினர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சமயப்பற்றுக் குன்றிவரும் இக்காலத்தில் அப்பற்றை மாணவர் உணரும் வண்ணம் போதிக்கவும், அதனைச் சாதிக்கவுந் திறமையுள்ள ஆசிரியர்களை உருவாக்கி உலகிற்கு உதவுவதுபற்றி நாம் பெருமையும் மகிழ்ச்சியுமடைகின் றோம்.

**செல்வி. சி. பரமேஸ்வரி,**
(மன்றச் செயலாளர்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ மகளிர் மன்றம்

காப்பாளர் : சங். சகோதரி ஜொராட்டீன்
திருமதி. R. H. ஹூல்

தலைவர் : செல்வி. திரேசா ஞானப்பிரகாசம்

செயலாளர் : செல்வி. சரோஜினி நவரத்தினம்

பொருளாளர் : செல்வி. சிசிலியா சவிரி

இவ்வாண்டிற்குரிய இம்மன்ற அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இங்கு இவ்வாண்டுத் தொடக்கத்திலே புதிய அங்கத்தவர் பதினைவர் சேர்ந்தனர். இதனுல் இம்மன்ற அங்கத்தவர் தொகை இருபத்தேழு ஆகியது. எமது பயிற்சிக் கழகத்தில் எம்மன்ற அங்கத்தவர் தொகை சிறிதாயினும் ஏனைய மாணவிகட்குக் கிடைக்கும் சகல உரிமைகளும், சலுகைகளும் எமக்கும் அளிக்கப்பட்டிருப்பதால் நாம் பெருமகிழ்வுறுகின்ருேம்.

சமயக்கல்வி கற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருப்பதுடன் கிறீஸ் தவதினம், கிறீஸ்து ஜனனதினம் என்னும் திருநாட்களை ஏனைய எம் சகோ தரிகளுடன் சேர்ந்து சிறப்புடன் நடாத்தி மகிழ்கிருேம்.

இவ்வரிய வாய்ப்புக்களை எமக்களித்து வேண்டிய ஆலோசனைகளை நல்கியும் உதவிகளை அளித்தும் எம்மை ஊக்குவிக்கும் எங்கள் அன்பிற் குரிய அதிபர் திருமதி. இ. ஆனந்தக்குமாரசாமி அவர்களின் பெருந்தன் மையைப் பாராட்டுவதுடன் அன்னுருக்கு எம்மன்றம் உளங்கனிந்த நன்றி யையும் தெரிவிக்கின்றது. இம்மன்றம் மென்மேலும் வளர்மதியென வளர உதவியளிக்கும் எமது சமய விரிவுரையாளர்களுக்கும் ஏனைய பேராசிரியர் களுக்கும், கலாசாலைக் காரிகைகட்கும் எம்மன்றம் மனமுவந்த நன்றியைக் கூறுகின்றது.

செல்வி. சரோஜினி நவரத்தினம,
(மன்றச் செயலாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு மன்றம்

போஷகர் ; **திருமதி. டி. தர்மராசா**

விளையாட்டுத் தலைவி : **திருமதி. ச. கணபதிப்பிள்ளை**

விளையாட்டு உபதலைவி : **திருமதி. ம. மனோகரன்**

விளையாட்டு சமுதாயத்திலே, பிரிக்கமுடியாத ஓர் அங்கமாக அமைந்திருக்கின்றது. அது மனிதப் பண்புகளையும், சமுதாயப் பண்புகளையும் வளர்ப்பதோடு உறுதியான உடலையுந் தந்து ஒவ்வொரு மனிதனையும் முழு மனிதனாக்குகின்றது. வளமான சீரிய வாழ்விற்கு வேண்டிய நற் பண்புகளைப் பயிற்றிப் பயன்படுத்தி நல்லதோராசானாக விளங்க எங்கழகம் உதவிபுரிகின்றது.

இன்னும் வருடந்தோறும், இல்லங்களிடையே வலைப்பந்தாட்டப் போட்டி, மெய்வல்லுனர்ப்போட்டி, விளையாட்டுப்போட்டி முதலியவற்றையும் நடாத்துகிறது. தனி ஒரு நிகழ்ச்சியில் வெற்றிபெற்ற இல்லத்திற்கும், முழுமையாகத் திறமைமிக்க இல்லத்திற்கும், கலாசாலை வீராங்கனைகளுக்கும் முறையே வெற்றிக் கிண்ணமும், கேடயமும், வீராங்கனைக் கிண்ணங்களும் அளித்து எங்கழகம் களிகொள்ளுகின்றது. இவ்வாண்டு பொதுவில் கோவை மக்கள் வியத்தகு முறையில் எங்கழகம் வெகு சிறப்பாகத் தன் விளையாட்டுப் போட்டியை நடாத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆங்காங்கு குடாநாட்டின் எத்திசையும் துருவிப்பார்த்து உண்மையிற்றிறமைமிக்கோரை அழைத்து மத்தியஸ்தம் வகிக்கச் செய்வதும் அவர்களின் அறிவுரைகளைக் கேட்பதும் எம் வழக்கம். ஆண்டுதோறும் நிகழும் போட்டிகளைச் செவ்வனே நடாத்த அதிபர், பேராசிரியர்கள் அயராதுழைத்தமை மன்றத்தை மேன்மேலும் பலப்படுத்தியது. அவர்களுக்கும் விசேடமாக உடற்பயிற்சிப் பேராசிரியருக்கும் எம் நன்றி உரித்தாகுக. எம்மன்றம் மேன்மேலும் ஓங்க வேண்டி மனமார வாழ்த்துவோமாக.

வாழ்க ! எங்கழகம்.

ம. மனோகரன்,
விளையாட்டு உபதலைவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், இல்லத் தாய்மாருடன் 'அருணு இல்ல' ஆரணங்குகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணா இல்லம்

இல்லத் தாய்மார்கள் :

**திருமதி. சு. செல்வத்துரை,**
**திருமதி. பொ. பத்மநாதன்**

இல்லத் தலைவி :

**செல்வி. சரோஜினி நவரத்தினம்**

இல்ல உபதலைவி :

**செல்வி. பராசக்தி சுப்பிரமணியம்**

அகிலமெல்லாம் அகமகிழ இருள்கடிந்து, ஒளிபெருக்கும் அறிவின் மிக்க ஆதவன் நாமம்பூண்டு, அவனின் செங்கதிர் வர்ணத்தின் சேர்க்கையுடன் துலங்குவது எமது இல்லம். தானுண்ட நீரைத் தலையாலே நல்கித் தரணியை ஓங்கவைக்கும் தெங்கு எமது சின்னமாகும். செங்கதிரோனின் செஞ்சுடரினை உணர்த்தச் சிவப்புநிறம் எமது இல்லத்திற்குச் சாலப்பொருந்தும் என்பது மிகையாகாது.

ஆயகலைகள் அறுபத்திநான்கினும் வல்ல அரிவையர் எண்நான்கு பேரைக்கொண்டது எமது இல்லம். எமது இல்லம் பலதரப்பட்ட நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி வெற்றிபெற்று இல்லத்தை மாண்புறச்செய்தது. நாடகப் போட்டி, செய்யுட்போட்டி, வினோத உடைப்போட்டி என்பவற்றில் முதலிடத்தைப் பெற்றும், கதைப்போட்டி, வலைப்பந்தாட்டப் போட்டி, அபிநயப்போட்டி, அணிநடைப் போட்டி ஆகியவற்றில் இரண்டாமிடத்தைப் பெற்றும் எமது இல்லம் பெருமையடைந்துள்ளது.

எமது இல்லத் தாய்மார்களாகிய திருமதி. சு. செல்வத்துரை, திருமதி. பொ. பத்மநாதன் ஆகிய இருவரும் மெய்வருத்தம்பாராது, எமது இல்லத்தின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டனர். அன்னாருக்கு எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதில் களிபேருவகை யடைகின்றோம். நாம் உதவிகோரியபோதெல்லாம் மனமுவந்து, எமக்கு வேண்டியவற்றை நல்கிய எங் கலாசாலை அதிபர், பேராசிரியர் அவர்களுக்கும் நாம் என்றென்றும் கடப்பாடுடையோம், இல்லத்திற்காக அயராது உழைத்து, ஒத்துழைப்பை நல்கிய எமதில்ல உறுப்பினர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக. எமது இல்லம் மேன்மேலும் சிறந்துவிளங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

செல்வி. சரோஜினி நவரத்தினம்,
(இல்லத் தலைவி)



K20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராதா இல்லம்

இல்லத் தாய்மார்கள் : திருமதி J. D. பெரேரா
" " திருமதி R. H. R. ஹுல்
இல்லத் தலைவி : செல்வி சி. பத்மாவதி
உப தலைவி : செல்வி வே. திரவியநாயகம்

மங்கையர் மனதெலாம் நிறைந்த மாண்பு மிகு பெயரைத் தன் நாமமாகவும், உலகுக்கெல்லாம் பயிர் பச்சைகளை வளர்த்து, உணவும் சீரும் அளித்து, உயிர் ஓம்பும் இளஞாயிறைத் தன் சின்னமாகவும் பெற்றுப் பெருமை கொண்டதுதான் நம் இராதா இல்லம்.

பண்புசால் நங்கையர் மூப்பத்திருவரைக் கொண்ட நமதில்லம், பல்வேறு நிகழ்ச்சிகளிலும் வெற்றிவாகை சூடிப் புகழ்கொண்டிலங்குகின்றது.

பேச்சுப்போட்டி, கதைப்போட்டி, உடற்பயிற்சிப்போட்டி போன்றவற்றில் முதலாம் இடத்தையும், இசைப்போட்டி, நாடகப்போட்டி, மெய் வல்லுனர்ப் போட்டி முதலியவற்றில் இரண்டாம் இடத்தையும் பெற்றுப் பூரிப்படைந்துநிற்பதும் நமதில்லமே. இல்ல அலங்காரப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற நமதில்லம், என்றுமில்லாதவாறு பார்வையாளர்களின் பெரும் பாராட்டுதலுக்குள்ளானது குறிப்பிடத்தக்கது. வலைப்பந்தாட்டப் போட்டியில் முன்னணியிடங்களைக் கைப்பற்ற முடியாவிட்டாலும் மற்றைய வீரமணிகளை, எளிதில் வெற்றி சூடிவிட முடியாதபடி சளைக்க வைத்தமை பெருமைப்படக் கூடிய கட்டம்.

எமதில்லத் தாய்மார்களான, இனிய பண்பும், இளகிய குணநலமும் கொண்ட திருமதி R. H. R. ஹுல் அவர்களும், தன் கலகலப்பான இனிய சுபாவத்தினுல் மாணவர் மனதைக் கவர்ந்த திருமதி. J. D. பெரேரா அவர்களும் அயராதுழைத்து வெற்றிக்கு வழிகாட்டி இருக்கிறார்கள். வெற்றியையும், தோல்வியையும் மனங் கோடாது சமநிலையில் ஏற்றுக்கொள்ளும் அவர்களது இனிய பண்பே எமதில்ல வெற்றிக்கு மூலகாரணம்.

அவர்களுக்கு எமதில்லம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது. எமக்கு வேண்டிய போதெல்லாம் இன்முகம் காட்டி, உதவி புரிந்த அதிபர் அவர்கட்கும், கலைத்துறைப் பணியில் எமக்கு அளப்பரும் உதவிகள் புரிந்த தமிழ்ப் பேராசிரியர் அவர்கட்கும், எமக்கு ஆக்கம் தந்து அயராதுழைத்த உடற்பயிற்சிப் பேராசிரியர்க்கும், மற்றும் உதவி நல்கிய பேராசிரியர்களுக்கும், கலாசாலை ஊழியர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம். கடந்த வருடங்களில் இராதா இல்லம் பெற்ற பெருமையைத் தொடர்ந்து காப்பாற்ற, என்னுடன் ஒத்துழைத்த என் இல்லச் சகோதரிகளுக்கும் என் உளம் கனிந்த நன்றி உரித்தாகுக.

என்றும் இளஞாயிறென எமதில்லம் இலங்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சி. பத்மாவதி,
(இல்லத் தலைவி.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், இல்லத் தாய்மாருடன் 'இராதா இல்ல' இரமணிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர், இல்லத்தாய்மாருடன் 'சுவர்ணு இல்ல'ச் சுந்தரிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர்ணு இல்லம்

| | |
|---|---|
| இல்லத் தாய்மார்கள்: | திருமதி லுடிவிக்கா ஜேக்கப் |
| ,, ,, | திருமதி மிதிலாதேவி தாஸ் |
| தலைவி: | செல்வி சி. மனோன்மணி ராதா |
| உப தலைவி: | திருமதி பிரான்சிஸ்கா பூமணி அந்தோனிப்பிள்ளை |

சுவர்ணம் என்னும் பெயருக்கேற்ப சுடர் ஒளி வீசிப் புகழ் கொண்டது நம் சுவர்ணு இல்லம். ஈழத்தின் வடபகுதிக்கு இயற்கையளித்த ஒரேயொரு செல்வமான பனைமரத்தை எம் இல்லக்கொடி சின்னமாகப் பெற்றுள்ளது.

'ஐக்கியமே பலம்' என்ற நோக்கத்தோடு ஊக்கம் காட்டி உழைத்த 31 மங்கையர்களும் எம் இல்லத்தின் வெற்றிக்குப் பலவழிகளிலும் பங்குள்ளவர்கள்.

தளராத உள்ளத்துடன் அயராது உழைத்து, கலாசாலை நிகழ்ச்சிகள் பலவற்றில் அமோக வெற்றியீட்டிப் புகழ் கொண்டது நம் இல்லம்.

ஆண்டில் அடுத்தடுத்து வந்த பல்வேறு நிகழ்ச்சிகளில் எம் இல்லம் ஈட்டிய வெற்றியை இங்குக் குறிப்பிடாமல் விடமுடியாது. கலாசாலை இல்லங்கட்கிடையே நடைபெற்ற மெய்வல்லுனர்ப் போட்டியில் வீர ரமணிகளாகத் திகழ்ந்து, 1-ம் இடத்தையும் பெற்றுக்கொண்டோம். அணிநடைப் போட்டியிலும், அபிநயப் போட்டியிலும், இசைப் போட்டியிலும் 1-ம் இடத்தைப் பெற்றதுடன், வலைப்பந்தாட்டத்திலும் மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுப் பலரின் பாராட்டையும் பெற்றுக்கொண்டோம்.

இவ்வெற்றிகள் அனைத்திற்கும் காரணராய் விளங்கிய எம் இல்லத் தாய்மார்கள் திருமதி லுடிவிக்கா ஜேக்கப், திருமதி மிதிலாதேவி தாஸ் அவர்கட்கும், அயராதுழைத்த சாந்தமே உருவான உடற்பயிற்சிப் பேராசிரியருக்கும் எம் உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

இந்நிகழ்ச்சிகளை நாம் திறம்பட நடாத்த எமக்குப் பேருதவிகளை மனமுவந்து அளித்த பெருமைமிக்க அதிபர் அவர்கட்கும், தமிழ் நிகழ்ச்சிகளில் நாம் திறமைபெற அரும்பணிபுரிந்த தமிழ்ச் செல்வியாம் எம் தமிழ்ப் பேராசிரியர் அவர்கட்கும், இசையில் எம்மை முதலிடம் பெறவைத்த இசைப் பேராசிரியர் அவர்கட்கும் எம் இதயங் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இத்துணை மகிழ்ச்சிகளிலும் என்றும் மாறுத துயருள் ஆழ்த்திவிட்டுச் சென்ற எமது இல்ல மங்கையருள் ஒருவரான திருமதி. சிவக்கொழுந்து வீர வீரசிங்கம் அவர்களின் மறைவு எங் கலாசாலைக்கு ஒரு துன்ப நிகழ்ச்சியாய் விட்டது. எம் இல்லத்தின் சார்பிலும், கலாசாலைக் சார்பிலும் அவரின் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவிப்பதுடன், அவரின் ஆன்ம சாந்திக்காகவும் வேண்டிக்கொள்கிறோம்.

மிகுந்த அபிமானத்துடன் கடமையில் தம்மை அர்ப்பணித்துப் பண்புடன் உழைத்த எம் இல்லச் சகோதரிகள் ஒவ்வொருவருக்தும் எம் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

எம்மில்லம் மேலும் மேலும் ஓங்கி உயர்வுபெற வேண்டுமென்பதே எமது வேணவா. எம் இலட்சியம் நிறைவுபெற இறைவன் அருள் புரியட்டும்.

சி. மனோன்மணி ராதா,
இல்லத் தலைவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1968-ம் ஆண்டு பயிற்சி பெற்று ஆசிரியைகளாக வெளியேறும் மாணவிகள்

| | | |
|---|---|---|
| செல்வி | மேரி றெஜினா யோனாஸ் | சில்லாலை |
| செல்வி | செல்லப்பாக்கியம் செல்லத்தம்பி | அல்வாய் |
| செல்வி | பரமேஸ்வரி சின்னத்துரை | சுன்னாகம் |
| திருமதி | மாகிறேற் சாள்ஸ் | சில்லாலை |
| திருமதி | அன்னபூரணா இராசதுரை | பண்டத்தரிப்பு |
| செல்வி | திலகராணி சரவணமுத்து | உடுவில் |
| திருமதி | கோமதி அம்பிகைபாகன் | புலோலி |
| திருமதி | நல்லம்மா பொன்னம்பலம் | மீசாலை |
| செல்வி | சிவமணி சின்னத்துரை | கைதடி |
| செல்வி | விமலேஸ்வரி படைவீரசிங்கம் | மட்டுவில் |
| செல்வி | மனோன்மணிதேவி சிவப்பிரகாசம் | தும்பளை |
| திருமதி | குகதேவி தியாகராசா | வவுனியா |
| திருமதி | நல்லம்மா இரத்தினசிங்கம் | நீர்வேலி |
| செல்வி | இரத்தினம் செல்வரத்தினம் | கணுக்கேணி |
| செல்வி | ஜெசின் பீற்றர் | பூவரசங்குளம் |
| திருமதி | தங்கேஸ்வரி சிவஞானசுந்தரம் | ஏழாலை |
| செல்வி | சரோஜினி நவரத்தினம் | சுண்டிக்குளி |
| திருமதி | கண்மணி தெய்வேந்திரன் | பண்டத்தரிப்பு |
| திருமதி | லூர்துமேரி நவரத்தினம் | மிருசுவில் |
| திருமதி | மாக்கிறேற் கந்தையா | புதுக்குடியிருப்பு |
| திருமதி | புஷ்பராணி தவராசா | மாத்தளன் |
| திருமதி | புவனேஸ்வரி சேனாதிராசா | அரியாலை |
| செல்வி | திரேசா ஞானப்பிரகாசம் | யாழ்ப்பாணம் |
| செல்வி | மல்லிகாதேவி நேசரெத்தினம் | தனியூற்று |
| செல்வி | மகேஸ்வரி தம்பு | நாவற்குளி |
| செல்வி | பத்மாவதி சின்னத்துரை | சாவகச்சேரி |
| திருமதி | மகேஸ்வரி பாலசிங்கம் | யாழ்ப்பாணம் |
| செல்வி | புனிதவதி சிற்றம்பலம் | காரைநகர் |
| திருமதி | அமலோற்பவம் பிரான்சிஸ்சேவியர் | நெடுந்தீவு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| செல்வி | கமலேஸ்வரி செந்திவேற்பிள்ளை | பருத்தித்துறை |
| செல்வி | கருணேஸ்வரி கந்தசாமி | மயிலிட்டி |
| செல்வி | மனோன்மணிஇராதா சின்னையா | சாவகச்சேரி |
| திருமதி | சரஸ்வதி மாணிக்கவாசகர் | நெடுந்தீவு |
| செல்வி | சிசிலியா சவிரி | மன்னார் |
| திருமதி | பராசக்தி சின்னப்பா | நுணாவில் |
| செல்வி | அம்பாலிகை விசுவலிங்கம் | உடுப்பிட்டி |
| திருமதி | இராசமாணிக்கம் மண்டலேஸ்வரன் | பருத்தித்துறை |
| திருமதி | நிமலா செபஸ்தியன் குரூஸ் | யாழ்ப்பாணம் |

*

VISIT

**E. A. STATIONERS**

*FOR YOUR REQUIREMENTS IN*

PAPER & PRINTING MATERIALS, PRINTING INKS, FOUNTAIN PENS,

**FOUNTAIN PEN REPAIRS OF ALL MAKES.**

STOCKISTS :

AUTHORISED DEALERS OF :

**EASTERN PAPER MILLS CORPORATION**

*EXERCISE BOOKS AND SCHOOL REQUIREMENTS*

**ESMALJEE AMIJEE STATIONERS**

128, HOSPITAL ROAD, — JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்த தானம்

இரத்த தானஞ்செய்து சமூகத் தொண்டாற்றிய எங் கலாசாலை ஆசிரிய மாணவிகள் என்றென்றும் பாராட்டுக்குரியவர்கள்.

இரத்ததானஞ் செய்தோர்

1. திருமதி. பராசக்தி சின்னப்பா
2. ,, சரஸ்வதி மாணிக்கவாசகர்
3. ,, புவனேஸ்வரி சேனாதிராசா
4. ,, கமலாம்பிகை மாமடுவ
5. ,, பரமேஸ்வரி முருகேசு
6. ,, செல்வரஞ்சிதம் இராசரத்தினம்
7. ,, பொன்ரோஸ் சந்தாம்பிள்ளை
8. ,, சந்திரகாந்தி சீவரத்தினம்
9. செல்வி. விமலேஸ்வரி படைவீரசிங்கம்
10. ,, இராஜேஸ்வரி சின்னத்துரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமக்கள் வளம்பெற்று வாழ வாழ்த்துகின்றோம்

1. செல்வி, கமலாம்பிகை வேலுப்பிள்ளை
   திருமதி. க. சேனாதிராசா 1966—1967

2. செல்வி. சிவயோகம் சின்னையா
   திருமதி. சி. சௌந்தரலிங்கராசா 1966—1967

3. செல்வி. மாகிறெற் நீக்கிலாப்பிள்ளை
   திருமதி. மா. சாள்ஸ் 1967—1968

4. செல்வி. குகதேவி பாக்கியநாதன்
   திருமதி. கு. தியாகராசா 1967—1968

5. செல்வி. ஆறுமுகம் புவனேஸ்வரி
   திருமதி. பு. துரைசிங்கம் 1964—1965

6. செல்வி. நாகநாதன் புவனேஸ்வரி
   திருமதி. பு. விக்னேஸ்வரலிங்கம் 1966—1967

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பிகாபதி ரெக்ஸ்ரைல்ஸ்

**66, பெரியகடை, யாழ்ப்பாணம்.**

றீல் நூல்கள்,
றேந்தைகள்,
சில்க் நூல்கள்,
கழி நூல்கள்
பட்டன்கள்,
பெனியன்கள்

பலவிதமான
**சாய்ப்புச் சாமான்கள்**
**புடவைத் தினிசுகள்**
**மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.**

## சூரியா ஜுவல்லர்ஸ்

**தங்க நகை வியாபாரிகள்**

அழகிற் சிறந்த
தங்க நகைகளுக்குத்
தகுந்த இடம்.

**ஓடர் நகைகள்**
குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன்
செய்துகொடுக்கப்படும்.

**127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
போன்: **7131**

*Visit SILVAS For all Requirements*
T'phone : **519** T'grams : **"Periyakadai"**

## G. H. A. de Silva & Co.

GENERAL MERCHANTS.

*TRADE DISTRIBUTOR FOR*
**Ceylon State Hardware Corporation**

*Associated Firms:*
**Modern Agri-Industrial Corporation Vavuniya.**
**Silva Stores — Vavuniya.**

*Partners:*
**Mrs. M. SIVAPATHASUNDARAM**
**Mr. M. KASIPILLAI** (*Managing*)

*Business Department:*
**Provisions Dept., Main Street, Vavuniya.**
**Hardware Dept., „ „ „**
**Motor Spare Dept., „ „ „**
**Textile Dept., „ „ „**

*General Office:*
**"SIVAPATHASUNDARAM MAHAL"**
MAIN STREET, — VAVUNIYA.

*ON YOUR VISIT TO VAVUNIYA REMEMBER*
GRAMS: MOULANA'S PHONE: 538

## P. S. Mohamed & Bros.,

MERCHANTS, CONTRACTORS,
MILLERS & TRANSPORTERS.

*APPOINTED DEALERS FOR*
KELANI TYRES

*BRANCH:*
**LANKA FILLING STATION**
MADHU ROAD,
**VAVUNIYA.**
**CEYLON.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்: 585 தந்தி: "மன்சூரு"

நவநாகரிக நங்கையர் விரும்பி அணியும்

நகைகள் வைரங்களுக்கு



# கே. என். எம். மீருன் சாஹிப்

தங்கப் பவுண் நகை மாளிகை

கன்னாதிட்டி, — யாழ்ப்பாணம்.

---

PHONE: 404 CABLE: INSAF

*FOR*

SILK COTTON

AND

QUALITY TEXTILES

AT

***COMPETITIVE PRICES***

*VISIT*

# MUNEERS

(SAREES CENTRE)

**79—81, K. K. S. ROAD, — JAFFNA.**

# முனீர்ஸ்

பிடவை வியாபாரம்

**கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய் அரசினர் மகளிர் கலாசாலை உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், 20ஆம் இலக்க 5-ம் குறுக்கு வீதியில் வதியும் நிக்கலஸ் ஜேம்ஸ் அவர்களால் யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்று 15-12-68 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைக்கும் வெயிலுக்கும்

கேரள முடிமார்க் ஓடுகள்

இன்னும்

பலசரக்கு, K. K. S. சிமன்ட், சாய்ப்புச் சாமான்கள்

முதலியன மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

சி. சின்னத்துரை அன் பிரதர்

39, கே. கே. எஸ். ரோட், — யாழ்ப்பாணம்.

யாழ்நகர் மக்களைக் கவர்ந்த சிறந்த தயாரிப்புகளுக்கு

லேடன்

லேடன் LEYDEN

- பெனியன்கள்
- ரீ சேட்டுகள்
- ஸ்போர்ட் சேட்டுகள்
- கால் மேசுகள்

தரத்தில் உயர்ந்தவை! விலையிற் குறைந்தவை!!
எங்கும் கிடைக்கும்.

ஒருதரம் உபயோகித்துப் பாருங்கள் உண்மை விளங்கும்.
'லேடன்' என்று கேட்டு வாங்குங்கள்.

லேடன் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்

7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org